வரு.74 இல. 38 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
24 பக்கங்கள் 80/-
2022 செப்டெம்பர் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
September 18 Sunday, 2022






03
இராஜாங்க அமைச்சு நியமனம் சுமையாக அமையாது!




12
பொருளாதார மீட்சிக்கான வழி என்ன?







எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கு;

## ஜனாதிபதி ரணில் நேற்று பிரித்தானியா பயணம்





இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரிட்டன் சென்றுள்ளார். நேற்று (17) அதிகாலை 3.15 மணியளவில் ஜனாதிபதி பிரிட்டனுக்கு புறப்பட்டார். ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ரணில் விக்ரமசிங்க 04

## 'தேசிய சபை' 20ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

சபாநாயகர் தலைமையில் 35 உறுப்பினர்கள் நியமனம்



பாராளுமன்றத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்படவுள்ள "தேசிய சபை" என்ற பெயரிலான பாராளுமன்ற குழு தொடர்பான பிரேரணை நாளை மறுதினம் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. அன்றைய தினமே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதம் நடத்திய பின்னர் நிறைவேற்றுவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தேசிய 04

அரச துறையில் ஆட்சேர்ப்பு சகலதும் இடைநிறுத்தம்;

## மேலதிகமாகவுள்ள ஊழியர்கள் தேவையான வெற்றிடங்களுக்கு

கட்டாய ஓய்வு வயதெல்லை 60 எனவும் தீர்மானம்



அரச சேவையிலுள்ள மேலதிக அரச ஊழியர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன அறிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 04

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு மருந்துகள் வாங்க

# கிரிக்கெட் நிறுவனம் 05 இலட்சம் டொலர் உதவி

ஜனாதிபதி ரணிலிடம் காசோலை கையளிப்பு

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அயரா முயற்சியினால் அவசர மருந்து தேவைகளுக்கு கிடைத்த பெருந்தொகை நிதி




மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 5,00,000 டொலர்கள் (சுமார் 180 மில்லியன் ரூபா) காசோலையை நேற்று முன்தினம் (16) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்தது.

ஆசிய கிரிக்கெட் கிண்ணம், ஆசிய வலைப்பந்து கிண்ணம் மற்றும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களை கௌரவிக்கும் முகமாக கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் (16) நடைபெற்ற நிகழ்வில் இந்த நன்கொடை வழங்கப்பட்டது.

கடந்த காலங்களில் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் புற்று நோயாளர்கள் மருந்துப் பற்றாக்குறையால் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாக ஊடகங்கள் தொடர்ச்சியாக செய்தி வெளியிட்டிருந்தன.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோருக்கு தெரியப்படுத்தியது. இதனைக் கருத்திற் கொண்ட ஜனாதிபதி, பிரச்சினையை துரிதமாக ஆராய்ந்து உடனடி தீர்வுகளை வழங்குமாறு பணிப்புரை விடுத்தார். 04



ஆசிய கிரிக்கெட் கிண்ணம், ஆசிய வலைப்பந்து சம்பியன்சிப் மற்றும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் (16) நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்....

வலைப்பந்தாட்ட வீராங்கனை

## தர்ஜினி சிவலிங்கம் அவுஸ்திரேலியாவில்




2022ஆம் ஆண்டுக்கான ஆசியக்கிண்ண வலைப்பந்தாட்ட தொடரில் இலங்கை மகளிர் அணி வெற்றி பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்தது.

வெற்றி பெற்ற வலைப்பந்தாட்ட அணி இலங்கை திரும்பிய போது அந்த அணியின் வெற்றியில் முக்கிய பங்கை வகித்திருந்த தர்ஜினி சிவலிங்கம் வீராங்கனைகள் 04

ரஷ்யர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த

## 07 இலங்கை மாணவர்களை மீட்ட உக்ரைன் படை



அந்நாட்டு ஜனாதிபதி செலென்ஸ்கி தெரிவிப்பு

ரஷ்யாவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட உக்ரைனின் கார்கிவ் நகர பிரதேசமொன்றில் சித்திரவதை அறையொன்றில் சிக்கியிருந்தவர்களில், இலங்கையைச் சேர்ந்த Kupyansk மருத்துவ பல்கலை மாணவர்கள் 07 பேர் மீட்கப்பட்டுள்ளதாக, உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி மேலும் தெரிவிக்கையில்,

"கார்கிவ் பகுதியில், ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விசாரணை நடவடிக்கைகள் தொடர்கின்றன. ரஷ்யர்களின் அனைத்து குற்றங்களும் பதிவு செய்யப்படுகின்றன, மேலும் அவர்களின் குற்றத்துக்கான சான்று கள் 04

## லிற்றோ GAS இறக்குமதி பத்திரத்தில் முறைகேடா?

நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் நிராகரிப்பு



லிற்றோ எரிவாயு இறக்குமதி செய்த கேள்விபத்திரம் மூலம் முறைகேடுகள் இடம்பெற்றதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிராகரிப்பதாக அதன் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லிற்றோ சமையல் எரிவாயு இறக்குமதி செய்த கேள்விப் பத்திரம் மூலம் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் கணக்காய்வு அறிக்கை முன்வைக்கப்பட்டதன் பின்னர் அது குறித்து விவாதிக்கப்பட வேண்டுமென கோப் குழுவின் முன்னாள் தலைவர் சரித்த ஹேரத் தெரிவித்திருந்தார். அதற்கு பதிலளித்துள்ள 04

## பல்கலைக்கழக வரலாற்றில் புதியதொரு அத்தியாயம்

மாணவர்களுக்கு பகுதி நேர வேலைவாய்ப்புத் திட்டம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு 13 மணிநேர பகுதி நேர வேலை வாய்ப்பை வழங்க பல்கலைக்கழக செனட் சபை தீர்மானித்துள்ளது.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் முதன்முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தின் கீழ், ஒரு மாணவர் ஒரு மணிநேர வேலைக்காக 350 ரூபா பெற்றுக்கொள்வார்.

பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா சேவைகளை வழங்குவதற்கும், இணையம் மூலம் அறிவுப் 04

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

### தமிழ் எம்.பிக்கள் வெளிப்படுத்த வேண்டிய சாதகமான சமிக்ஞை!

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து ஒரு தசாப்தத்துக்கும் அதிகமான காலம் கடந்து விட்டது. யுத்தம் முடிவடைந்ததும், நாட்டில் அச்சம் நிறைந்த யுகமும் நீங்கி விட்டதென்பது உண்மை. கடந்த பத்து வருட காலத்துக்கு மேலாக மக்கள் நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ்ந்து வருகின்றனரென்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனாலும் யுத்தம் நீங்கி விட்டதனால் நாட்டில் அனைத்துமே சுமுகநிலைமைக்கு வந்து விட்டதென்று அர்த்தம் கொள்ள முடியாது. உள்நாட்டு யுத்தத்துக்கு அடிப்படையான காரணியாக எது உள்ளதோ, அப்பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லையென்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். யுத்தத்துக்கு அடிப்படையாக அமைந்த தேசியப் பிரச்சினைக்கு முழுமையான அரசியல் தீர்வு எப்போது எட்டப்படுகின்றதோ, அன்றுதான் எமது நாட்டில் சுமுகநிலைமை தோன்றி விட்டதாக அர்த்தம் கொள்ள முடியும்.

இந்நாட்டில் தமிழினத்தின் உரிமைப் போராட்டம் சுமார் ஏழு தசாப்த கால வரலாறு கொண்டதாகும். நாடு சுதந்திரம் பெற்றதில் இருந்து அஹிம்சை ரீதியில் ஆரம்பமான உரிமைப் போராட்டமானது, 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆயுதப் போராட்டமாக உருமாறியது. அதன் பின்னர் மூன்று தசாப்த காலம் தொடர்ந்த கொடிய யுத்தமானது எமது நாட்டில் விளைவித்த பேரழிவுகளையும், பெருந்துன்பங்களையும் வார்த்தைகளால் விபரிக்க இயலாது.

கொடிய யுத்தம் முழுமையாக ஓய்ந்து விட்ட போதிலும், தமிழினத்தின் உள்ளத்தில் அரசியல் உரிமைக்கான கோரிக்கை இன்றும் நீங்காமலேயே உள்ளது. 04



பிரதான அல்லது சிறுபான்மைக் கட்சிகள்;

## எந்தவொரு கட்சியிலுமே ஜனநாயகம் கிடையாது

04




## USAID மூலம் இலங்கைக்கு மேலும் 65 மில்.டொலர்கள்

வழங்கவுள்ளதாக USA தூதுவர் தெரிவிப்பு 04

வவுனியா, திருமலை, மன்னார் உட்பட

## ஏழு நகர சபைகள் மாநகர சபைகளாகின



நாட்டின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் ஒரு தலைநகரை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஏழு நகர சபைகளை கலைத்து மாநகர 04

அதிவிசேட வர்த்தமானி வெளியானது

## இனிய நந்தவனம் வெள்ளிவிழா மலர் அறிமுகம் இன்று



இனிய நந்தவனம் வெள்ளிவிழா மலரின் அறிமுக நிகழ்வு இன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும். இன்று மாலை 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறும். 04

## புலிகளின் புதையலை தேடி யாழில் அகழ்வு

எதுவும் கிடைக்காததால் பணிகள் நிறுத்தம்

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணம், இருபாலை டச்சு வீதியிலுள்ள வீடொன்றில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் புதையலை அகழும் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டு மதியம் 02 மணியுடன் நிறுத்தப்பட்டது.

அந்த வீட்டில் புலிகளின் புதையல்கள் காணப்படுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரசியத் தகவலின் படி புதையலை அகழ்வதற்கான அனுமதியை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் கோரியிருந்தனர்.

நீதிமன்ற அனுமதி 04

## சாஹித்திய ரத்னா விருது பெற்ற எழுத்தாளர் K.S. சிவகுமாரன் மறைவு

இறுதிக் கிரியை நாளை



சாஹித்திய ரத்னா விருது பெற்ற, வாழ்நாள் சாதனையாளரும் பன்முக திறமையாளருமான கே.எஸ்.சிவகுமாரன் தனது 86 ஆவது வயதில் கொழும்பில் நேற்றுமுன்தினம் காலமானார்.

மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் கே.எஸ்.சிவகுமாரன், பத்தி எழுத்து, விமர்சனம், அறிவியல், மொழிபெயர்ப்பு, கலை – இலக்கியத் திறனாய்வு, வானொலி ஒலிபரப்பு உள்ளிட்ட துறைகளில் பன்முகத் திறமையாளராக திகழ்ந்தவராவார்.

அன்னாரது படைப்பில் 04

# பசுபிக் பிரச்சினைகள் இந்து சமுத்திரத்துக்குள் நுழைவதை நாம் ஒருபோதும் அனுமதியோம்

## தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ஜனாதிபதி ஆற்றிய உரை (14.09.2022)



- ஹம்பாந்தோட்டை துறைமுகம் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.
- இலங்கை துறைமுகங்களுக்கு வந்து பயிற்சி பெற எவருக்கும் அனுமதியில்லை.
- அணிசேரா கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிப்போம்.
- யுத்தம், முரண்பாடுகளுக்குரிய இடமாக இலங்கை மாறுவதற்கு இடமளிக்க முடியாது.
- பிராந்தியத்தின் பாதுகாப்பையும், அமைதியையும் பாதிக்கும் வகையில் முறுகல் நிலை உருவாவதை நாம் விரும்பவில்லை.
- இந்தியாவிற்கு எந்தவொரு பாதகமான விளைவும் ஏற்படாது என்பதை நாம் உறுதிசெய்கிறோம்.
- போர் முடிந்துவிட்டது. தற்போது சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும்.
- அடுத்த சில மாதாங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்வு எட்டப்படும் என நம்புகிறோம்.
- மூன்றாம் தரப்பினரைத் தாக்க இலங்கையைப் பயன்படுத்தக்கூடிய ஆபத்து இருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலாவது குழு இன்று பட்டம் பெற்று வெளியேறுகிறது. இவர்களைத் தொடர்ந்து இரண்டாவது குழுவாக அரசாங்க சேவையைச் சேர்ந்த சிவிலியன்களும் அதனைத் தொடர்ந்து வெளிநாட்டு மாணவர்களும் இங்கு பயிற்சிகளைப் பெறவிருப்பதாக முப்படைகளின் தளபதி என்னிடம் கூறினார். நாம் வெளிநாட்டு மாணவர்களை ஏற்றுக்கொள்ள தயாரென்றால், ஏன் நாம் வெளிநாட்டு விரிவுரையாளர்களின் சேவையையும் பெற்றுக் கொள்ளக் கூடாது. எதிர்காலத்தில் அதுதொடர்பில் முடிவு எடுக்கலாம். பயிற்சிபெற்று வெளியேறுவோரின் நடத்தை மற்றும் நீங்கள் காட்டும் அர்ப்பணிப்பே இக்கல்வி நிறுவனத்தின் தரத்தை உயர்த்துகிறது.

தேசிய பாதுகாப்புக் கல்லூரியை அமைப்பதற்காக இடமொன்று தேடப்பட்டு வந்தபோது, மும்தாஜ் மஹால் எனும் இக்கட்டடத்தை ஒருவர் சிபாரிசு செய்தார். இது எட்மிரல் ஜொப்ரி என்பவருக்குச் சொந்தமானது. அவரே அப்போது தலைமை தளபதியாக இருந்தார். அவர் 1942 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு வந்தார். இக்காலப்பகுதியிலேயே பிரிட்டிஷ் மற்றும் அதன் நேச நாடுகளின் ஆதிக்கம் இந்து சமுத்திரத்தில் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. 1944 இலேயே எட்மிரல் லோட் லுயிஸ் மவுன்ட்பெட்டன் இலங்கைக்கு வருகை தந்தார்.

நாளேடுகளை எடுத்துப் பார்த்தால் பிரபு ஆலன் ப்ரூக் மற்றும் அக்காலத்தின் சில தளபதிகள் பெரும் பங்கு வகித்துள்ளனர். அப்படியானால் எட்மிரல் லேட்டனின் பங்கு அங்கு என்னவாக இருந்தது? அவை இறுதி வரை மதிப்பிடப்படவில்லை. சிலர் அவரைக் குறை கூறினாலும் பலரும் அவர் முக்கிய பங்கு வகித்ததாகவே கூறுகின்றனர். இந்து சமுத்திரத்தில் இலங்கை மூலோபாய இடத்தை வகிப்பதனை வைத்துப்பார்க்கும் போது அவர் எவ்வாறான பாத்திரத்தை வகித்திருப்பார் என்பதை எம்மால் மதிப்பிட முடிகிறது. இதே வளாகத்தில் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டாலும் அவர் மீதான முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பிடவில்லை. மாறாக அதனை நாம் பாராட்டவே செய்கின்றோம்.

இந்து சமுத்திரத்தின் பூகோள அரசியல் துரதிர்ஷ்டவசமாக எமது நாட்டை குத்துச்சண்டை மேடையாக மாற்றியிருக்கிறது. குறிப்பாக ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தால். உண்மையில் இந்து சமுத்திரத்தில் சீனாவால் இயக்கப்படும் 17 துறைமுகங்கள் உள்ளன. அவை வெவ்வேறு கம்பனிகளுக்கு உரியவை. டுபாயால் இயக்கப்படும் மேலும் சில துறைமுகங்களும் அங்கு உள்ளன. அவை யாவுமே, வணிக துறைமுகங்களாகும். ஹம்பாந்தோட்டையும் அதே போன்றதே. அது ஒரு இராணுவ துறைமுகம் அல்ல.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்று சில தரப்பினர் குறிப்பிடுகின்றனர். ஆனால் அவுஸ்திரேலியாவில் உள்ள டார்வின் துறைமுகம் தான் பாதுகாப்பு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நாம் இங்கே வந்து பயிற்சி பெற எவருக்கும் அனுமதியளிக்கவில்லை. எனினும் எமது கடற்படையின் தெற்கு கொமாண்டோ பிரிவை நாம் அங்கு அமைத்துள்ளோம். இராணுவத்தின் பிராந்திய தலைமையகம் மற்றும் விமானப் படையின் ஒரு பிரிவும் அங்கு உள்ளது. எனினும் அவர்களில் எவரும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துடன் சம்பந்தப்படவில்லை. இது ஒரு வணிக துறைமுகம் என்பதை மாத்திரம் அவர்கள் உறுதி செய்து வருகின்றனர்.



வணிக துறைமுகமாக இருந்தாலும் துறைமுகம் தொடர்பில் தேவையற்ற ஊகங்களுக்கு இடமளிப்பது இதன் மூலோபாய முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. மேலும் சீனாவுடன் நாம் செய்துகொள்ளும் அடுத்த ஒப்பந்தம் அத்தகைய ஊகங்களை ஏற்படுத்தாது என்று நம்புகிறேன். அது இலங்கைக்கான கடன் குறைப்பு பற்றியது மட்டுமே.

இந்தோ பசுபிக் என்பதற்கான பல வரைவிலக்கணங்கள் உள்ளன. இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் இருந்து இந்தோ பசிபிக், விரிவடைந்து செல்கிறது. இலங்கையைப் பொறுத்த வரையில், இரண்டு வெவ்வேறு சமுத்திரங்கள் இணையும் 'ஆசியான்' என்று இதனை அடையாளப்படுத்துகிறோம்.

ஒரு தடவை லோக் சபாவில் உரையாற்றிய பிரதமர் சின்சோ அபே இரண்டு சமுத்திரங்களின் சங்கமமாக இதனை குறிப்பிட்டிருந்தார். இது முக்கியத்துவமானது என்றபோதும் பசுபிக்கிலும் பார்க்க இங்கே நிலவும் பாதுகாப்பு நிலவரம் வித்தியாசமானது என்பதனால் எம்மைப் பொறுத்தளவில் இது மிகவும் முக்கியமாகும்.

பசுபிக்கை மையமாகக் கொண்டு அப்பகுதிகளில் எப்போதும் ஒரு பதற்ற நிலை இருப்பதை நாம் அறிவோம். ஆனால் இந்து சமுத்திரம் முற்றிலும் வித்தியாசமானது. முதலாவதாக சமுத்திரங்களால் இங்கு பதற்ற நிலை உருவாவதில்லை. அது இமாலயத்திலிருந்தே வருகின்றது.

கிழக்கு ஆபிரிக்க பிராந்தியம் மற்றும் செங்கடலில் இராணுவமயமாக்கல் நடந்து வருகின்றது. உண்மையில், கிழக்கு ஆபிரிக்க பிராந்தியம் இராணுவமயமாக்கலை முன்னெடுத்து வருகின்றபோதும் நாமே அதை செய்வதாக சில தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றார்கள். நாம் ஒரு சிறிய தேசமாக இருப்பதனால் இவ்வாறான நிலையை சந்திக்க நேரிட்டுள்ளது.

எவ்வாறாயினும் பசுபிக் பிராந்தியத்தில் நிலவும் பதற்ற நிலை இங்கே தொடர்வதை நாம் மட்டுமல்ல ஆசியானும் விரும்பவில்லை. இப்பிரச்சினைகள் தென் சீனக்கடலைத் தாண்டிச் செல்வதனை அவர்கள் விரும்பவில்லை. நாமும் அதே நிலைப்பாட்டில் தான் இருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் இராணுவக் கூட்டணிகளில் பங்கேற்கவில்லை என்றாலும், பசிபிக் பிரச்சினைகள் இந்து சமுத்திரத்திற்குள் வருவதை நாங்கள் நிச்சயமாக விரும்பவில்லை. இந்து சமுத்திரம் ஒரு ஸ்திர நிலையில் தொடர்ந்து இருக்கும் அதேநேரம் இது அனைவராலும் அணுகக்கூடிய ஒன்றாகவும் இருக்க வேண்டும். இதற்காகவே இங்கு பயணிக்க விண்ணப்பிக்கும் கப்பல்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் கடலுக்கடியில் அமைக்கப்படும் கேபிள்களுக்கு இடமளிக்கவும் ஏதுவாக இந்து சமுத்திரத்துக்கென ஒரு ஒழுக்கக் கோவையை கேட்டிருந்தோம்.

வணிகச் செயற்பாடுகள் இங்கு சுமுகமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். உலகம் முழுவதற்கும் தேவையான பெற்றோலியம் மற்றும் எரிசக்தி விநியோகம் இந்த சமுத்திரத்திற்கு ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றது. பெரும் எண்ணிக்கையான கப்பல்கள் இந்த வழியாகச் செல்கின்றன. எனவே இப்பகுதி யுத்தம் மற்றும் முரண்பாடுகளுக்குரிய இடமாக மாறுவதற்கு நாம் இடமளிக்க முடியாது.

தேவையற்ற விதத்தில் போர்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாக சிங்கப்பூரின் பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார். அக்கூற்றை நானும் ஏற்றுக்கொள்வதனால் அது எனக்கு கவலையளிக்கிறது.

மேலும், இந்து சமுத்திரத்தில் ஆதிக்கப் போட்டியை நாம் பார்க்க விரும்பவில்லை.

காரணம் அது பின்னர் எல்லா இடங்களிலும் பிரதிபலிக்கும். இந்து சமுத்திரத்தை பிறர் அணுக முடியாத வகையில் மூடிவிட வேண்டும் என்று நாம் கூறவில்லை.

1977 இல் இந்த சமுத்திரத்தில் சமாதான வலயம் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் அங்கு அமெரிக்க கடற்படையினரின் வருகை தடைசெய்யப்படவில்லை.

பிரதி வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் அப்போது அந்த செய்தியை மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. இதுகுறித்து எம்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை சமாளிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஜப்பானிய கடல் பாதுகாப்பு படைகளை இங்கு பார்த்தோம். நிச்சயமாக நாங்கள் அதற்கு எதிரானவர்கள் அல்ல. நாங்கள் அவர்களை இங்கு காண விரும்புகிறோம். ஐரோப்பிய கடற்படைகள் கூட இங்கு வருகின்றன. இதுவே வளர்ச்சியாகும்.

கடற்படையினருக்கு இங்கு வர வேண்டுமென்றால் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் கடற் கொள்ளைக்கு எதிராக செயற்பட உதவுகின்றனர். எனினும் எங்கள் பிராந்தியத்தின் பாதுகாப்பையும் அமைதியையும் பாதிக்கும் முறுகல் நிலை உருவாவதை நாம் விரும்பவில்லை. எந்தவொரு அதிகாரப் போட்டியிலும் இலங்கை பங்கேற்காது என அணிசேரா நாடுகளின் மாநாட்டில் டி.எஸ். சேனநாயக்க முன்வைத்த கொள்கையை நாம் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றோம். எந்தவொரு பெரிய சக்தியாக இருந்தாலும் நாம் ஒரு அணியில் சேர மாட்டோம். அதிலிருந்து விலகியே இருப்போம். எனவேதான் அதிகாரம் கூடிய நாடுகளுக்கிடையிலான முறுகல்கள் இந்து சமுத்திரத்தில் எவ்வாறான தாக்கத்தையும் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

என்றாலும், இராணுவம் அல்லாத பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதை எம்மால் இன்னமும் தவிர்க்க முடியாமல் உள்ளது. பல நாடுகளில் உள்ளதைப் போன்றே நாமும் உணவுப் பற்றாக்குறை, பொருளாதார வளர்ச்சியில் தடை, உலகளாவிய காலநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம்.

நாம் இவற்றில் கவனம் செலுத்த வேண்டும். எமது கவனம் திசைதிருப்பப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. இலங்கையின் பாதுகாப்பை நாம் உறுதி செய்யும் அதேநேரம், எந்தவொரு பாதகமான விளைவும் இந்தியாவுக்கு ஏற்படாது என்பதையும் நாம் உறுதி செய்வதுடன் தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டில் இருப்போம்.

இந்தியாவைப் போன்றே எமக்கு மாலைதீவும் மிக முக்கியமானது. எமது கடல் எல்லைகள் இந்தியாவுடனும், மாலைத்தீவுடனும் இருக்கின்றது. அவர்களின் பாதுகாப்புப் பிரிவினருக்கு சிறந்த பயிற்சியைக் கொடுப்பதற்கே எம்மால் உதவ முடியும். இலங்கையில் தற்போது பயிற்சி பெற்று வரும் மாலைதீவு பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைகளின் பிரதானியிடம் கேட்டுள்ளேன். எனவே, இவைதான் எமது கொள்கை. இந்த உள்ளடக்கத்தின் அடிப்படையிலேயே நாம் செயற்படுவோம்.அடுத்த கட்டமாக நாம் இலங்கையின் பாதுகாப்பை கவனத்தில் கொள்ள வேண்டும். அதனால்தான் 2030 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு அறிக்கையை நாங்கள் பெற விரும்புகிறோம்.

யுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. அந்த யுத்தத்தில் நாம் வெற்றிகண்டோம். தற்போது நாம் நாட்டில் சமாதானத்தை கொண்டுவர வேண்டும். அதைதான் நாம் தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அடுத்த சில மாதங்களில் இறுதி தீர்வு காணப்படும் என நான் நம்புகிறேன். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நான் தற்போது பேச்சு நடத்தி வருகிறேன். என்றாலும் எதிர்காலத்தைப் பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.



தற்போது எதிர்கொண்டுள்ள பயங்கரவாதம், முன்னர் எதிர்கொண்ட பயங்கரவாதத்தை போன்றதல்ல. நாம் அவ்வாறான பயங்கரவாதத்தை மீண்டும் எதிர்கொள்ள மாட்டோம் என நம்புகின்றேன். என்றாலும் அதனை முறியடிப்பதற்கு ஏதுவாக எம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

மூன்றாம் தரப்பினரைத் தாக்குவதற்காக பயங்கரவாதிகள் இலங்கையை பயன்படுத்தக்கூடிய ஆபத்தான நிலை உள்ளது என்பதை நாம் எப்போதும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் குறித்தும் நாம் அதிகம் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்துறையுடன் தொடர்புடைய ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் நாம் இதற்காக இணைந்து பணியாற்ற வேண்டும்.



தமிழகத்தின் 'இனிய நந்தவனம்' சஞ்சிகையின் வெள்ளிவிழா மலர் அறிமுகவிழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இன்று ஞாயிறு மாலை 4.00 மணிக்கு நடைபெறுகிறது. விழாவுக்கான அழைப்பிதழை நேற்று முன்தினம் இனிய நந்தவனம் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், தினகரன் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவரிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். இலக்கியப் புரவலர் ஹாசிம் ஒமர், முனைவர் அன்பு சிவா, தினகரன் செய்தி ஆசிரியர் கே.அசோக்குமார் ஆகியோருக்கும் அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டன. (படம்: சுதத் நிஷாந்த)



யாழ். காங்கேசன்துறைப்பகுதியில் வாழ்வாதாரத்தை இழந்துவாழும் சுமார் 25 குடும்பங்களுக்கு கிராமசேவகரூடாக உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவர் தேசபந்து லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையிலான குழுவினர் உலருணவுபொதிகளை வழங்கினர். ஆசியர் கலாசாலையில் விரிவுரையாளராக் கடமையாற்றிய அமரர் கலாநிதி இராமலிங்கம் வள்ளிநாயகியின் 06ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு இதற்கான நிதிஉதவியை வழங்கினர். (படம்: வேணை குறூப் நிருபர்)




# இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் நாட்டுக்கு சுமையாக அமையாது!

**நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியான நிலையிலிருந்து மீள்வதற்குப் பொறுப்புள்ள அரசியல் கட்சிகள் யாவும் தமக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார். சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் நேர்மையுடன் முன்வர வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து எமது நிறுவனத்துக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.**



## ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்தனவுடன் சந்திப்பு

**கேள்வி: நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்:** அரசியலமைப்பின்படி மக்கள் வழங்கும் ஆணையே உயர்வானது. மக்கள் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்த பின்னர், 2020 முதல் 2022 வரையான காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட்19 தொற்று காரணமாக அவர்களால் எதனையும் நிறைவேற்ற முடியவில்லை. எனவே, மக்களுக்கு சேவையாற்றுவதற்கு இராஜாங்க அமைச்சர்கள் குழுவொன்று கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த இராஜாங்க அமைச்சர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை மாத்திரமே பெறுவார்கள். அவர்கள் வேறு எந்த சலுகைகளையும் அனுபவிக்க மாட்டார்கள். எனவே இந்த இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் நாட்டுக்கு சுமையாக அமையாது.

பொருளாதாரம் பின்னடைவைச் சந்தித்து, நாடு நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கும்போது, அரசியல் வேறுபாடுகள் இன்றி அனைவரும் சில பொறுப்புகளை ஏற்று ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அரசியலமைப்பின் 148,149 மற்றும் 150 ஆவது சரத்துக்களின் படி, நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளால் பொதுநிதி தொடர்பான பொறுப்புகள் தோல்வியடைந்துள்ளன. அந்தத் தோல்வியுற்ற செயலுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்க வேண்டும்,ஏனெனில் நாடு அவர்களை அறியாமல் இயல்புநிலைக்கு வந்துவிட்டது. இது நூறு சதவீதம் சட்டவிரோதமானது. IMF கோரியபடி, அமெரிக்க மத்திய வங்கியின் கட்டமைப்பில் உள்ள அதே விதிமுறைகள் இலங்கைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டால் அது முக்கியமானது.

அரசியலமைப்பின் 27, 28 மற்றும் 29 வது பிரிவின்படி கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும். நிச்சயமாக இந்தக் கொள்கைகளை செயல்படுத்த ஒரு குறிப்பிட்ட குழு தேவைப்படுகிறது. திட்டமிட்டு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப மக்கள் பிரதிநிதிகள் அர்ப்பணிப்புடன் முன்வந்துள்ளனர். இந்த நேரத்திலும் எதிர்க்கட்சிகள் அரசியலில் ஈடுபட முயற்சிக்கின்றன. எதிர்க்கட்சிகள் அரசியல் செய்யாமல், நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதியுடன் இணைந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கேள்வி: பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோதும், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான பொதுஇணக்கப்பாடு எட்டப்படவில்லை. இந்த முயற்சியில் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளிடையே உள்ள உண்மைத்தன்மையின்மையே முக்கிய காரணமா?**

**பதில்:** புதிய அரசியல் கூட்டணியை அமைப்பவர்களை முதலில் மக்கள் கேள்வி கேட்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்ட போது, அது தெரியாமல் சில குழுக்கள் பாராளுமன்றத்தில் செயல்பட்டன. நாளை முதல் புதிய அரசியல் இயக்கத்தின் மூலம் தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என அவர்கள் கூறுவார்களாயின், மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களைப் போக்க அந்தப் பாதையில் செல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தற்போது, நாங்கள் அரசியல் கட்சிகள் அல்லது கூட்டணிகளுடன் எந்த மோதலையும் ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இன்று பல்வேறு கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள் அனைவரும் கைகோர்த்து ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். உண்மையில் இது ஜனநாயகத்தில் மிகவும் கடினமான பணி. அரசியலில் உள்ள பொதுவான அம்சம், அதிகாரத்தைப் பயன்படுத்தி நாம் விரும்பியதைச் செயற்படுத்துவதுதான். எவ்வாறாயினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயக ரீதியில் மிகவும் கடினமான பணியை ஆற்றி வருகின்றார். அதாவது தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க அனைத்து அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்துடன் முன்னேற வேண்டும்.

**கேள்வி:** பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய **மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணைவதற்கான கோரிக்கையை நிராகரித்துள்ளது. சர்வகட்சி அரசாங்கத்தில் எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்காமல் தமது ஆதரவை வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். இது பற்றி உங்கள் பார்வை என்ன?**

**பதில்:** பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த தேசியப் பணியை வேண்டுமென்றே தவிர்க்கிறது என்றாலும், அக்கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளனர்.

## மாற்ற முடியாத தேசியக் கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதே ஜனாதிபதியின் நோக்கம்

அக்கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் இந்தப் பணியைத் தவிர்ப்பது பொருத்தமானது என்று கருதினால், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் அரசாங்கத்துடன் கைகோர்ப்பார்கள். இந்தத் தேசியப் பணிக்கு தங்கள் ஆதரவை வழங்குவதற்காக சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே சில பாராளுமன்றக் குழுக்களுக்கான தலைவர் பதவிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். எனவே, இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு அனைவரின் ஒப்புதலையும் பெற எங்களுக்கு வாய்ப்பு உள்ளது. இந்த தேசியப் பணிக்கு ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமன்றி பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கைகோர்த்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர். எமது கட்சியில் இருந்து விலகிய பிரதேச சபை உறுப்பினர்களுடன் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தோம். அதில் பெருந்தொகையான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மீண்டும் கட்சியில் சேரும் அனைவரையும் ஒன்றிணைக்க முயற்சிக்கிறோம்.

**கேள்வி: ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது மாநாடு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி 28 வருடங்களின் பின்னர் கட்சியின் தலைவரின் கீழ் இவ்வருட மாநாட்டை நடத்தியது. கட்சி மாநாட்டின் முடிவுகள் என்ன?**

**பதில்:** உண்மையில், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களுடன் மாநாட்டை நாங்கள் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தால், அதைக் கையாள்வது எங்களுக்கு கடினமாக இருந்திருக்கும். எனவே, சுகததாச மைதானத்தில் 5000 பேர் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதால் மக்களின் பங்கேற்பு வாக்காளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஆனால், அந்த வரம்பை மீறி ஏராளமானோர் மாநாட்டில் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு மாநாட்டை மிகவும் வெற்றிகரமாக நடத்தி முடிக்க முடிந்தது. எமது கட்சியின் மாநாடு செப்டெம்பர் 6 ஆம் திகதி நடைபெற்றது. தற்செயலாக, நாட்டின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன மற்றும் அமைச்சரவை பாராளுமன்றத்தில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட நாள் செப்டம்பர் 7 ஆகும்.

**கேள்வி: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டம் நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு தேவையான சீர்திருத்தங்களை அடையாளம் காட்டியுள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா?**

**பதில்:** ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக கடமைகளை பொறுப்பேற்ற பின்னர், அவர் தனது கொள்கை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அரசியலமைப்பின் 27ஆவது சரத்தின்படிஇ 2048 ஆம் ஆண்டுக்குள் இளைய தலைமுறையினருக்கு நன்மைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தேசியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது வலுப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கு மாற்ற முடியாத தேசிய கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும். இந்த இலக்கை நனவாக்க அனைவரின் உதவியும் தேவை. அரசியல் அடிப்படையில் சில குழுக்கள் பிளவுபட்டால், அந்தப் பணியை எப்படி நிறைவேற்றுவது என்பதை முதலில் சொல்ல வேண்டும். இந்தச் சவாலில் வெற்றிபெற ஒற்றுமையே மிக முக்கியமானது.

## அரசியல் கட்சிகள் யாவும் தமக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டும்!

**கேள்வி: பாராளுமன்றக் கண்காணிப்புக் குழுக்களான கோப் மற்றும் கோபா ஆகியவற்றின் தலைவர் பதவியை தங்களுக்கு வழங்குமாறு எதிர்க்கட்சிகள் கோருகின்றன. தற்போது அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா பதவி வகிக்கின்றார். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** இந்தக் குழுக்களில் பங்கேற்பவர்கள் கட்சி அரசியலில் இருந்து விடுபட்டு சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். அவர்களது அரசியல் நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப்படுத்த அந்தக் குழுக்களின் அதிகாரிகள் மீது அவர்கள் செல்வாக்கு செலுத்தக் கூடாது. எல்லாவற்றிலும் நல்லதும் கெட்டதும் இருக்கின்றன. விமர்சனங்களுக்காக மாத்திரம் இந்தக் குழுக்களைப் பயன்படுத்த முயல்வது ஆபத்தானதாக அமைந்துவிடும். இந்தக் குழுக்களில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் இருவரும் தங்கள் செயல்பாடுகள் குறித்து பொதுவான ஒருமித்த கருத்துக்கு வரவேண்டியது அவசியம்.

**கேள்வி: தற்போது மின்சாரம், தண்ணீர் மற்றும் தொலைத்தொடர்பு கட்டணங்கள் அதிகரித்துள்ளதால் மக்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலைமையை சமாளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?**

**பதில்:** அந்த நிர்வாகத் துறைகளால் தொடங்கப்பட்ட பொறிமுறையின் இயல்பு அதுதான். நீர், மின்சாரம் மற்றும் எரிபொருளின் விலைகளை அதிகரிப்பதை நீர் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்க வேண்டும். அந்த நிறுவனங்களை கட்டமைக்கும் வகையில் இந்தக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிறுவனங்களை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கும்போது இந்த கட்டணங்களைக் குறைக்க முடியும். நஷ்டத்தில் இயங்கும் இந்த நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாறிய பிறகு அந்த இலாபம் மக்களுக்கும் போய்ச் சேரும்.




# இந்தியாவுக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதென்பது சாத்தியமான காரியம்!

இலங்கை மின்கட்டணத்தை அதிகரித்துள்ளமை பொதுமக்களுக்கு பெரும் பிரச்சினையாகும். வீட்டுப் பாவனைக்கு மாத்திரமல்ல கைத்தொழில் திட்டங்களுக்கான மின்கட்டண அதிகரிப்பும் தாங்க முடியாதுள்ளது. குறைந்த செலவினத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதோடு திறமையாக விநியோகிப்பதும் அவசியமாகும்.

இலங்கையில் மின்சார உற்பத்தி அதிக செலவு கொண்டதாகும். நீர்மின்சாரம் குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்படுகிறது. அனல்மின்சாரத்துக்கான செலவு அதிகம். எரிபொருளை இறக்குமதி செய்து அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வது வெற்றிகரமான முறையல்ல. நிலக்கரி மின்னுற்பத்தி நிலையங்களை கூட செயல்படுத்துவது சிரமமாகும். மின்சாரத்தை உற்பத்தி செய்ய தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளதோடு, அந்நிய செலாவணி பற்றாக்குறையுள்ள நாட்டுக்கு அது மேலும் பிரச்சினையாகும்.

இலங்கையில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் குறித்த ஆய்வுகளின்படி புதிய மின்னுற்பத்தி மூலங்கள் பிரச்சினையல்ல. தற்போது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு 4500 மெகாவாற் ஆகும். புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலைகள் மூலம் 24,000 மெகாவாற் தொடக்கம் 30,000 மெகாவாற் வரை மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய அனல்மின் நிலையத்துக்கு அதானி குழுமம் 500 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்துள்ளது. உலகின் மூன்றாவது பணக்காரரான அவரால் இலங்கையில் மின் உற்பத்திக்காக மேலும் முதலீடு செய்ய முடியும். காற்றாலை மற்றும் சூரிய அனல் மின் நிலையங்களை அமைக்க முடியும். அதன் மூலம் குறைந்த விலைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம்.

அதனை நாடு பூராவும் விநியோகிப்பதோடு எரிபொருள் மற்றும் நிலக்கரி பாவனையையும் குறைக்கலாம் . இவை இந்தியா மற்றும் இலங்கை இடையேயான ஒத்துழைப்பை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் எனக் குறிப்பிடலாம்.

தற்போது டென்மார்க்கின் உதவியுடன் ஹம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட மின்னுற்பத்தி நிலையத்தால் 3 மெகாவாற் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. மின்சாரசபை மன்னாரில் அமைத்துள்ள 30 காற்றாலைகள் மூலம் 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. மன்னாரை சுற்றியுள்ள 20,000 ஹெக்டயார் மேட்டு நிலங்களில் முதலீடு செய்தால் 20 ஆயிரம் மெகாவாற் அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். களப்பு மற்றும் ஆழமற்ற கடலில் அமைக்கப்படும் காற்றாலைகள் மூலம் மேலும் பத்தாயிரம் மெகாவாற் வரை மின்சாரத்தை உற்பத்தி செய்யலாமென உறுதி செய்யப்பட்டுள்ளது . இந்த மின்சார உற்பத்தி இலங்கையின் தேவையை விட ஆறு மடங்கு என்பது கவனிக்க வேண்டிய விடயமாகும்.

குறைந்த விலைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய பாரிய முதலீட்டுத் திட்டங்கள் குறித்து இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பாரிய திட்டங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இந்தியாவுக்கு வழங்க முடியும். தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள மின்சாரப் பிரச்சினை நாட்டிற்கு நல்ல சந்தர்ப்பமாகும். தனியார் நிறுவனமோ அல்லது அரச, தனியார் இணைந்த திட்டங்கள் மூலமோ காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கலாம். அவற்றின் திறனுக்கு அமைய சர்வதேச நிறுவனங்கள் அதற்கான வளங்களை அளிப்பதற்குத் தயாராகவுள்ளன.

நாட்டுக்குத் தேவை முடிவெடுக்கும் நடவடிக்கை மாத்திரமேயாகும். மேலதிக மின்சாரத்தை விற்பது இலாபமீட்டும் வியாபாரமாகும். சாக் அமைப்பின் உடன்படிக்கையின்படி பிராந்தியத்துக்கு பொருத்தமான மின்கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தமும் உள்ளது. இலங்கையும் அதில் கைச்சாத்திட்டு ஒப்புதல் அளித்துள்ளது . பூகோள அமைவிடம் காரணமாக, மீளுருவாக்க மின்சார உற்பத்தியின் மத்திய நிலையமாக அமையக்கூடிய சந்தர்ப்பமும் எமக்குண்டு. அதற்கு திட்டம் மற்றும் ஒருங்கிணைப்பு அவசியமாகும். இந்தியாவுக்குத் தேவையான மின்சாரத்தின் அளவைப் பற்றி சிந்திக்கும் போது இரண்டு மூன்று தசாப் தங்களுக்குத் தேவையான மின்சாரத்தை தொடர்ந்து வழங்கக் கூடிய சந்தை வாய்ப்பு இலங்கைக்கு உள்ளது . இந்த அந்நிய செலாவணியை பெறும் திட்டம் பற்றி கவனம் செலுத்தினால் அது எமக்கு புதிய அனுபவமாக அமையும்.

கனிம வளங்களைப் பயன்படுத்தாமல் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் பற்றி இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த வருட ஐக்கிய நாடுகள் சபையின் பருவ நிலை மாற்ற உலக மாநாட்டில் பங்குபற்றிய போது தெரிவித்தார். தூய மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றி 2021 ஜனவரி மாதம் குடியரசு தினத்தன்று பொதுமக்களுக்காக உரையாற்றிய சந்தர்ப்பத்தில் அவர் விசேடமாக இதனைக் குறிப்பிட்டார்.

உலகில் தூய மின்சார உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கம் இந்தியாவுக்கு உண்டு. 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஹைட்ரஜன் மின்சாரம் பற்றி இந்தியா பல விடயங்களை முன்வைத்துள்ளது. சூழலுக்கு இசைவானது மாத்திரமல்ல செலவையும் 8% தொடக்கம்10% வரை குறைக்கக் கூடிய முறைகளை இந்தியா பரிசோதித்துள்ளது.

இந்தியாவின் திட்டங்களின்படி அயல்நாடுகளில் இருந்து அவசர தேவைக்காக மின்சாரத்தை விலைக்கு வாங்குவதும் எதிர்பார்ப்பாகும். 1.3 பில்லியன் மக்கள் வசிக்கும் இந்தியா உலகில் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் காணப்படுகின்றது. இந்தியாவிற்கு பாரிய முதலீட்டு சக்தியுண்டு. அரச மற்றும் தனியார் பிரிவுகள் இணைந்த மின் உற்பத்தி திட்டங்கள் உள்ளன. எவ்வாறாயினும் பிராந்திய நாடுகளுடன் மின்சார உற்பத்தி துறையில் இணைந்து பயணிக்க இந்தியா தயார் என தெரிகின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் பூட்டானின் நீர் மின்சார உற்பத்தித் திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டுள்ளதுடன் அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விலைக்கு வாங்கும் எதிர்பார்ப்புடன் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் ஏற்படும் மின்சாரத் தேவையை கருத்தில் கொண்டு இந்தியாவுக்கு மின்சாரத்தை விற்பனை செய்வது பாரிய வருமானத்தை பெறும் வழியாக பிராந்திய நாடுகள் அறிந்துள்ளன. இலங்கையும் மின்சாரத்தை விற்க முடியும். அது அந்நிய செலாவணியை பெறும் வழியாகும். இந்தியாவுக்கு மின்சாரத்தை விற்பது மகாவலி துரித அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு நோக்கமாக காணப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும். திட்டத்தை தயாரித்த ஆரம்ப காலத்தில் இலங்கையின் மின்சார பாவனைக்கு அதிக கேள்வி இல்லாதிருந்ததனால் நீரை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வீணாக்காமல் வேறு நாடுகளுக்கு விற்பதற்கு தயாரானது.

ஆனால் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மாற்றங்களால் மின்சாரத்தின் தேவை வேகமாக அதிகரித்தது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். இலங்கையில் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் கிடைத்துள்ளதோடு, மின்சார வீட்டுப் பாவனைப் பொருட்களின் பாவனையும் அதிகரித்துள்ளது. அதன் பலனாக தற்போது நாட்டிற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வது பிரச்சினையாக மாறியுள்ளது. தற்போது செய்ய வேண்டியதெல்லாம் மின்சார உற்பத்திக்காக இந்தியா மற்றும் இலங்கை இடையேயான தொடர்புகளை வலுவாக்கி பிராந்தியத்துக்கான மின்சார கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியதாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

### பிரதான அல்லது சிறுபான்மைக் கட்சிகள்;

# எந்தவொரு கட்சிகளிலுமே ஜனநாயகம் கிடையாது

### தலைவர்களை சுற்றியே அதிக அதிகாரங்கள்



நாட்டிலுள்ள அனைத்து பிரதான கட்சிகள் முதல் சிறுபான்மையினரை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் வரை எதிலும் ஜனநாயகமில்லையென தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பொதுவாக தமது அரசியல் நோக்கங்களையடைய முடியாதுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சுற்றியே அதிகப்படியான அதிகாரங்கள் குவிந்துள்ளதாக மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சித் தலைவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மீண்டும் மீண்டும் சலுகைகளை வழங்குவதாகவும் அவர்கள் ஏற்கனவே அரசியல் குடும்பங்களை மையமாகக் கொண்ட அதிகாரங்களைக் கொண்டு தேர்தலில் வெற்றி பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கட்சித் தலைவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அரசியலுக்கு வருவதை தாம் எதிர்க்கவில்லை. ஆனால் தகுதியின் அடிப்படையில் அவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டமென்றும் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போக்கு தொடரும் வரை, இளைஞர்கள் தாங்கள் விரும்பும் அமைப்பு மாற்றத்தை அடைய முடியதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் ரவி லத்துவஹெட்டி காலமானார்

சிரேஷ்ட ஊடகவியலாளர் ரவி லத்துவஹெட்டி தனது 60 ஆவது வயதில் காலமானார்.

டெய்லிநியூஸ், டெய்லி மிரர், தி ஐலண்ட், சிலோன் டுடே, நேஷன் உள்ளிட்ட ஆங்கில நாளிதழ்கள் பலவற்றில்அவர் ஊடகவியலாளராக கடமையாற்றியுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான ரவி லத்துவஹெட்டி பல்துறை ஆற்றல் கொண்டவராக திகழ்ந்தார். அத்துடன் ஏராளமான அனுபவங்களை கொண்ட ஊடகவியலாளராகவும் திகழ்ந்தார். அரசியல் செய்தியாளராக, வர்த்தக செய்தியாளராக, பாராளுமன்ற செய்தியாளராக விளையாட்டுத்துறை செய்தியாளராக நீண்டகாலம் ஊடகக்களத்தில் தனது திறமையை வெளிப்படுத்தி வந்தார்.

இவர் கண்டி திருத்துவக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று பொரளை கனத்தையில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

# இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் அமைச்சர் அலி சப்ரியுடன் சந்திப்பு



இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் கிலோன், வெளியுறவு அமைச்சர் சப்ரியை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.


அண்மையில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது, விவசாயம், உணவுப் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கிய இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் வெளிநாட்டமைச்சர் சப்ரி இஸ்ரேல் தூதுவருடன் கலந்துரையாடினார்.

விவசாயத்தில் இஸ்ரேலின் சிறந்த நடைமுறைகள் பற்றி விரிவாகக் கூறும் போது, தூதுவர் கிலோன், விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பம் மற்றும் திறன் மேம்பாடுகளை அறிமுகப்படுத்தி இலங்கை விவசாயத் துறையை மேம்படுத்த உதவுவதற்கு இஸ்ரேலிய அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாகக் கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் சப்ரி, இஸ்ரேலில் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்புகளைப் பாராட்டியதுடன், இஸ்ரேலிலிருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

# USAID மூலம் இலங்கைக்கு மேலும் 65 மில்.டொலர்கள்

### வழங்கவுள்ளதாக USA தூதுவர் தெரிவிப்பு



யூ.எஸ்.எய்ட்டின் நிர்வாகி சமந்தா பவரின் அண்மைய இலங்கை விஜயத்தின் அடிப்படையில், ஐந்தாண்டு காலத்துக்கு இலங்கைக்கு மேலதிகமாக 65 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அமெரிக்க தூதுவர் அறிவித்துள்ளார்.

இந்த நிதி, இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்காக, கடந்த வாரம் சமந்தா பவர் அறிவித்த புதிய மனிதாபிமான மற்றும் உர உதவியான 60 மில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளதென அமெரிக்க தூதரகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

யூ.எஸ்.எய்ட்டின் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான பணிப்பாளர் கேப்ரியல் கிராவ் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோர் இது தொடர்பான உடன்படிக்கையில் நேற்று கைச்சாத்திட்டுள்ளனர்.

1956 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா இலங்கைக்கு அபிவிருத்தி உதவியாக 02 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

### வடக்கு ஆளுநர் ஜீவன் வாக்குறுதி;

# அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு போராட்டம் முடிவு

யாழ்.விசேட நிருபர்



கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வாக்குறுதியையடுத்து போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் கைதிகளின் உறவினர்கள் இதனை நேற்று தெரிவித்தனர்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று சனிக்கிழமை கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட தமது உறவுகளான அரசியல் கைதிகளை சந்தித்து கலந்துரையாடி, விரைவில் விடுதலைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவித்ததையடுத்து சிறையில் தமது உறவுகள் போராட்டத்தை கைவிட்டுள்ளதாகவும், அதனால் அவர்களுக்கு ஆதரவாக யாழில் தாங்கள் முன்னெடுத்த போராட்டத்தையும் கைவிடுவதாக அரசியல் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர் . ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொலைபேசி வாயிலாக உண்ணாவிரதம் இருக்கும் சிறைக் கைதிகளுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியமையும் குறிப்பிடத்தக்கது.

## எங்கள் கருத்து

### தமிழ் எம்.பிக்கள் வெளிப்படுத்த வேண்டிய சாதகமான சமிக்ஞை!

நாட்டில் தேசியப் பிரச்சினைக்கு நியாயமானதொரு அரசியல் தீர்வு காணப்படும்வரை தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கையானது என்றும் தொடரவே போகின்றது. அனைத்து இனங்களும் ஏற்கக் கூடியதொரு தீர்வு காணப்பட்டாலேயே, தமிழ் மக்கள் சமரசமான மனோநிலைக்கு வர முடியும். அதன் பின்னரே நாட்டில் இனங்களிடையே நல்லிணக்கமும், நிலையான சமாதானமும் உருவாக வழியேற்படும்.

இவ்வாறான நிலையில், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சாதகமான நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருதினங்களுக்கு முன்னர் வெளிப்படுத்தியிருக்கின்றார். தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் மக்களுடன் இறுதி உடன்பாட்டை எட்ட முடியுமென்று தாம் எதிர்பார்ப்பதாக, தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உருவான அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர், நாட்டின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக முதல் தடவையாக நம்பிக்கை தரும் கருத்தொன்றை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். ஜனாதிபதியின் இக்கருத்தானது தமிழ் மக்களுக்கு புதிய நம்பிக்கையை அளிக்குமென்பதில் ஐயமில்லை.

அதேவேளை ஜனாதிபதியின் நம்பிக்கை எதிர்பார்ப்புக்கான சாதகமான அணுகுமுறையை எதிர்காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பு வடக்கு, கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டென்பது இவ்விடத்தில் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். ஜனாதிபதியின் நல்லெண்ணத்துக்கு நேசக்கரம் நீட்ட வேண்டிய கடப்பாடு தமிழ் எம்.பிக்களுக்கு உள்ளது.

## புலிகளின் புதையலை...

கிடைத்தவுடன் நேற்றைய தினம் சனிக்கிழமை காலை 10 முதல் மதியம் 02 மணி வரையில் புதையல் அகழும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. புதையல் அகழ்வதற்காக கொழும்பிலிருந்து விசேட அணியினர் வந்திருந்த்துடன் அகழ்வு பணிகளுக்காக கனரக வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

மதியம் 02 மணிவரையில் யாழ்ப்பாண நீதவான் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற போதும், எவ்விதமான பொருட்களும் மீட்கப்படவில்லை. அத்துடன்வெறும் கற்களே கிடைத்தன என்பதால் அகழ்வு பணிகள் நிறுத்தப்பட்டன.

## ஜனாதிபதி ரணில் நேற்று...

மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயம் இதுவாகமென தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிக் கிரியைகள் நாளை 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொண்ட பின்னர் ஜனாதிபதி நாளை மறுதினம் 20ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## 'தேசிய சபை' 20ஆம் திகதி...

சபை என்றழைக்கப்படும் பாராளுமன்ற குழுவின் தலைவர் பதவி சபாநாயகருக்கு வழங்கப்படவிருப்பதுடன், இதன் உறுப்பினர்களான பிரதமர், சபை முதல்வர், எதிர்க் கட்சித் தலைவர், ஆளும் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து ஒன்பதாவது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முப்பந்தைந்துக்கும் (35) மேற்படாதோர் உறுப்பினர்களாகக் காணப்படுவர்.

இந்த தேசிய சபை,, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்கும், பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பாக குறுகிய மற்றும் நடுத்தர கால பொதுவான அதிகுறைந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய உடன்பாட்டுக்கு வருவதற்கும்,

அமைச்சரவை அமைச்சர்கள், தேசிய பேரவை, விசேட குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் இளைஞர் அவதானிப்பாளர்கள் ஆகியோர் விசேட கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் இந்த தேசிய சபையில் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய சபையினூடாக துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், அரசாங்க நிதி பற்றிய குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் குழு, அத்துடன் அரசாங்கக் கணக்குகளைக் கட்டுப்படுத்தும் ஏதேனும் குழு ஆகியவற்றிலிருந்து அறிக்கைகளைக் கோருவதற்கான தத்துங்களைக் கொண்டிருக்கும்.

## மேலதிகமாகவுள்ள ஊழியர்கள்...

அரச துறைக்கான ஆட்சேர்ப்புகளை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், கட்டாய ஓய்வு வயதெல்லை 60 வயது எனவும் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் அரச சேவையில் ஏற்படும் வெற்றிடங்கள் பல்வேறு அரச நிறுவனங்களிலுள்ள மேலதிக ஊழியர்களை கொண்டு நிரப்பப்படும்.

எனவே அரச நிறுவனங்களில் ஆள் பற்றாக்குறையோ, சேவையை வழங்குவதில் குறைபாடுகளோ ஏற்படாது.

உதாரணமாக அரசாங்கம் 2020 இல் 60,000 பட்டதாரிகளை அரச சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்தது. எனினும் அவர்களில் பலர் பட்டதாரிகளுக்குப் பொருந்தாத வேலைகளைச் செய்வதாகக் கூறப்படுகிறது.

இந்த பட்டதாரிகளைக் கொண்டு அரச துறையிலுள்ள வெற்றிடங்களை அரசாங்கம் நிரப்ப முடியும். அத்துடன் அரசாங்கத்தின் முதன்மையான முன்னுரிமை நிதி மேலாண்மை மற்றும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காகவென குறிப்பிட்டுள்ளார்.

## கிரிக்கெட் நிறுவனம்...

இதன்படி, மஹரகம வைத்தியசாலை மற்றும் சுகாதார அமைச்சின் அறிக்கைகளின்படி, பணப் பற்றாக்குறையே மருந்துகளைக் கொள்வனவு செய்ய முடியாமல் இருப்பதற்கு காரணம் என்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஷானுக கருணாரத்ன, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வாவுடன் ஆலோசனை நடத்தி, பண உதவியை ஒருங்கிணைத்தார். ஜனாதிபதி ஊடகப் பிரிவின் முயற்சிகளுக்கு உடனடியாக பதிலளித்த இலங்கை கிரிக்கெட் நிறுவனம், ஜனாதிபதி அலுவலகத்தினூடாக அதற்கு ஒத்துழைக்க முன்வந்தது. வாக்குறுதியளித்தபடி, அவர்கள் ஆசியக் கிண்ணத்துக்குப் பின்னர் இந்த நன்கொடையைக் கையளித்தனர்.

## தர்ஜினி சிவலிங்கம்....

மத்தியில் இல்லாமை பலரையும் கேள்விக்குள்ளாக்கியது. இந்த நிலையில, தர்ஜினி சிவலிங்கம் நாடு திரும்பவில்லை.அவர் தற்போது அவுஸ்திரேலியாவில் பிராந்திய அணியொன்றில் விளையாடி வருகிறார்.

இதற்கிடையில், ஆசியக்கிண்ண வலைப்பந்தாட்ட தொடரில் தர்ஜினி சிவலிங்கம் பற்கேற்பதற்காக அவரை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு வலைப்பந்தாட்ட பயிற்றுநர் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.அதில், அவரின் உடல் அமைப்பை கருத்தில் கொண்டு விசேட வாகனத்தை ஏற்பாடு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவை அவர் கோரியிருந்தார்.

இருப்பினும், விளையாட்டுத்துறை அமைச்சு அதற்கு மறுப்பு தெரிவித்தது.இதனையடுத்து, ஆசியக்கிண்ண போட்டிக்கு சிங்கப்பூர் சென்ற அணி இலங்கையில் பயிற்சிகளை பெற்ற போது தர்ஜினி அவுஸ்திரேலியாவில் பயிற்சிகளில் ஈடுபட்டார்.அத்துடன், சிங்கப்பூரில் இடம்பெற்ற ஆசியக்கிண்ணத்துக்காக அவர் அவுஸ்திரேலியாவில் இருந்து அங்கு சென்றிருந்தார்.

மேலும், போட்டிகள் முடிவடைந்த பின்னர் தர்ஜினி சிவலிங்கம் மீண்டும் அவுஸ்திரேலியாவுக்கே திரும்பி சென்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனிய நந்தவனம் வெள்ளிவிழா...

ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமை தாங்குகிறார்.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக தமிழக தொழிலதிபர் முகம்மது அபுபக்கர் சித்தீக், வீரகேசரி வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் எஸ். கஜன், தினக்குரல் பிரதம ஆசிரியர் கே.ஆர்.பி. ஹரன், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர், தமிழன் நாளிதழ் வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் எஸ். சிவராஜா,வீரகேசரி செய்திப் பிரிவுப் பணிப்பாளர் ஆர். பிரபாகரன், தினக்குரல் செய்தி ஆசிரியர் வே. கணேசன், தமிழ்மிரர் பிரதம ஆசிரியர் கனகராஜா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவைப் பணிப்பாளர் இரத்தினசிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்வர்.

செல்வி இனியவள் காண்டீபன் தமிழ்வாழ்த்துப்பாட, கொழும்பு தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் ஆழ்வார் கந்தசாமி வரவேற்புரையாற்ற, ஞானம் பிரதம ஆசிரியர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் தலைமையுரையாற்றுவார்.

கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா, கவிஞரும் எழுத்தாளருமான முருகன் சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விந்தினராகக் கலந்துகொள்வர்.

எழுத்தாளரும் ஆய்வாளரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவருமான முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

திருமதி ரஞ்சனி சுப்பிரமணியம் நூல் விமர்சன உரையாற்ற, இனிய நந்தவனம் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் ஏற்புரையையும் நன்றியுரையையும் ஆற்றுவார்.

கலைஞானச்சுடர் சுபாசினி பிரணவன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார். கலாபூஷணம் பொன்னுத்துரை நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பு செய்வார்.

## சாஹித்திய ரத்னா விருது பெற்ற எழுத்தாளர்...

30 தமிழ் நூல்களும், 02 ஆங்கில நூல்களும் 02 ஆங்கில மொழிக் கலைக்களஞ்சியங்களும் வெளியாகியுள்ளதாக கொழும்பு தமிழ் சங்கம் வெ ளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓமான், மாலைத்தீவு, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் உயர்நிலை பாடசாலைகளில் ஆசிரியராகவும் அமரர் கே. எஸ். சிவகுமாரன் பணியாற்றியுள்ளார். பல பட்டங்களைப் பெற்ற அமரர் கே. எஸ்.சிவகுமாரனுக்கு ஆறாவது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரது மறைவுக்கு தினகரன் ஆசிரியர் பீடத்துடன் கொழும்பு தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ் கூறும் நல்லுலகத்தின் பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## 07 இலங்கை மாணவர்களை மீட்ட...

சேகரிக்கப்படுகின்றன. ஆக்கிரமிக்கப்பட்ட நகரங்கள் மற்றும் நகரங்களின் பொதுமக்கள் கொடுமைப்படுத்தப்பட்ட சித்திரவதை கூடங்கள் மற்றும் வளாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அங்கு பொது மக்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் கூட தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, இலங்கையின் ஏழு குடிமக்கள், குப்யான்ஸ்க் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். கடந்த மார்ச் மாதம் அவர்கள் ரஷ்யப் டையினரால் பிடிக்கப்பட்டனர். பின்னர் ஒரு அடித்தளத்திலுள்ள அறையில் வைக்கப்பட்டனர்.

இப்போது, கார்கிவ் பகுதியின் விடுதலைக்குப் பிறகு, இந்த மக்கள் மீட்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிதென்றும் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## லிட்ரோ GAS இறக்குமதி பத்திரத்தில்...

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர்,

அந்த குற்றச்சாட்டு மூலம் தமது நிறுவனத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆயிரத்து 975 மெற்றிக் தொன் எரிவாயு, பணம் செலுத்தி கொண்டு வரப்பட்டுள்ளது. தம்மிடம் அதற்கான பற்றுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்கள் உள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழக வரலாற்றில்...

பரிமாற்றம் செய்வதற்கும் தற்காலிக வேலைவாய்ப்பு நியமனம் வழங்கப்படுமென துணைவேந்தர் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கம் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இந்த புதிய திட்டத்தில் மாணவர்களிடையே மிகுந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே சுமார் 170 மாணவர்கள் இதற்கு விண்ணப்பித்துள்ளதாகவும், அவர்களுக்கு ஒக்டோபர் 1ஆம் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

## ஏழு நகர சபைகள் மாநகர...

சபைகளாக மாற்றுவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி வவுனியா, களுத்துறை, கேகாலை, புத்தளம், திருகோணமலை, மன்னார் மற்றும் அம்பாறையின் இரண்டு நகரங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நகர சபைகள் கலைக்கப்பட்டுள்ளன. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சரென்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவினால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.


## இலங்கைக்கு கைகொடுப்பதில்... ((06ஆம் பக்கத் தொடர்)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் பற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்தி, அத்தாக்குதலுக்குக் காரணமானவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுவது உள்ளிட்ட பல்வேறு முயற்சிகள் பற்றியும் இருவருக்கிடையிலான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

"இலங்கை அரசாங்கம் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு ஆதரவை வழங்குவது முக்கியமானது என்பதால், மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கம் தொடர்பில் ஜனாதிபதியிடமிருந்து கேட்டறிந்து கொண்டோம்.

நோக்கத்தை நாங்கள் கேட்டோம், ஆனால் நிரல் வடிவமைப்பிற்கு நாங்கள் உதவ முடியும்.

உலகின் பிற பகுதிகளில் நாங்கள் ஆதரிக்கும் பிறசமூக பாதுகாப்பு வலைத் திட்டங்களை வரைதல். மீண்டும், சிவில் சேவை இலங்கையில் மிகப் பெரியதாக இருந்தாலும், இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மனிதத்திறன் இருப்பதை உறுதிசெய்து, உத்தேசிக்கப்பட்ட பயனாளிகளை அடையும் விதத்தில் அதைச் செய்ய வேண்டும். மேலும், சில அரசியல் ஆதரவின் காரணமாக, சில அரசியல் விருப்பங்களின் காரணமாக, உதவி வழங்கப்படாத இடத்தில், ஆனால் அது தேவையின் அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது" என்ற விடயத்தையும் சமந்தா பவர் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி மற்றும் அரசியல் தலைவர்கள் மாத்திரமன்றி, சிவில் சமூகப் பிரதிநிதிகள், விவசாயிகள் உள்ளிட்ட தரப்பினரையும் சமந்தா பவர் நேரடியாகச் சென்று சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# கசான் சர்வதேச திரைப்பட விழாவில் சிங்களப் படத்துக்கு சிறந்த நடிகர் விருது



ரஷ்யாவின் ததாரிஸ்தான் குடியரசின் பூரண ஒத்துழைப்புடன் வருடாந்தோறும் நடைபெறும் கசான் சர்வதேச முஸ்லிம் திரைப்பட விழாவின் (kazan International Muslim Film Festival) 18 வது விழா, கடந்த (11 ம் திகதி) இரவு பழங்கால நகரமான கசான் நகர பிரமிட் வளாகத்தில் வெகு சிறப்பாக நடை பெற்றது. அங்கு உலகப் பிரசித்தி பெற்ற திரைப்படங்கள் உள்ளிட்ட கடந்த இரண்டு வருடங்களில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற 10 திரைப்படங்கள் திரையிடப்பட்டன. விழாவின் முக்கிய போட்டிப் பிரிவில் 'சிறந்த நடிகர்' விருது 'த நியூஸ் பேப்பர் ' திரைப்படத்தின் பிரதான பாத்திரங்களில் நடித்த சரத் கொத்தலாவல மற்றும் குமார திரிமாதுர ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கசான் திரைப்பட விழாவில் இலங்கைத் திரைப்படமொன்று விருது வென்றது இரண்டாவது தடவையாகும். முன்னர் 2018 ஆம் ஆண்டு சமீர நாஒட்டுனவின் 'மோட்டார் பைசிக்கள்' திரைப்படத்துக்கு ரஷ்ய திரைப்பட விமர்சகர் அமைப்பால் வழங்கப்படும் சுயாதீன ஜூரி விருது வழங்கப்பட்டது. ஆனால் விழாவின் பிரதான ஜூரிகளால் வழங்கப்பட்ட விருது இலங்கை திரைப்படம் ஒன்றுக்கு கிடைத்தது இதுவே முதல் தடவையாகும். 'த நியூஸ் பேப்பர்' திரைப்படத்துக்கு அது கிடைத்தது முக்கிய அம்சமாகும். அதேபோன்று கசான் விழாவுக்கு அனுப்பப்பட்ட இலங்கையின் நான்காவது திரைப்படம் 'த நியூஸ் பேப்பர்' ஆகும். அதில் 'மோட்டர் பைசிக்கள்' மற்றும் 'த நியூஸ் பேப்பர்' பிரதான போட்டிப் பிரிவின்கீழும், சஞ்சீவ புஷ்பகுமாரவின் 'தெவன விஹகுன்' (2017) மற்றும் மாலக தேவபிரியவின் 'பஹுசித்தவாதியா' (2018) என்பன போட்டிக்கு வெளியிலான பிரிவின் கீழும் விழாவில் திரையிடப்பட்டன.

FIAPF அனுமதி பெற்ற இந்தியாவின் பெங்களூர் சர்வதேச திரைப்பட விழாவில் இரண்டாவது சிறந்த ஆசிய திரைப்படத்துக்கான (Second Best Asian Film) விருதை பெற்றதுடன், ஏனைய சர்வதேச திரைப்பட விழாக்களிலும் 'த நியூஸ்பேப்பர்' திரைப்படம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதுவரை 'த நியூஸ் பேப்பர்' திரைப்படம் காண்பிக்கப்பட்ட அனைத்து சர்வதேச திரைப்பட விழாக்களிலும் விருதுகளை வென்றோ அல்லது விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டோ உள்ளமை விசேட அம்சமாகும்.






## இலங்கைக்கு பெருமை சேர்த்த சரத் கொத்தலாவல மற்றும் குமார திரிமாதுர

கசான் திரைப்படவிழாவில் பெற்ற விருதுடன் இதுவரை சர்வதேச விழாக்களில் 'த நியூஸ் பேப்பர் 'திரைப்படம் பெற்றுள்ள விருதுகளின் எண்ணிக்கை எட்டாகும். அமைச்சர் பந்துல குணவர்தனவால் தயாரிக்கப்பட்ட 'த நியூஸ்பேப்பர்' திரைப்படத்தை ரஷ்யாவின் கசான் திரைப்பட விழாவுக்கு யூஎல்.கே பிலிம்ஸ் தனியார் நிறுவனம் பரிந்துரைத்து ஒருங்கிணைப்பு செய்தது.

படங்கள் கசான் திரைப்பட விழா ஏற்பாட்டு குழுவின் அழைப்பின் பேரில் 'த நியூஸ் பேப்பர்'படத்தின் தயாரிப்பாளர் பந்துல குணவர்தன விழாவில் கலந்து கொண்டு சரத் கொத்தலாவல மற்றும் குமார திரிமாதுர ஆகியோருக்கான விருதினை பெற்ற காட்சி.

## செப்டெம்பர் 15இல் மறைந்த கே.எஸ்.சுக்கு தினகரனின் அஞ்சலி

# அறிவும், எளிமையும் மிக்க பண்பாளர்

# கே.எஸ்.சிவகுமாரன்



**இரகசியமாக செய்யப்பட்ட ஏற்பாடுதான் அது. பதினைந்து வருடங்களும் முன்னர் கே.எஸ். சிவகுமாரனுக்கு எழுபது வயது. தனக்கு எழுபதை எட்டும் தருணத்தில் கொழும்பு இலக்கிய அன்பர்கள் இணைந்து ஒரு பிறந்த தின விழாவை நடத்துவார்களானால் அது தனக்கு பெருமை சேர்ப்பதாக இருக்கும் என்று என்னிடம் தன் ஆதங்கத்தை இரண்டு மூன்று தடவைகள் வெளிப்படுத்தியிருந்தார். கொழும்பு இலக்கிய அன்பர்கள் தன்மீது அக்கறை கொள்வதில்லை; தான் ஆற்றியிருக்கும் இலக்கிய பணிகளை இவர்கள் பொருட்டாகக் கொள்வதில்லை என்ற மனக்குறையின் வெளிப்பாடு தான் இது. உண்மை அது அல்ல என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.**

ஒவ்வொரு சனிக்கிழமை பகல் பொழுதிலும் ஆனந்தவிகடன், தீராநதி, உயிர்மை போன்ற சஞ்சிகைகளை வாங்கவும், புதிய புத்தகங்கள் வந்துள்ளவா என்று நோட்டம் பார்க்கவும் செட்டியார்த்தெரு பூபால சிங்கத்துக்கு போய்வருவது என் வழக்கம். சந்தர்ப்பம் கிடைத்தால் அதிபர் ஸ்ரீதர்சிங்குடன் சில நிமிடங்கள் பேசிவிட்டு வருவேன். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் கே.எஸ். சின் பிறந்த தினம் வரவிருப்பதையும் அவரது ஆதங்கத்தையும் அவர் காதில் போட்டு வைத்தேன். எந்த முகக்குறிப்பும் காட்டாமல் கேட்டுக் கொண்டார். நானும் அதை மறந்து போனேன். அக்டோபர் விடிவதற்கு ஒரு சில தினங்கள் இருக்கையில் பூபாலசிங்கம் புத்தக சாலை மேல் மாடியில் ஒரு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் சமூகமளிக்கும்படியும் அழைப்பு வந்தது. அப்போது இலங்கையில் இருந்த இளைய அப்துல்லாவிடமும் இதைச் சொன்னேன். ஆனால் என்ன வைபவம் என்பது எனக்குத் தெரியாது.

பூபாலசிங்கம் மேல்மாடி இலக்கிய அன்பர்களால் நிறைந்திருந்தது. கே.எஸ். சிவகுமாரனின் 70வது பிறந்ததின விழா என்றும் சடுதியாக ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் சொன்னார்கள். தெளிவத்தை ஜோசப், மேமன் கவி, மல்லிகை ஜீவா, அந்தனி ஜீவா, கலைச்செல்வன், லண்டன் இளைய அப்துல்லா, பொன்னுத்துரை உட்பட பலர் வருகை தந்திருந்ததாக ஞாபகம். கே.எஸ்.சின் இலக்கிய பணிகள் பற்றி அங்கே உயர்த்திப் பேசினார்கள். பாராட்டி பொன்னாடை, மாலை அணிவித்தார்கள். விளம்பரப் பிரியரான கே.எஸ். அப்படியே குளிர்ந்து போனார். பல்லில் போட்டு அரைப்பதற்கும் தந்தார்கள். தான் எதிர்பார்த்தது அப்படியே நடந்ததில் கே.எஸ்.சுக்கு பரம திருப்தி.

மனிதர்களில் காணப்படக்கூடிய பல இனிய பக்கங்களை கே.எஸ்.சில் காணமுடியும். அவர் கோபப்பட்டு எவரும் பார்த்திருக்க வாய்ப்பில்லை. தவறு எனப்படுவதையும், நாசுக்காக சொல்வார். தமிழில் வார்த்தைகளை தேர்ந்தெடுத்து பேசக் கூடியவர். ஆங்கிலமும் அப்படித்தான். அவரது ஆங்கில பேச்சு சங்கீதம் போன்றிருக்கும் அவர் மொழிகளை நேசித்ததே இதற்குக் காரணம். அவர் நேர்மையானவராகவும் தனது பணிகளை தன்பாணியில் செய்பவராகவும், அழுத்தங்களுக்கு அடிபணியாதவராகவும் இருந்தார். முயற்சி செய்திருந்தால் ஆங்கில இலக்கிய ஆசிரியராகவோ விரிவுரையாளராகவோ பணியாற்றிருக்கலாம். ஆனால் இயல்பிலேயே இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்த அவரை இதழியல்துறை தொடர்ச்சியாக ஈர்த்து வந்திருக்கிறது.



இளமையில்...

இஸ்லாமிய வாசகர்களை மனதில் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நவமணியின் முதலாவது ஆசிரியர் கே.எஸ். சிவகுமாரனே. வீரகேசரியில் இணையாசிரியராக பதவி வகித்த போதிலும் ஒரு ஆலோசகர் அளவில் செயல்பட்டதாகவும் அதனால் அப்பத்திரிகையின் ஓரிரு முக்கிய புள்ளிகளுடன் அவர் முரண்பட வேண்டியிருந்தது என்பதும் அக் காலத்தில் பணியாற்றிய ஒருவர் என்னிடம் கூறிய தகவல். 'த ஐலண்ட்' பத்திரிகையில் துணையாசிரியராக பணியாற்றியதோடு சில வருடங்களுக்கு முன் டெய்லி நியூஸ் நாளேட்டில் துணையாசிரியராகவும் கடமையாற்றினார்.

இவ்வாறு பத்திரிகையுலகின் மாபெரும் சபைகளில் பீடு நடை போட்டிருந்தாலும் அங்கெல்லாம் தான் பெற்ற அனுபவங்களை அவர் வெளியாருடன் பகிர்ந்து கொண்டதில்லை. ஓரிடத்திலும் அவரால் நிலைக்க முடியாமல் போனதற்கு அவரது நேர்மையும் வளைந்து கொடாத்தன்மையுமே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

பத்திரிகைகளில் அவர் தொடர்ச்சியாக எழுதி வந்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத்தில் எப்போதும் வார்த்தை சிக்கனமும் சிறிய வசனங்களும் இருக்கும்படி பார்த்துக் கொள்வார். திரைப்படங்களை அதுவும் உலகத்திரைப்படங்களை விரும்பிப் பார்ப்பர். வருடா வருடம் கோவா சர்வதேச திரைப்பட விழாவுக்கு தன் சொந்தச் செலவில் கலந்து கொள்வது அவரது பிரியமான பொழுதுபோக்கு. அப்படி ஒரு உலகத் திரைப்பித்து அவரில் இருந்தது. அவரது திரை விமர்சனம் உயர் தரத்தில் இருக்கும். திரைப் பித்துக்கு அப்பால் அவர் மிக நேசித்த விஷயம் வானொலி. இலங்கை வானொலி ஆங்கில சேவையில் நிகழ்ச்சி நடத்துபவராகவும், செய்தி ஆசிரியராகவும், செய்தி வாசிப்பவராகவும் நீண்டகாலம் பகுதிநேர சேவையாளராகவும் அவர் பணியாற்றியிருக்கிறார்.

ஒரு உயர் உத்தியோகத்தில் நிலைத்திருப்பதற்கு பதிலாக கலை இலக்கிய உலகில் சஞ்சரிப்பதையே அவர் விரும்பினார். அதில் அவருக்கு ஒரு திருப்தி கிடைத்தது. மூப்பின் காரணமாக தன் நடமாட்டங்களை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும்வரை தமிழ்ச் சங்கத்தின் வார இறுதி வைபவங்களில் அவரை நிச்சயம் பார்க்க முடிந்தது. முன் வரிசையில் அமர்ந்து நிகழ்ச்சிகளை கவனிப்பது அவர் வழக்கம்.

இலங்கையின் மிகச் சிறந்த தமிழ் திறனாய்வாளர்களில் இவரும் ஒருவர். ஒரு திரைப்படமோ, உரையோ அல்லது நூலோ, அவரது பார்வை கச்சிதமாக இருக்கும். தமிழர்களைப் போலவே அவருக்கு ஏராளமான சிங்கள நண்பர்கள் இருந்தார்கள். ஆனால் எவரையும் குறை சொல்லி பேசும் வழக்கம் அற்றவர். நாம் எவரைப் பற்றியாவது குறையாகச் சொல்லி, அது உண்மை என அவர் நம்பினாலும், "மனுஷர்கள் அப்படித்தான்... அதை விடுங்கோ... இப்போ எல்லாம் எப்படிப் போகுது" என்று பேச்சை மாற்றி விடுவார். அவர் அப்பழுக்கற்ற ஒரு ஜென்டில்மேன் என்றால் யாருமே ஆட்சேபிக்க மாட்டார்கள்.

ஓமானில், மாலைத் தீவில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றியது, சிலகாலம் அமெரிக்கா சின்சினாட்டியில் குழந்தைகளுக்கு கற்பித்தது போன்ற தகவல்கள் எல்லாம் எப்போதாவது பேச்சு வாக்கில் வரும். இணையத்தில் சஞ்சரிப்பதையும் முகநூல் உரையாடல்களிலும் அலாதி விருப்பம் கொண்டவர்.

அவரது வாழும் பாணி அலாதியானது. அதனால் அவரை பலரும் புரிந்து கொள்ள தவறிவிட்டார். அது அவரைச் சுற்றி ஒரு வெறுமையை உருவாக்கியிருக்க வேண்டும். அங்கே தான் இணைய வழி உரையாடல்கள் அவருக்குக் கைகொடுத்தன.

"நான் வெகுநேரம் இணையத்தில் இருப்பதை என் மனைவி விரும்புவதில்லை. ஒன்பது மணிக்கெல்லாம் விளக்கை அணைத்து போய்ப் படுங்கள் என்பார். நானும் நல்ல பிள்ளை மாதிரி படுத்துக் கொண்டு இரண்டு மணிக்கெல்லாம் எழுந்து கொள்வேன். அப்புறம் விடிய ஐந்து மணிவரை இணையத்தில் உட்கார்ந்திருப்பேன்" என்று புன்னகையுடன் சொன்னதை நினைத்துப் பார்க்கிறேன். பலருக்கும் தெரியாத இன்னொரு விஷயம், அவர் விதவிதமாக உண்ணவிரும்பும் சாப்பாட்டுப் பிரியர் என்பது. சில தடவைகள் அவருடன் பிரியாணி சாப்பிடச் சென்றிருக்கிறேன். லேக்ஹவுஸுக்கு வந்து எங்கே போகலாம் என்று கேட்பார். அசைவமாகத்தான் சாப்பிட விரும்புவார். ஆறுதலாக பேசிப் பேசி சாப்பிடுவார். அவர் அடிப்படையில் கலை உள்ளம் கொண்ட ரசிகர். சிருங்காரத்தில் விருப்பம் கொண்டவர். எல்லா கலாரசனை கொண்டவர்களும் ரசிகர்களாகவும், அனுபவிக்க விரும்புபவர்களாகவும் ரசித்து சாப்பிட விரும்புபவர்களாவும் இருப்பது இயல்பு.

ரசிகராக இருந்ததால்தான் அவரால் விமர்சனப் பார்வையையும் திறனாய்வையும் சிறப்பாக முன்வைக்க முடிந்தது. 2013ம் ஆண்டில் 'ஞாபக வீதியில்' என்ற தலைப்பில் அறுபது வயதைத் தாண்டிய இலங்கைப் பிரமுகர்களைச் சந்தித்து அவர்களின் கடந்து போன நினைவுகளை மீட்டும் ஒரு பகுதியை வாரமஞ்சரியில் ஆரம்பித்தோம். பத்திரிகையாளர் மணி ஸ்ரீகாந்தன்தான் ஒவ்வொருவரையும் பேட்டி எடுத்தார். பெப்ரவரி 24ம் திகதி வாரமஞ்சரியில் கே.எஸ். சிவகுமாரனின் சுவையான பேட்டி வெளியானது. அதில் வெகு இயல்பாகவும் நகைச்சுவையாகவும் தன் வாழ்க்கை அனுபவங்களை அவர் கூறியிருந்தார். திருட்டுத்தனமாக பவளக்கொடி படம் பார்த்து அப்பாவிடம் அடிவாங்கியது; ஒரு தலைப்பட்சமாக ஒரு பெண்ணைக் காதலித்தது; தன் திருமணம், தன் சிறுவயது குறும்புகள் என எல்லாவற்றையும் பகிர்ந்திருந்தார். மட்டக்களப்பு புளியந்தீவுக்கு அருகே அமைந்திருக்கும் சிங்களவாடிதான் தான் பிறந்த இடமென்றும் தன் பாட்டியாரின் கேரளத் தொடர்பு பற்றியும் அவர் கூறியிருந்தார். தான் வெளியே சொல்ல விரும்பிய ஆனால் அதற்கான வாய்ப்பில்லாத நிலையில் அதற்கு வடிகாலாக ஞாபக வீதி அமைந்ததில் அவருக்கு பரம திருப்தி.

அவர் சுமார் 27 நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றில் ஒன்று ஈழத்து உளவியல் சிறுகதைகள் என்பதாகும். 1959-1965 காலப்பகுதியில் அவர் எழுதிய உளவியல் சிறுகதைகளின் தொகுப்பு அது. தமிழில் உளவியல் ரீதியான படைப்புகள் மிகவும் குறைவு. அதாவது இலங்கைத் தமிழ் எழுத்துலகில். உளவியல் ரீதியாக எழுதக் கூடிய சகல தகுதிகள் இவருக்கு இருந்ததால் அவரைக் கண்டபோதெல்லாம் உளவியல் சார்ந்த சிறுகதைகள் அல்லது கட்டுரைகள் தரும்படி கேட்டு நச்சரிப்பேன்.

ஒரு கதை தருவதாகச் சொன்னார். ஆனால் தரவே இல்லை.

தினகரனுக்கும் அவருக்குமான தொடர்பு கைலாசபதி காலத்தில் இருந்து தொடர்வது. அதில் தொய்வு ஏற்பட்டதில்லை. 2019வரை தினகரனில் பத்திகளை எழுதி வந்தார். அரைக் காட்சட்டை, டீ ஷேர்ட், கால்களில் ஸ்போர்ட்ஷூ என வாரமஞ்சரி ஆசிரிய பீடத்துக்குள் வந்து கையெழுத்து பிரதிகளை சக ஊடகவியலாளர் வாசுகியிடம் தந்து சிரிக்க சிரிக்க பேசிக் கொண்டிருப்பது கண்களில் நிழலாடுகிறது. போய்வாருங்கள், ஜென்டில்மேன் கே.எஸ்...

அருள் சத்தியநாதன்...

# இலங்கைக்கு கைகொடுப்பதில் சர்வதேசம் பெரிதும் ஆர்வம்!

## விவசாயத்துறையைப் பலப்படுத்த யூ.எஸ்.எயிட் நிறுவனம் 40 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், மனிதாபிமான செயற்பாடுகளுக்காக 20 மில்லியன் டொலர்களையும் வழங்குவதற்கு தீர்மானம்



இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு தேசிய ரீதியில் பல்வேறு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வந்தாலும், சர்வதேசத்தின் உதவி பெருமளவில் எதிர்பார்க்கப்படும் நாடாக இலங்கை காணப்படுகிறது. இந்தியா, சீனா உள்ளிட்ட நட்பு நாடுகள் மாத்திரமன்றி பல்வேறு உலக நாடுகள் எமது நிலைமை குறித்து கவலையடைந்திருப்பதுடன், பல்வேறு வழிகளில் உதவியளித்தும் வருகின்றன.

இந்த வரிசையில் அமெரிக்காவின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிர்வாகி சமந்தா பவர், அமெரிக்காவின் மேலதிக உதவிகள் பற்றிய அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக உணவு உற்பத்திகள் பாதிக்கப்பட்டு நுகர்வோர் மாத்திரமன்றி விவசாயிகளும் கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே விவசாயத்துறையைப் பலப்படுத்தி அதன் ஊடாக அனைவருக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக யூ.எஸ்.எயிட் நிறுவனம் விவசாயிகளுக்கான உரத்தேவையை நிவர்த்தி செய்ய 40 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், இதற்கு மேலதிகமாக மனிதாபிமான செயற்பாடுகளுக்காக 20 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்குவதாக சமந்தா பவர் அறிவித்திருந்தார்.

அவருடைய இந்த விஜயத்தின் பின்னர் அமெரிக்க அரசாங்கம் மேலும் 65 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐந்தாண்டு காலப் பகுதியில் உதவியாக வழங்கும் எனத் தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது. யு.எஸ்.எயிட் நிறுவனத்துக்கும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த உதவி வழங்கப்படுகிறது.

அமெரிக்க அரசாங்கம் 1956 ஆம் ஆண்டு முதல் இதுவரை 2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இலங்கை பொருளாதார ரீதியில் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் பிரதானி சமந்தா பவர் இங்கு வந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வாக அமைந்துள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகத்தில் இணைந்து கொண்டிருந்த சமந்தா பவர், 2013 முதல் 2017ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் தூதுவராகப் பணியாற்றியிருந்தார்.

அதன் பின்னர் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அதாவது யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்தபோது, கடந்த காலங்களில் இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் சமந்தா பவருக்குக் கிடைத்திருந்தது.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச அரங்கத்தில் பேசப்பட்ட சந்தர்ப்பங்களில் தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் சமந்தா பவரைப் பல தடவை சந்தித்திருந்தனர். இது மாத்திரமன்றி, மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் நண்பரான சமந்தா பவர், கொரோனா தாக்கம் அதிகரித்திருந்த காலப் பகுதியில் இலங்கைக்குத் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பெரிதும் உதவியிருந்தார்.

இவ்வாறு இலங்கை குறித்து சிறந்ததொரு புரிதலைக் கொண்டுள்ள சமந்தா பவரின் இலங்கை விஜயத்தின் போது பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டிருந்தது. குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் நாட்டில் நிலவும் நெருக்கடிகள் மாத்திரமன்றி, பல்வேறு விடயங்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

"இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி உலகளாவிய ரீதியில் தலைப்புச் செய்திகளாகியிருப்பதுடன், துரதிர்ஷ்டவசமாக, இலங்கை கற்றுக் கொண்டிருக்கும் கடினமான பாடங்களை மற்றவர்களும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான தருணத்தில் அரசியல் பிளவுகள் இன்றி ஒற்றுமையுடன் இருப்பது அவசியமாகிறது.

இந்தக் கடினமான தருணத்தில் சீர்திருத்தங்கள் பல வழிக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இதன் ஊடாகவே இந்நிலையை மாற்றுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல முடியும்" என சமந்தா பவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

"சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கக் கூடிய சீர்திருத்தங்களின் தொகுப்புடன் முன்னேறுவதற்கான தனது நோக்கத்தை ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். அந்தச் சீர்திருத்தங்களைச் செயற்படுத்தும் நிலையில் இருக்கும் பணியாளர்கள், மிகச் சவாலான சூழலை எதிர்கொண்டிருந்தாலும் இவை மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களாகும்" எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

"முதலீட்டாளர்களும் அரசியல் ஸ்திரத்தன்மையை எதிர்பார்க்கிறார்கள் என்பதை இங்கும், சர்வதேச ரீதியிலும் தனியார் துறையுடன் பேசுவதன் மூலம் நான் அறிவேன். ஊழலுக்கு எதிரான சீர்திருத்தங்களில் முன்னேற்றம் ஏற்படுவதைக் காண அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அது மாத்திரமன்றி, நிலைமாறுகால நீதி மற்றும் முந்திய மனிதஉரிமை மீறல்கள் குறித்த கேள்விகளுக்கான பதில்களில் முன்னேற்றங்கள் காணத் தொடங்க வேண்டும்.

ஏறத்தாழ 15 வருடங்களாக நான் இங்கு வந்து சென்று வரும் நிலையில், பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்த கருத்தாடல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இது நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு காணப்படும் நிலையில் இதற்கான உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

நாட்டை மீண்டும் ஒரு நிலையான, சட்டபூர்வ அடித்தளத்தில் சர்வதேச தரங்களுக்கு இணங்க வைக்கிறது. எனது விஜயத்தின் போது இதுபற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தாலும், இது பெரியதொரு நிகழ்ச்சி நிரல்" என்பதையும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் சமந்தா பவருக்கு விளக்கமளித்திருந்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...



## அமெரிக்காவின் ஆதரவும், உதவிகளும் மேலும் தொடருமென்பதை உறுதி செய்துள்ள சமந்தா பவரின் இலங்கை விஜயம்

---

# ரியல் எஸ்டேட் வணிகத்துறையில் பெரும் சரிவை சந்தித்துள்ள சீனா!

## வீடு, காணி சொத்துகளை வாங்கியவர்கள் திண்டாட்டம்!

சீனா 2022 ஆம் ஆண்டு ஆரம்பம் முதலே கொரோனா தொற்று மூலம் அதிகளவிலான பாதிப்பை எதிர்கொண்டு வந்த காரணத்தால் பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளது. இதற்கிடையில் சீனாவின் 'ரியல் எஸ்டேட்' துறை மிகப் பெரிய சிக்கலில் உள்ளது மட்டுமல்லாமல் 50 இற்கும் அதிகமான சீன நகரங்களில் 100 இற்கும் அதிகமாக ரியல் எஸ்டேட் திட்டங்களில் வீடு வாங்கியவர்கள் வீட்டுக் கடனுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்த முடியாது என அறிவித்துள்ளனர். இதனால் சீனா முழுவதும் இருக்கும் வங்கிகள் மிகப்பெரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

சீனாவின் உற்பத்தி மிகப்பெரிய அளவிலான சரிவைச் சந்தித்துள்ளது மட்டும் அல்லாமல் உலக நாடுகளின் விநியோகச் சங்கிலி கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. சீனாவின் மார்ச் காலாண்டு பொருளாதார வளர்ச்சி அளவீட்டில் இருந்து 1.4 சதவீதம் சரிந்து ஜூன் காலாண்டில் 2.6 சதவீதமாக இருந்துள்ளது.

கொரோனா வைரஸ் எதிர்ப்புக் கட்டுப்பாடுகள் காரணமாக மார்ச் மாத இறுதியில் தொடங்கி ஜூன் காலாண்டில் அதிகப்படியான காலம் உலகின் பரபரப்பான துறைமுகத் தளமான ஷாங்காய் மற்றும் பிற உற்பத்தி நிலையங்கள் முடங்கினது. இதன் வாயிலாகவே உலகளாவிய வர்த்தகம் மற்றும் உற்பத்தி அளவுகள் பாதிக்கப்பட்டன.

சீனாவின் பொருளாதாரம் இவ்வருடத்தின் முதல் பாதியில் வெறும் 2.5 சதவீதம் மட்டுமே வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த ஆண்டு இதேகாலகட்டத்தில் 30 வருடத்தில் இல்லாத மோசமான நிலையை எதிர்கொண்டது.இக்காலகட்டத்தில் சீன நுகர்வோர் சந்தை மிகப்பெரிய அளவிலான பாதிப்பை

எதிர்கொண்டது. அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் மேலும் சரிவினைக் காணலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.


சீனாவின் முக்கிய வணிகமான ரியல் எஸ்டேட் வணிகமானது பெரும் சரிவினைக் கண்டுள்ளது. இதுவும் சீனாவின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொரோனாவைத் தொடர்ந்து சீனாவில் கடும் மின்வெட்டு, ரியல் எஸ்டேட் துறை சரிவு என பல காரணிகளுக்கு மத்தியில், உற்பத்தியும் பெரும் சரிவினைக் கண்டுள்ளது. இதற்கிடையில் தற்போது நிலவி வரும் மந்த நிலைக்கு மத்தியில் சீனாவின் நுகர்வு பெரும் சரிவினைக் காணலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டின் முதல் பாதியில் சரிவினைக் கண்ட நிலையில், இரண்டாம் பாதியிலாவது பொருளாதாரம் மேம்படுமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

மார்கன் ஸ்டான்லி, ப்ளூம்பெர்க், பார்க்லேஸ் பி.எல்.சி உள்ளிட்ட சர்வதேச ஆய்வு நிறுவனங்கள், சீனா மெதுவான வளர்ச்சியினையே கண்டு வருகின்றது. ஆக அதன் வளர்ச்சி வீதம் குறையலாம் எனக் கணித்துள்ளன.

பார்க்லேஸ் கணிப்பின்படி நடப்பு ஆண்டில் 2.6% ஆக வளர்ச்சி காணலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது முன்னதாக 3.1% ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. தற்போது தொழிற்துறை உற்பத்தி, சில்லறை விற்பனை, முதலீடு என பலவும் செப்டம்பரில் மேம்பட்டதாகத் தெரியவில்லை. அதோடு வீட்டுச் சந்தையும் சரிவிலேயே காணப்படுகிறது. நுகர்வோர் செலவினங்களும் குறைந்துள்ளன. இந்தநெருக்கடியான காலகட்டத்திலும், சீன மத்திய வங்கி எந்த முக்கிய நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது மேற்கொண்டு அழுத்தத்தினை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவில் கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவல் தடுப்பதற்காக ஷங்காய் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பொது முடக்கத்தை நீண்ட காலம் அமுல்படுத்தியிருந்தனர். நீண்டதொரு பொது முடக்கத்துக்கு பின்னர் கடந்த மே மாதம்தான் மீண்டும் தொழில் நிறுவனங்கள் செயல்படத் தொடங்கி உள்ளன. முந்தைய காலாண்டுடன் ஒப்பிடுகிறபோது, தொழில்நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்பட்ட பிறகு நிலையான மீட்பு நடந்து வருவதாக சீனா கூறியது.ஆனால் கடந்த ஜனவரிமார்ச் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2.6 சதவீதம் சரிவை சந்தித்துள்ளது.



## எதிர்கால பொருளாதாரம் குறித்து பொருளாதார நிபுணர்கள் கவலை!

சீனாவில் நிலவி வரும் நெருக்கடி நிலைக்கு மத்தியில் அங்கு எதிர்காலத்தில் பொருளாதாரம் என்னவாகுமோ என்ற அச்சம் பொருளாதார ஆய்வாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது. சீனாவின் உற்பத்திப் பொருட்களுக்கு உலக சந்தையில் மதிப்பு கிடையாது. சீன உற்பத்திகள்

தரமற்றவை என்பதே ஏனைய நாடுகளின் கருத்தாகும். இந்நிலையில் உற்பத்தித் துறையை அடிப்படையாகக் கொண்ட சீனாவின் உற்பத்தி மாதிரியை கண்மூடித்தனமாக இந்தியா பின்பற்றக் கூடாது என்ற அபிப்பிராயம் இந்திய மக்கள் மத்தியில் நிலவுகின்றது. ஆனால் அதற்குப் பதிலாக சேவைத் துறையில் கவனம் செலுத்த வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் உற்பத்தி சார்ந்த வளர்ச்சிக்கு அனைத்து வளங்களையும் இந்தியா பயன்படுத்துவதை விட, சேவைத் துறையில் கவனம் செலுத்துவது விவேகமானது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் பாதையைப் பின்பற்றுவதில் பிரச்சினை என்னவெனில், சீனா ஏற்கனவே மேற்கத்திய நாடுகளின் உற்பத்தி வளர்ச்சியில் பின்னடைவை உருவாக்கியுள்ளது. இந்தியா அதே பாதையில் செல்ல முயன்றால் அதுவும் இன்னும் பின்னடைவைத்தான் கொடுக்கும் என பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உண்மையில் இது சிந்திக்க வேண்டிய விஷயமும் கூட என்கிறார்கள் இந்திய பொருளாதார நிபுணர்கள்.

இவ்வாறான நிலையில் சீனாவின் 'பெல்ட் ரோட்' திட்டத்தின் ஆதிக்கத்தைக் குறைக்க இந்திய அரசு முக்கிய திட்டத்தை கையில் எடுத்துள்ளது. இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் 'முத்தரப்பு வளர்ச்சிக் கழகம் (TDC)' என்ற புதிய நிதித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

எஸ்.சாரங்கன்...

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# சவால்களின் மத்தியிலும் மனித உரிமைகளை பாதுகாப்பதென்ற உறுதிப்பாட்டில் இலங்கை!

**இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலவுகின்ற இவ்வேளையில், மக்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக அரசு முன்னெடுத்துள்ள உடனடி நடவடிக்கைகள், பாதிப்புற்ற மக்களின் பாதுகாப்பு குறித்து அமைச்சர் அலி சப்ரி விளக்கம்**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவா நகரில் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இதில் இலங்கை விவகாரம் குறித்த கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.**

46 ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் முன்னேற்றங்கள் மற்றும் அதிலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது பற்றிய ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இம்முறை முன்வைக்கப்பட்டது.

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பச்லெட்டுக்குப் பதிலாக பதில் உயர்ஸ்தானிகர் நடா அல்நஷிப் அறிக்கையை சமர்ப்பித்தார். நாடு முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருப்பதுடன், நாடு தழுவிய ரீதியில் பல மாதங்களாகப் போராட்டங்கள் நடைபெற்றமை குறித்து அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.




மனித உரிமை மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேசிய மட்டத்திலான கலந்துரையாடல்களைப் புதிய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும், தண்டனையிலிருந்து தப்பித்தல் மற்றும் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்குத் தேவையான ஆழமான நிறுவன ரீதியான சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

யுத்தம் முடிவடைந்து 13 வருடங்களாகியும் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாக காணமல் போனவர்களின் உறவுகள் அன்புக்குரியவர்களின் இருப்பிடத்தை அறிந்து கொள்வதிலும், நிலைமாறுகால நீதியை நிலைநாட்டுவதிலும் இலங்கை தொடர்ச்சியாகத் தவறி வருவதாக அவர் விமர்சித்திருந்தார்.

சர்வதேசத்துக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பொறுப்புக்கூறலுக்கு அரசியல் தடைகளை உருவாக்கி, குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட அதிகாரிகளை அரசாங்கத்தின் உயர்மட்ட பதவிகளில் அமர்த்தியிருந்தமையைச் சுட்டிக்காட்டிய அவர், பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கு மாற்று உத்திகளைப் பின்பற்றுமாறு உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இருந்தபோதும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் முன்வைக்கப்படும் சில விடயங்கள் நாட்டின் இறைமையை மீறும் வகையில் இருப்பதால், அவற்றை நிராகரிப்பதாக இலங்கை அரசாங்கம் சார்பில் இக்கூட்டத் தொடரில் கலந்து கொண்டு கருத்துத்

அரசாங்கத்தின் உடனடி அக்கறை பொருளாதார மீட்சியாக இருக்கும் அதேவேளை, இலங்கை மக்களின் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கும் சமமான முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதாக மீண்டும் வலியுறுத்தினார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் மக்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அவசர மற்றும் உடனடி நடவடிக்கைகள், மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களின் பாதுகாப்பு உள்ளிட்டவற்றை அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அமைச்சர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், 'கடுமையான தடைகள் மற்றும் சவால்கள் இருந்த போதிலும், சுதந்திரமான உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதில் உறுதியான முன்னேற்றத்தைத் தொடர்வதில் இலங்கை உறுதியாக உள்ளது. பல உறுப்பினர்களுடன் இணைந்து இலங்கையும் 46/1 தீர்மானத்தை எதிர்த்துள்ளதுடன், அதன் சட்டபூர்வமான தன்மை மற்றும் மற்றும் தீர்மானங்களையும் திட்டவட்டமாக நிராகரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

உயர்ஸ்தானிகரின் அறிக்கையானது 'பொருளாதாரக் குற்றங்கள்' குறித்து விரிவாகக் குறிப்பிடுவதைக் காண முடிகின்றது. இந்த வார்த்தையின் தெளிவின்மைக்கு அப்பால், அத்தகைய குறிப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆணையை மீறு

**ஐ. நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆணையை மீறும் வகையில் உயர்ஸ்தானிகரின் அறிக்கை!**

கின்றமை கவலைக்குரிய விடயமாகும்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்ட விதத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமே தவிர சர்வதேசத்தின் எந்தவொரு பொறிமுறைக்கும் இடமளிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதையும் அமைச்சர் திட்டவட்டமாக மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

இவ்வாறான நிலையில் நாட்டில் தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நிலைமைகள் மீண்டும் நடைபெறாது தவிர்ப்பதற்கு சுதந்திரமான, பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான முயற்சிகளுக்கு உதவவும் ஆதரவளிக்கவும் தயாராக இருப்பதாகவும் அந்நாடுகள் கூறியுள்ளன.

இந்தக் குழுவில் ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மன், கனடா உட்பட ஏனைய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. பொருளாதார நெருக்கடியின் மனித உரிமைகள் தாக்கம், அதிகரித்த உணவுப் பாதுகாப்பின்மை, கடுமையான எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அத்தியாவசிய மருந்துகள், வீட்டு வருமான வீழ்ச்சி, தினசரி ஊதியம் பெறுவோர் உட்பட மிகவும் பின்தங்கிய மற்றும் பின்தங்கிய தனிநபர்களின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் குழு வலியுறுத்தியுள்ளது. முன்னெப்போதும் இல்லாதளவு மோசமான நிலையை நாடு எதிர்கொண்டிருக்கும் சூழ்நிலையில், மனித உரிமை என்ற போர்வையில் நாட்டை மேலும் அழுத்தத்துக்கு உட்படுத்த சர்வதேச சமூகம் முயற்சிக்கக் கூடாது. கடந்த காலங்களிலும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**இலங்கை தனது அரசியலமைப்புக்கு உட்பட்ட விதத்திலேயே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சர்வதேசத்தின் எந்தவொரு பொறிமுறைக்கும் இடமளிப்பதற்கான சாத்தியம் இல்லை!**



தெரிவித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் கடுமையான தடைகள் மற்றும் சவால்கள் இருந்தபோதிலும், சுயாதீன உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதில் உறுதியான முன்னேற்றத்தை முன்னெடுப்பதில் இலங்கை உறுதியாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

சுயாதீன நிறுவனங்களின் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு தொடர்ச்சியான ஆதரவும் வளங்களும் வழங்கப்படுவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் கட்டமைப்பிற்குள் நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை உருவாக்குவதற்காக அரசாங்கம் முயற்சிப்பதாகவும், இலங்கையின் குறிப்பிட்ட நிலைமைகளுக்கு ஏற்ற மாதிரியின் வரையறைகள் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விளக்கமளித்திருந்தார்.

மனித உரிமைகளின் பிரிக்க முடியாத தன்மையை நினைவுகூர்ந்த அமைச்சர், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கான அலுவலகத்தை நிறுவுவதன் மூலம் வெளிநாட்டிலுள்ள இலங்கை சமூகத்துடனான உரையாடலை விரிவுபடுத்துதல் மற்றும் அவர்களை அணுகுதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கணிசமான திருத்தங்கள், சர்வதேசத்தின் சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மிகவும் விரிவான தேசியப் பாதுகாப்புச் சட்டத்துடன் மாற்றியமைக்கும் அரசாங்கத்தின் நோக்கம் குறித்தும் அங்கு அமைச்சர் தெரிவித்தார்.

நோக்கங்களுடன் அடிப்படையில் உடன்படவில்லை.

தீர்மானத்தின் உள்ளடக்கம், குறிப்பாக அதன் செயற்பாட்டுப் பந்தி 06, இலங்கை மக்களின் இறையாண்மை மற்றும் ஐ.நா. சாசனத்தின் கோட்பாடுகளை மீறுவதாகக் குறிப்பிட்டு நாங்கள் அதனை தொடர்ச்சியாக எடுத்துரைத்துள்ளோம்.

மீண்டுமொருமுறை, தீர்மானம் தொடர்பான எந்தவொரு தொடர் நடவடிக்கைகளையும் மற்றும் அது தொடர்பாக உயர்ஸ்தானிகரால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள்

நிலைமைகள் குறித்தும் பல நாடுகள் தமது கரிசனையை வெளியிட்டிருந்தன. இலங்கையின் நட்பு நாடான இந்தியா 13 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியிருந்ததுடன், இலங்கையின் முன்னேற்றங்கள் பற்றியும் சுட்டிக்காட்டத் தவறியிருக்கவில்லை.

இவ்வாறான நிலையில், இலங்கை தொடர்பில் புதியதொரு பிரேரணையொன்றும் நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பான வரைபில் இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்து அதனை உறுதிப்படுத்துவதற்கு உதவுமாறு பிரேரணையைக் கொண்டுவரவுள்ள பிரதான நாடுகளின் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் முன்னாள் அரசு அதிகாரிகள் உட்பட ஊழலை விசாரித்து, வழக்குத் தொடுப்பதன் மூலம் இவ்வாறான

இருந்தபோதும் தற்பொழுது புதிய ஜனாதிபதி தலைமையில் அரசாங்கம் பொறுப்பேற்று ஒரு சில மாதங்களே ஆகியிருக்கும் நிலையில் பொருளாதார மீட்சியுடன் தொடர்புடைய மறுசீரமைப்புக்கள் மற்றும் சட்டத்தை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்படும் முன்னெடுப்புக்களுக்குப் போதியளவு அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

அது மாத்திரமன்றி ஒரு நாடு எதிர்கொள்ளும் இக்கட்டான சூழலைப் பயன்படுத்தி அதனை மேலும் மேலும் நெருக்கடிகளுக்கு உட்படுத்தும் வகையில் சர்வதேச சமூகம் ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்காது.

அமைச்சர் அலி சப்ரி கூறியதைப் போன்று, இலங்கை அரசாங்கம் பல்வேறு முன்னேற்றகரமான நடவடிக்கைகளை ஏற்கனவே முன்னெடுத்திருக்கும் அதேநேரம், தொடர்ந்தும் பல முயற்சிகளை மேற்கொண்டே வருகிறது.

இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51வது கூட்டத்தொடரில் சிறந்த தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்பதே நல்லிணக்கத்தை விரும்புகின்ற நாட்டு மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பாக உள்ளது.

**அரசியலமைப்பின் கட்டமைப்பிற்குள் நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை உருவாக்குவதற்காக அரசாங்கம் முயற்சிப்பதாகவும், இலங்கையின் குறிப்பிட்ட நிலைமைகளுக்கு ஏற்ற மாதிரியின் வரையறைகள் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எடுத்துரைப்பு**



# மலையக கட்சிகள் கொள்கை அடிப்படையில் ஒன்றுபடும் சாத்தியக்கூறு

கடந்த வார இறுதியில் காற்றுவாக்கில் ஓர் குளிர்ச்சியான செய்தி காதுகளை வந்தடைந்தது. மலையக அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகள் கூடிப் பேசினார்கள் என்பது தான் அந்தச் செய்தி. இதனால் பெருந்தோட்டக் கம்பனி தரப்பு ஆடிப் போய்விடும் என்றோ பேரம் பேசும் அரசியல் வாய்ப்பு நாடி வருமென்றோ எண்ணினால் அது சப்பைக் கொட்டுத்தான்.

ஏனெனில் மலையக தலைமைகளிடம் வாய்பலம் மிக மிக அதிகமாகவே இருக்கின்றது. அதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் அதை விட அதிகமாக எதிர்தரப்பிடம் பணபலம் இருக்கின்றது. கூடவே பக்க பலமும் இருக்கின்றது. அதனால் தான் அத்தரப்பு ஆட்டிப்படைப்பவையாகவே இற்றைவரை இருந்து வருகின்றது. தவிர எதிரணியிடம் ஒற்றுமை ஓங்கி நிற்கின்றது. இங்கே வேற்றுமை தான் தேங்கி கிடக்கின்றது.

அதனால் தான் கூடி பேசியிருப்பது ஒரு வகையில் குளிர்ச்சியான சங்கதியாக தெரிகின்றது. ஏலவே இப்படி ஒன்று கூடல் இடம்பெறவே செய்திருக்கின்றது. ஆயினும் விளைவு என்னவோ புஸ்வாணம் தான். இப்பொழுது புத்திஜீவிகளையும் இணைத்துக் கொண்டிருப்பதால் நல்ல செய்தி வரலாமென பலரும் நம்புகிறார்கள். முதலில் இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்தவர் யார் என்று பாருங்கள். பேராசிரியர் எஸ். விஜயசந்திரன். சமூக ஆய்வாளர்.

இப்பேச்சுவார்த்தை கடந்த 8ஆம் திகதி 'கெப்ரி' தனியார் விடுதியில் நடந்தேறியது. மனோ கணேசன் (ஜனநாயக மக்கள் முன்னணி), ஜீவன் தொண்டமான் (இ.தொ.கா), பழனி திகாம்பரம் (தொழிலாளர் தேசிய முன்னணி), வே. இராதாகிருஷ்ணன் (மலையக மக்கள் முன்னணி), வடிவேல் சுரேஷ், எஸ். வேலுகுமார், எம். உதயகுமார் இவர்கள் அனைவரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள். இவர்களுடன் பேராசிரியர் சந்திரபோஸ் (சமூக ஆய்வாளர்), சிவலிங்கம் சதீஸ் குமார் (ஆய்வாளர், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர்), பெ.முத்துலிங்கம் (சிவில் செயற்பாட்டாளர்), செந்தில் தொண்டமான் (இ.தொ.கா தலைவர்) உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றிருந்தமை சிறப்பம்சம். ஆக இது ஒரு அரசியல் பின்புலம் கொண்ட ஒருங்கிணைப்பு என்று எவராவது கருதினால் அது தவறு. ஆனால் அரசியல் வகிபாகம் இன்றி எதனையும் சாதித்து கொள்ள முடியாது என்பதும் உறுதி.

சரி இப்பேச்சுவார்த்தையில் என்ன தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது என்பதை பார்ப்போம். பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்னும் தொனிப் பொருளில் ஒரு மீளாய்வாகவே இதனை பலரும் பார்க்கின்றார்கள். சமகால அரசியல் நெருக்கடியின் பின்புலத்தில் பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரம், சமூக நலன்கள் குறித்ததான ஓர் அலசல் இடம் பெற்றுள்ளது. இவ்விரு அம்சங்களின் அடிப்படையில் ஏகப்பட்ட பதிவுகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. புதிதாக எதனையும் தேடிப்பிடிக்க வேண்டிய தேவையேதும் இருப்பதாகப் படவில்லை.

ஆனால் குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்ன சொல்கிறதாம். இம்மக்களின் பிரச்சினைகளை இனம் காண அந்தந்த துறைசார் நிபுணர்கள் கொண்ட குழுக்களை அமைத்து ஆய்வு செய்து அறிக்கைப் பெறுவதன் மூலம் அடுத்தக் கட்டத்தை நோக்கி நகருதல். மக்கள் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு சமூக அவலங்களுக்கு ஆளாகி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பது புதிய தகவல் அல்ல. இது பற்றி தினகரன் மலையகப் பகுதி அக்குவேறு ஆணி வேராக தொடர்ச்சியாகவே வெளிப்படுத்தித் தான் வருகின்றது. அப்படிப் பார்க்கப் போனால் மீண்டும் ஆய்வு நடாத்தி அறிக்கை சமர்ப்பித்த பின் அடுத்தக் கட்ட ஏற்பாடு என்பது ஒரு ஊர்தல் முயற்சியாகவே அமைந்து விடுமோ என்னும் ஏமாற்றம் புத்திஜீவிகளிடம் காணப்படவே செய்கின்றது.

ஏனெனில் துறைசார் ஆய்வுகளை மேற்கொள்ள எடுக்கும் காலவிரயம் வரை மக்கள் நெருக்கடியை தாங்கிக் கொள்வார்களா என்பது ஒரு கேள்வி. இனி என்ன தான் செய்வது? முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் பற்றி பலரும் அறிவார்கள். பன்முக ஆய்வாளர். எழுத்தாளர். ஆளுமை நிறைந்த பேச்சாளர். இவர் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலக்கட்டத்தில் பல ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தார் என்பதை நாமே பல முறை இந்தப் பகுதியில் சுட்டிக்காட்டி இருக்கின்றோம். மலையக சமூகத்தின் கடந்தக் கால, நிகழ்கால வாழ்வியலை ஆய்வு செய்து புள்ளி விபரங்களுடன் சத்தியமான பதிவுகளை வெளிக் கொணர்ந்தவர். இந்த விடயத்தில் புள்ளி விபரங்களைத் திரட்டுவதில் இவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு எந்த வகையிலும் சளைத்தவர் அல்ல. திலகராஜ் தமது தரவுகளுடன் கூடிய திரட்டுக்களை பாராளுமன்றத்திலும் சமர்ப்பித்து உரைகளை நகழ்த்தி இருக்கிறார். பொது வெளியிலும் எடுத்துச் சென்றுள்ளார்.

நாமறிந்தவரை திலகராஜ் வசமிருக்கும் ஆய்வுத் தகவல்களே அடுத்தக் கட்ட நகர்வுக்குப் போதுமானதாகக் கூட இருக்கலாம். ஆனால் நாம் தேடியவரை திலகராஜ் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை என்றே தோன்றுகின்றது. அப்படியானால் அது ஒரு இழப்பாகவே இருக்கும். தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைமைகளுக்கும் திலகராஜுக்கும் இடையில் அரசியல் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் மலையக மக்களின் பொது நலன் நாடும் இவ்வாறான அமர்வுகளுக்கு அவரது பிரசன்னமும் பங்களிப்பை தரலாம்.

அதே வேளை திலகராஜுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு அவர் இந்த வாய்ப்பைப் புறக்கணித்திருக்கும் பட்சத்தில் அது வரவேற்புக்கு உரியதாக மட்டும் இருக்கப் போவதில்லை. மலையக தலைமைகள் சில ஒன்று கூடி தமிழ் முற்போக்குக் கூட்டணியை ஆரம்பித்த வேளை பெரும்பான்மையின ஊடகங்கள் இனவாத ரீதியில் சல சலப்பை ஏற்படுத்தியமை ஞாபகம் இருக்கலாம். ஆனால் அதை விட பெறுமதியான ஒரு காரியம் ஒட்டுமொத்த மலையக தலைமைகளும் ஒரே மேடையில் அமர்ந்து அரசியலுக்கு அப்பால் நின்று மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி பேசியிருப்பது என்பதே பலரதும் அபிப்பிராயம். எனினும் இதுபற்றி எந்த பெரும்பான்மை இன ஊடகமும் பெரிதுபடுத்தி செய்திகளை வெளியிடவோ இல்லை. ஏன், தமிழ் ஊடகங்கள் கூட அப்படியொன்றும் பிரபல்யமாக தகவல் எதனையும் தரவில்லையே! ஆனால் தினகரன் வாரமஞ்சரி முதல் பக்கத்தில் முக்கிய செய்தியாக வெளியிட்டிருந்தது. மலையக தலைமைகளின் கடந்த கால செயற்பாடுகள் சிலவேளை நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி இருக்குமோ தெரியவில்லை. பொதுவாக மலையக அரசியல் தற்போது மந்தமடைந்தே காணப்படுகின்றது. இ.தொ.கா. ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிப்பது பரம இரகசியம் அல்ல. குறைந்த பட்சம் ஒரு இராஜாங்க அமைச்சுப் பொறுப்பாவது ஜீவன் தொண்டமான் கையில் ஒப்படைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இது எழுதப்படும் வரை ஈடேறவில்லை. புதிய இராஜாங்க அமைச்சர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அப்படியொரு வாய்ப்பை தனக்குரித்தாக்கிக் கொண்டு விட்டார் அ. அரவிந்தகுமார். ஏற்கனவே இராதா கிருஷ்ணன் நல்லாட்சிக் காலத்தில் வகித்தப் பொறுப்பு. அதிகாரம் எதுவுமில்லாத ஒரு டம்மி பதவி என்று இராதாகிருஷ்ணன் இதனை அப்போது ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்த அதே கல்வி இராஜாங்க அமைச்சு. இதை வைத்துக் கொண்டு கல்விமானான அரவிந்தகுமார் பெருந்தோட்ட சமூகத்துக்கு என்ன செய்யப் போகிறார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

தற்போது பாராளுமன்ற அரசியல் இனரீதியிலான அங்கத்துவங்களால் நிரப்பப்பட்ட நிலைமையே காணப்படுகிறது. இதனால் சிறுபான்மை கட்சிகள் தமது பேரம் பேசும் சக்தியினை இழந்து வருகின்றன. இப்படி ஓரங்கட்டப்படும் அரசியல் நியாயப்பத்திரத்தின் படி வெற்றிலைப் பாக்கு வைத்து ஆதரவு தாருங்கள் என கெஞ்ச வேண்டிய நிலைமை இன்று இல்லை. இதனால் மலையக கட்சிகளும் வரட்சியாகவே காணப்படுகின்றன. அவைகள் இன்னும் தெம்புடன் இருப்பதாக வெளிக்காட்டிக் கொள்வது எதிர்கால தேர்தலுக்கு அவசியமானது. இதை தவறென்று சொல்ல வரவில்லை. மலையக கட்சிகள் வெறும் வீராப்புடன் சோரம் போய்விடக்கூடாது என்பதே மலையக மக்களின் ஆதங்கம். இதனால் வேற்றுமைக்கிடையே ஒற்றுமை காண்பது மிக மிக அவசியமாகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் அமரர் ஆறுமுக தொண்டமான் கூட இதனை வலியுறுத்திருந்தார்.

எப்படியோ அரசியலுக்கு அப்பால் நின்று ஒரு வேலைத்திட்டத்தின் படி மலையக தலைமைகளும் சிவில் அமைப்புகளும் புத்திஜீவிகளும் ஒன்று சேர்ந்து இயங்குவது வரவேற்க கூடிய விடயமாகும்.

அந்த வாய்ப்பை பலப்படுத்தி பயன்பாட்டுக்கு கொண்டுவரும் பட்சத்தில் அரசியல் மட்டத்திலும் ஒரு கவன ஈர்ப்புக்கு இடமிருக்கவே செய்யும். ஆனால் ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளும் கூடி நிற்பது போல திலகராஜ் போன்ற புத்திஜீவிகளும் கௌரவப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பங்களிப்பு தர முன்வரும் போது அவர்களுக்கான அங்கீகாரங்களும் கௌரவங்களும் தானே வந்து சேரும். அந்த வகையில் இந்த ஒருங்கிணைப்பை உறுதியுடன் மேற்கொண்ட பேராசிரியர் எஸ். விஜயசந்திரன் பாராட்டப்பட வேண்டியவரே ஆவார்.

**பன். பாலா.**

# அரச ஊக்குவிப்பு இல்லாததால் நுவரெலியாவில் அருகிவரும் கால்நடை வளர்ப்பும் பால் உற்பத்தியும்

**நூரளையூரான்**

பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க அரசாங்கம் தவறியதால்தான இன்று வெளிநாட்டு பால் மாவை எதிர் பார்த்திருக்க வேண்டிய சூழ் நிலைக்கு இலங்கை மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். மத்திய அரசாங்கத்திலும் மாகாண சபைகளிலும் கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டு கால்நடைகள் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் பால் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு உயரவில்லை.





**'பால்மா இறக்குமதிக்காக பெருமளவு டொலர் செலவு செய்யப்படுகிறது. அதை மீதப்படுத்த வேண்டுமானால் உள்ளூர் பால் உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆனால் ஊக்குவிப்பும், கவனிப்பும் இல்லாததால் பால் களஞ்சியமாகக் கருதப்பட்ட நுவரெலியாவில் பால் உற்பத்தி குறைவடைந்து வருகிறது. மாட்டுத் தீவன விலை உயர்வு, மருத்துவச் செலவு அதிகரிப்பு, மேய்ச்சல் நிலங்கள் அருகி வருகின்றமை என்பன மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.'**



நுவரெலியா மாவட்டத்தில் பிரதான தொழில்களில் ஒன்றான கால்நடை வளர்ப்பு பால் உற்பத்தி நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. இதற்கு காரணம் பால் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் எந்த ஊக்குவிப்பும் செய்வதில்லை என்கிறார் முன்னாள் மத்திய மாகாண உறுப்பினர் ஆர். இராஜாராம்.

பால் உற்பத்தியில் பிரதான இடத்தை நுவரெலியா மாவட்டம் வகித்து வந்தது. ஆனால் தற்பொழுது புண்ணாக்கின் விலை அதிகரிப்பு, கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகள் குறைவு, நல்ல இன கரவை பசுக்கள் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிரமம், கால்நடை வளர்ப்பவர்களுக்கு ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளாதது போன்ற காரணங்களாலேயே கால்நடை வளர்ப்பவர்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் 50 கிலோ எடையுள்ள ஒரு மூட்டை தேங்காய் புண்ணாக்கு ஆயிரம் ரூபா முதல் 1500 ரூபா வரையில் விற்பனை யானது. ஆனால் தற்போது ஒரு மூட்டை புண்ணாக்கு 7000 ரூபாவிற்கு தனியார் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. நுவரெலியா பிரதேசத்தில் ஒரு லீற்றர் பாலை 120 ரூபா முதல் 130 ரூபா வரையில் நெஸ்லே, மில்கோ மற்றும் பெல்வத்த நிறுவனங்கள் கொள்வனவு செய்கின்றன. இதனால் பாலை விற்று வரும் வருமானத்தை விட அதிக பணத்தை கால்நடைகளின் உணவிற்காக வளர்ப்பாளர்கள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

இருபது வருடங்களுக்கு முன் தேசிய பால் உற்பத்திக்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை செயல்படுத்தி வந்தது. வெளிநாடுகளிலிருந்து நல்ல இன கரவை பசு மாடுகளை இறக்குமதி செய்து நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரச பாற் பண்ணைகளான அம்பேவல, போபத்தலாவ உட்பட பல அரச பண்ணைகளுக்கு விநியோகித்தார்கள்.

பண்ணைகளில் வளர்க்கப்பட்ட நல்ல கரவை பசுக்களின் கன்றுக் குட்டிகளையும் பசுமாடுகளையும் வெளியாருக்கு வங்கிக்கடன்கள் மூலம் வாங்கிக் கொள்ளக்கூடிய வசதி முன்னர் காணப்பட்டது.

அதேபோல தனியாரிடமுள்ள மாட்டுக்கொட்டகைகளை திருத்துவதற்காக அரச மிருக வைத்தியசாலைகள் மூலம் பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டன. கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால் அரச மிருக வைத்தியர்கள் மூலம் சிகிச்சை வழங்கப்பட்டது.

ஆனால் தற்பொழுது மருந்து தட்டுபாட்டால் தனியார் மருந்தகங்களில் அதிக பணம் செலுத்தி மருந்து பெற வேண்டியுள்ளது. அதேபோல நுவரெலியாவில் பல பிரதேசங்களில் அரச மிருக வைத்தியர்கள் பணியில் இல்லை.

எனவே தனியார் மிருக வைத்தியர்களையே நாட வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு அதிக பணம் செலுத்த வேண்டும் என்பது வெளிப்படையான விடயம். இவ்வளவு செலவுகளைத் தாங்கிக் கொண்டு லீட்டர் பாலை 130 ரூபாவுக்கு விற்றால் எப்படி இலாபம் கிடைக்கும்?

மலையக பெருந்தோட்டங்களில் தேயிலை தொழிலுக்கு அடுத்தப்படியாக விவசாயமும் கால்நடை வளர்ப்புமே பிரதான தொழிலாக காணப்படுகிறது. ஆனால் இன்று புண்ணாக்கின் விலை உயர்வு கால்நடைகளுக்கான வைத்திய செலவு காரணமாக கால்நடை வளர்ப்பு தொழிலை கை விட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தோட்டப்பகுதியில் மாட்டுக்கொட்டகைகளை அமைப்பதற்கு தோட்ட நிர்வாகம் அனுமதி வழங்குவதில்லை. கடந்த காலங்களில் ஒவ்வொரு தோட்டங்களிலும் பொதுவான மாட்டுக் கொட்டகைகள் காணப்பட்டன. அவ்வாறான மாட்டுக்கொட்கைகளை தற்பொழுது காண முடிவதில்லை.

எனவே பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் கடந்த காலங்களைப் போல அரசு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். இது இத் தொழிலுக்கு உயிர் நாடியான விஷயம்.

ஊக்குவிப்பு திட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் நுவரெலிய மாவட்டத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் கால்நடை வளர்ப்பு படிப்படியாக குறைய ஆரம்பித்து கால் நடை வளர்ப்பாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கால்நடை வளர்ப்புக்கான மேய்ச்சல் காணிகள் காணப்பட்டன. அவை அருகி வருகின்றன. உதாரணத்துக்கு முன்னர் ஹாவ ஹெலிய, மேஸ்தி தோட்டம், ஸ்கிறாப் தோட்டம் உட்பட நுவரெலிய நகரப் பகுதியை சேர்ந்த பசுக்கள் கிரகறிவாவிப் பகுதியிலும் குதிரைப் பந்தயத் திடலிலும் மேய்ந்து வந்தன.

இப்போது இந்த இரண்டு மேய்ச்சல் காணியிலும் மேய்ச்சலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் கிராமிய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கு அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் நியமனம் பெற்றிருந்தார்..

அவர் அமைச்சு பதவி வகித்த காலத்தில் மத்திய மாகாணத்தில் மாத்தளை, கண்டி, மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் கால்நடை அபிவிருத்தி, பால் உற்பத்தி மற்றும் பால்மா உற்பத்தி, பாலுணவு உற்பத்தி என அபிவிருத்தி கண்டிருந்தன. பெருந் தோட்டப் பகுதிகளிலும் தொழிலாளர் குடும்பங்கள் தமது தோட்ட தொழிலுக்கு அப்பால் கால் நடை வளர்ப்பில் அதிகளவாக ஈடுப்பட்டிருந்தனர். பால் உற்பத்தியிலும்,கால்நடை உரங்களை விற்பனை செய்வதிலும் இலாபமீட்டி வந்தனர்.

பின்னர் கடன் அடிப்படையிலும் மிருக வைத்தியசாலைகள் ஊடாக கால்நடைகள் வழங்கப்பட்டன, பால் பண்ணைகளும் விருத்தியாயின. பாலுணவு விற்பனை நிலையங்கள், பால் சேகரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டன, பொது பட்டிகள் தோட்டப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் பொதுப் பட்டிகள் அமைக்கப்பட்டு கால்நடை வளர்ப்பு ஊக்குவிக்கப்பட்டது. அதன் பின் ஆட்சிக்கு வந்த அரசுகள் கால்நடை அபிவிருத்தி அமைச்சை வெவ்வேறு அமைச்சர்களிடம் கையளித்ததில் மலையகத்திற்கான கால்நடை அபிவிருத்திக்கு உதவிகள் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அதன் அபிவிருத்தி படிப்படியாக அரிதாகி இன்று பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும் மாகாண சபைகளில் விவசாயத்துறை, கால்நடை அபிவித்தி துறை அமைச்சு ஊடாக மத்திய மாகாணத்தில் தோட்ட மற்றும் கிராமப்புற பகுதிகளில் கால்நடை அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்போது மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சு ஊடாக கிடைக்க கூடிய உதவிகளும் சரியாக கால்நடை வளர்ப்பவர்களுக்கு கிடைப்பதில்லை.

மறுபுறத்தில் கால்நடை உணவு வகைகளின் விலையேற்றம், மாடுகள் இறக்குமதி செய்யப்படாமை, கால்நடை வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக மாடு வளர்ப்பாளர்கள் ஆர்வம் குன்றிக் காணப்படுகின்றனர். ஏதோ விரல்விட்டு எண்ணக்கூடிய அளவினரே கால்நடை வளர்ப்பில் ஆர்வம் கொண்டுள்ளனர். அரசாங்கம் கால்நடை உற்பத்தியை விருத்திப்போம், பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்வோம் என்று சொல்கிறதே தவிர கால்நடை வளப்பாளர்களை ஊக்கப்படுத்த எத்தகைய நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அத்துடன் அரசாங்க கால்நடை வைத்தியசாலைகளில் மருந்துகள், வைத்திய ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள், வெளிக்கள சேவையாளர்கள் போதுமான அளவில் இல்லை. தோட்டப் பகுதிகளில் புற்கள் வளர்க்க தரிசுநிலங்கள் வழங்குவதில்லை. பட்டிகள் அமைக்க இடங்களும் வழங்கப்படுவதில்லை. இவ்வாறாக ஏகப்பட்ட சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதால் மாடு வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளது.

பசு மாடுகளை சினைப்படுத்தவும் பசு மாடுகளுக்கு நோய் ஏற்பட்டால் குணப்படுத்தவும் தனியார் வைத்தியர்களுக்கு 5000/= ரூபாய் தொடக்கம் 7000/=ரூபாய் வரை செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

எனவே சகல வளங்களும் கொண்ட மலையகத்தில் எதிர்வரும் காலங்களில் பசு மாடுகள் வளர்ப்பை ஊக்கப்படுத்தி, பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம்.

# அடுத்த தமிழாராய்ச்சி மாநாடு எங்கே நடைபெறும்?

## சார்ஜா என்கிறது ஒரு தரப்பு : சிங்கப்பூர் என்கிறது மறுதரப்பு...

## ஏட்டிக்கு போட்டி : தமிரறிஞர்களோ குழப்பத்தில்!

அலசலும் ஆய்வும் :
ஆர். மகேஸ்வரன்
பேராதனை பல்கலை நூலகர்



பதினொன்றாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சார்ஜாவில் 2023ம் ஆண்டு ஜூலையில் நடைபெறும் என்பது முதலில் வந்த தகவல். பின்னர் மற்றொரு குழுவினர் 11வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிங்கப்பூரில் நடைபெறும் என்ற அறிவிப்பை விடுத்தனர். இரண்டு அறிவிப்புகள் ஒரே மாநாடு தொடர்பாக வெளியானதும் எந்த மாநாடு உண்மையான மாநாடு என்ற குழப்பம் தமிழறிஞர்கள் மத்தியில் எழுந்தது. இக்குழப்பத்திற்கு மத்தியில் மற்றொரு இலங்கை அமைப்பு திடீரென தோன்றி, இம்மாநாடு பற்றி விமர்சனங்களை வெளியிடத் தொடங்கியிருக்கிறது.



சர்ஜா மாநாடு அறிவித்தல்

1964 ஆம் ஆண்டு ஜனவரியின் ஆரம்பத்தில் புதுடில்லியில் நடந்த 26ஆவது அகில உலகக் கீழைத்தேயக் கல்வி ஆய்வாளர் மாநாட்டின்போதுதான் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் உருவாகியது. தமிழ், திராவிட ஆய்வுகளில் ஈடுபாடு கொண்டவர்கள் மற்றும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுமான இருபத்தாறு பேர், பேராசிரியர் தனிநாயக அடிகளாரும் பேராசிரியர் வ. ஐ. சுப்பிரமணியமும் விடுத்த அழைப்பினை ஏற்றுச் ஜனவரி 7 ஆம் நாள் உத்தியோகப் பற்றற்ற முறையிலே புதுடில்லியில் கூடி அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினைத் தோற்றுவித்தனர்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்பது உலகில் பல்வேறு நாடுகளில் பணியாற்றி வரும் தமிழறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழ் ஆராய்ச்சியை ஒருமுகப்படுத்தவும், வளப்படுத்தவும் தமிழறிஞர்களால் நடத்தப்படும் உலக மாநாடு ஆகும். தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் 1964 ஆம் ஆண்டு, டில்லியில் ஆரம்பிக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி மன்றம், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகத் தமிழ் மாநாட்டை நடத்த வேண்டுமென்று வரையறுத்துக் கொண்டது.

முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தனிநாயக அடிகளாரால் நடத்தப்பட்டது. 1961 – 70 காலப்பகுதியில் மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்தியக் கல்வியாய்வுகள் துறையின் தலைவராக விளங்கினார் அடிகள். அவர் ஏற்கனவே தனது 'தமிழ் கல்ச்சர்' எனும் காலாண்டு இதழ் மூலம் உலகம் முழுவதிலுமுள்ள தமிழ், திராவிட ஆர்வலரை ஒன்றுசேர்க்க முற்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டிருந்தார். அவர் மலேசிய அரசு தமிழ்ச் சமூகத்திற்கு அளித்த ஆதரவின் துணையோடு பிரம்மாண்டமான முறையிலே முதல் மாநாட்டை கோலாலம்பூரில் 1966 ஏப்ரல் 1623 திகதிகளில் எட்டு நாட்களாக நடத்தினார். இந்த மாநாட்டில் அன்று தமிழியல் ஆய்வில் பங்கெடுத்த பல்லின ஆய்வாளர்களும் ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தனர்.

1967 இல் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் சி. என். அண்ணாதுரை தலைமையிலான திமுக வெற்றிபெற்றுத் தமிழ்நாட்டில் தி.மு.க அரசமைத்தது. எம். பக்தவத்சலம் முன்பு கோலாலம்பூரிலே விடுத்த அழைப்பினை ஏற்றுச் சென்னையிலே திமுக இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்த முன்வந்தது. அது 1968 ஆம் ஆண்டு ஜனவரி 3–10ஆம் நாட்களில் (எட்டு நாட்கள்) சென்னையிலே நடந்தது.

பேராசிரியர் ஜீன் பிலியோசா பாரிஸ் நகரில் மூன்றாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை 1970இல் நடத்தினர். முன்னைய இரு மாநாடுகளுக்கும் பாரீஸ் மாநாட்டிற்கும் இடையே பெரும் வித்தியாசம். சலசலப்பின்றி வழமை போல் நடைபெறும் கருத்தரங்கு போன்று அது அமைந்திருந்தது. இம்மாநாடு 1970 ஜனவரி 15–18 (நான்கு நாட்கள்) காலப்பகுதியில் நடைபெற்றது. இம்மூன்று மாநாடுகளும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்பதாக திட்டமிட்டபடி நடைபெற்றன.

1972ல் நான்காவது மாநாடு இலங்கையில் நடைபெற இருந்த போதும் அது 1974ம் ஆண்டிலேயே நடைபெற்றது. இதற்கு காரணம்1970 ஆம் ஆண்டில் ஐக்கிய முன்னணி என்ற சோசலிசக் கூட்டணி அரசு ஆட்சியமைத்த போது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மீண்டும் தழைத்து எழுந்திருந்தது. அரச ஆசிகளோடு வலம் வந்து கொண்டிருந்தவர்களை முகாமைச் சபையிலே சேர்த்துத் தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்த முடிவு கட்டினர். ஆனால் அத்திட்டம் தடம் புரண்டு போயிற்று. அரசு சார்பு பிரதிநிதிகள் கொழும்பில் மாநாட்டை நடத்தத் திட்டமிட்டனர். ஆனாலும் அரசின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையிலான குழு தீர்மானித்து அதன்படி 1974 சனவரி



சிங்கை மாநாடு அறிவித்தல்

39 காலப்பகுதியில் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் வெகு விமரிசையாக நடத்தியது. மாநாடும் கருத்தரங்குகளும் நிறைவேறிய மறுநாள், ஜனவரி 10ஆம் நாள், பரிசளிப்பும் விருந்தினருக்கு உபசாரமும் செய்ய ஒழுங்கான பொதுக்கூட்டத்தில் காவல் துறையினரும் குண்டர்களும் பொதுமக்களைத் தாக்கியதில் 11 பேர் கொல்லப்பட்ட துரதிஷ்டமான சம்பவம் நடைபெற்றது. முதலில் நடைபெற்ற 4 மாநாடுகள் தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் நடைபெற்றவை. அவரது மறைவுக்குப் பிறகு, 5ஆவது மாநாட்டைத் தொடர்ந்து நடத்தப் போதிய வசதியில்லாமல் மன்றத்தின் வேகம் குறையைத் தொடங்கியது. பிற நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வரும் தமிழறிஞர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க முடியாததே இதற்குக் காரணமாகத் தெரிகிறது.

ஐந்தாவது மாநாடு 8 ஆண்டுகளுக்குப் பிறகு 1981ஆம் ஆண்டு ஜனவரி 4–10 இல் மதுரையில் நடத்தப் பெற்றது. பின்னர் 5 ஆண்டுகளுக்குப் பிறகு கோலாலம்பூரில் 6ஆவது மாநாடு 1987 நவம்பர் 1519 இலும், ஆபிரிக்காவில் மொரீசியசில் 7ஆவது மாநாடு 1989 டிசம்பர் 18இல் நடைபெற்றது. அதன் பின்னர் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூரில் 1995 ஜனவரி 15இல் நடைபெற்றது.

எட்டாவது மாநாடு இடம்பெற்று 14 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையில் ஒன்பதாவது மாநாடு பெப்ரவரி 2010 இல் தமிழ் நாட்டின் கோவையில் நடத்தப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி சென்னை தலைமைச் செயலகத்தில் 2009 செப்டம்பர் 17 ஆம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் அறிவித்தார்[2]. எனினும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தப் போதிய கால அவகாசம் இல்லை என்று கூறி உலகத் தமிழாராய்ச்சி மன்றம் தமிழக அரசின் வேண்டுகோளுக்கு ஒப்புதல் தர மறுத்து விட்டது.

ஆனால் தனது ஆட்சிக் காலத்தல் தமிழுக்கு ஒரு பிரமாண்டமான விழா எடுத்தேயாக வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்த கலைஞர் கருணாநிதி தான் எதிர்நோக்கியிருக்கும் சிக்கலைத் தீர்க்கும் ஒரு வழியாக, அப்போது தமிழுக்கு மத்திய அரசு செம்மொழி அந்தஸ்தை வழங்கியிருந்தால் அம் நாட்டை உலக தமிழ்ச் செம்மொழி மாநாடு என்று அறிவிக்கப்பட்டது. மாற்றப்பட்ட ஒரு மாநாடு 2010 ஜூலையில் கோவையில் நடைபெற்றது. இதில் இலங்கை சார்பில் பலர் கலந்து கொண்டதோடு நானும் ஓர் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து கலந்து கொண்டேன்.

அதிகாரபூர்வமான 9ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2015 ஜனவரி 29 முதல் பிப்ரவரி 1 வரை மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றது. கோலாலம்பூரில் உள்ள மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறை ஆகியவை கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. இம்மாநாட்டுக்கான கருப்பொருள் "உலகமயக் கால கட்டத்தில் தமிழாய்வுக்கு வளம் சேர்த்தல்" என்பதாகும். இம் மாநாட்டிலும் ஓர் ஆய்வாளனாக எனது ஆய்வுக் கட்டுரை தெரிவு செய்யப்பட்டிருந்தது.


பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2019 ஜீலை 3 முதல் 7 வரை ஐக்கிய அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடத்தப்பட்டது. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை, சிகாகோ தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து இம்மாநாட்டை நடத்தியது.

இதன் பின் 11வது உலகத் தமிழாராச்சி மாநாடு தமிழ் நாட்டில் நடத்தவுள்ளதாக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்தார். இதற்கான ஒப்புதலை உலக தமிழாராச்சி மன்ற தலைவர் பேராசிரியர் டான்ஸ்ரீ. த. மாரிமுத்துவிடம் கோரியிருந்தார். இதேவேளை பாரதிய ஜனதா கட்சி தமிழ் நாட்டில் உறுதியாக காலூன்றுவதற்கு பிரம்மப் பிரயத்தனத்தில் இருப்பதால் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய அரசு 11வது உலகத் தமிழாராச்சி மாநாட்டினை நடத்தவுள்ளதாகவும் பிரதமர் மோடி இதற்கான ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் பா.ஜ.க தரப்பில் மற்றொரு அறிவிப்பு வெளியாகியது. இந்திய அரசியலமைப்பின் படி வெளிநாட்டு கொள்கைகளுக்கு பொறுப்பு மத்திய அரசு. எனவே, சர்வதேச மாநாடு ஒன்றினை நடாத்த மத்திய அரசின் ஒப்புதல் அவசியம்.

அவ்வாறானால் அண்ணாதுரை, எம். ஜி.ஆர்.ஜெயலலிதா மற்றும் கருணாநிதி ஆகியோர் சர்வதேச மா நாடுகள் எவ்வாறு தமிழகத்தில் நடத்தினார்கள் என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

(தொடரும்)

# நோயாளிகளை இலக்கு வைக்கும் நூதனத் திருட்டு




இர்ஷாத் இமாமுதீன்
கிண்ணியா தினகரன் நிருபர்

இருபத்தைந்து வயது கணனி மென்பொருள் பொறியியலாளர் செய்த நவீன திருட்டே நாடளாவிய ரீதியில் அனைவரினதும் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

சிங்கப்பூரில் உயர் கல்வியை கற்ற ஏறாவூரைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் 10 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை புற்று நோயாளர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்களிடமிருந்து திருடி இருக்கிறான் என்ற செய்தி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இத்திருட்டில் சிக்கிய அனைவரும் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள். இவ்வாறானவர்களை இலக்கு வைத்தே இத்திருட்டு நடவடிக்கைகளை மேற்படி நபர் மேற்கொண்டு வந்திருக்கிறான். புலனாய்வுத் திணைக்களத்தின் சமூக ஊடக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் கொழும்பு பழைய சோனகர் தெரு விடுதியொன்றில் தங்கியிருந்த போது கொழும்பு வெல்லவீடிய பொலிஸார் கடந்த திங்கட்கிழமை (12) கைது செய்துள்ளனர்.

கைது செய்யும் போது அந்நபர் தங்கியிருந்த அறையில் ஐஸ் போதைப் பொருள் பாவித்த கருவிகள், வயாக்ரா பாலியல் மாத்திரை (Viagra Timing Tablets) , ஒரு மடிக்கணனி, நான்கு ஸ்மார்ட் போன்கள், ஐந்து சிம்கார்ட்கள் என்பன இருந்துள்ளன.

விடுதியில் குறித்த சந்தேக நபர் வழமையாக அறையெடுத்து தங்கி வருவதாக அந்த விடுதியில் இருந்த சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

ஏறாவூரில் ஊரின் நன்மதிப்பைப் பெற்ற குடும்பத்தில் பிறந்த சந்தேக நபர், குடும்பத்திற்கு ஒரே பிள்ளையென்பதால் மிக செல்லமாக வளர்க்கப்பட்டு மேற்படிப்புக்காக சிங்கபூர் சென்று கணனி மென்பொருள் பொறியியல் துறையில் பட்டம் முடித்துவிட்டு நாடு திரும்பிய பின்னரே இந்தத் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளான் என தெரிவிக்கப்படுகிறது.



இவனுடைய இத்திருட்டு வேலைகளுக்கு ஓட்டமாவடியைச் சேர்ந்த காதலி உடந்தையாக இருந்ததாகவும் ஒன்லைனில் திருடப்பட்ட பணம் அனைத்தும் காதலியின் கைவசமே இருப்பதாகவும் தான் செல்லும் அனைத்து இடங்களுக்கும் காதலியையும் அவன் அழைத்துச் செல்வதாக கூறப்படுகிறது.

இவர்கள் இருவரும் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்ததாகவும் போதை வஸ்துப் பாவனை இருந்ததால் அதற்காக இவர்களுக்கு அடிக்கடி பணம் தேவைப்பட்டதால் இவ்வாறான திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் தகவல் கிடைக்கப் பெற்றது. சந்தேக நபரின் காதலி ஏற்கனவே பல திருமணங்கள் முடித்து விவாகரத்து பெற்றவர் என்ற தகவலை பெயர் குறிப்பிட விரும்பாத ஏறாவூர் பிரதேசவாசி ஒருவர் குறிப்பிட்டார்.

நாளிதழ்கள் மற்றும் சமூக வளைத்தளங்களில் வெளியான விளம்பரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்களைத் தொடர்பு கொண்டு புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோயாளிகளின் வங்கிக் கணக்கு போன்றவற்றைப் பெற்று மிகத் திட்டமிட்ட முறையில் கனகச்சிதமாக நோயாளர்களை ஏமாற்றி இந்த திருட்டை சந்தேக நபர் செய்துள்ளான்.

பெரியமுல்லையைச் சேர்ந்த நபர் ஒருவர் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட தன்னுடைய மனைவிக்காக வட்சப் குழுமத்தினூடாக நிதி திரட்டியிருக்கிறார்.


அந்த சந்தர்ப்பத்தில், "நான் றிஸ்வான் ஹாஜியார். ஒரு பிஸ்னஸ் மேன். உங்கள் மனைவிக்காக இரண்டு இலட்சம் ரூபா வைப்பிலிட இருக்கிறேன். நான் பணத்தை வைப்பிலிட உங்கள் கணக்கிலக்கத்திற்கு முயற்சிக்கிறேன். நான் வங்கியில் கொஞ்சம் பிஸியாக இருக்கிறேன். அவசரமாக உங்கள் போனுக்கு வந்திருக்கும் நான்கு இலக்கங்களையும் அனுப்புங்கள்." என பரபரப்பாக அவன் கூற இவரும் மிக அவசரமாக. அவருடைய தொலைபேசிக்கு வந்த அந்த நான்கு OTP இரகசிய இலக்கங்களை அனுப்பியுள்ளார்.

தனது வங்கிக் கணக்கிற்கிற்கு யாரோ புண்ணியவான் இரண்டு இலட்சம் ரூபா அனுப்பியிருக்கிறார் அவர் நல்லா இருக்க வேண்டுமென மனசுக்குள் பிரார்த்தித்து சாந்தோசப்பட்டவருக்கு மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அவரின் வங்கிக் கணக்கிலிருந்து இரண்டு இலட்சம் ரூபா இழக்கப்பட்டதற்கான குறுஞ் செய்தி வர அவர் ஆடிப் போய்விட்டார்.

இவ்வாறான வழிகளின் மூலமே இவனுடைய அனைத்து திருட்டு வேலைகளும் நடைபெற்றிருக்கின்றன. நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டு உதவியைக் கோருகின்றவர்களே இவனால் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றனர். ஏனெனில், நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனவந்தர்களின் உதவி கிடைக்க வாய்ப்பிருக்கிறது. அவர்களின் வங்கிக் கணக்கில் எப்படியும் பணம் இருக்கும் என்ற அடிப்படையிலேயே இவன் இவ்வாறானவர்களை குறி வைத்து செயல்பட்டிருக்கிறான்.

அதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் அவ்வளவாக புதிய தொழிநுட்பங்களை அறியாதவர்கள் என்பதும், இவனுக்கு சாதகமாக அமைந்துவிட்டது என்பதை புலனாய்வு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவன் பேசி அனுப்பிய குறுஞ் செய்திகள் அனைத்தும் பாதிக்கப்பட்டவர்களால் சேமிக்கப்பட்டுள்ள அதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் இணைந்து தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காக ஒன்றுபட்டு ஒரு வட்ஸப் குழுமத்தை உருவாக்கியிருக்கின்றனர். அதேநேரம், இவன் அழைப்பையெடுத்து பேசும்போது அவசரமாகவும் பதற்றமாகவும் பேசுவதாகவும் இவன் பண உதவி செய்வது போன்றே உரையாடுவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.



சூத்திரதாரி கணனி
மென்பொருள் பொறியியலாளர்

ஏறாவூரைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பத்து வயதுச் சிறுவனின் அறுபதாயிரம் ரூபாவை இவ்வாறு இணைய பணப்பரிவர்த்தனை மூலமாக திருடியதாகவும் அந்தச் சிறுவன் தற்போது மரணித்துவிட்டதாகவும் சற்றும் இரக்கமின்றி இவன் தன் கைவரிசையைக் காட்டியிருப்பதாக கண்ணீர் மல்க பாதிக்கப்பட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அதிகமான திருட்டு வேலைகள் Just pay என்ற அப்பினூடகவே நடைபெற்றுள்ளன. இந்த அப்பில் முக்கிய விடயம் என்னவென்றால் ஒரு வங்கிக் கணக்கிலிருந்து இன்னொரு வங்கிக் கணக்கிற்கு பணத்தை அனுப்புவதற்கு வங்கிக் கணக்கு வைத்திருப்பவரின் கணக்கிலக்கமும் அடையாள அட்டை இலக்கமும் பெயரும் தொலைபேசி இலக்கமும் போதுமானது எனச் சொல்லப்படுகிறது.

(15 ஆம் பக்கம் பார்க்க)




என். சரவணன்

# எலிசபத் மகாராணியின் இரு கொழும்பு விஜயங்கள்

உலக வரலாற்றில் அதிககாலம் அரசாட்சி செய்த இரண்டாவது தலைவர் எலிசபத் மகாராணி. 70 ஆண்டுகள் அரியணையில் இருந்தார். இதற்கு முன் பிரான்சில் 17ஆம் நூற்றாண்டில் பதினான்காம் லூயி மன்னன் 72 ஆண்டுகள் (1643 – 1715) ஆட்சி செய்திருக்கிறார்.

இலங்கையை நானூற்று ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்ட காலனித்துவ நாடுகளைச் சேர்ந்த ஒரே ஒரு அரசர் தான் இலங்கைக்கு வந்துள்ளார். அவர் எலிசபத் மகாராணி மட்டும் தான். அதுவும் இரண்டு முறைகள். அவரின் கொழும்பு விஜயம் பல முக்கியத்துவம் மிக்க அம்சங்களைக் கொண்டது. இலங்கையின் முடிக்குரிய மகாராணியாக 1953 – 1972 வரை ஆண்டவர் அவர். இலங்கைக்கு அவர் இரு தடவைகள் விஜயம் செய்தார். 1954 இல் அவர் இராணியாக விஜயம் செய்தார். இலங்கை குடியரசானதும் 1981இல் அவர் பொதுநலவாய நாடுகளின் தலைவியாக இங்கே விஜயம் செய்தார்.

**1954 விஜயம்**

இளவரசி எலிசபத் தனது உலகப் பயணத்தை ஜனவரி 31ஆம் திகதி ஆரம்பித்திருந்தார். யூலை 9 ஆம் திகதி தான் இங்கிலாந்து திரும்புவதாக அந்தப் பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த ஆறு மாதப் பயணத் திட்டம் ஒரு வாரத்தைக் கூட கடக்கவில்லை.

அந்தப் பயணத்தில் இலங்கைக்கு செல்ல நிர்ணயித்திருந்த திகதி தான் 1952 பெப்ரவரி 7. ஒருவாரம் பிரயாணம் செய்து பெப்ரவரி 14 அன்று இலங்கையை வந்தடைவதே திட்டமாக இருந்தது. ஆனால் அதற்கு முதல் நாளான பெப்ரவரி 6ஆம் திகதியன்று மன்னர் இறந்து விடுகிறார். 7ஆம் திகதி எலிசபத் கென்யாவிலிருந்து லண்டனுக்கு விமானத்தில் வந்தடைகிறார். எலிசபத்தின் முடிசூட்டுவிழா யூன் 2ஆம் திகதி நடந்தது.



பேராதனை பல்கலைக்கழக விஜயத்தின் போது...

அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட பயணம் தான் மகாராணியாக முடிசூடியபின் முதல் வேலையாக அப்பயணத்தை மீண்டும் 1953இல் ஆரம்பித்தார். 14 நவம்பர் 1953 முதல் மே 1954 வரையான ஆறு மாதகால பயணத்தில் இறுதி நாடாக இலங்கைக்கு விஜயம் செய்து ஏப்ரல் மாதம் 10 இலிருந்து பதினொரு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்தார்.

இராணியின் முதல் பயணம்

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டு (அதாவது டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டு) ஆறு ஆண்டுகளில் இந்தப் பயணம் நிகழ்ந்தது. அவரின் வருகை முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்த வருகை என்பதால் அதற்கு முன்னர் இருந்தே இலங்கை மகாராணியை வரவேற்க பெரும் ஏற்பாடுகளை செய்து வந்தது. “தலைநகர் திருமணக்கோலம் பூண்டது” என்றே அன்றைய பத்திரிகைகள் அந்த விழாக்கோலத்தை வர்ணித்திருந்தன.


பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை ராணியை வரவேற்று அழைத்துச் செல்கிறார்.

**10.04.1954**

1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதியிலிருந்து பதினொரு நாட்கள் இந்த சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டார் எலிசபத். ஏப்ரல் முதலாம் திகதியன்று அவுஸ்திரேலியாவிலிருந்து சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு “கோதிக்” என்கிற கப்பலில் கொக்கோஸ் (Cocos Keeling Islands) தீவுகளின் வழியாக இலங்கையை வந்தடைந்தார். சுமார் 1500 மைல்கள் கடல்பயணம் செய்து 10ஆம் திகதி காலை 6.30க்கு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தார். பீரங்கிகள் வெடிக்கச் செய்து பிரதமர் ஜோன் கொத்தலாவல, ஆளுநர் சோல்பரி பிரபு உள்ளிட்ட அரச பிரதிநிதிகள் பலர் கூடி அவரை வரவேற்றார்கள். அன்றே 10.11 அளவில் விக்டோரியா பூங்காவின் மூலையில் இருக்கிற முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களில் மரணித்த போர் வீரர்களின் நினைவாக எழுப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கு பூக்கள் வைத்து மரியாதை செய்தார் இராணி. பின்னேரம் 6.30க்கு மகாராணி வானொலி மூலம் நேரடியாக நாட்டுமக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

**11.04.1954**

அடுத்த நாள் 11ஆம் திகதியன்று காலி முகத்திடலில் மாபெரும் அணிவகுப்பு மரியாதை நிகழ்ந்தது. நாட்டு மக்கள் பலர் அங்கே பார்வையிட வந்திருந்தனர். அலரி மாளிகையில் மிகப் பெரும் விருந்தொன்றில் கலந்துகொண்டார். அதில் இரண்டாயிரத்து ஐநூறு பேரளவில் கலந்து கொண்டிருந்தார்கள். அதுவரை அலரி மாளிகையில் அந்தளவு பெரிய விருந்து வைபவம் நிகழ்ந்ததில்லை.

இந்த விருந்துபசாரத்தின்போது அப்போது பக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த எம்.நவரத்தினசாமியை பிரதமர் ஜோன் கொத்தலாவல இராணிக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

**12.04.1954**

இலங்கையின் மூன்றாவது பாராளுமன்றக் கூட்டத்தொடரை அவர் ஏப்ரல் 12 அன்று சுதந்திர சதுக்கத்தில் உள்ள சுதந்திர மண்டபத்தில் ஆரம்பித்து வைத்தது இந்த பயணத்தின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக அமைந்திருந்தது. அங்கே 25,000க்கும் மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தார்கள்.

சுதந்திர சதுக்கம் ஒரு புராதன அரச சபையைப் போன்று அலங்கரிக்கப்பட்டு அங்கு பாராளுமன்றம் கூடியது. எலிசபெத் மகாராணி கிரீடம் அணிந்து அந்நிகழ்ச்சியில் பங்கேற்று அரியணையில் அமர்ந்திருந்தார். நாட்டின் தலைவராக இருந்த அவர், நாடாளுமன்ற அமர்வைத் தொடங்கி வைத்து அரியாசன உரையையும் நிகழ்த்தினார். ஆளுநர் சேர் ஒலிவர் குணதிலக்க தன் உரையில் இனிமேல் எலிசபெத் மகாராணி சிங்கள ராஜவம்ச கதையின் அங்கமாகத் திகழ்வார் என்றார். இறுதியில் பாராளுமன்றத் சபைத் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்தன நன்றி உரை நிகழ்த்தி சபையை நிறைவு செய்தார். அவர் தனது உரையை சிங்களத்தில் ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. அதன்படி 1972ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி குடியரசு அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவரப்படும் வரை இலங்கையை ஆட்சி செய்த இராணியான எலிசபெத் தான் இந்த நாட்டின் கடைசி இராணியாக இருந்தார்.

சுதந்திர சதுக்க நிகழ்வின் போது 1815இல் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தால் இறக்கப்பட்ட இலங்கையின் கொடி மீண்டும் எலிசபத் மகாராணியின் முன் ஏற்றப்பட்டது.

அதே தினம் கொழும்பு ரேஸ்கோஸ் பகுதியில் குதிரைப் பந்தய ஓட்டத்தைக் காண அழைத்துச் செல்லப்பட்டார்.

**13.04.1954**

இலங்கை கலைக் கழகத்தால் (Arts council of Sri lanka) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்டனர். அதன் பின்னர் முக்கிய சந்திப்புகளையும் ஓய்வையும் எடுத்துக் கொண்டார்கள்.

**14.04.1954**

அதிகாலை 7 மணிக்கு பொலன்னறுவையை நோக்கி இரயிலில் புறப்பட்டனர். பி.ப.2 மணிக்கு பொலன்னறுவைய அடைந்தனர். அங்கிருந்து காரில் பொலன்னறுவை கல் விகாரை, பராக்கிரமபாகு மாளிகை, பராக்கிரம சமுத்திரம், சரஸ்வதி மண்டபம் போன்றவற்றை பார்வையிட்டார். அதன் பின்னர், இராணி ஏப்ரல் 15 ஆம் திகதி சீகிரியாவிற்கு விஜயம் செய்தார். அங்கு தொல்பொருள் ஆணையாளர் பேராசிரியர் செனரத் பரணவிதான அதன் முக்கியத்துவத்தை அவருக்கு விளக்கினார்.


சுதந்திர சதுக்க பாராளுமன்ற அமர்வில் மகாராணியார்

**15.04.1954**

சிகிரியவுக்கு காரில் பவனியாக சென்றனர். அங்கே சிகிரிய மலை வரை சென்று பார்வையிட்டுவிட்டு அங்கிருந்து அன்றே நுவரெலியா புறப்பட்டனர்.

நுவரெலியாவில் வரவேற்புற்சவம் அங்குள்ள மாளிகையில் ஏற்பாடாகி இருந்தது. அங்கே கூட்டத்தின் மத்தியில் உரையாற்றினார். இராணியின் நுவரெலிய பயணத்தின் போது அங்கே கூடியிருந்தவர்களில் ஒருவர் இடையில் பாதுகாப்பையும் மீறி முன்னே வந்து தான் சிங்கள அரச பரம்பரையைச் சேர்ந்தவரென்றும் தனக்கு ஒரு வீட்டை பெற்றுத் தருமாறு கோரியும் ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு முன்னே பாய்ந்தார். அவர் பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்ட செய்தி அப்போதைய பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது.

**16.04.1954**

பெரிய வெள்ளி நாள், தம்பதியினர் தேவாலயம் சென்று வழிபட்டனர். பின்னர் ஓய்வெடுத்தனர்.

**17.04.1954**

தோட்ட உரிமையாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு உபசாரத்தில் கலந்துகொண்டனர்

**18.04.1954**

அங்கிருந்து வாகன பவனியில் கண்டியை சென்றடைந்தனர்.

**19.04.1954**

அடுத்த நாள் 19 அன்று கண்டிக்கு இரயிலில் பயணமானார்கள். அங்கே தலதா மாளிகையில் வணங்கி, அதன் தியவடன நிலமே போன்ற தலைவர்களையும் சந்தித்தார். அவருக்கு அஸ்கிரி, மல்வத்து மகாசங்கத்தினர் பாளியில் எழுதப்பட்ட ஒரு வரவேற்பு பேழையை வழங்கி கௌரவித்தார்கள்.


இரண்டாவது விஜயத்தில் காமினி திசாநாயக்கவுடன்


தலதா மாளிகையில்

கண்டியில் அரச தம்பதிகள் மகுல்மடுவ என்கிற பிரசித்தி பெற்ற மண்டபத்துக்கும் சென்று பார்வையிட்டார்கள். அங்கே தான் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான கண்டி ஒப்பந்தம் 1815 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்டது நினைவுகொள்ளப்பட்டது.

இதே நாள் பேராதனைப் பூங்காவையும் சுற்றிப் பார்த்தார்கள்.

**20.04.1954**

கண்டியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தை 1952 இல் எலிசபத்தின் கணவர் பிலிப் தான் திறப்பதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இளவரசி எலிசபத்தின் விஜயம் அரசரின் மரணத்தால் தள்ளிப்போனதால் இரண்டாண்டுகளின் பின்னர் தான் அது திறக்கப்பட்டது. எலிசபத் மகாராணியாக ஆகி இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்த நிலையில் மகாராணி எலிசபத்தின் வருகையின் நினைவாக பிலிப் கோமகனால் பல்கலைக்கழகமாக பிரகடனப்படுத்தி திறக்கும் வைபவம் ஏப்ரல் 20 அன்று நிகழ்ந்தது. அந்தக் கல்வெட்டில்.

“H.R.H. the Duke of Edinburgh, G.G. To be “MORE OPEN THAN USUAL” என்று பொறிக்கப்பட்டது.

கண்டி, நுவரெலியா, அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற இடங்களுக்கு இரயிலில் தான் பயணம் செய்தார். இரயில் நிலையத்தில் இருந்து அவருக்கான சிறப்பு கார் வண்டியில் ஏனைய இடங்களை அடைந்தார். பயணத்தின் போது அவர் தலதா மாளிகை பெரஹெராவிலும் கலந்துகொண்டார்.


கைகொடுத்து உதவும்
சேர் ஜோன் கொத்தலாவல

மகாராணியின் வருகையையொட்டி வளமையையும் விட வெகு சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அந்த பெரஹர ஊர்வலத்தில் 140 யானைகள் அணிவகுத்துச் சென்றன.

மகாராணியின் அவ்வருகையின் நினைவாக புதிய பத்து சத முத்திரையும் வெளியிடப்பட்டது. இந்த முத்திரையில் இராணி ஒரு புறமும், கண்டி தலதா பெரஹரவை நினைவு கொள்ளும் வகையில் யானைகளின் அலங்கார ஊர்வலமும் கொண்டாத நீல நிறத்தில் அந்த முத்திரை அமைந்திருந்தது

**20.04.1954**

ஏப்ரல் 21ஆம் திகதி அவர் புறப்படும் நாளன்று மகாராணியின் 28 வது பிறந்தநாள். ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்தபடி விமரிசையாக கொண்டாட ஏற்பாடாகியிருந்தது. அன்றைய நாள் மழையிலும் நனைந்தபடி படைத்துருப்புக்கள் அணிவகுத்து மரியாதை செலுத்தி “ஹாப்பி பெர்த்டே டூ யூ” பாடியதை மறக்க முடியாது என்று சேர் ஜோன் கொத்தலாவல தனது “An Asian Prime minister’s Story” என்கிற நூலில் தனியான ஒரு அத்தியாயத்தில் எழுதியிருக்கிறார்.

அதே நாள் இராணி தனது சுற்றுப்பிரயாணத்தில் பணியாற்றிய இருபது பிரமுகர்களுக்கு றோயல் விக்டோரியன் ஓடர் பட்டங்களை வழங்கினார். 21ஆம் திகதி பி.ப.12.45க்கு இராணி மாளிகையில் பிறிவிக் கவுன்சில் கூட்டம் கூட்டப்பட்டு இந்த பட்டமளிப்பு செய்யப்பட்டது.

முக்கிய இரண்டு பதவிப் பிரமாணங்களை அவர் செய்து வைத்தார். ஒன்று பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையை பிரித்தானிய உச்ச நீதிமன்றமான பிரிவிக் கவுன்சிலின் உறுப்பினராக பிரகடனப்படுத்தப்பட்டது. அடுத்தது சேர் ஒலிவர் குணதிலக்கவை புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டார். யூலை 17 அன்றிலிருந்து இராணி மாளிகை சுதேசிய தலைவரின் வாசஸ்தலமானது. அதாவது பிரித்தானிய முடியின் நேரடி காலனித்துவ முகவராக அதுவரை ஆங்கிலேயர்களே இருந்தார்கள். அதை எலிசபத் மகாராணி முடிவுக்குக் கொண்டு வந்தார்.

இதே நாள் இராணியின் பிறந்த நாள் நினைவாக கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதிக்கு “இராணி எலிசபத் ஜெட்டி” (Queen Elizabeth Jetty) என்று பெயரிடப்பட்டது.

மகாராணியின் மொத்த உலகப் பயணங்களிலேயே இலங்கையைப் போல வரவேற்பும் உபசாரமும் வேறெங்கும் அளிக்கப்பட்டதில்லை என்று லண்டன் பத்திரிகைகள் புகழ்ந்தன.

**1981 விஜயம்**

27 ஆண்டுகளுக்கும் பின்னர் 1981 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 இலிருந்து 25 வரை இலங்கை விஜயம் செய்திருந்தார். சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட பொன்விழா ஆண்டாக அந்த வருடம் அமைந்திருந்தது. இலங்கைக்கு பிரித்தானிய ஆட்சியின் போது 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதும் பிரித்தானிய காலனித்துவ நாடுகளிலேயே இலங்கைக்குத் தான் அவ்வாறு முதற் தடவை சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதையும் அறிவோம். அதைக் கொண்டாடுமுகமாக ஜே.ஆர். செய்திருந்த ஏற்பாடுகளுக்கு பிரதம அதிதியாக இராணியை அழைத்திருந்தார்.


அற்புதமான ஒரு தருணத்தில்

ஒக்டோபர் 22ஆம் திகதி சர்வஜனவாக்குரிமையின் பொன் விழாவை முன்னிட்டு காலிமுகத்திடலில் அணிவகுப்புகள் உட்பட பல நிகழ்ச்சிகள் மகாராணியின் முன்னால் நிகழ்த்தப்பட்டன. ஜனாதிபதி ஜே.ஆர். தனது உரையை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் ஆற்றினார். இராணியின் ஆங்கில உரை உடனுக்குடன் மொழிபெயர்க்கப்பட்டது. 50,000 க்கும் மேற்பட்ட பள்ளிக்கூட சிறார்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதுடன் இலட்சக்கணக்கான மக்களும் குழுமினார்கள். அன்றைய தினத்தை விடுமுறையாகவும் அரசு அறிவித்திருந்தது. இதே நாள் நூலகக் கட்டிடத்தை திறந்து வைத்தார். பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்ந்த பரிசளிப்பு வைபவத்திலும், கொழும்பு மாநகர சபை ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள் அரச தம்பதிகள்.

அங்கிருந்து அவர்களுக்கான விசேட இரயிலில் புறப்பட்டு அடுத்த நாள் 23ஆம் திகதி அனுராதபுரத்தை அடைந்தார்கள். இவர்களுடன் ஜே.ஆரும் சில அமைச்சர்களும் ஒன்றாகப் பயணித்தார்கள். ஆயிரக்கணக்கான சிறார்களும் மக்களும் பிரித்தானிய, இலங்கை கொடிகளை உயர்த்தி அசைத்தபடி அவர்களை பாதை எங்கிலும் வரவேற்றார்கள்.

ஸ்ரீ மகாபோதி விகாரைக்கும் சென்று வணங்கினார். அனுராதபுரத்தின் பழைமையான தொல்லியல் இடங்களைப் பற்றி வழிகாட்டுவதற்காக அன்றைய தொல்லியல் ஆணையாளர் மங்கள கருணாரத்ன, அமைச்சர் காமினி திசாநாயக்க ஆகியோரும் இணைந்திருந்தனர்.

கண்டி, பொலன்னறுவை, அனுராதபுரம் போன்ற இடங்களுக்குப் பயணித்தார். புத்தரின் சமாதி சிலை, ருவன்வெளி சாய, ஜேதவனாராமய, சந்தகடபஹான, குட்டம் குளம், அவுகன புத்தர் சிலை உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை எல்லாம் பார்வையிட்டனர்.

அங்கிருந்து மகாவலி எச் வலயத்தில் எலிசபத் மகாராணி வீதியையும் திறந்து வைத்தார். போகும் வழியில் சில குளங்களையும் பார்வையிட்டுக் கொண்டே காரில் பவனியாக மாத்தளை வழியாக கண்டியை சென்றடைந்தார்கள்.

அன்று இரவு கண்டி தலதா பெரஹெரா இடம் பெற்ற போது கண்டி மத்துமபண்டார ஏரியை பார்த்தபடி நிர்மாணிக்கப்பட்டிருந்த பத்திருப்புவவில் இருந்தபடி அரச தமபதிகள் பெரஹரவைப் ஆர்வத்துடன் கண்டு களித்தனர். அரச தம்பதியினர் கண்டி ஜனாதிபதி மாளிகையில் அன்றைய இரவைக் கழித்தனர்.


கோமகன் இலங்கையில் உபயோகித்த கார்

பிரித்தானிய நிதி உதவியுடன் தனது கொள்ளுப் பாட்டியின் பெயரில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விக்டோரியா நீர்த்தேக்கத்தை பார்வையிட்டது அந்தப் பயணத்தின் மற்றுமொரு சிறப்பு நிகழ்வாகும்.

இலங்கையின் மாபெரும் நீர் இயக்கவியல் திட்டம் அது. ஆனால் அந்த அணைக்கட்டை 1985ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி இராணியின் சார்பாக அன்றைய பிரித்தானியப் பிரதமர் மார்கிரட் தட்சர் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

1981ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி படையினரின் மரியாதைக்கு மத்தியில் அரச வாகன அணிவகுப்புடன் கட்டுநாயக்க விமான நிலையத்தை அடைந்து அங்கிருந்து இங்கிலாந்துக்கு பயணமானார்.

அது தான் இராணியின் இறுதி இலங்கை விஜயம். பின்னர் 2013ஆம் ஆண்டு நவம்ர் மாதம் இலங்கையில் நிகழ்ந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை ஆரபித்து வைப்பதற்கு இராணி வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் உடல்நலக் குறைவின் காரணமாக அவரால் வரமுடியவில்லை. அதற்கு பதிலாக இளவரசர் சார்லஸ் இங்கு வந்தார்.

இராணியின் கணவர் அரசர் பிலிப் கடந்த ஆண்டு மறைந்தார். எலிசபத் மகாராணி இரு தடவைகள் மாத்திரமே வந்திருந்தபோதும் அரசர் பிலிப் இலங்கைக்கு மேலும் சில தடவைகள் வந்து தங்கிச் சென்றார். அவருக்கு இலங்கை புதிய நாடல்ல. குறிப்பாக இரண்டாம் உலக யுத்த காலத்தில் திருகோணமலை துறைமுகத்தை பாதுகாப்பதற்காக அங்கே இருந்த கடற்படையை வழிநடத்திக் கொண்டிருந்தவர் அவர். அங்கே இருந்த காலத்தில் அவர் ஒரு கார் ஒன்றையும் அவருக்கென 12 பவுண்கள் கொடுத்து வாங்கி வைத்திருந்தார். அது தான் அவரின் முதல் காரும். அதில் தான் அவர் திருகோணமலையிலிருந்து கொழும்புக்கும் 260 கிலோமீட்டர்கள் ஓட்டி வருவார். அந்தக் கார் இப்போதும் கோல்பேஸ் ஓட்டல் உரிமையாளரால் வாங்கப்பட்டு அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருகிறது.




இலங்கை 1948ஆம் ஆண்டு 4ஆம் திகதி பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டபோதும் அது பூரண சுதந்திரமாக இருக்கவில்லை என்பதும், டொமினியன் அந்தஸ்து மட்டும் தான் என்பதையும் அறிவோம். 1972 ஆம் ஆண்டு தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அமைந்த ஆட்சியில் பாராளுமன்றத்தின் மூலம் டொமினியன் அந்தஸ்திலிருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பின் மூலம் இலங்கை அப்போது குடியரசாக ஆனது.

# ஆதி லிங்கேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம்












(ஏறாவூர் நிருபர் நாஸர்)

வாழைச்சேனை கிண்ணையடி திருவருள் மிகு ஸ்ரீ சுழலும் ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் வெகுசிறப்பாக நடைபெற்றது. விநாயகர் வழிபாடு, விஷேட புண்ணியா வாசனம், மகா கணபதி ஹோமம் உள்ளிட்ட பல்வேறு கிரியைகள் தினமும் நடைபெற்றன. 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறுகிறது. ஜோதிட கிரம ஜோதி ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ மா. குலேந்திரரூப குருக்கள் கும்பாபிஷேக பிரதம குருவாக பணியாற்றினார்.




**காட்போட் பேல் இயந்திரம் விற்பனைக்கு**
(650/300/250/150 cm)
T.P. 075 31 77 167
தகடு பேலும் உண்டு.


## பாரம்பரியம் நிகழ்ச்சியில் மர்ஹூம் மௌலவி எம்.கிவ்.புர்ஹானுத்தீன் நினைவுகள்




இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர்வரும் செவ்வாய் (20.09.2022) இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்து பெருமையை தேடிக்கொண்ட, சன்மார்க்க அறிஞர்கள் வரிசையில் நம்மை விட்டுப் பிரிந்த மர்ஹூம் மௌலானா மௌலவி பாஸில் எம்.கிவ்.புர்ஹானுத்தீன் நினைவுகளை அவரது புதல்வர், மௌலவி தகிய்யுத்தீன் அஹ்மத் நினைவுகூருகிறார்.

1973 ஆம் ஆண்டு தொட்டு 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மர்ஹூம் மௌலவி புர்ஹானுத்தீன் முஸ்லிம் சேவையில் பல்வேறு சன்மார்க்க நிகழ்ச்சிகளை வழங்கி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை தேடிக்கொண்ட மூத்த உலமாக்களில் பிரதானமிக்க ஒருவராவார்.

சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தார். பிரபலமிக்க இஸ்லாமிய சஞ்சிகையான "நிதாஉல் இஸ்லாம்" சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இவரது ஆக்கங்களோடு மூத்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் பலரது எழுத்துக்கள் இந்நூலை அலங்கரித்தன.

நாவலப்பிட்டியில் அமைந்துள்ள அல்ஜாமிஅதுல் இஸ்லாமிய்யா அரபுகலாபீடத்தின் ஸ்தாபகராவார். இவ்வரபு கலாபீட தலைவராக கடமையாற்றி அதிகமான வறிய மாணவர்களின் சன்மார்க்க ஆர்வத்தினை அடையாளம் கண்டு இலவசமாக அவர்களின் சன்மார்க்க அறிவு வளர்ச்சிக்கு துணை சேர்த்தார்.

அரபு, தமிழ், உருது, ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் தேர்ச்சி பெற்ற இவர், முஸ்லிம் சேவையின் ஜனரஞ்சக நிகழ்ச்சிகளில் ஒன்றான "உருது மஞ்சரி' நிகழ்ச்சியின், புகழ்பெற்ற நடத்துனரான மர்ஹூம் ஹாஜி உஸ்மான் பைலாவுக்குப் பிறகு, இந்த நிகழ்ச்சித் தொடரை ஜனரஞ்சக படுத்தியவர்களுள் ஒருவரே.

இவரது நினைவுகளை தாங்கி வரும் பாரம்பரியம் நிகழ்ச்சியினை, எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.


சதொச

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

**முன்மொழிவுகளுக்கான அழைப்பு (RFP)**

**லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு கணக்காய்வு சேவையை பெற்றுக்கொள்ளல்**

**விலைமனு இலக்கம்: LSL/PRO/05/148/Audit Firm/2022**

லங்கா சதொச லிமிடட்டின் விற்பனையகங்கள் மற்றும் மொத்த களஞ்சியங்களுக்கு திறமையான மற்றும் பயனுள்ள கணக்காய்வு சேவை ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக லங்கா சதொச லிமிடட் பெறுகைக் குழுவின் தலைவரினால், அதற்காக ஆர்வம் காட்டுகின்ற இலங்கையில் பதிவு செய்யப்பட்ட புகழ்பெற்ற கணக்காய்வு நிறுவனங்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

தேவைகள்: முன்மொழிவுகளை கோரும் ஆவணத்தில் தரப்பட்டுள்ளவாறு

ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலான குறித்த முன்மொழிவுக்கான அழைப்பு ஆவணத்தை 1,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை செலுத்தி 2022 செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 2022 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வரையான காலத்தில், இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி மு.ப. 11.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படுகின்ற முன்மொழிவுகள் 2022 ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர், மேலே முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு கணக்காய்வு சேவையை பெற்றுக்கொள்ளல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் வழங்கப்படுகின்ற ஆவணங்களுடன் உள்ள "விலைமனு பிணை பிரகடனத்திற்கான" படிவத்தை தெளிவாக நிரப்பி முன்மொழிவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

முன்மொழிவுகளை ஏற்பது 2022 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பி.ப. 01.00க்கு முடிவுறுவதோடு முன்மொழிவுகளை திறப்பது, முன்மொழிவுகளை ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் முன்மொழிவுகள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர், மனித வள மற்றும் நிர்வாகம், லங்கா சதொச லிமிடட் 070 1560896

ஒப்பந்தம் வழங்குவதன் இறுதி முடிவு, **தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட் வசமானது.**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்**
**இலக்கம் 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 02**




பொருளாதார அரசியல்

# பொருளாதார பின்னடைவின்போது மீட்சிக்கான வழி என்ன?



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்




வர்த்தக சகடோட்டம் (business cycle) எனப்படும் ஏற்ற இறக்கங்கள் காரணமாக நாடுகளின் பொருளாதார செயற்பாடுகளில் மோசமான தாக்கங்கள் ஏற்படுகின்றன. ஒரு காலப்பகுதியில் பொருளாதார விரிவாக்கங்களும் இன்னொரு காலப்பகுதியில் பொருளாதாரப் பின்னடைவுகளும் மாறி மாறி இடம் பெறுவது வர்த்தக சகடோட்டத்தின் முக்கிய பண்பாகும். சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றும் மேற்குலக வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரங்களில் இத்தகைய ஏற்ற இறக்கங்களை மிகத் தெளிவாக அவதானிக்க முடியும். இலங்கை போன்ற தொடர்ந்தும் மந்த நிலையில் இயங்கும் பொருளாதாரங்களில் இவற்றை அவதானிப்பது சற்று கடினமானதாக இருக்கும். வர்த்தக சகடோட்டங்கள் தெளிவான கால இடைவெளிகளில் மாறி மாறி ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவை ஏற்படுவதற்கான காரணங்கள் உள்நாட்டிலும் தோன்றலாம் வெளிநாடுகளில் ஏற்படும் பெற்றோலியப்பொருள் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களாலும் இவை உருவாகலாம். வர்த்தக சகடோட்டத்தின் விரிவாக்க காலத்தில் நாடுகளின் பொருளாதாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். முதலீடுகள் அதிகரிக்கும். வெளியீடு அதிகரிக்கும். தொழில் துறை இலாபங்கள் உயரும். தொழில் வாய்ப்புகள் பெருகும். மக்களின் வருமானங்கள் விரிவாக்கம் காணும். வாழ்க்கத்தரம் உயரும். வறுமை தணியும்.

வாழ்க்கையில் மக்களின் திருப்தியடையும் நிலை உயரும். எனவே இதை ஒரு பூரிப்பு நிலை எனவும் கருதலாம். இவ்வாறான ஒரு நிலை தொடர்ந்து நிலைத்திருக்கும் என்ற எதிர்பார்க்கையில் பொருளாதார முகவர்கள் தொடர்ந்தும் இயங்குவதால் பொருளாதாரத்தின் முழு இயலளவும் பயன்படுத்தப்பட்ட நிலையில் மேலதிக முதலீடுகளின் இலாப வீதங்கள் வீழ்ச்சியடைய ஆரம்பிக்கும்.

குறித்த காலத்தின் பொருளாதாரச் செழிப்பு நிலை முற்றுப் பெற்றதை இதன் மூலம் அறியும் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளைக் குறைப்பதனால் பொருளாதாரச் செயற்பாடுகள் குறைவடைந்து பொருளாதாரம் பின்னடைவை நோக்கி நகரும். வெளியீடுகள் மந்தமடைந்து மக்களின் தொழில்வாய்ப்புகள் குறைவதால் வருமானங்களில் வீழ்ச்சி ஏற்பட்டு மக்களின் கொள்வனவுச் சக்தி குறைவடையும். பொருள்கள் சேவைகள் மீதான கேள்வி குறைவடைவதனால் முதலீடுகளும் உற்பத்திகளும் மேலும் வீழ்ச்சியடையும்.

இது பொருளாதார மந்த நிலைக்கு இட்டுச் செல்லும். பொருளாதாரச் செயற்பாடுகள் மிகக்குறைந்த ஒரு நிலையினை எட்டிய பின்னர் மீண்டும் மிக மெதுவாக அவை பத்தூக்கம் பெற ஆரம்பிக்கும். அதனைத் தொடர்ந்து அடுத்த செழிப்புக் காலத்தின் விரிவாக்கம் ஏற்படும்.

பொருளாதாரச் செழிப்பின் போது மகிழ்ச்சியைக் கொண்டாடும் பொருளாதார முகவர்கள் அதனைத் தொடர்ந்துவரும் பின்டைவைப்பற்றிச் சிந்திக்காமல் செயற்படுவது தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வருகிறது. பொருளாதாரப் பின்னடைவின் போது அரசதுறையின் அபரிமிதமான தலையீட்டை வேண்டி நிற்கும் தனியார் துறையினர் செழிப்பின் போது அரச துறையின் தலையீட்டை வரவேற்பதில்லை.

ஆனால் வர்த்தக சகடோட்டத்தின் போது பொருளாதாரத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் குறைத்து பொருளாதாரத்தின் நிலைபேற்றினைப் பேணும் பொருட்டு அரசாங்கம் பொருளாதாரத்தில் தலையீடு.

செய்யும். குறிப்பாக பொருளாதாரம் பின்னடையும் போது அல்லது மந்தத்தைச் சந்திக்கும் போது அதிலிருந்து பொருளாதாரத்தை மீட்டெடுத்து வளர்ச்சிப்பாதையில் மீண்டும் நிறுத்தும் பொருட்டு அரசாங்கம் விரிவாக்கக் கொள்கைகளைப் பயன்படுத்தும். இதற்காக அரசாங்கம் பிரதானமாக தனது அரசிறைக்கொள்கையைப் பயன்படுத்தும்.

> **பணவீக்கம் அதிகரிக்கும் போது அதனை ஈடு செய்யும் வகையில் நாட்டின் வட்டிவீதங்களை அதிகரிக்க நேரிடும். வட்டிவீத அதிகரிப்பு தனியார் முதலீடுகளைக் குறைத்து விடுவதால் அரசாங்கம் எதிர்பார்க்கும் பொருளாதார விரிவாக்கத்தை அடைய முடியாது.**

வரி அறவிடல் செலவீடுகளை மேற்கொள்ளல் என்பன இறைக் கொள்கையின் இரு பிரதான கருவிகளாகும்.

வரிகளைக் குறைத்து அரசாங்கத்தின் செலவீடுகளை அதிகரிப்பது விரிவாக்க இறைக் கொள்கை எனப்படும். அதன் போது அரசாங்கத்தின் வரிவருவாய்களை விட செலவுகள் உயர்வாக இருக்கும்.

குறைநிலை வரவு செலவுத்திட்டம் எனக் குறிப்பிடப்படுவதும் இதனைத்தான். பொருளாதாரம் பின்னடைவில் அல்லது மந்தத்தில் உள்ளபோது அதிலிருந்து மீட்சியடைய அரசாங்கம் அரசாங்க செலவீடுகளை அதிகரிப்பதுடன் வரிகளைக் குறைக்கும்.

அதேவேளை அரச துறையில் அதிகளவு ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதன் மூலம் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும். அரசாங்கம் செலவு செய்யும் போது அவை மக்களுக்கு வருமானமாக அமைவதனால் மக்களின் கொள்வனவு சக்தி அதிகரிப்பதனால் பொருள்கள் சேவைகளுக்கு கேள்வி அதிகரிக்கும். இவ்வாறு கேள்வி அதிகரிப்பதனால் தனியார் முதலீட்டாளர்களின் இலாபம் உயரும் இது தனியார் முதலீடுகளை அதிகரிக்கும். முதலீட்டு அதிகரிப்பு தொழில்வாய்ப்புகளைப் பெருக்குவதுடன் உற்பத்தியையும் மக்களின் வருமானங்களையும் அதிகரிக்கும். இதன் மூலம் பொருளாதாரப்பின்னடைவும் மந்தமும் நீங்கி பொருளாதாரம் விரிவாக்கத்ததை நோக்கி நகரும்.

> **வர்த்தக சகடோட்டத்தின் போது பொருளாதாரத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் குறைத்து பொருளாதாரத்தின் நிலைபேற்றினைப் பேணும் பொருட்டு அரசாங்கம் பொருளாதாரத்தில் தலையீடு செய்யும்.**

இவ்வாறு அரசாங்கம் குறைநிலை வரவு செலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பற்றாக்குறையினை நிதிப்படுத்த வேண்டும். இதற்காகக் கடன் பெற வேண்டும்.

அதனால் ஒரு புறம் நாட்டின் கடன் சுமை அதிகரிக்கும். மறுபுறம் அரசாங்கம் வங்கிகளிடமிருந்து கடன் பெறும் போது நாட்டின் பணநிரம்பல் அதிகரிக்கும். மத்தியவங்கி பணத்தை அச்சிடுவதன் மூலம் பற்றாக்குறையை நிதிப்படுத்தினாலும் பணவீக்கம் அதிகரிக்கும் பணவீக்கம் அதிகரிக்கும் போது அதனை ஈடு செய்யும் வகையில் நாட்டின் வட்டிவீதங்களை அதிகரிக்க நேரிடும். வட்டிவீத அதிகரிப்பு தனியார் முதலீடுகளைக் குறைத்து விடுவதால் அரசாங்கம் எதிர்பார்க்கும் பொருளாதார விரிவாக்கத்தை அடைய முடியாது.

அதேவேளை சுருங்கிய பொருளாதாரத்தை மீட்க ஓரிரு வருடங்கள் விரிவாக்க இறைக்கொள்கையைப் பயன்படுத்தவதில் தவறில்லை. ஆனால் தொடர்ச்சியாகவே ஒருநாடு பற்றாக்குறை வரவு செலவுதிட்டத்தை நடைமுறைப்படுத்தினால் கடன் சுமை தொடர்ந்து அதிகரித்துச் சென்று கடன் பொறியில் தள்ளி விடும்.

அதிலிருந்து மீட்சியடைவது இலகுவான காரியமல்ல. அது மட்டுமன்றி இலங்கையில் போன்று பிரபல அரசியலில் (popular politics) அலப்பறை காட்டும் நாடுகளின் அரசாங்கங்கள் தமது அரசியல் தேவைகளுக்காக கனவுத்திட்டங்களை உருவாக்கி அவற்றுக்காக கடன் வாங்கி செலவழிக்க பற்றாக்குறைப்பாதீட்டை நடைமுறைப்படுத்துவதுண்டு.

பாதீட்டுத் தேவைகளுக்காக பெறப்படும் கடன்களில் ஒரு பகுதியை கபளீகரம் செய்து தமது சொந்தத்தேவைகளை நிறைவேற்றவும் வழிகள் இருப்பதனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு பற்றாக்குறை வரவு செலவுத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது.

பற்றறியில் மின்வலு இல்லையேல் மோட்டார் சைக்கிளை செல்ப் ஸ்டார்ட் செய்ய முடியாது.

அதன் கிக்கை உதைத்து ஸ்டார்ட் செய்வது போன்றதே பொருளாதார மந்தத்தின் போது பற்றாக்குறை வரவு - செலவு திட்டத்தைப் பயன்படுத்துவது. ஆனால் அதனையே தொடர்ந்தும் பயன்படுத்துவது ஏற்கெனவே ஸ்டார்ட்டில் உள்ள மோட்டார் சைக்கிளின் கிக்கை தொடர்தும் உதைத்துக் கொண்டிருப்பதைப் போன்றது.

இப்போது இலங்கை அரசாங்கம் செய்து கொண்டிருப்பது நின்று போன மோட்டார் சைக்கிளின் கிக்கை உதைத்து ஸ்டார்ட் செய்யாமல் அதைக் கழற்றிவிட்டு வேறெங்கோ உதைத்துக் கொண்டிருப்பதைப் போன்றது. மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுக்கு அதன் விளைவுகள் புரியும்.

# ரஷ்யப் படைகளின் பின்வாங்கலும் உக்ரைன் போர்க்கள மாற்றமும்!



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

சர்வதேச அரசியல் போக்கில் உக்ரையின் ரஷ்ய போர்க்களம் மீளவும் அதிர்ச்சியான செய்திகளை வெளிப்படுத்தியுள்ளது. பொருளாதாரத்திலும் வர்த்தகக் கட்டுமானத்திலும் உறுதியடையும் ரஷ்யா; போர்க்களத்தில் பின்வாங்கலை செய்துவருவதுடன் உக்ரைன் ரஷ்யா விட்டு வெளியேறிய நிலப்பகுதியை கைப்பற்றி வருகிறது. அதனை ரஷ்யாவுக்கான பாரிய பின்னடைவாக பிரச்சாரம் செய்யும் மேற்கு ஊடகங்களும் உக்ரைன் ஆட்சியாளர்களும் பாரிய போர் வெற்றியாக சித்தரித்து வருவதைக் காணமுடிகிறது. இரு தரப்பும் போர்க்களத்தில் நிகழ்பவைகளை முழுமையாக வெளிப்படுத்தாதவரையும் போர்க்களம் ஊடகங்களின் நலனுக்கு அமைவாக கையாளப்படும் போக்கு தவிர்க்க முடியாததாக அமையும். இக்கட்டுரையும் ரஷ்ய உக்ரைன் களநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைத் தேடுவதாக அமையவுள்ளது.

உக்ரைனின் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள கார்கிவ் மற்றும் டொனெட்ஸ்க் பகுதிகளில் இருந்து ரஷ்யா தனது படைகளை பின்வாங்குவதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சை ஆதாரம்காட்டி ராஸ் செய்திச் சேவை அறிவித்துள்ளது.

இதனை அடுத்து ரஷ்ய தேசியவாதிகள் அதிக அதிருப்தி அடைந்ததுடன் வெற்றியை உறுதி செய்யுமாறு ரஷ்ய இராணுவத்தை கோரியுள்ளனர். அதனை அடுத்து ரஷ்ய இராணுவம் கார்கிவ் மற்றும் டொனெட்ஸ் பிராந்தியங்களை நோக்கி பாரிய ஏவுகணைத் தாக்குதலை ஆரம்பித்தது. அத்தாக்குதலில் அதிக நெருக்கடியை எதிர் கொண்ட உக்ரைன் மீளவும் ரஷ்யப் படைகளை எதிர் கொள்ளத் தயாராவதை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ரஷ்யாவின் தேசியவாதிகள் மட்டுமன்றி போரின் பிரதான ரஷ்ய ஆதரவு போராளி அமைப்புக்களும் அதிருப்தியடைந்துள்ளதை அவர்களது அறிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன.

ரஷ்யா தொடர்ந்து அப்பிராந்தியங்கள் நோக்கி ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டுவருவதாகவும் பத்திரிகையாளர்களை அந்நகரத்துக்கு அனுமதிக்கவில்லை என்பதையும் உக்ரையின் இராணுவம் அறிவித்துள்ளது.

இதே நேரம் ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலில் பொது மக்களின் குடியிருப்புக்கள் மற்றும் அரசாங்கத்தின் உட்கட்டமைப்புக்கள் அழிக்கப்படுவதாக உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். குறிப்பாக மின்சாரகட்டமைப்பு முற்றாக ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலால் அழிந்துள்ளதாகவும், நீர் மற்றும் அத்தியாவசிய வசதிகள் தகர்க்கப்பட்டுள்ளதாகவும் உக்ரையின் குற்றச்சாட்டியுள்ளது. இதே நேரம் இலியம் நகரிக்கு விஜயம் மேற்கொண்ட உக்ரைன் ஜனாதிபதி படைகளை உற்சாகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அத்தோடு மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் ஆயுத தளபாடங்களை உக்ரைனுக்கு வழங்க வேண்டும் எனவும் அதன் மூலமே ரஷ்யாவுக்கு எதிரான வெற்றிகளை அடைய முடியுமென உக்ரைன் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் ஆயுதங்களே தமது வெற்றிக்கு அடிப்படைக் காரணம் எனவும் அதனை தொடர்ந்து மேற்குலக நாடுகள் வழங்க முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான சூழலில் ரஷ்யப் படைகள் வெளியேறிய பின்னர் உக்ரைன் இராணும் கைப்பற்றிய பிரதேசங்களில் பாரிய மனிதப் புதைகுழிகளை தாம் கண்டறிந்துள்ளதாக உக்ரைன் படைகள் தெரிவித்துள்ளன.

அத்தகைய படுகொலையை ரஷ்ய இராணுவம் மேற்கொண்டதாகவும் அழிவுகளுக்கு ரஷ்யப் படைகளே பொறுப்பு எனவும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஏறக்குறைய 400க்கும் மேற்பட்ட சடலங்கள் ஓரிடத்திலேயே புதைக்கப்பட்டுள்ளதாகவும் இது மனித உரிமையை மட்டுமன்றி மனித குலத்திற்கு எதிரான செயல் எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். இது உக்ரைன் மக்கள் மீதான படுகொலை எனவும் இத்தகைய படுகொலைகளை ரஷ்ய இராணுவம் பலதடவை நிகழ்த்தியுள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனவே ரஷ்யாவின் ஆறு மாதகாலப் போர் ரஷ்யாவுக்கு எதிராக திரும்பியுள்ளதாகவும் போரில் ரஷ்யப்படைகள் பின்வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேற்குலக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதனை ரஷ்யாவின் இராணுவத் தோல்வி என குறிப்பிட முயலும் மேற்குலக மற்றும் உக்ரைனிய ஊடகங்கள் உக்ரைனின் வெற்றியை முதன்மைப்படுத்தி வருகின்றன. அதனால் ஏற்பட்டுள்ள களநிலையையும் மாற்றத்தின் யதார்த்தத்தையும் தேடுவது அவசியமானது.




முதலாவது, ரஷ்யப் படைகளின் பின்வாங்கலானது உக்ரைன் இராணுவ வெற்றியை கோடிட்டுக் காட்டுவதாகவே உள்ளது. அதற்கான அடிப்படை மேற்குலக நாடுகளின் ஆயுததளபாடங்களும் உக்ரைன் படைகளின் தாக்குதல் உத்தியினாலும் ஏற்பட்டதாக கொள்ள வாய்ப்புகள் உண்டு. அதே நேரம் ரஷ்ய இராணுவத்திற்கு எதிரான உக்ரைனின் நெருக்கடியானது தனித்து உக்ரைன் இராணுவ உபாயங்களைக் கடந்து மேற்குலகத்தின் ஆயுத தளபாடங்களிலும் தங்கியுள்ளதாகவே தெரிகிறது.

மேற்குலக நாடுகளின் படைப்பலத்துடன் தந்திரங்களும் உத்திகளும் மேற்குலக இராணுவ ஆளணிகளாலும் வல்லுனர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடர்ச்சியாக மேற்குலக நாடுகளின் ஆயுத தளபாடங்களுடன் ஆலோசனைகளும் பயிற்சிகளும் உக்ரைன் படைகளுக்கு கிடைப்பதுடன் உளரீதியான வலுப்படுத்தல் உக்ரைன் இராணுவத்திற்கு மேற்குலக நாடுகளின் படைகளாலும் அரசியல் தலைவர்களாலும் வழங்கப்படுகிறது.

இவை அனைத்துமே உக்ரைன் இராணுவத்தின் நிலையான மீள்எழுச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

இரண்டாவது, ரஷ்யப் படைகளது பின்வாங்கலானது உக்ரைன் படைகளுக்கு வெற்றிகரமானதாக அமைந்துள்ளது. ரஷ்யா தனது படைகளையும் ஆயுததளபாடங்களையும் பாதுகாப்பதில் கவனம் கொண்டுள்ளது. இதனால் ரஷ்யா முழுமையாக தோற்றுள்ளதோ அல்லது ரஷ்ய இராணுவம் ஜப்பானிடம் 1905 இல் தோற்றது போன்றோ அளவிட முடியாது.

ரஷ்யாவைப் பொறுத்தவரை தற்காலிக பின்வாங்கலாகவோ அல்லது மீளமைக்கப்பட முயலுவதென்பதோ சாத்தியமாகாது எனக் குறிப்பிட முடியாது. அதற்கான வாய்ப்புக்களை கொண்டதாவே உக்ரையின் ரஷ்யப் போர்க்களம் தென்படுகிறது. போர் என்பது சுழற்சி முறைக்குட்பட்டதாகவே உள்ளது.

இதில் இடம்மாறி அமைவது ஒன்றும் புதியதல்ல. மாறாக யதார்த்தமானது. ரஷ்யா இப்பிராந்தியத்தை மீளக் கைப்பற்றுவதென்பது அவசியமானதாகவே தெரிகிறது. தவறும் பட்சத்தில் ரஷ்யாவின் அனைத்துப் பகுதிகளும் நேட்டோவின் கெடுபிடிக்குள் அகப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். அதனை ரஷ்யா ஏற்றுக் கொள்ளுமா என்பதே கேள்வியாகும்.

மூன்றாவது, மேற்குக்கு எதிரான நாடாக செயல்படும் ரஷ்யா உக்ரையின் போரில் தோற்குமாக அமைந்தால் அதற்கான வாய்ப்பு முழுமையாகவே காணாமல் போய்விடும். ஆனால் உக்ரைன் நிலம் போரின் மையமாகவே நெப்போலியன் காலப்பகுதியிலிருந்து விளங்குகிறது. போரின் தாய்நிலம் ரஷ்யாவாக அமைந்தாலும் அதனை தடுத்து கையாளும் நிலமாக உக்ரைனே காணப்பட்டுள்ளது. இதனால் உக்ரையின் ரஷ்ய போர் நீடிப்பதற்கான வாய்ப்பு மட்டுமன்றி வெற்றி எந்தத் தரப்பும் பெறமுடியாத களநிலையை கொண்டதாக அமைய வாய்ப்புள்ளது.

உக்ரைன் ரஷ்ய புவியியல் அமைவிடமானது அத்தகைய போர் வாய்ப்புக்களை கொண்டதாக அமைந்தாலும் வெற்றி பெறுவதற்கு எந்தத் தரப்புக்கும் வாய்ப்பானதாக தெரியவில்லை எனக்கூறலாம். ஆரம்பத்தில் ரஷ்யாவுக்கிருந்த வாய்ப்பான சூழல் தற்போது உக்ரைனுக்குரியதாகியுள்ளது.

காரணம் உக்ரைனின் இராணுவ பலமும் ஆயுததளபாட வலுவும் அதிகரித்துள்ளது. ரஷ்ய போர்த்தளபாடங்களது வலு பாரிய போர்களுக்கே வாய்ப்பானது.

மேற்குலகத்தின் ஆயுதங்களைப் பொறுத்தவரை உள்நாட்டு போர்களுக்கும் மென் போர்களுக்கும் அதிக திறன்வாய்ந்ததாக அமையக் கூடியது.

எனவே ரஷ்ய உக்ரைன் போர் புதிய திசையை நோக்கி நகர்வதாகவே தெரிகிறது. தற்போதைய உக்ரைனின் நகர்வு ரஷ்யாவின் தேசியவாதத்தை தூண்டுவதாக அமையுமாயின் அதன் விளைவுகள் அபாயகரமானதாக அமைய வாய்ப்புள்ளது.

ஆனால் மேற்குலக நாடுகள் இத்தகை வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றகரமான சூழலை ஏற்படுத்தும் தந்திரம் கொண்டவை. அதனால் ரஷ்ய தரப்பு அதிக எச்சரிக்கையுடன் நகர்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது. ரஷ்யாவின் இந்த பின்வாங்கல் முழுமையான தோல்வி என்றோ வெற்றி என்றோ அளவிட முடியாது.

மாறாக தோல்விக்கான ஆரம்பமாகவோ அல்லது வெற்றிக்கான வாய்ப்பான சூழலையோ இரு தரப்புக்கும் ஏற்படுத்தக் கூடியதாகும். உக்ரைனுடன் மேற்குலக நாடுகள் அணிவகுப்பது போல் ரஷ்யாவுடன் கிழக்கு நாடுகள் காணப்படுகின்றன.

தற்போது கூட சீன ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம் அத்தகைய அணிகளது நிலையையே உறுதி செய்கிறது. ஆனால் உக்ரைன் போர் முடிவில்லாத போர் என்பதை காட்டுவதாகவே உள்ளது. அதன் விளைவுகள் முழு உலகத்திற்கும் உரியதாக மாறவுள்ளது. இதில் அதிக விளைவுகள் ஐரோப்பாவுக்கே உரியதாகும்.




# படித்ததும் பகர்வதும் 111



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### இயற்கை அனர்த்தங்களின் போது...

இயற்கை அனர்த்தங்கள் தவிர்க்க முடியாதவை. காலநிலை மாற்றங்களுக்கேற்ப இவற்றின் தாக்கங்களும், அவற்றினால் ஏற்படும் பாதிப்புகளும் நிகழ்ந்தவண்ணமே உள்ளன. கடும் மழை, வெள்ளம், சூறாவளி, கடும் காற்று, மண்சரிவு போன்றவை பல்வேறு நிலைகளில் மக்களுக்கு பல்வேறு வகையான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக எடுப்பதன் மூலம் இவற்றின் தாக்கங்களிலிருந்து ஓரளவு பாதுகாப்பை பெற முடியுமாயினும், இவற்றின் பாதிப்புகளிலிருந்து முற்றாக பாதுகாப்பு பெறுவது முடியாத காரியமாக உள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது..



இவ்வாறான இயற்கை அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளாவோர்களுக்கு உடனடியாக முன்வந்து, உதவிகள் செய்வதும், ஆதரவுக் கரம் நீட்டுவதும், இத்தகைய அனர்த்தங்களினால் பாதிக்கப்படாதவர்கள் மீதுள்ள பாரிய பொறுப்பாகும். இயற்கை அனர்த்தங்களிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக தமது வாழிடங்களிலிருந்து வெளியேறும் மக்களுக்கு தற்காலிக தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல், தாம் வாழும் இடங்களிலிருந்து வெளியேறும் நபர்களுக்கும், பாதிப்புக்குள்ளானோருக்கும் சமைத்த உணவு, உலர் உணவு, உடுதுணிகள், பண உதவிகள் போன்றவற்றை தாராளமாக வழங்கி அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். மனிதாபிமான ரீதியில் இத்தகைய உதவிகளை செய்ய வேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள தார்மீக கடமையாகும்.

'அனர்த்தங்கள் ஏற்படும் போதெல்லாம் அதற்கான நிவாரனங்களை அரசாங்கமே வழங்க வேண்டும்' என்பதே பொதுவான நிலைப்பாடாக இருந்தபோதிலும், மற்றவர்கள் தமது பொறுப்புகளிலிருந்து ஒதுங்கி இருக்கக் கூடாது. இவ்விடயத்தில் அரசாங்கத்தின் மீதுள்ள பாரிய பொறுப்பு தனியாக இருப்பினும், அரசாங்க உதவிகள் வரும்வரையேனும் மேலே கூறிய அவசர உதவிகள் மற்றவர்களால் செய்யப்பட வேண்டும். சில சந்தர்பங்களில், பல காரணங்களால் அரசாங்க உதவிகள் முற்றுமாகவோ, பகுதியாகவோ கிடைக்காதவர்கள் பலர் இருக்கவே செய்வர். அத்தகையவர்களுக்கு உதவிகள் வழங்குவது அவசியமாகும்.

இன்றைய காலகட்டத்திலும் கடும் மழை, வெள்ளம், மண்சரிவு என்பன பரவலாக காணப்படுகின்றன. இத்தகைய இயற்கை அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளானோர் பல இடங்களிலும் இருக்கின்றனர். இத்தகையோருக்கு உயரிய அளவில் உதவிகள் செய்ய மனமார உறுதிகொண்டு செயல்படுவோம்.W


## நெஞ்சுக்கு நீதி

அல்லலப்படும் அனைவருக்கும் ஆறுதல் சொல்வோம்
அல்லும் பகலுமென்றின்றி நல்லுதவிகள் செய்வோம்
இன்னல்கள் களைந்திடவே இதயத்தால் இணைவோம்
இறையவனும் அருள்புரிவானே இத்தத்துவம் புரிவோம்

## பிரிந்தார் பெருமை

### சிரேஷ்ட சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா

கொழும்பு தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவர், சிரேஷ்ட சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா கடந்த 08 ஆம் திகதி (2022.09.08) தனது 71வது அகவையில் இவ்வுலகைப் பிரிந்தார். அரசியல்வாதியாக 'மலையக மக்கள் முன்னணி' யின் முன்னாள் உப தலைவராகவும் மத்திய மாகான சபையின் முன்னாள் உறுப்பினராகவும் இருந்து மக்கள் சேவை செய்தவர்.



தமிழ், ஆங்கிலம், சிங்களம் என மும்மொழியிலும் புலமை பெற்றிருந்த சட்டத்தரணி. 1977.03.10ல் சட்டத்தரணியாகி, இறுதிவரை சிறப்பாக பணியாற்றியுளார். பல இளம் சட்டத்தரணிகளையும் பயிற்றுவித்துள்ளார். தனது தனித்துவ ஆளுமையால் பல்வேறு பதவிகளை வகித்துள்ள போதிலும் 'தமிழ் சங்கத் தலைவர்' என்பதே இவருக்குத் தனித்துவச் சிறப்பாக உள்ளது என்றால் மிகையல்ல. 2004ல் கொழும்பு தமிழ் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இணைந்த இவர் 2018ல் சங்கத்தின் யாப்பில் திருத்தம் மேற்கொண்டு "பேரவை" ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலம் நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவு செய்யும் முறையை அறிமுகம் செய்தார். அத்தோடு, அதன் நிர்வாகக்குழு உறுப்பினர், துணை தலைவர், தலைவர் என்ற பதவிகளையும் அலங்கரித்துள்ளார்.

சிறந்த கவிஞராக, மேடைப் பேச்சாளராக, கவியரங்கத் தலைவராக, பட்டிமன்றத் தலைவராக, சட்ட ஆலோசகராக என பல துறைகளிலும் சிறந்து விளங்கி மக்கள் அபிமானத்தைப் பெற்றார்.

1950.10.22ம் திகதி பருத்தித்துறை புலோலியில் பிறந்த இவர், தமிழ் பேறறிஞர் கந்தமுருகேசனார் வழியில் தமிழ் புலமையை பெற்றார் சட்டத்தோடு மட்டும் நின்று விடாது. இலக்கியம், வரலாறு, மேடை பேச்சு போன்ற விடயங்களிலும் விசேட ஆளுமை மிக்கவராக திகழ்ந்ததோடு, திருக்குறளுக்கு தனித்துவமாக சிறப்பாக பொருள் கூறும் திறமை பெற்றவராகவும் திகழ்ந்தார். இவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவின் கணவர். சட்டத்தரணி எழில்மொழி ஆதிசின் தந்தை. இதனால் தனது குடும்பத்தவரோடு சட்டப்பணியையும், கூடவே தமிழ்ப்பணியையும் தொடர்ந்தார். பெரும்பாலும் எல்லா இலக்கியக் கூட்டங்களிலும் இவரை மனைவி சுகந்தி இராஜகுலேந்திராவுடனேயே காண முடிந்தது.

அவரது பிரிவு, தமிழுக்கும், தமிழ்ச் சங்கத்திற்கும், தமிழ் உலகிற்கும் பேரிழப்பாகும். இவரின் இழப்பு தமிழ் சமூகத்தில் நிரப்பப்பட முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

## வீரம் தரும் விளையாட்டு

### இரட்டை சாம்பியன் கிண்ணங்கள்

மிக நீண்ட இடைவெளிக்கு பிறகு, விளையாட்டுத் துறையில் சர்வதேச மட்டத்திலான இரண்டு சாம்பியன்சிப் கிண்ணங்களை இலங்கை வென்றுள்ளது. 2022 வலைப்பந்தாட்ட ஆசிய கிண்ணம், 2022 ரி20 (T20) ஆசிய கிண்ணம், இரண்டும் ஒரே தினத்தில் பகலிலும், இரவிலும் வெற்றி கொள்ளப்பட்டமை ஓர் அபூர்வ நிகழ்வாகும்.




அத்தோடு, இவ் இரு அணிகளும் ஒன்றுபோல் ஆறாவது முறையாக இவ் ஆசிய சாம்பியன்ஷிப் கிண்ணங்களை சுவீகரித்து இருப்பதும் விசேட அம்சமாகும். இதே தினத்தில் இலங்கையின் கிரிக்கட் ஜாம்பவான்களின் (Legends) அணி ஆஸ்திரேலிய கிரிக்கட் ஜாம்பவான்களின் அணியை வெற்றி கொண்ட நிகழ்வும் நிகழ்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இளம் வீரர்களை கொண்ட இலங்கை கிரிக்கட் அணி இவ் ஆசிய கிண்ண தொடரின் முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியுடன் எதிர்பாராத வகையில் தோல்வியுற்றமையால் இலங்கை இரசிகர்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்திருந்தனர்., எதிர்ப்பார்ப்புக்கள் எதுவுமே இல்லாத இந்த நிலையில், அடுத்து வந்த இந்தியா, பாகிஸ்தான் உட்பட அனைத்து போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி கொண்டது. இறுதிப் போட்டியில், பாகிஸ்தான் அணியை 23 ஓட்டங்களால் வெற்றியீட்டி, இவ்வருட ஆசிய கிண்ணத்தை சுவீகரித்து இருப்பது நம் நாட்டுக்கே தனிப் பெருமையாகும்.




2014ம் ஆண்டுக்கு பிறகு இலங்கை கிரிக்கட் அணி பெற்றுக்கொண்ட இச் சாம்பியன்ஷிப் கிண்ணம், விரைவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கட் தொடரில் இலங்கை ரசிகர்களின் எதிர்பார்ப்பை பல மடங்கு அதிகரித்துள்ளது எனலாம்.

இலங்கை பெண்கள் வலைப்பந்தாட்ட அணியும் இறுதிப் போட்டியில் சிங்கப்பூர் அணியை 63க்கு 53 என்ற அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியனாகி இருப்பதோடு, அடுத்த உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் பங்குபற்றும் வாய்ப்பையும் பெற்றிருப்பது விசேட அம்சமாகும்.

பல்வேறு சோதனைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில் வாழும் இலங்கை மக்களுக்கு, இவ்வெற்றிகள் மூலம் ஆறுதல் அளித்துள்ள இலங்கை கிரிக்கட் அணியையும், பெண்கள் வலைப்பந்தாட்ட அணியையும் வெகுவாக பாராட்டுவதோடு வாழ்த்தி மகிழ்கிறோம்.

## கவிக் 'கடி'கள்


எரிக்கும் முன்பே
சாம்பல் நிறத்தில்
போலிஸ்
கொரனா நோயாளி!
★★★
திரும்பிவரும்
காசோலையில்
வைப்பிலிடப்பட்டது
தவணைமுறை
திகதிகள்.
★★★
பாடசாலைக்கு
செல்லாத நாட்களில்
இருமுறை இறந்து போனார்
தாத்தா.
வகுப்பாசிரியிடம்

- ஈழுகணேஷ்

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### கிரகம் பெல்லின் "ஹலோ" (Hello)

உலகிலுள்ள அனைவரும், அவர்கள் எந்த மொழியை பேசுபவர்களாயினும் சரியே தொலைபேசி அழைப்பொன்றுக்கு பதில் சொல்ல முதலில் பயன்படுத்தும் சொல் "ஹலோ" (Hello). இந்த சொல்லை பயன்படுத்தாத எந்தவொரு தொலைபேசி பயனாளரும் இருக்க முடியாது.



"ஹலோ" என்பதன் கருத்து என்ன? எனப் பார்த்தால் அதற்கான சரியான பதில் ஏதும் இருக்க முடியாது.

ஏனென்றால் "ஹலோ" என்பது ஒரு பெண்ணின் பெயரின் ஒரு பகுதியாகும். "மார்க்ரெட் ஹலோ" (Margaret Hello) என்ற அந்தப் பெண் வேறு யாருமல்ல தொலைபேசியை கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகம் பெல்லின் காதலி (Girl Friend) ஆவார்.

கிரகம் பெல் தொலைபேசியை கண்டுபிடித்த பின் முதன்முதலாக தனது காதலி மார்க்ரெட் ஹலோவை தொலைபேசியில் அழைக்கிறார். மறு முனையில் அவள் தொலைபேசியை எடுத்தபோது, கிரகம் பெல் அவளது பெயரை "ஹலோ" என்று கூறி அழைத்துள்ளார்.

அதுதான் தொலைபேசியில் பேசப்பட்டுள்ள முதல் வசனம். அவரது முதல் அழைப்பான "ஹலோ" என்ற வசனமே, தொலைபேசியை பயபடுத்துவோர் உபயோகிக்கும் முதல் வசனமாக மாறியுள்ளது.

இதுவே, தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் அனைவரும் 'ஹலோ' என்ற சொல்லை முதல் வசனமாக உபயோகிக்கும் வழமையை உருவாக்கியுள்ளது எனலாம்.

தொலைபேசியை பயன்படுத்தும் எவரும் அதனை கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகம் பெல்லின் பெயரை மறந்து விடலாம் ஆனால் அவரின் காதலியின் பெயரான "ஹெலோ" என்ற பெயரை மறக்காதுள்ளார்கள் என்பதே நிதர்சனம்.

## காண வேண்டிய காட்சியொன்று



இது இரஷ்ய புகைப்படப்பிடிப்பாளர் அன்றே பௌலவ் (Andrey Pavlov) எடுத்துள்ள ஓர் எறும்பு 'பாரம் தூக்கும்!' அபூர்வ புகைப்படம்

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

# வர்த்தக மஞ்சரி

## எசட்லைன் பினான்ஸ் லிமிடெட்டாக மாற்றம் பெற்றுள்ள எசட்லைன் லீசிங்

### இலங்கை மத்திய வங்கியினால் பினான்ஸ் நிறுவனமாக அனுமதி பெற்றுள்ளது




இலங்கையின் மிகப்பெரிய விசேட லீசிங் கம்பனியான எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் நிறுவனம் இலங்கை மத்தி வங்கியின், வங்கி அற்ற நிதி நிறுவனத்துறையை ஒன்றிணைக்கும் திட்டத்தின் கீழ் நிதி கம்பனிக்கான அனுமதிப்பத்திரத்தை அண்மையில் பெற்றுக் கொண்டது. இதற்கமைய இந்நிறுவனம் "எசட்லைன் பினான்ஸ் லிமிடெட்" (எசட்லைன்) என அறியப்படும். கிராமிய மற்றும் குறைந்த வருமானத்தைக் கொண்டவர்கள் முச்சக்கரவண்டிகள், இரு சக்கரவண்டிகள் மற்றும் சிறிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான லீசிங் வசதியை வழங்குவதற்காகவே இந்நிறுவனம் ஆரம்பத்தில் நிறுவப்பட்டது. எனினும்,; இந்நிறுவனத்தின் செயற்படும் எல்லையை விஸ்தரித்து சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உள்ளிட்ட வாடிக்கையாளர்கள் வரை தனது தயாரிப்புக்களை விரிவுபடுத்தியுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள 55 கிளைகள் மற்றும் 24%7 செயலிலுள்ள ஈஸி பே வலையமைப்பின் ஊடாக கவனிக்கப்படாத தரப்பினருக்குத் தேவையான நிதியளித்தல் மற்றும் அணுகலை வழங்குவது என்ற நோக்கத்தை நிறுவனம் உண்மையுடன் நிறைவேற்றி வருகிறது.

முதலிலும் கடைசியிலும் உள்ள போக்குவரத்தை எளிதாக்குவதில் எப்பொழுதும்முன்னணியில்இருந்துவரும் எசட்லைன், மேலும் தனது வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த நிர்வாகம், நெறிமுறைகள் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் குறைபாடற்ற சாதனையைப் பெற்றுள்ளது. விஸ்தரிக்கப்பட்ட தனது வலையமைப்பின் ஊடாக உருவாக்கப்பட்ட பொருளாதார கேந்திரநிலையங்களுக்கும் அப்பால் சேவையை விஸ்தரித்திருப்பதில் எசட்லைன் முன்நிலை வகிக்கிறது. சாதாரண மக்களின் வாகனங்களுக்கு நிதியளிப்பது, வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு லீசிங் வழங்கி தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சிறிய தொழில்நிறுவனங்களை ஊக்கப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுவது நிறுவனத்தின் வெற்றியின் அடையாளமாக மாத்திரமன்றி, கிராமப்புற வளர்ச்சிக்கான முக்கிய ஊக்கியாகவும் காணப்படுகிறது.

## நவீன வசதிகள் படைத்த Anthoney's Meatlery விற்பனை தொடரை அறிமுகம் செய்துள்ள நியு அந்தனீஸ் பாம்ஸ்



இலங்கையின் முன்னணி கோழி இறைச்சி உற்பத்தியாளர்களில் ஒன்றாக நியு அந்தனீஸ் பாம்ஸ் (பிரைவட்) லிமிடெட், Anthoney's Meatlery எனும் தனது விற்பனையகத் தொடரை அறிமுகம் செய்துள்ளது. தனது ஒட்டுமொத்த விரிவாக்க தந்திரோபாயத்துக்கமைய, முதலாவது விற்பனையகத்தை, பத்தரமுல்ல, கொஸ்வத்த பகுதியில் திறந்துள்ளது.

அதிகளவு இடவசதிகளைக் கொண்ட நவீன இறைச்சி சுப்பர் மார்க்கெட் தொடரை அடிப்படையாகக் கொண்டதாக Anthoney's Meatlery அமைந்துள்ளது. உற்பத்தி செய்யப்பட்டதிலிருந்து 24 மணி நேரத்தினுள், இந்த விற்பனையகத்திலிருந்து சிறந்த இறைச்சித் தயாரிப்புகளை வாடிக்கையாளர்களால் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். இதனூடாக பசுமை, பாதுகாப்பு மற்றும் தரம் ஆகியவற்றை வழங்கும் வர்த்தக நாமத்தின் உறுதிமொழி பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

நியு அந்தனீஸ் பாம்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், "எமது சகல தயாரிப்புகளையும் கொண்ட, எமது முதலாவது விற்பனையகத்தை நிறுவுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இதனூடாக எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். உள்நாட்டு சந்தையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்திருப்பதுடன், விரைவில் நாட்டின் ஏனைய பாகங்களிலும் விற்பனையகங்களை திறப்பதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம்." என்றார்.

Haritha Hari, Crizzpys, Chico, Precut, Pet food போன்றவற்றுடன் அண்மையில் சேர்க்கப்பட்ட 6துண்டுகள் கொண்ட HIT பொதி போன்றவற்றுடன், சொசேஜ் வகைகள், பிரெட்டட் தெரிவுகள், குளிர்ச்சியான துண்டுகள், முட்டைகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் சிக்னேச்சர் சோஸ் வகைகள் போன்ற நியு அந்தனீஸ் பாம்ஸ் வழங்கும் சகல தெரிவுகளையும் இந்த விற்பனையகம் கொண்டிருக்கும்.

## இலங்கைக்கு பெருமை சேர்த்த சன் மேட்ச் நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய சூரி ராஜன்



பொருளாதாரம் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாக இலங்கை உலகளவில் சவாலுக்குள்ளானது, இருந்தபோதும் அதன் உண்மையான பிரஜைகளில் ஒருவரான தேசமான்ய சூரி ராஜனுக்;கு ரோட்டரி 'மேலான சேவை' விருது வழங்கப்பட்டது, இது தேர்ந்தெடுக்கப்பட்ட 150 சிறந்த நபர்களுக்கு வழங்கப்படும் விருதாகும்.; 'மனிதகுலத்திற்கு சேவை செய்வதற்கு' தம்மை அர்ப்பணித்த 1.3 மில்லியன் ரோட்டேரியன்களில் இருந்து இவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்;. அவர்கள் ஏனையோர் பின்பற்றுவதற்கான முன்மாதிரியாக உள்ளனர்.

மலைநாட்டின் தலைநகரான கண்டியைச் சேர்ந்த சூரி ராஜன் கண்டி ரோட்டரி கிளப்பின் மரியாதைக்குரிய தொண்டர் ஆவார், அவர் 20.09.2010 இல் இலங்கையின் ரோட்டரி ஆளுநராகப் பதவியேற்றார். பல ஆண்டுகளாக அவர் ரோட்டரி கழகத்தின்; முக்கிய மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்க்க பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார். போலியோ, மலேரியா அல்லது கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஒழிப்பதாகட்டும், சமூகங்களுக்கு சுத்தமான தண்ணீரை வழங்குவதாகட்டும், ஏழைகளுக்குக் கல்வி கற்பித்தலாகட்டும் அவரது சேவைகள் அளப்பரியவை..

இப்போது ரோட்டரிக்கு நிதி ரீதியாக வழங்கிய பங்களிப்புக்காக ஆர்ச் க்லம்ப் சொசைட்டி எனப்படும் பிரத்தியேக ரோட்டேரியன் சமூகத்தைச் சேர்ந்தவர். ரோட்டரி இன்டர்நேஷனலின் உலகளாவிய விருதை வென்ற 'கொவிட்19 வைரஸின் பரவலைத் தடுப்பதற்கான' ரோட்டரியின் மத்திய குழுவில் தேசமான்ய சூரி இருந்தார்.

சன் மேட்ச் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் தலைவர், இலங்கையில் பாதுகாப்பான சூரியா தீப்பெட்டி வர்த்தக நாமத்தை உற்பத்தி செய்கிறார். சூரியா இன்று கண்டியை தளமாகக் கொண்டு ஏற்றுமதி, கல்வி, தொழில் துறை இரசாயனங்கள் இறக்குமதி எனபனவற்றை உள்ளடக்கிய பலதரப்பட்ட வர்த்தக முயற்சிகளில் ஈடுபடும் கூட்டு நிறுவனமாகும். தற்போது ஆன்லைன் வர்த்தக நிறுவனமாகவும் மாறியுள்ளது. தனது சாதனை குறித்து பேசிய சூரி ராஜன், இந்த வாழ்க்கையை ஒருமுறை தான் வாழ்கின்றோம்..

## SLT-MOBITEL இன் 4G Router வீட்டு விநியோக சேவை அறிமுகம்



சிறந்த சௌகரியம் மற்றும் உயர் பாவனையாளர் அனுபவம் ஆகியவற்றுக்கான தனது அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை வழங்குநரான SLTMOBITEL, தனது 4G Router வீட்டு விநியோக சேவையை அறிமுகம் செய்துள்ளது. 4G router களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் இருப்பிடப் பகுதிகளுக்கு இலவசமாக விநியோகிக்கும் வசதியை ஏற்படுத்தியுள்ளது. இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு விற்பனையகமொன்றுக்கு நேரடியாக விஜயம் செய்யாமல், தமது வீடுகளில் சௌகரியமாக இருந்த வண்ணம் வாடிக்கையாளர்களுக்கு சாதனங்களை கொள்வனவு செய்யும் வசதியை SLTMOBITEL அறிமுகம் செய்துள்ளது. SLT MOBITEL இன் பரந்த வாடிக்கையாளர் மையப்படுத்திய சேவை மேம்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு உரிய காலப்பகுதியில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது போன்ற பரந்த கொள்கையின் அங்கமாகவும், தேசிய ரீதியில் நிலவும் தினசரி பயணங்களை முன்னெடுப்பதில் காணப்படும் சவால்கள் நிறைந்த சூழ்நிலையை சீராக்கிக் கொள்வதற்கும் இந்த 4G Router வீட்டு விநியோக சேவை அமைந்துள்ளது. SLT MOBITEL 4G router விநியோக சேவையினூடாக, mAgent மூலம் தமது இருப்பிடத்தில் இந்த தயாரிப்பைப் பெற்றுக் கொள்வது உறுதி செய்யப்படுகின்றது. வாடிக்கையாளர்கள் 1717 உடன் தொடர்பு கொண்டு அல்லது www.sltmobitel.lk எனும் இணையத்தளத்தில் பிரவேசித்த தமது விவரங்களை பதிந்து ஓடரை மேற்கொள்ளலாம்.

SLT MOBITEL இனால் Home 4G Router உடன் இணைப்பு வாடிக்கையாளர் இருப்பிடத்துக்கு வழங்கப்படும். விநியோகக் கட்டணம் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.






# இலங்கை சூடிய மகுடம்

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்

கூடைப்பந்திலும் கிரிக்கெட்டிலும்
சாதனை புரிந்தீர்கள்
விடா முயற்சியால்
விண்ணைத் தொட்டீர்கள்
வாடாத மலர்களாய்
மணம் பரப்பினீர்கள்
விடியலைத் தந்தே
இருளைப் போக்கினீர்கள்

எதிரணி கலங்க
ஓட்டமும் குவித்தீர்கள்
ஓரணியாய் நின்றே
வெற்றியைத் தந்தீர்கள்
தரணியும் போற்றிட
நான்குமாறும் அடித்தீர்கள்
தோற்காத அணியென
மகுடம் சூடினீர்கள்

வெடித்திடும் மத்தாப்பில்
ஒளியாய் வந்தீர்கள்
படித்திடும் மாணவர்களுக்கும்
உதாரணமாய் ஆனீர்கள்
வடித்திடும் கண்ணீரை
வெற்றியால் துடைத்தீர்கள்
முடித்திட்ட விளையாட்டில்
சிகரம் தொட்டீர்கள்

இலங்கையைத் திரும்பியே
பார்க்க வைத்தீர்கள்
கலங்கரை விளக்காய்(ப்)
பிரகாசித்து நின்றீர்கள்
துலங்கிடும் நாட்டிற்கு
விதையாகி விருட்சமானீர்கள்
முழங்கிடும் வாழ்த்தில்
திளைத்தே புனிதமானீர்கள்..!

# நல்லோர் வழி செல்வோம்

வரக்கமுறையூர் ராசிக்

இத்தரை யாண்ட சான்றோர்
இனியவை பல ஈந்தார்
இதயத்தா லதை ஏற்போம்
இளையவர் யுகம் காப்போம்
முத்திலும் சிறந்த முன்னோர்
முறைகள் பல சொன்னார்
வித்தா யிதை விதைப்போம்
வெற்றி பயிர் வளர்ப்போம்
முந்தி வாழ்ந்த ஆன்றோர்
மூர்க்கம் தவிர்க்கச் சொன்னார்
சிந்தையி லதைக் கொள்வோம்
சிரிப்பால் உலகை வெல்வோம்
முறையாய் இருந்த மூத்தோர்
மோகம் பல தீர்த்தார்

பிறையா யிதை பார்ப்போம்
பிஞ்சு மனம் சேர்ப்போம்
ஆதியில் பிறந்த மனிதர்
அழிக்கச் சொன்னார் சாதியை
கெதியி லதை செய்வோம்
கெட்டவர் தலை கொய்வோம்
விதியை வென்ற வேந்தர்
விலக்கச் சொன்னார் சதியை
மதியா லதை போற்றுவோம்
மானிடர் மனதை மாற்றுவோம்
அகிலம் செய்த அறிஞர்
அறியச் செய்தார் அறிவை
முகிலா யதில் இணைவோம்
முழு அறிவில் மனம் நனைவோம்



# வானிலை மாறுதே

ரதிதேவி,
மானிப்பாய்

துளித் துளியாய் உதிர்ந்து விழும் வானம்
பழிதீர்க்கத் துடிக்கிறதோ பூமி
தாய்மொழிகளின் இசை ஓசை போலே
பாய்ந்து வரும் மழை ஓசை கேளாய்
புதைந்து போன இன்பமெல்லாம்
மூச்சு விடுகின்றன
புயல் காற்றில்கூட
பூக்கள் விரிகின்றன,
விரிந்து வண்டுகளுக்குக்
குடை பிடிக்கின்றன

தூரமான நிலவு கூட
குட்டையிலே குதித்து
விளையாடுகின்றது
திறன் பேசி வாயிலிலே
மழலை முகம்
தொலைதேசம் வாழும்
துப்பரவுத்தொழிலாளி இவன்
உருகுநிலை தாண்டி
நீர்த்துளிகள் உறைந்துவிட்ட மண் அங்கு



# கிடைக்காத அந்தவரி

பௌஸான்
பொத்துவில்

அழகா யெனை
ஈன்றெடுக்க,
இடுப்பு வலி பொறுத்தாயே
பிறந்தது, அழகென்று
இடுப்பு வலி மறந்தாயே
உன் போல் உறவு வருமா

ஆயிரம் உறவுகள்
அருகிலிருந்தும், அன்னை யுன்
உறவு அதிசயம்

புத்தாடை வாங்கி
புதல்வன் நானணிந்து
ஒன் முன்னே வந்தா,
என் புள்ள
கண் பட்டிடும் என்று,
கறுப்பான முகத்தில்
கறுப்பால பொட்டு வச்சாய்

எனை நினைத்து
இறைவனிடம்
உருகி உருகி
உள்ளம் நிறைந்து, கையேந்துவாய்
உன் போலாகுமா

பொறன்டு படுத்தா
புள்ளக்கி நோகுமென்டு
பொசுக்கென்டு
மெல்லாக்க படுப்ப
உன்புள்ள நான்
வயிற்றிலுதைக்க
மேனி படும் வலி மறப்பாய்

அழகழகாய் கவியெழுத
அடித்தளமிட்ட, அம்மா
என்ற மூன்றெழுத்து,
அன்னை உன் அன்பிற்கு நிகரேது!

பக்கத்தில் அமுதிருந்தும்
பத்தினி யவள்
உண்ணாமல்
பத்து மாதம் சுமந்தவன்
வரும்வரை
காத்திருப்பாள்
பக்கத்தில் அவளிருந்து
பார்த்தே பசி மறப்பாள்

பெத்தவளே ஒன்
பெருமை
ஒத்த வரியில் அடங்குமாயென
தேடித்தேடி களைத்துவிட்டேன்
அந்த வரிதான் கிடைக்குதில்லையே...

# ஊருக்குள்ளே உறவுப் பாலம்!



இல்மி அஹமட் லெப்பை

காசான் விறகேற்றி
காளைகளின்
கழுத்து சலங்கை கலகலக்க
மூக்கணம் கயிறிழுத்து
வாலையும்
முறுக்கி மாமா
மூன்று கியரையும்
முற்றாக போடுவாரு
இணையன் மாடுகள்
இயந்திரப்படகையும் மிஞ்சும்
பாதையோரம் சிறுசுகளும் பயத்தால்
அஞ்சும்!

சேனைக்காரன் கொடுத்த
'செல்வன்' மீன் வேக்கும்
தூக்கணம் குருவிக் கூடு போல
வண்டிலோரம் தொங்கும்
ஆத்துக்காறிக்கு அது
தேன்மாரி பொழியும்!
படுவான் கரை
கொத்துக்குள் கனிந்த
கொய்யாவும்
தேன்மாவும்
வாழைக் குலைகளுமேற்றி
வண்டில் வரும்
ஓசையிலே
சந்தையெல்லாம்
சனம் சரியும்

அவர்தந்த
அக்கரையூர்
எருமைத்தயிரோ
அருமையிலும் அருமை அது
அயலருக்கு கொடுத்து மகிழ்வதும்
பெருமை!
ஆயிசில இன்னும் காணலியே?

அறிவகமே காணத விழிகள்
அறிஞர்களாய் காண்கிறது!
அவர் வாரிசுகளை
சோர்விலா உழைப்பின்
உச்சங்கள்
சுத்தமான சம்பாத்தியத்தின் எச்சங்கள்!

மறக்கமுடியலயே
மாமாவின் மாட்டிவண்டி சவாரியினை!

# முகவரியான முதல் எழுத்துகள்

விவேகவெளி தமிழேந்திரன்
(வெல்லபதியான்)
பாண்டிருப்பு.

முதியோர்கள் மேதினியின்
மேலான முத்துக்கள்!
முன்னேற்றத்துக்கு
மூத்தோரே மகத்தான வித்துக்கள்!
அதிசயமான நடமாடும்
அனுபவப் பாடங்கள்!
அவர்களே நமக்கான
அதியுன்னத ஓடங்கள்!
***
ஊருக்கூர் பெருகுதே
முதியோர் இல்லங்கள்!
உலகெங்கும் பற்றுதே
உயர்பெரும் செல்வங்கள்!
பேருக்குப் போலியாய்
புகழ்ந்தென்ன லாபம்?
பாதையில் விடுவது
படுமோச சாபம்!
***
தூரமாய்த் துரத்தாதே
துரோகங்கள் பண்ணாதே!
"தலையாய எழுத்துகள்"
தினமுமே போற்று!
பாரமாய்க் கருதாமல்
"பாடத்தை" நடத்து!
பாட்டனும் பாட்டியும்
படித்துப்பார் புரியும்!
***
முதல் எழுத்துகள்
முப்பது என்போம்!
மொழி தமிழுக்கு
மேலான அழகிவையே!
இதனைப் போலவே
பெரியோரை மதிப்பாய்!
என்றுமே இவர்களை
மறக்காமல் துதிப்பாய்!!

# உழைப்பு

அருளானந்தம் ஞா. பிரகாஷ், கந்தப்பளை



மரத்தின் வளர்ச்சிக்கு
அதில் இருக்கும்
வேர்கள் நீரை
தேடுவது போல்....

மனிதன் வாழ்வின்
வளர்ச்சிக்கு
கடின உழைப்பு
அவசியம் .....

சில மனிதர்
வாழ்க்கையில்
முன்னேற?
வேண்டும் என்பது
கனவு காண்பது
போல
சந்தர்ப்பத்திற்காக
காத்திருக்காமல்.....

வாழ்க்கை பயணத்தில்
சிகரத்தை அடைய
முதல் மூலதனம்
உழைப்பு அவசியம்....

கடின உழைப்பு
இல்லாமல்
எந்த ஒரு கனவும்
ஒரு போதும்
நனவாகுவதில்லை...

கடின உழைப்பு
வாழ்க்கையில்
உயர்வதற்கு மிக
சிறந்த வழி.....

# மரணக் கருவறை....!

சி.எம். சங்கர்,
பண்டாரவளை

எழுதும் தாள்களில் தவறாய்
எழுதப்பட்டவைகளை
திருத்திட அழிக்கின்ற போது
சமயத்தில் சிதைகின்ற எழுதப்பட்ட
தாள்களும் போல் உன்
நினைவுகளை அழிக்கின்ற
என் முயற்சியில் நானும் நிதம்
சிதைந்து கொண்டே இருக்கிறேன்...

என்ன செய்ய
வேதனை தரும் விடயங்களை
மனதுக்குள் எடுத்துக் கொள்ளக் கூடாது
என்பதும் அவைகளை
எடுத்துக்கொண்டபின் தான்
புரிகிறது...

திறந்த வெளியில் நிற்கையில்
திடீரென வரும் மழையால்
நனைவது தவிர்க்க முடியாதது போல்
உன் திடீர் பிரிவால்
உன்னை ஞாபகம் வருவதும்...
உனக்காக வருத்தப்படுவதும்...
சமயத்தில் கண்ணீர் சிந்துவதும்...
அந்த மழையில்
நனைதலுக்கு சமமானதுதான்...

தள்ளிவைக்க முடியாத
உன் நினைவுகளுடன்
தனித்துப் போய்விட்டேன்
தாயின் கருவறையில் போல்
ஆனாலும்
இது இன்னுமோர் ஜனனத்துக்கானதல்ல
என் மரணத்துக்கானது...!

# தங்கமழை

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

மேகம் மொண்டது கடலின் ஈரம்
மேனி நிறைந்திடக் கருமை ஆகும்
வானிலே மெதுவாய் ஊர்ந்திட அழகே
வந்திடும் குளிர்ச்சி தென்றலின் தழுவலில்
மந்தாரம் மேதினியில் வந்தாடும்
தந்தனத் தாளமும் மின்னலோடு சேர்ந்திட
தாகம் தணித்திடத் தருக்களும் மகிழ்ந்திட
தரணியைத் தொட்டதே தங்க மழை

## கவிஞர்கள் கவனத்துக்கு...

கவிதை மஞ்சரிக்கு கவிதைகள் அனுப்பும் வாசகர்கள் தயவு செய்து 15 - 18 வரிகளுக்கு மேற்படாமல் தமது கவிதைகளை எழுதி அனுப்ப வேண்டும். பொருட்சுவை, சொற் சிக்கனம், கருப்பொருளை நெற்றியடியாக சொல்லுதல், ஆற்றோட்டமான நடை என்பன கவிதைக்கான அடிப்படை இலக்கணம், ஒரு விஷயத்தை சுருக்கமாக, நறுக்கென சொல்வதே கவிதை.

வளவளவென நீண்டு செல்லும், பொருளற்ற கவிதைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா. ஒரு கவிதையின் பொருள் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்கக் கூடாது. இளங்கவிஞர்கள் புதிய உத்திகளை பயன்படுத்த முன்வர வேண்டும். ஏனெனில் கவி பழகும் இளங் கவிஞர்களுக்கான நடை முற்றமே கவிதை மஞ்சரி.

- ஆசிரியர்

# நேற்றைய நண்பனுக்காக...!

இரா.ஜெயக்குமார்

உள்ளத்தே உறந்திருக்கும்
பள்ளிப் பருவத்தின்
நேற்றைய நண்பனே!
கடல்கடந்து வந்தாயென்று
இணைய வழி அறிந்து
இணைய வழி பார்த்திருந்தேன்!
மதுவருந்தி மகிழவல்ல...!
மாமிச விருந்துக்கல்ல...!
மதிய இடை வேளை
மாமரத்தின் நிழலினிலே...
படக்கதைகள்...பாடல்களால்
மணிக்கணக்கில் மகிழ்ந்திருந்த
நினைவுகளைப் பருகவென....!
தொலைபேசி வழியாக

தொடர்பு கொண்ட வேளை
சந்தித்தே போவதாய்
சத்தியப் பிரமாணம் செய்தாய்!
பல தடவை போனெடுத்தும்
பதில்தர இரங்கவில்லை!
இன்றுதான் அறிந்தேன்...
இங்கிருந்து சென்றாயாம்...!
நலமாய் நீ போய்ச்சேர
வல்லவனை வணங்குகிறேன்!
ஆண்டவன் சோதனையோ?
ஆர் தந்த போதனையோ?
எதையும் எதிர்பார்க்கேன்!
எதிர்காலம் பதில் சொல்லும்!

# அடுத்த போட்டிக்கு தயாராகு

எம் ராமதாஸ்
இறம்பொடை

நீங்கள் சறுக்கியது என்னவோ
வெறும் பரீட்சையில்
மட்டும் தான்
வாழ்க்கையில் அல்ல...

பல்கலைக்கழகத்தையும்
கலாசாலை கல்வியையும்
தவிர்த்தொரு மாற்றுப்பாதை..
புதுவழியில் உனக்காக
காத்தேதான் கிடக்கிறது....

உன்னை உன்னிலே தேடிகொள்ள
இறைவன் தந்த பொற்காலமிது ..
உன்னோடு உண்மையிலே
உற்றவராய் இருந்து விட்ட உறவுகளை
அறிந்து கொள்ள காலம் தந்த பரிசு இது...

உன்னை நீ தேடு
எதிர்த்து நில்
எதிர் கேள்வி கேள்

மூடிக்கிடக்கும் தெரியாத
கதவொன்றை
தைரியமாய் நீ தட்டு
திறக்காவிட்டால் உடைத்துச்செல்
அது உனக்கானது

அடுத்த சில நொடியில் எல்லாம்
அற்பமாய் மாறிப்போகும்
ஏனெனில் மாயவனின் உலகமிது

அடுத்த போட்டிக்கு
உன்னை கொண்டுச்செல்ல
காலம் தயாராகிறது...
தாமதமின்றி நீ தயாராக இரு....



## நோயாளிகளை இலக்கு ... 9 ஆம் பக்கத்தொடர்

இணையத்தினூடாக பணப்பரிமாற்றங்கள் செய்யும்போது வங்கிக் கணக்கிற்குச் சொந்தமானவரின் தொலைபேசி இலக்கத்துக்கு OTP இலக்கமொன்று அனுப்பப்படும். அதனை கொடுத்து உறுதி செய்யும்போது பணப்பறிமாற்றம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும். எனவே இலகுவில் ஏமாற்றம் செய்யக்கூடிய பலவீனமான பாதுகாப்பற்ற செயலிகள் தொடர்பில் நிதி நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பில் வங்கியொன்றுக்கெதிராக பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது. நிதி நிறுவனங்களும் வங்கிகளும் இவ்வாறாக தனது வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கெதிராக நடவடிக்கை ஏன் எடுப்பதில்லை என பலர் தங்கள் ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர். பல மாதங்களுக்கு முன்னர் மற்றுமொரு தனியார் வங்கியிலிருந்து சமூக சேவையாளரான வியாங்கொடையைச் சேர்ந்த மௌலவி ஒருவர் வங்கியிலுள்ள தனது பணம் திருடப்பட்டுள்ளதாக தன்னுடைய முகநூல் லைவ் பதிவொன்றில் குறிப்பிட்டிருந்தார். ச மூக சேவைக்காக இவருக்கு வந்த பணமே வங்கியிலிருந்து காணாமல் போயிருக்கிறது. ஒன்பது இலட்சம் ரூபா பணம் இணைய பணப்பரிவர்த்தனையூடாக திருடப்பட்டிருக்கிறது.

ஒரு தடவை இவருடன் மேற்படி சந்தேக நபர் பேசியதாகவும் பணம் வைப்பிலிடுவதாகச் சொல்லியே பணத்தை திருடியிருக்கிறான். நான்கு மாதங்களின் பின் இத் திருட்டுக்குக் காரணமானவன் தான் பொலிஸாரிடம் தற்போது சிக்கியிருக்கும் இளைஞன் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

சமூக சேவை செய்கின்ற பலரும் இவ்வாறு ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். பல சமூக சேவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்தும் சில தனவந்தர்களிடமிருந்தும் நிதி உதவிகள் கிடைப்பதால் இவனது வலையில் பல சமூக சேவையாளர்கள் சிக்கி இருக்கின்றனர். இந்நபர் வட்ஸப்பில் புரபைல் போட்டோவாக ஆஷிப் அஸ்லம் எனும் சமூக செயற்பாட்டாளரின் புகைப்படத்தையே வைத்திருப்பதாகவும் அதிகமானவர்கள் இத் திருட்டுச் செயலை தான்தான் செய்வதாக நினைத்து அவருக்கு அழைப்பெடுத்து தெரிவிப்பதாகவும் ஆஷிப் அஸ்லம் எனும் சமூக சேவகர் வருத்தத்துடன் தெரிவித்தார். அதேநேரம், தனக்குத் தெரிந்த நோயாளியொருவரும் பாதிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னரும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு இவன் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இருந்தபோதிலும் செல்வாக்கைப் பயன்படுத்தி வெளியே வந்துவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான வழக்கு கடந்த வியாழக்கிழமை நீதிபதி சமிந்த வெலிகொட தலைமையில் கெஸ்பாவ நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு பதினைந்து இலட்சப் பணப் பிணை மற்றும் சரீரப் பிணையில் அந்நபர் விடுவிக்கப்பட்டான்.

சந்தேக நபர் இந்தத் திருட்டு நடவடிக்கைகளை தனியாகச் செய்ய வாய்ப்பில்லை என்றும் இவனுக்குப் பின்னால் ஒரு குழு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவனைப் பிணையில் எடுப்பதற்காக ஐந்து பேர் நீதிமன்றத்திற்கு வந்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

உலகின் நீதி வக்கீலின் வாதத்திலும் பணத்திலுமே தங்கியிருக்கிறது. அதிகமான அப்பாவிகள் சந்தர்ப்ப வசத்தால் தான் செய்யாத பிழைக்காக அநியாயமாக உள்ளே இருக்கின்றனர். அப்படி இருக்கும்போது இவ்வாறான மனிதகுல எதிரிகள் வெளியே விடப்படுவது ஆபத்தானது என்ற கருத்தை பல சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இவனும் இவனின் காதலியும் கைதுசெய்யப்பட்டபோது இவன் அனைத்து உண்மைகளையும் சொல்லியதாகவும் பாதிக்கப்பட்ட சிலருக்கு பணத்தை திருப்பி வழங்கியதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் கருத்துத் தெரிவித்தார். இவனும் இவன் காதலியும் கைது செய்யப்பட்டு அது தொடர்பான வழக்கு விசாரணைகள் அளுத்கட நீதிமன்றில் (வழக்கு இலக்கம் B55802) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எதிர்வரும் அக்டோபர் மாதம் 5 ம் திகதி வழக்கு விசாரணைகள் இடம் பெற இருக்கின்றன.

அதேநேரம், இவனது திருட்டு நடவடிக்கைகள் அனைத்தும் நைஜீரிய இணையத் திருடர்களின் சாயலை ஒத்ததாக காணப்படுவதாக உயர் பதவி வகிக்கும் பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிடுகிறார். தங்களுடைய வங்கி கணக்குககளிலிருந்து பணம் எடுக்கப்பட்டதாக ஏழு முறைப்பாடுகள் பதியப்பட்டிருப்பதாக குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பிரதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கண்காணிப்பாளர் பிரசாத் ரணசிங்க, கணினி குற்றப் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்கி ரந்தெனிய, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயநேதி சிறி, பிரதிப் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த ஆகியோரின் வழிகாட்டலின் கீழ். சமூக ஊடக குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையத் தளபதி, இன்ஸ்பெக்டர் இஷார தயாஸ்ரீ தலைமையில் சார்ஜன்ட் வூ குமார (64160), அருண சாந்த (18513), காவலர்கள் சஞ்சீவ (93399), விரங்க பண்டார (68813), மகேஷ் சந்திர குமார (71191) ஆகியோரே இவ்விணைய பணப்பரிவர்த்தனை திருட்டுத் தொடர்பான புதைந்து கிடக்கும் மர்மங்களை வெளிக்கொணரும் செயற்திட்டத்தை முன்னெடுத்தனர்.

சிறுநீரகம் மற்றும் புற்றுநோயாளிகள் என்றவகையில் நீங்கள் மோசடிகளில் சிக்கினால் உடனடியாக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அதேநேரம் யாராவது உங்கள் தொலைபேசிக்கு வரும் OTP இலக்கத்தை அனுப்பச் சொல்லி கேட்டால் அதனை யாருக்கும் அனுப்பாதீர்கள். இவ்வாறான விடயங்களில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.


### சிறுநீரகம் ஒன்று தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 'A' அல்லது 'O' வகையைச் சேர்ந்த சிறுநீரகம் ஒன்று அவசரமாக தேவைப்படுகிறது வழங்க விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும். 0773309857



SMIB

### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிக்கு 51 எண்ணிக்கையான மென்பொருள் உரிமங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள்**

| பெறுகையின் விளக்கம் | 51 எண்ணிக்கையான மென்பொருள் உரிமங்களுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள் |
|---|---|
| ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | ரூபா 3,000.00 |
| கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கான திகதி | 2022-09-19ஆம் திகதி முதல் 2022-09-30 திகதி வரை - மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை |
| கேள்வி முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | 2022-10-03ஆம் திகதி மு.ப. 10.00 மணி |
| சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறியின் பெறுமதி | ரூபா 40,000.00 |

1. RFP ஆவணங்களை 2022-09-19ஆம் திகதி முதல் 2022-09-30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை எழுத்து மூலமான கோரிக்கையை சமர்ப்பித்த பின்னர் பிரதான முகாமையாளர், லொஜிஸ்டிக்ஸ் பிரிவு (4வது மாடி), அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, இல. 269, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
2. தகுதி மூலப்பிரமாணங்கள்:
   அ. கேள்விதாரர் இலங்கையில் ஒரு கூட்டிணைக்கப்பட்ட நிறுவன அமைப்பாக இருக்க வேண்டும்.
   ஆ. கேள்விதாரர் மைக்ரோ சொ.ஃப்ட் பங்குதாராக இருக்க வேண்டும்.
   இ. கேள்விதாரர் மைக்ரோசொப்ட் உரிமத்தில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் இலங்கையில் உள்ள வங்கிகள்/நிதி நிறுவனங்கள் தொடர்பான சட்டரீதியான வழிகாட்டுதல்களை முழுமையாக அறிந்திருக்க வேண்டும்.
   ஈ. முதன்மை அல்லது மைக்ரோ சொ.ஃப்ட் விநியோகஸ்தரிடம் இருந்தான உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதம்.
3. மேலே சுட்டிக்காட்டியவாறு கேள்விக்குரித்தானதும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதுமானதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஆகக் குறைந்த காலப்பகுதியான 2022.10.03ஆம் திகதியிலிருந்து 2023.01.30ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருக்கும் கேள்விப்பிணையொன்று பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவிற்கான விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. கேள்விகள் 2022-10-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும் மற்றும் மு.ப. 10.00 மணிக்குப் பிறகு பெறப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும் மற்றும் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.
5. மேலதிக விவரங்களை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் லொஜிஸ்டிக் பிரிவு, பிரதான முகாமையாளரை 0117722879 எனும் தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**CEO/பொது முகாமையாளர்,
அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,
இல. 269, காலி வீதி,
கொழும்பு -03.**






## கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்ல

## பாடசாலை நூலகங்களுக்கு உகந்த நூல்களை தெரிவுசெய்தல் மற்றும் அந்த நூல்களுக்கான அனுமதி பத்திரங்களை வழங்குதல்

### வெளியீட்டு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் புத்தக ஆசிரியர்களுக்கு,

பாடசாலை நூலகங்களுக்காக பொருத்தமான நூல்களை இனங்காணப்பட்ட பின்னர், அந்த நூல்களுக்கான நூலக அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதற்காக சிங்கள, தமிழ், ஆங்கில மொழிமூலங்களில் பின்வரும் பாடத்துறைகளின் கீழ் அச்சிடப்பட்ட நூல்கள்/கையெழுத்து பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**பாடத்துறைகள்**

- மொழி மற்றும் இலக்கியம்
  (சிங்களம், தமிழ், ஆங்கில நாவல்கள், கவிதை மற்றும் பிற வெளிநாட்டு மொழிகள்)
- சமயம்
  (பௌத்த தர்மம்/இந்து சமயம்/கிறிஸ்த்தவ தர்மம்/இஸ்லாம் தர்மம்)
- சிறுவர் கதைகள்
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல்
- தகவல் தொழில்நுட்பம்
- அழகியற்கலை
- சமூக விஞ்ஞானம்
- கல்விசார் மதிப்புமிக்க ஏனைய படைப்புகள்
- மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகள்

குறித்த அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நூலாசிரியர்களுக்கு மற்றும் நூல் வெளியீட்டார்களுக்கு அச்சிடப்பட்ட நூல்கள் / கையெழுத்து பிரதிகளை சமர்ப்பிக்குமாறு இத்தால் வேண்டப்படுகின்றது. ஏலவே அனுமதி பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளப்பட்ட நூல்களுக்கான அனுமதி பத்திரங்கள் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 5 ஆண்டுகள் பூர்த்தியாகும் திகதி வரையில் மாத்திரமே செல்லுபடியாகும் அதன் பிரகாரம் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதி பத்திரங்களை இற்றைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு சபை தீர்மானித்துள்ளது.

**கவனிக்கப்பட வேண்டும் -** கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற பாடப்புத்தகங்களுக்கு இணையாக அச்சிடப்படும் நூல்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட பாடசாலை நூலக அனுமதி பத்திரங்கள் வெளியிடப்படமாட்டாது.

பாடசாலை நூலகங்கள் அனுமதி பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு விருப்பு தெரிவிக்கும் நூலாசிரியர்கள் மற்றும் நூல் வெளியீட்டாளர்கள் திங்கட் கிழமைகளில் கல்வி அமைச்சின் 5 ஆம் மாடியில் அமைந்துள்ள கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபைக்கு உரிய நூல்கள் மற்றும் கையெழுத்து பிரதிகளை கையளிக்கலாம். அவற்றுக்குரிய விண்ணப்பப்படிவம் www.moe.gov.lk எனும் வலைத்தளத்திலிருந்து பதவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

**மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக அலுவலக நேரத்தில் 011 2784839 எனும் தொலைபேசியுடன் தொடர்பு னொள்ளவும்.**

திரு எம். என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

# பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2023

## நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை
## வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

2023ஆம் வருடத்தில் பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக உற்பத்தியாளர்கள் / பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | உருப்படி இல. |
|---|---|---|
| 1. | **வழங்கல்கள்** | |
| 1. | சகல வகையான காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1.1 |
| 2. | அலுவலகத் தளபாங்கள் மற்றும் உருக்கு உற்பத்திகள் | 1.2 |
| 3. | கணனிகள், அச்சுப்பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் உட்பட அனைத்து வகையான இலத்திரனியல் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 1.3 |
| 4. | கணனி மென்பொருள்கள் | 1.4 |
| 5. | சகல வகையான கட்டிடப்பொருட்கள் | 1.5 |
| 6. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் | 1.6 |
| 7. | டயர், டியூப், பெட்டறி (Wheel Alignment and balancing உட்பட) | 1.7 |
| 8. | ஓப்செட் மற்றும் டிஜிட்டல் அச்சு வேலைகள் | 1.8 |
| 9. | சகல வகையான டோனர்கள் மற்றும் கார்ட்ரிச்கள் | 1.9 |
| 10. | உணவு பானங்கள் வழங்குதல் மற்றும் உபசார சேவைகள் | 1.10 |
| 11. | பரிசுப் பொருட்கள் மற்றும் ஞாபகச் சின்னங்கள், உலோக இலச்சினைகள், விருதுகள் மற்றும் பதக்கங்களைத் தயாரித்து வழங்குதல் | 1.11 |
| 12. | வளிச்சீராக்கி இயந்திரங்கள், கொம்பிரஷர் மற்றும் வளிச்சீராக்கி உதிர்ப்பாகங்கள் | 1.12 |
| 13. | டீ சேர்ட், தலைக் கவசங்கள், கொடி மற்றும் பதாகைகளை அச்சிடல் மற்றும் தைத்து வழங்குதல் | 1.13 |
| 2. | **சேவைகள்** | |
| 1. | சகல அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் | 2.1 |
| 2. | மோட்டார் வாகன திருத்தவேலைகள் | 2.2 |
| 3. | வாகனங்களின் தவணை சேர்விஸ்கள், உள்ளக வெளியக சுத்திகரிப்புகள் | 2.3 |
| 4. | வாகன தகர வேலைகள், நிறப்பூச்சு பூசுதல், கட் அன்ட் பொலிஷ் செய்தல் | 2.4 |
| 5. | வாகன குஷன் வேலைகள் மற்றும் கார்பட் வேலைகள் | 2.5 |
| 6. | வாகன வளிச்சீராக்கம் | 2.6 |
| 7. | வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் கார் / வேன் / லொறி / பஸ் | 2.7 |
| 8. | உற்சவப் பொருட்கள் மற்றும் ஒலிபெருக்கிகளை வாடகைக்கமர்த்துதல் | 2.8 |
| 9. | அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல் மற்றும் புகைப்படமெடுத்தல் | 2.9 |
| 10. | வளிச்சீராக்கி இயந்திரங்கள் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் | 2.10 |
| 11. | நிர்மாண இயந்திரோபகரணங்களை வாடகைக்கமர்த்துதல் | 2.11 |
| 12. | கணனி, அச்சுப்பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள் | 2.12 |
| 13. | நிகழ்வுகளை ஒழுங்குசெய்தல் (Event Management) | 2.13 |
| 14. | மொழிபெயர்ப்பு வேலைகளைச் செய்தல் | 2.14 |
| 15. | வடிவமைப்பு / உற்பத்தி நடவடிக்கைகள் (வீடியோ டொக்கியுமென்டறி) | 2.15 |
| 16. | விளம்பர முகவர் வேலைகள் | 2.16 |
| 3. | **ஒப்பந்தக்காரர்கள்** | |
| 1. | கட்டிட நிர்மாணம், திருத்தவேலைகள் மற்றும் மேம்படுத்தல் (சிறிய மற்றும் நடுத்தர) | 3.1 |
| 2. | சிறிய அளவிலான வீதி நிர்மாணம் (பிரவேசப் பாதை) / வடிகான் முறைமை நிர்மாணம் | 3.2 |
| 3. | அலுவலக பகுதிபிரிப்புகள் (partitioning) | 3.3 |

(ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்துகொள்ள உத்தேசிக்கும் நிறுவனங்கள் / நபர்கள் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அரச திணைக்களம் / நியதிச் சபைகள் / உள்ளூராட்சி நிறுவனங்களில் குறித்த பெறுமதிக்குச் சமமான ஒப்பந்தம் / வேலைகளை திருப்திகரமாக செய்துள்ளமையை ஆவணச் சாட்சி தேவைப்பாட்டின் பிரகாரம் சமர்ப்பிக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்).

I. வழங்கல் பொருட்களை குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபைக்கு அல்லது அதிகார சபையினால் பெயரிடப்படும் இடத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

II. பதிவு செய்துகொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைகள் கோரப்படும் என்பதுடன் வெளி வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி தேவையான கொள்வனவு மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

III. கோரும்போது விலைகளை மூன்று தடவைகளுக்கு மேல் சமர்ப்பிக்காத, கட்டளை விடுக்கப்பட்ட வழங்கல்களை வழங்கத் தவறும், உரிய தரத்திற்கமைவாக இல்லாத பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வழங்குநர்களின் பெயர் முன்னறிவித்தலின்றி குறித்த பதிவேட்டிலிருந்து அகற்றும் உரிமையை அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

வழங்குநரொருவராக பதிவு செய்துகொள்வதற்கு ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக்கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

வழங்குநர்கள் பதிவுக் கட்டணத்தை ரொக்கப் பணமாக அல்லது நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை தலைவரின் பெயரில் குறுக்குக் கோடிட்ட காசோலை மூலம் செலுத்தலாம் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தலைவர், நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை, 09ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2023-12-23ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவிக்கப்படுகின்றது. (விசாரணை: 0112-884147)

பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்கள் கீழே தரப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

வழங்குநர்கள் VAT வரி செலுவத்துவதற்காக பதிவு செய்துகொண்டிருந்தால் VAT இலக்கம் குறிப்பிடப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் VAT வரிக்காக பதிவு செய்யப்படவில்லை எனக் கருத்திற்கொள்ளப்படும்.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை
### வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023

01. பதிவு செய்துகொள்வதற்கு எதிர்பார்க்கும் உருப்படி மற்றும் இலக்கம்: ...............................

02. வழங்குநரின் / நிறுவனத்தின் பெயர்:...............................

03. முகவரி:...............................

04. தொலைபேசி இலக்கம் / தொலைநகல் இலக்கம்:...............................

வியாபாரமொன்றானால் பதிவுச்சான்றிதழின் பிரதி அல்லது ஒப்பந்தக்காரராக பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிப்பவர்கள் தமது நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1. காசோலை இலக்கம்:...............................
2. திகதி:...............................
3. பெறுமதி:...............................

வழங்குநராக / ஒப்பந்தக்காரராக நான் தெரிவு செய்யப்பட்டால் நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு கட்டுப்பட்டு மாதிரி மற்றும் விபரக்குறிப்பின் பிரகாரம் 2023ஆம் வருடம் முதல் பொருட்கள் / பண்டங்கள் / சேவைகள் / ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு / வழங்குவதற்கு இணங்குறேன்.

**திகதி:** **வழங்குநரின் கையொப்பம் (இறப்பர் முத்திரை)**

**அலுவலகப் பயன்பாட்டிற்கு**

செலுத்திய பதிவுக்கட்டணம் : ரூபா........................... பற்றுச்சீட்டு இலக்கம்:........................

விண்ணப்பப் படிவத்திற்கு ஒப்புதல் அளிக்கின்றேன்.

திகதி: தலைவர் (ந.கு.அ.அ)


# வாகனங்கள் விற்பனைக்கு

## ANURADHAPURA VEHICLE YARD (0252052632)

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAH-50XX | AAX-80XX | ABQ-11XX | QM-02XX | QT-81XX | QX-72XX | YN-91XX |
| AAL-91XX | ABE-49XX | QJ-27XX | QO-32XX | QT-94XX | QZ-11XX | YP-35XX |
| AAO-39XX | ABF-19XX | QK-57XX | QS-96XX | QV-01XX | YI-44XX | YT-02XX |
| AAU-63XX | ABN-63XX | QL-02XX | QT-35XX | QW-16XX | YM-15XX | YW-75XX |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| IIE-63XX | SONALIKA | TRACTOR | CAK-03XX | TOYOTA | MOTOR CAR |
| 155R097XX | NISSAN | MOTOR CAR | CAY-48XX | SUZUKI | MOTOR CAR |
| 185R070XX | DAEWOO | MOTOR CAR | | | |

## HORANA VEHICLE YARD (0342266244)

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAB-36XX | AAU-96XX | QE-06XX | QO-29XX | QS-52XX | QX-92XX | YP-18XX |
| AAG-75XX | AAW-51XX | QI-63XX | QO-46XX | QS-72XX | QZ-19XX | YQ-00XX |
| AAJ-24XX | AAW-56XX | QJ-17XX | QP-13XX | QU-04XX | QZ-75XX | YS-73XX |
| AAK-90XX | AAZ-58XX | QK-63XX | QP-35XX | QU-78XX | QZ-88XX | YU-30XX |
| AAL-53XX | ABD-35XX | QL-36XX | QP-82XX | QV-19XX | QZ-89XX | YU-95XX |
| AAO-03XX | ABG-38XX | QL-87XX | QQ-20XX | QV-75XX | YA-77XX | YW-91XX |
| AAP-21XX | ABL-30XX | QM-46XX | QQ-26XX | QW-02XX | YB-60XX | YX-25XX |
| AAP-27XX | ABM-81XX | QN-54XX | QR-04XX | QW-49XX | YC-75XX | YX-53XX |
| AAQ-44XX | QA-49XX | QN-76XX | QR-09XX | QW-85XX | YH-61XX | YX-54XX |
| AAQ-63XX | QA-70XX | QN-95XX | QR-31XX | QX-45XX | YK-04XX | YX-78XX |
| AAS-26XX | QD-25XX | QN-96XX | QR-77XX | QX-66XX | YK-59XX | YY-42XX |
| AAT-53XX | QD-84XX | QQ-16XX | QR-79XX | QX-89XX | YK-61XX | YY-57XX |
| | | | | | YM-07XX | YY-90XX |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| PC-08XX | MICRO | MOTOR VAN | BID-96XX | TVS | MOTOR CYCLE |
| BGE-04XX | TVS | MOTOR CYCLE | BIE-81XX | TVS | MOTOR CYCLE |
| BHF-86XX | BAJAJ | MOTOR CYCLE | 18-58XX | NISSAN | MOTOR CAR |
| BHZ-02XX | HERO | MOTOR CYCLE | | | |

## KULIYAPITIYA VEHICLE YARD (0117711142)

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAB-52XX | AAR-66XX | QL-93XX | QT-45XX | QV-84XX | YC-19XX | YN-11XX |
| AAI-39XX | ABA-08XX | QF-41XX | QT-98XX | QW-57XX | YG-16XX | YO-31XX |
| AAP-39XX | ABB-35XX | QF-47XX | QU-45XX | QX-42XX | YH-90XX | YV-57XX |
| AAQ-17XX | QD-53XX | QF-78XX | QV-17XX | QZ-42XX | YL-73XX | |
| AAQ-20XX | QL-44XX | QS-96XX | QV-37XX | QZ-53XX | YN-01XX | |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| RE-77XX | NEW HOLLAND | TRACTOR | XC-81XX | BAJAJ | MOTOR CYCLE |
| LA-40XX | [illegible] | MOTOR LORRY | KT-33XX | HONDA | MOTOR CAR |

## MAHARA VEHICLE YARD (0112920665)

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAA-83XX | AAM-91XX | ABC-44XX | QG-13XX | QN-46XX | QU-03XX | YB-57XX |
| AAB-54XX | AAS-89XX | ABD-13XX | QJ-05XX | QN-68XX | QU-99XX | YF-36XX |
| AAF-19XX | AAU-15XX | ABE-96XX | QJ-81XX | QN-79XX | QW-85XX | YM-55XX |
| AAG-12XX | AAW-89XX | ABG-55XX | QJ-98XX | QO-22XX | QW-98XX | YM-99XX |
| AAG-28XX | AAX-11XX | ABL-69XX | QK-38XX | QO-59XX | QX-68XX | YW-92XX |
| AAG-56XX | AAY-52XX | ABO-04XX | QK-57XX | QR-17XX | QZ-10XX | YY-04XX |
| AAI-81XX | ABA-86XX | QC-24XX | QL-21XX | QT-33XX | QZ-32XX | YY-24XX |
| AAJ-27XX | ABB-23XX | QI-56XX | QM-14XX | QT-98XX | YA-15XX | YZ-72XX |
| | | | | | | YZ-90XX |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| BFL-44XX | BAJAJ | MOTOR CYCLE | BIF-63XX | HERO | MOTOR CYCLE |
| BGB-64XX | HERO | MOTOR CYCLE | BIG-49XX | HERO | MOTOR CYCLE |
| BGR-42XX | SUZUKI | MOTOR CYCLE | BIG-52XX | TVS | MOTOR CYCLE |
| BGT-18XX | TVS | MOTOR CYCLE | BIH-00XX | SUZUKI | MOTOR CYCLE |
| BHF-03XX | YAMAHA | MOTOR CYCLE | BIH-27XX | HERO | MOTOR CYCLE |
| BHG-53XX | HONDA | MOTOR CYCLE | BIH-67XX | TVS | MOTOR CYCLE |
| BHI-89XX | YAMAHA | MOTOR CYCLE | BIJ-95XX | HERO | MOTOR CYCLE |
| BHL-98XX | HERO | MOTOR CYCLE | BIK-20XX | TVS | MOTOR CYCLE |
| BHS-60XX | TVS | MOTOR CYCLE | BIL-83XX | HERO | MOTOR CYCLE |
| BHV-71XX | HERO | MOTOR CYCLE | BIL-95XX | HERO | MOTOR CYCLE |
| BHW-82XX | HERO | MOTOR CYCLE | BIM-20XX | HERO | MOTOR CYCLE |
| BIB-22XX | HONDA | MOTOR CYCLE | BIM-70XX | HERO | MOTOR CYCLE |
| BIB-66XX | TVS | MOTOR CYCLE | BIN-45XX | HERO | MOTOR CYCLE |
| BIB-69XX | TVS | MOTOR CYCLE | BIP-77XX | TVS | MOTOR CYCLE |
| BIB-86XX | HERO | MOTOR CYCLE | BIS-92XX | HERO | MOTOR CYCLE |
| BIC-40XX | YAMAHA | MOTOR CYCLE | BIT-86XX | HERO | MOTOR CYCLE |
| BID-42XX | HERO | MOTOR CYCLE | BIV-65XX | HERO | MOTOR CYCLE |
| BID-43XX | HERO | MOTOR CYCLE | BIX-32XX | HERO | MOTOR CYCLE |
| BIE-18XX | TVS | MOTOR CYCLE | LO-04XX | MAHINDRA | MOTOR LORRY |

## MAHARA MIHINDUMAWATHA VEHICLE YARD (0112925044)

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAG-14XX | AAQ-52XX | AAU-35XX | ABO-95XX | QP-77XX | QZ-40XX | YK-81XX |
| AAG-42XX | AAQ-64XX | AAV-21XX | JW-41XX | QP-81XX | YC-99XX | YN-27XX |
| AAH-31XX | AAR-00XX | AAW-88XX | QC-41XX | QR-45XX | YD-16XX | YO-52XX |
| AAK-63XX | AAS-42XX | AAY-28XX | QE-55XX | QT-79XX | YD-33XX | YO-60XX |
| AAL-37XX | AAT-06XX | ABA-86XX | QH-95XX | QW-59XX | YH-29XX | YQ-20XX |
| AAP-51XX | AAT-62XX | ABB-76XX | QK-91XX | QX-29XX | YJ-03XX | YW-38XX |
| AAP-74XX | | | | | | |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| 57-87XX | TOYOTA | MOTOR VAN | BFJ-71XX | TVS | MOTOR CYCLE |
| PA-23XX | MITSUBISHI | MOTOR VAN | BIL-68XX | SUZUKI | MOTOR CYCLE |
| PA-46XX | MAZDA | MOTOR VAN | BIR-71XX | YAMAHA | MOTOR CYCLE |
| 68-57XX | MAZDA | MOTOR LORRY | HA-88XX | MITSUBISHI | MOTOR CAR |
| GP-38XX | ISUZU | MOTOR LORRY | JG-23XX | NISSAN | MOTOR CAR |
| GU-08XX | ISUZU | MOTOR LORRY | KG-54XX | BMW | MOTOR CAR |
| TD-65XX | TVS | MOTOR CYCLE | | | |

## NITTAMBUWA VEHICLE YARD (0332050958)

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAA-74XX | AAT-96XX | QE-96XX | QS-24XX | QT-40XX | QZ-81XX | YO-50XX |
| AAC-03XX | AAU-07XX | QL-49XX | QS-40XX | QT-73XX | QZ-74XX | YQ-00XX |
| AAC-30XX | AAU-75XX | QL-53XX | QS-42XX | QT-75XX | QZ-89XX | YQ-39XX |
| AAG-34XX | AAX-94XX | QL-59XX | QS-54XX | QU-71XX | YE-52XX | YQ-57XX |
| AAG-34XX | AAZ-78XX | QM-41XX | QS-58XX | QU-78XX | YJ-34XX | YR-29XX |
| AAH-22XX | ABA-46XX | QN-57XX | QS-80XX | QV-93XX | YK-19XX | YS-08XX |
| AAH-75XX | ABC-40XX | QN-93XX | QS-81XX | QW-53XX | YL-13XX | YT-11XX |
| AAI-79XX | AAI-15XX | QO-12XX | QT-27XX | QW-71XX | YL-86XX | YX-56XX |
| AAJ-22XX | QJ-35XX | QQ-42XX | QT-29XX | QX-35XX | YM-60XX | YX-82XX |
| AAJ-25XX | QK-37XX | QQ-72XX | QT-42XX | QX-42XX | YN-43XX | YZ-90XX |
| AAD-61XX | QK-65XX | QR-12XX | QT-43XX | QX-74XX | YO-30XX | YZ-98XX |
| AAS-85XX | QK-65XX | QR-73XX | | | | |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| 8D-97XX | MAHINDRA | TRACTOR | 68-48XX | TOYOTA | MOTOR LORRY |
| 56-33XX | TOYOTA | MOTOR VAN | LF-28XX | [illegible] | MOTOR LORRY |
| 56-48XX | MAZDA | MOTOR VAN | LN-12XX | TATA | MOTOR LORRY |
| 60-12XX | TOYOTA | MOTOR VAN | LC-28XX | MAHINDRA | MINI TRUCK |
| 60-75XX | ISUZU | MOTOR VAN | PU-97XX | DFSK | MINI TRUCK |
| | | | PY-54XX | TATA | MINI TRUCK |

## THALAWATHUGODA VEHICLE YARD (0112744977)

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| CAN-81XX | MITSUBISHI | MOTOR CAR | CBE-51XX | SUZUKI | MOTOR CAR |
| CAO-85XX | SUZUKI | MOTOR CAR | CBH-52XX | MG | MOTOR CAR |
| CAS-49XX | HONDA | MOTOR CAR | KK-71XX | MICRO | MOTOR CAR |
| CAX-99XX | MAZDA | MOTOR CAR | KM-66XX | NISSAN | MOTOR CAR |
| CBC-28XX | HONDA | MOTOR CAR | HR-32XX | KIA | MOTOR CAR |
| CAD-66XX | HONDA | MOTOR CAR | KC-40XX | VOLVO | MOTOR CAR |
| CAW-91XX | SUZUKI | MOTOR CAR | 305R15XX | ISUZU | MOTOR COACH |
| PD-12XX | NISSAN | MOTOR VAN | NF-73XX | HINO | MOTOR COACH |
| PC-12XX | MAZDA | MOTOR VAN | | | |
| PF-75XX | TOYOTA | MOTOR VAN | | | |

2022 செப்டம்பர் 19, 20, 21, 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை மேலுள்ள முகவரியில் பரீட்சிக்க முடியும். செப்டம்பர் 23 ஆம் திகதி பி.ப 4.30க்கு கேள்விமனு ஆவணம் ஏற்பது நிறைவு செய்யப்படும்.

கேள்விமனு ஆவணங்கள் மீளளிக்கப்படாத 250.00 ரூபாவை செலுத்தி ஹொரண, அநுராதபுரம், நிட்டம்புவ, குளியாப்பிட்டிய, மஹர மற்றும் தலவத்துகொட கிளைகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட வாகனங்களில் சில வாகனங்கள் லீசின் வசதியின் கீழ் மாத்திரம் விற்பனை செய்யப்படும்.

மேலும் வாகனங்களில் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

வாகனபரி சோதனை

**Mahara Vehicle Yard:** No. 377/2, Mahara, Kadawatha
**Mihindu Mawatha Yard :**No: 15/20, Mihindu Mawatha, Mahara Kadawatha
**Horana Vehicle Yard:** No. 166, Aguruwathota Road, horana.
**Anudharapura Vehicle Yard:** Ala 05, Rathmale, Shrawasthipura.
**Nittabmuwa Vehicle Yard:** No. 655, Jayasuriya Mawatha, Nittabmuwa
**Kuliyapitiya Vehicle Yard:** No. 259, Madampe Road, Kuliyapitiya.
**Thalawathugoda Vehicle Yard:** No. 175, School Lane, Thalawathugoda

* முன் அறிவித்தலின்றி வாகனத்தை மீளபெறும் உரிமை நிறுவனத்துக்குண்டு

**CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC**
No. 377/2, Mahara, Kadawatha


# அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை-2022



நம் நாட்டின் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடிகளுள் ஒருவரான தெல்தோட்டை மண் ஈன்றெடுத்த அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் இலக்கிய உலகுக்கு ஆற்றிய அரும்பணிகள் பற்றி இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் நோக்கில் இந்த வருடமும் நினைவுப் பேருரையொன்றை நடாத்த தெல்தோட்டை ஊடக மன்றம் திட்டமிட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான நினைவுப் பேருரை "தெல்தோட்டை – புதியதோர் மாற்றத்தை நோக்கி" என்ற கருப்பொருளில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 24ம் திகதி (சனிக்கிழமை) மு.ப. 9.30 மணி முதல், தெல்தோட்டை, புலவர் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள, க/எனசல்கொல்ல மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற உள்ளது. நினைவுப் பேருரையினை கலாநிதி ரவூப் ஸெய்ன் (நளீமி) நிகழ்த்த உள்ளார்.

இந்நிகழ்வின் மற்றுமொரு முக்கிய அம்சமாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரை ஜனரஞ்சகப்படுத்தும் நோக்கில் 1965இல் புலவர் பிறந்த நூற்றாண்டு விழாவின் போது புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியிட்டமைக்காக தினகரன் தேசிய நாளிதழுக்கும், புலவர் இயற்கையெய்திய நூற்றாண்டினை அனுஷ்டிக்கும் வகையில் 2018ம் ஆண்டு ஜூன் மாதம் ஞானம் சஞ்சிகையின் 217ஆவது இதழை புலவர் பற்றிய சிறப்பிதழாக வெளியிட்ட ஞானம் சஞ்சிகையின் இணை ஆசிரியர் வைத்தியர் ஞானம் ஞானசேகரனுக்கும், புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியிட்ட தென்னிந்தியாவின் இளம்பிறை எம். ஏ. ரகுமானுக்கும் தெல்தோட்டை ஊடக மன்றமானது, 'அருள்வாக்கி நேசன்' விருது வழங்கி பாராட்டி கௌரவிக்க உள்ளது.

மேலும், தெல்தோட்டை பிரதேச முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு, அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பற்றி எழுதப்பட்ட சிறப்பு பாடல் வெளியீடு, அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவு மலர் வெளியீடு உட்பட இன்னும் பல நிகழ்வுகள் அன்றைய தினம் இடம்பெற உள்ளன..

**எஸ்.ஏ.எம். பவாஸ்**
செயலாளர்
தெல்தோட்டை ஊடக மன்றம்

# நாடு தழுவிய ஜாஸ் இசைப் பயணம் -2022



இவ்வாண்டு செப்டம்பர் 26 ஆம் திகதி ஐரோப்பிய மொழிகள் தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு, ஐரோப்பிய ஒன்றியம் (EU) சுவிட்ஸர்லாந்து தூதரகம், இத்தாலிய தூதரகம், பிரெஞ்சு தூதரகம், அலையன்ஸ் ஃபிரான்சைஸ், கோதேஇன்ஸ்டிட்யூட் மற்றும் பிரிடிஸ் கவுன்சில் (British council) ஆகியவை இணைந்து இலங்கையின் மூன்று முக்கிய நகரங்களில் பன்மொழி ஜாஸ் இசை சுற்றுப்பயணத்தை நடத்துகின்றன.

சமாதானமிக்க ஒருங்கிணைந்த சமூகமொன்றை நோக்கிய ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக நடாத்தப்படும் இவ் பன்மொழி ஜாஸ் இசை சுற்றுப்பயணம் பிரதான, பாப் ராக், ஜாஸ் ஃப்யூஷன், ஜாஸ் பாப் மற்றும் லத்தீன் ஜாஸ் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.


இலங்கை மக்களுடன் மொழியியல் பாரம்பரியத்தின் பன்முகத்தன்மையைப் பகிர்ந்து கொண்டு, கலாச்சாரங்களுக்கு இடையிலான புரிந்துணர்வை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்படும் இச் சுற்றுப் பயணம் கொழும்பில் ஆரம்பித்து, கண்டிக்கு பயணித்து பின் யாழ்ப்பாணத்தில் நிறைவடையும்.

இதன் ஆரம்ப கச்சேரி கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் செப்டம்பர் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் நடைபெறும். இது முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் அனைவருக்கும் திறந்திருக்கும் இலவச நிகழ்வாகும். இந்தக் கச்சேரியைத் தொடர்ந்து கண்டியில் செப்டம்பர் 26 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு ஜாஸ் மாலை நிகழ்ச்சிகள், Slightly Chilled Lounge Bar and Restaurant இல் நடைபெறும். இறுதிக் கச்சேரி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் செப்டம்பர் 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணி முதல் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பாடகர், கிடார் கலைஞர் மற்றும் பாடலாசிரியர் எலியன் அம்ஹெர்ட் மற்றும் Bass இசைக் கலைஞரும், இசையமைப்பாளரும் தயாரிப்பாளருமான அமண்டா ருஸ்ஸா ஆகியோரின் நிகழ்ச்சிகள் ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலியன், போர்த்துக்கல் மற்றும் ஆங்கில மொழிகளில் இடம் பெறும்.

சுவிட்ஸர்லாந்தில் பிறந்த எலியன் அமெர்ட் நியூயோர்க்கில் வசிப்பதோடு, நகரின் புலமைமிகு பல் கலாச்சார உந்துசக்தியின் தாக்கமானது அவரால் சொந்தமாக உருவாக்கப்பட்ட உயிரோட்டமுள்ள, உத்வேகம் மிக்க ஆபிரிக்க, பிரேசிலிய, லத்தீன் இசை பின்புலங்களைக் கொண்ட இசைக்கோர்வைகளினது தனித்துவமான ஒலியமைப்பில் புலப்படுகிறது. ஒரு திறமையான இசையமைப்பாளரும், பாடலாசிரியரும், ஜாஸ் மற்றும் தற்கால இசைக்கான த நியூ ஸ்கூல் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தவருமான எலியன் நியூயோர்க்கின் பிரதானமான மனமகிழ் மன்றங்களில் முதன்மைக் கலைஞராகவோ, சிறப்புத்தோற்றத்திலோ நிகழ்த்துகைகளை மேற்கொள்கிறார். அத்துடன் வடதென் அமெரிக்கா, கனடா, ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டுள்ளதோடு, சீனா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மியன்மார், மலேசியா, நேபாளம் மற்றும் மொங்கோலியா ஆகிய நாடுகளில் சர்வதேச விழாக்களிலும் கலந்துகொண்டுள்ளார்.

அவர் பல்வேறு NYC இசைக்குழுக்களில் கிட்டார் வாசிப்பதோடு, மார்க்கஸ் ஸ்ட்ரிக்லண்ட், பஷிரி ஜான்சன், பில் வேர், ஹெகர் பென் ஆரி, ரெண்டி பிரெக்கர் போன்ற புகழ்பெற்ற கலைஞர்களோடு இணைந்து பணியாற்றியுள்ளார்.




## மேஷம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ர இயக்கத்தில் உள்ளனர். உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு அவரது வக்கிர காலத்தில் தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படும். பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. உங்கள் ராசிக்கு 10 ,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான் அவரது வக்கிரத்தால் இக்காலகட்டத்தில் தொழிலில் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். எண்ணங்கள் எளிதில் நடைபெற இறைவழிபாடு அவசியம்.

## ரிஷபம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ர இயக்கத்தில் உள்ளனர். உங்கள் ராசிக்கு 8 ,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாகும். எனவே குருவின் வக்ர காலத்தில் நற்பலன்களை வழங்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தொழில் போட்டிகள் அகலும். உங்கள் ராசிக்கு 9 ,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால் சுய தொழில் செய்வதில் கவனமாக இருக்க வேண்டும்.

## மிதுனம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் ராசிக்கு 7 ,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்ரம் பெறும்போது நற்பலன்கள் கிடைக்கும். கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் என்பதால் எண்ணங்கள் நிறைவேறும். உங்கள் ராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்ரம் பெறுகையில் ஒரு சில நன்மைகளை செய்தாலும் உறவினர் வழியில் பிரச்சினைகளை உருவாக்கும். ஆரோக்கியம் சீராக இருந்தாலும் நிம்மதி குறைவாக இருக்கும்.

## கடகம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ர இயக்கத்தில் உள்ளனர். உங்கள் ராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். அதேசமயம் தந்தை வழி உறவில் விரிசல் வரலாம். பூர்வீக சொத்து பிரச்சினை நீடிக்கும். சனியின் வக்ர காலத்தில் குடும்பம் ஒற்றுமையாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். எதையும் திட்டவட்டமாக செய்ய இயலாது.

## சிம்மம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ர இயக்கத்தில் உள்ளார்கள். உங்கள் ராசிக்கு 5 ,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான் என்றாலும் பஞ்சமாதிபதி ஆகவும் அல்லவா குரு இருக்கிறார். பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படும். தொழிலில் ஒரு சில இழப்புகள் ஏற்படலாம். சனியின் வக்ர காலத்தில் இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் அமையலாம். குடும்பத்தில் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

## கன்னி

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ர இயக்கத்தில் உள்ளனர். உங்கள் ராசிக்கு 4 , 7க்கு அதிபதியான குரு வக்ரம் பெறுவதால் சில நற்பலன்கள் கிடைக்கும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். குடும்ப பிரச்சினைகள் படிப்படியாக மாறும் .இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும். சனியின் வக்ர காலத்தில் பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்து செல்லுங்கள். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை ஏற்படும். ஆரோக்கிய தொல்லையும் உண்டு.

## துலாம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ரமாக உள்ளனர் . உங்கள் ராசிக்கு 3 ,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்ரம் பெறுவது யோகம் தான். புதிய உத்தியோக முயற்சி செய்தவர்களுக்கு பலன் கிடைக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். சனியின் வக்ரத்தால் ஆரோக்கியத் தொல்லை அகலும். விரையங்கள் குறையும். சுப செய்திகள் வந்து சேரும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் தொழில் வளம் சிறக்கும். பிள்ளைகளின் திருமணத்தை நடத்தி பார்ப்பீர்கள்.

## விருச்சிகம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ரம் ஆக இருக்கிறார்கள். குருவின் வக்ர காலத்தில் ஒரு தொகையை செலவழித்த பிறகு மற்றும் ஒரு தொகை உங்கள் கரங்களில் புரளும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. சொத்துக்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். சனியின் வக்ர காலத்தில் எதை செய்தாலும் ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்து செய்யுங்கள் .வழிபாடுகள் வளர்ச்சியை நல்கும்.

## தனுசு

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ரத்தில் இருக்கிறார்கள். உங்கள் ராசிக்கு சுக ஸ்தானத்திற்கு அதிபதியாக குரு இருப்பதால் ஆரோக்கியத்தொல்லை அதிகரிக்கும். பெற்றோர் வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் திருப்பங்கள் தொழிலில் ஏற்படலாம். இக்காலத்தில் குரு, சனி வழிபாட்டை செய்யுங்கள்.

## மகரம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ரம் ஆக இருக்கிறார்கள். உங்கள் ராசிக்கு 3ம் இடத்திற்கு அதிபதியான குரு வக்ர இயக்கத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. அவர் சகாய ஸ்தானாதிபதி என்பதால் பல நல்ல வாய்ப்புகள் கை நழுவி செல்லலாம். சனியும் வக்ரம் பெறுவதால் சஞ்சலங்கள் அதிகரிக்கும் .ஆரோக்கியத் தொல்லை உண்டு. பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் ஏற்படும்.

## கும்பம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ரம் ஆக இருக்கிறார்கள். உங்கள் ராசிக்கு தன ஸ்தானம் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான குரு வக்ரம் பெறும்போது பொருளாதார பற்றாக்குறை ஏற்படும். கொடுக்கல்வாங்கலில் பிரச்சினைகள் உருவாகும். சனியின் வக்கிர இயக்கத்தைப் பொறுத்தவரை நன்மை தரக்கூடியதாக இருக்கும். விரையாதிபதி சனி வக்ரம் பெறும்போது வீடு கட்டுவது இடம் வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். கடன் சுமை ஓரளவு குறையும் .

## மீனம்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார்கள். உங்கள் ராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அடுத்தவர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாகவே தெரியும். குடும்ப பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். சனியின் வக்ர காலம் நன்மை தரும் என்றாலும் விரயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது.

# வந்த பின் கதறும் தமிழர் இயல்பும் வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் நியமனமும்

கடந்த சில நாட்களாக வடக்கில் பேசுபொருளாகிய விடயங்களில் வடக்கின் சுகாதாரத் திணைக்களத்திற்குப் பணிப்பாளர் தெற்கிலிருந்து நியமிக்கப்பட்டதும் ஒன்றாகியது.

இந்த நியமனத்தை ஒட்டியும் வெட்டியும் பகிரங்கமாகவும் திரைமறைவிலும் பல விவாதங்கள் மற்றும் நகர்வுகள் நடந்தேறின.

முதலில் வடக்கு அரச அதிபர் நியமனத்தில் ஆரம்பித்து வடக்கு மாகாண பிரதம செயலாளர் நியமனம் தொடக்கம் தென்பகுதி நிர்வாகிகளது வடபகுதி வருகையின் ஆகப்பிந்திய வடிவம்தான் வடக்கு சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நியமனம்.

இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும் எவரும் துல்லியமாக இனங்காணும் ஒரு பண்பியல்பாக தமிழ்ச் சமூகத்தின் 'வந்த பின் காக்கும்' செயல்பாடுகள் உள்ளன.

அதாவது, குறித்த நியமனங்கள் தொடர்பில் தமிழர் தரப்பிலிருந்து ஆற்றப்படும் வினையானது காலம் கடந்ததாக அல்லது காலம் பிந்தியதாகவே அமைந்து வருகின்றன.

அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தமது பத்திகளில் அடிக்கடி வலியுறுத்தும் விடயங்களில் கூட்டு உளவியல் மற்றும் ஒரு சமூகமாகச் சிந்திப்பது ஆகியன அடங்கும்.


அவ்வாறு ஒரு சமூகமாகச் சிந்திக்கத் தவறுகின்றபோது நாம் இழப்பவை பாரதூரமான பின்விளைவுகளை தந்துவிடுகின்றன.

எமது சமூகத்தின் கூட்டு உளவியலைத் தக்கவைக்க வேண்டிய அரசியல்வாதிகளும் ஊடகங்களும் 'சாவீட்டு அரசியலைச்' செய்துகொண்டிருக்கிறார்கள்.


ஊடகத் தொடர்புகள் வழியாக முன்கூட்டியே அறிந்து புதிய பணிப்பாளர் நியமனம் தொடர்பாகப் பதிவிடும் வரையில் வடக்கு சுகாதாரத்துறையினருக்கே விடயம் தெரியாத நிலையே காணப்பட்டது.

### உறங்கிய தரப்புகள்

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தமது வருடாந்த இடமாற்றத்தின்படி யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக 06.05.2022 வெள்ளிக்கிழமையன்று கடமையேற்றார். வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனம் பிறிதொருவருக்கு வழங்கப்படும் வரையில் பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கேதீஸ்வரனே கடமையாற்றுவார் என ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியிருந்தன. இதற்கு அமைவாக வைத்தியநிபுணர் திலிப் லியகேயின் நியமனம் 31.08.2022 அன்று அதாவது மூன்று மாதங்களின் பின்னர் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



| | | | |
|---|---|---|---|
| 117 | 189 | Dr. | Umashankar M.S |
| 118 | 190 | Dr. | Venoden D. |
| 119 | 208 | Dr. | Wijesinghe .R.K.S. |
| 120 | 144 | Dr. | Rifaz I.L.M. |
| 121 | 155 | Dr. | Samuel M.S. |
| 122 | 133 | Dr. | Randombage S. |
| 123 | 2 | Dr. | Adikari A.M.P.S |
| 124 | 216 | Dr. | Wimalaratne P.S.N. |
| 125 | 25 | Dr. | Chandanie M.A.B. |
| 126 | 86 | Dr. | Kurukulasuriya B.I. |
| 127 | 109 | Dr. | Pathirage I.D |



| | | | |
|---|---|---|---|
| 83 | 79 | Dr. | Karunaratne M.H.U.I |
| 84 | 175 | Dr. | Somaratne C.J.K |
| 85 | 194 | Dr. | Wanninayake W.M.I.K |
| 86 | 13 | Dr. | Ariyaratne N.C.D |
| 87 | 43 | Dr. | Dissanayake D.M.S |
| 88 | 128 | Dr. | Rajhkumar S. |
| 89 | 62 | Dr. | Jamunanantha C.S |
| 90 | 224 | Dr. | Liyanage D.H |
| 91 | 16 | Dr. | Attanayake S.S.A.B.M.S.K |
| 92 | 45 | Dr. | Fernando G.H.S. |

இடைப்பட்ட இந்தக் காலப்பகுதியில் வடக்கில் இருந்து தகுதியான ஒருவரை நியமிப்பதற்கான சாத்தியங்கள் இருந்தனவா என்ற கேள்விக்கு விடை ஆம் என்பதாகவே அமைந்துள்ளது.

வடக்கின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகியதும், அந்த வெற்றிடத்திற்கு வடக்கில் இருந்து தகுதியான ஒருவரை தற்காலிகமாக நியமித்திருப்பதற்குச் சிறந்த அவகாசம் இருந்திருக்கிறது என்றே சுகாதார அமைச்சின் நிர்வாக பிரதிப் பணிப்பாளர் நாயகமாக இருந்து இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் 'ஒரு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி வெற்றிடம் ஆகும்போது, அதற்கான நிரந்தர நியமனம் மத்திய அரசினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு புள்ளிகள் அடிப்படையில் நேர்முகத்தேர்வு மூலமாகவே மேற்கொள்ளப்படும். அதுவரையில் குறித்த பதவிக்குப் பதில் கடமையாற்றுவதற்காக தகுதிவாய்ந்த ஒருவரை சுகாதார அமைச்சு நியமிக்கும்.'

**'வடக்கில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு தகுதியான நால்வர் உள்ளனர். தகுதி நிலையின் அடிப்படையில் யாழ் போதான வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமார், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர் ஆகியோரே அவர்கள்.'**

'வடக்கில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு தகுதியான நால்வர் உள்ளனர். தகுதி நிலையின் அடிப்படையில் யாழ் போதான வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமார், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர் ஆகியோரே அவர்கள்.'

'இவர்களில் எவரையாவது மாகாண சுகாதார அமைச்சானது அணுகி, பதில் கடமையாற்றுவதற்கு அவர்களது சம்மதத்தினைத் தெரிவிக்கும் கடிதத்தினைப் பெற்றிருக்க வேண்டும். அந்தக் கடிதத்துடன் தமது பரிந்துரையினையும் இணைந்து மாகாண ஆளுனரது ஒப்புதலுடன் அவர் ஊடாக மத்திய சுகாதார அமைச்சிற்கு அனுப்பிவைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் மேற்குறிப்பிட்ட நால்வரில் ஒருவர் வடக்கு மாகாண பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளராக மத்திய அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டிருப்பார்.' என்றார்.

நாம் அறிந்த வரையில் மாகாண சுகாதார அமைச்சிலிருந்து இவர்கள் நால்வரில் எவரையாவது நியமிக்குமாறு ஆளுநர் ஊடாகப் பரிந்துரைகள் எதுவும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறானால், 'மத்திய அரசினால் நியமனம் வழங்கப்பட்டவர் வந்து சேர்வதற்கு முன்பாக அவருக்கு இங்கு வருவதற்கு எவ்வித தகுதியும் இல்லை என்று பிரச்சாரத்தினை முன்னெடுக்க முற்பட்டவர்கள் யார்?. அந்தத் தகவல்கள் உண்மையானவையா?' என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

வடக்கில் உள்ள தகுதிவாய்ந்தவர்களது பெயர் விபரம் என்றொரு பட்டியல் அண்மையில் ஊடகங்களுக்குப் பகிரப்பட்டது.

அந்த விபரங்களின்படி 'வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆவதற்குரிய தகுதிகளுடன் மாகாண சுகாதார சேவையில் மருத்துவர் நந்தகுமார் காணப்படுகிறார். அத்துடன் தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ள மருத்துவர் திலிப் லியனகேயைவிட மூப்புநிலையில், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர் ஆகியோர் உள்ளனர்' என்றுள்ளது.

இதுகுறித்து தேடிப்பார்த்தபோது சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் இந்த மருத்துவர்களது மூப்புப் பட்டியல் கண்ணில்பட்டது. அப் பட்டியலின்படி மூப்பு நிலையில் மருத்துவர் திலிப் லியனகே 90வது இடத்திலும், மருத்துவர் உமாசங்கர் 117வது இடத்திலும் மருத்துவர் வினோதன் 118வது இடத்திலும் உள்ளனர்.

மேலும் மூப்புநிலையிலும் தகுதியிலும் முன்னிலையில் உள்ள மருத்துவர் சத்தியமூர்த்தியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆக மக்களைத் திசைதிருப்பும் தவறான தகவலே ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது இதிலிருந்து உறுதியாகிறது.

### தகுதியானவர்களது நிலைப்பாடுகள்

வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தியை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்குமாறு சுகாதார அமைச்சு கோரியபோதும் 'யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் நிறைவேற்றப்படவேண்டிய சில கடமைகள் உள்ளதால் தற்போது தமக்கு அவ்வாறு விண்ணப்பிக்கும் எண்ணம் இல்லை' என மறுத்துவிட்டதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

**சுகாதார அமைச்சின் தகவலின்படி தற்போதை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் நியமனம் ஒரு தற்காலிக நியமனமே. எனவே நிரந்தர நியமனத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படும்போது தகுதிவாய்ந்த தமிழர்கள் அதற்கு விண்ணப்பிப்பதை உறுதிப்படுத்துவது தமிழ் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு.**

அவ்வாறே வைத்திய கலாநிதி நந்தகுமாரனும் மருத்துவக் காரணங்களைக் காட்டி அப்பதவியை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை எனத் தெரியவருகிறது.

'மருத்துவ நிர்வாக சேவை விசேட வைத்திய நிபுணர் வினோதன் மன்னார் மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களாகப் பணியாற்றுகிறார். இவரது சிறப்பான தலைமைத்துவத்தினை மன்னார் மாவட்டத்தில் அனைவரும் பாராட்டும் அதே நேரம் வடமாகாண சுகாதரத்திணைக்களம் அவருக்கு உரிய இடத்தினை வழங்கியிருக்கவில்லை.

மாறாக வைத்தியநிபுணர் வினோதன் குறித்து தவறான கருத்துருவாக்கத்தினை ஆளுனர் உட்பட்ட மாகாண உயர் நிர்வாக மட்டங்களில் உருவாக்குவதிலேயே சிலர் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இதனால் அவர் வடமாகாணத்திற்கு வெளியே பொறுப்புகளை ஏற்கும் சந்தர்ப்பத்திற்காகவே காத்திருக்கிறார்' என மன்னாரில் அவருக்கு நெருக்கமான தரப்புகள் தெரிவித்தன.

'மருத்துவ நிர்வாக சேவை விசேட வைத்திய நிபுணர் உமாசங்கர் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறப்பாக தமது கடமைகளைச் செய்து வருகிறார். இவர் உரிய காலத்தில் விண்ணப்பங்கள் கோரப்படும்போது விண்ணப்பித்து தகுதியான பதவியை பெறுவதையே பெரிதும் விரும்பும் ஒருவர். மேலும் தனது மேலதிகாரியாக இருந்தவருக்கு (முன்னாள் மாகாணப்பணிப்பாளர்) மேலதிகாரியாகச் செல்வது அவரை அவமதிப்பது போலாகும் என்ற கருத்துக் கொண்டவர்.

இதனால் இவர் குறித்த பதவியைப் பெறுவதில் ஆர்வம் காட்டியிருக்கவில்லை' என முல்லைத்தீவு சுகாதாரத்திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறிய முடிந்தது.

ஆக மொத்தத்தில் வடக்கில் தகுதியானவர்கள் இருந்தும் பல்வேறு காரணங்களால் அவர்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியினைப் பொறுப்பேற்பதற்கு தயாரில்லை என்பது தெளிவாகிறது.

நிலைமை இவ்வாறு இருக்கையில் கடந்த மூன்று மாதங்களாக வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக இருப்பதையும், அதனை முன்னாள் வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதில் கடமையாக கவனித்து வருவதையும் அறிந்தும் அறியாத 'மோன நிலையில்' இருந்துவிட்டு இப்போது கூச்சலிட்டு என்ன பயன்?

விடயங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது இப்பத்தியின் ஆரம்பத்தில் சொன்ன 'வந்தபின் காக்கும்' பண்பியல்பு துல்லியமாகத் தெரிகிறது.

### காலம் கடக்கவில்லை

சுகாதார அமைச்சின் தகவலின்படி தற்போதை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் நியமனம் ஒரு தற்காலிக நியமனமே.

எனவே நிரந்தர நியமனத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படும்போது தகுதி வாய்ந்த தமிழர்கள் அதற்கு விண்ணப்பிப்பதை உறுதிப்படுத்துவது தமிழ் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு.

எங்களுக்குள் இருக்கின்ற வேறுபாடுகள், தனிப்பட்ட நலன்கள், போன்றவற்றை விட்டுவிட்டு ஒரு இனமாக சிந்தித்து செயற்பட வேண்டியது சிறுபான்மை இனமாக இருக்கின்ற தமிழ் சமூகத்திற்கு கட்டாயமானது.

மு.தமிழ்ச்செல்வன் ...

# பரீட்சையில் தோல்வியடைவதால் எதிர்காலம் இருண்டு விடுவதில்லை.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிந்து விட்டது. இனி அவர்கள் முகங்கொடுக்கப் போவது கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையாகும். கல்வி அமைச்சின் புள்ளிவிபரங்களின்படி வருடமொன்றுக்கு 80,000 தொடக்கம் ஒரு இலட்சம் வரையிலான மாணவர்களுக்கு உயர் தரத்தில் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. முன்னைய வருடங்களை விட அது குறைந்திருந்தாலும் வருடத்துக்கு வருடம் தொழில் வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் நாட்டுக்கு அது பெரும் சுமையாகும்.

உயர்தரத்தில் கல்வி கற்கும் அனைவரினதும் எண்ணம் பல்கலைக்கழகம் செல்வதாகும். ஆனால் சிறிய தொகையினருக்கு மட்டுமே பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு கிடைக்கின்றது. அதனால் அதிகமானோர் நம்பிக்கை இழக்கின்றார்கள். பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் தங்களுடைய எதிர்காலம் முற்றாக இருள் சூழ்ந்தது என எண்ணுகின்றார்கள்.

தற்போது பட்டதாரிகளும் வேலையற்றோர் பட்டியலில் இணைந்து கொள்வது வேலைவாய்ப்பு கிடைக்குமென எண்ணியே ஆகும். சாதாரண தரத்திலிருந்து உயர்தரம் செல்ல முடியாதவர்களும் உயர்தரத்தின் பின்னர் பல்கலைக்கழகம் செல்ல முடியாதவர்களும் இன்று அடுத்து செல்லக் கூடிய இடங்கள் பல இருந்தும் அவற்றை அறியாது இருக்கின்றார்கள்.


அவை அனைத்தும் வேலைவாய்ப்பு சந்தையை நோக்காகக் கொண்டு உருவான தொழில்களாகும். ஆனால் இதில் பிரவேசிப்பதற்கு குறையாக இருப்பது அறியாமையாகும். அதற்குத் தீர்வினை காணுமுகமாக கல்வியமைச்சும் உயர் கல்வியமைச்சும் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சும் பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து சிறந்த பணியொன்றை ஆற்றின.

சில காலங்களுக்கு முன்னர் க.பொ. த சாதாரண தரப் பரீட்சை நிலையங்களுக்கு கல்வி அமைச்சின் உதவியுடன் கையேடு ஒன்றை வழங்கினார்கள். அது "அறிவு மற்றும் திறன் மிகுந்த திறமையாளராகி உங்கள் கனவை நனவாக்குங்கள்" என்னும் தலைப்பில் அமைந்திருந்தது.

இத்திட்டம் குறித்து அப்போதிருந்த கல்விப் பணிப்பாளர் கூறியதாவது,

"நாம் இந்தத் திட்டத்தை கடந்த உயர்தரப் பரீட்சையின் போதே ஆரம்பித்தோம். அது வெற்றி பெற்றதனால் இம்முறை சாதாரண தரப் பரீட்சையின் போது பரீட்சைத் திணைக்கள வினாப் பத்திர பொதிகளுடன் கையேட்டையும் விநியோகித்தோம். உயர்தரத்துக்கு தகுதி பெறாது விட்டாலும், தொழில்நுட்பக் கல்வியினூடாக கல்வியைப் பெற சந்தர்ப்பம் வழங்குவது அதன் நோக்கமாகும். சாதாரண தரத்திலிருந்து NVQ மட்டம் வரை சென்று பட்டம் பெறும் வாய்ப்பும் உண்டு. இன்று க. பொ. த சாதாரண தரத்தில் சித்தியெய்தாதவர்கள் NVQ 3 மட்டம் வரை தொழில் தொடர்பான பாடத்தை பாடசாலையில் கற்கும் வாய்ப்புண்டு.

கலைப் படைப்புக்கள் மற்றும் ஊடகக் கல்வி, மோட்டர் வாகன பழுதுபார்த்தல், கட்டடங்கள் அமைத்தல், மின் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு நிதி மற்றும் வங்கி முகாமைத்துவம், உணவு தொழில்நுட்பம், மாணிக்கக்கல், தங்க ஆபரணங்கள், உணவு விடுதி, உல்லாசப் பயணத்துறை, காரியாலய முகாமைத்துவம், தோல் மற்றும் சப்பாத்து, ஆடையணிகள், மரங்களிலான கைவினைப் பொருட்கள், குளிர்சாதனப் பெட்டி மற்றும் குளிரூட்டி, கனரக வாகன சாரதி என்பனவே திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் உள்ள பாடநெறிகளில் ஒரு பகுதியாகும்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## திருத்த அறிவிப்பு

**2022 / 2023 பட்டப் படிப்பு பயிலிலவல்களை (Cadet) உட்சேர்ப்பதற்கான விண்ணப்பக்கோரல் தொடர்பாக 2022, செப்டம்பர் 04 ஆம் திகதி வெளியிடப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் அதிகூடிய வயதெல்லையில் திருத்தம் செய்தல்**

2021 நடைபெற்ற க.பொ.த.(உ.த) பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதத்தைக் கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

I. 22 க்கு அதிக வயதெல்லை கருத்தில் கொள்ளப்படும் திகதி 2022.09.26 க்குப் பதிலாக 2022.01.01 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.09.26 முதல் 2022.10.01 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்ட ஏனைய உள்ளடக்கத்தில் எவ்வித திருத்தமும் செய்யப்படவில்லை என்பதை கருத்தில் கொள்ளவும்.

நிகழ்நிலை மூலமாக ஏற்கனவே வெற்றிகரமாக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

மேலதிக விபரங்கள் மற்றும் நிகழ்நிலை விண்ணப்பத்திற்கு, இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும் : www.kdu.ac.lk

பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை, 10390,
இலங்கை.



## வெளிநாட்டில் கல்வி கற்க
### இதோ ஒரு அரிய வாய்ப்பு !!!

விஞ்ஞானம், கணிதவியல், வணிகவியல் மற்றும் கலை போன்ற பாடநெறிகளில் மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல், கட்டட பொறியியல், கணக்கியல், வணிக முகாமைத்துவம், ஹோட்டல் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெகுஜன தொடர்பு போன்று பல சிறப்பு வாய்ந்த அடிப்படை கற்கைநெறிகள் பின்பற்றுவதற்கான சிறந்த வாய்ப்பு.

**மலேசியா, இங்கிலாந்து, ஜெர்மனி, இந்தியா, ரஷ்யா, பெலாரஸ், சீனா மற்றும் பங்களாதேஷ்** போன்ற சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணற்ற பல்கலைக்கழகங்களின் உங்கள் கனவை நனவாக்கிக்கொள்ளுங்கள்




*Interview*

**At Queens Hotel (Lake View) Kandy**
Date: Sunday 18.09.2022
Time: 9.00 Am to 2.00 Pm

**Institute of Vocational Studies**
Head Office : No. 476, Dalugama, Kelaniya
Date: 24.09.2022 onwards
Time : 10.00 am to 4.00 pm

மேலதிக விபரங்களுக்கு: பேராசிரியர் விஜிதா சேனாநாயக்க

IVS
**Institute of Vocational Studies**
Since: 1982 (30 Years Trusted Services)
No. 476, Dalugama, Kelaniya
Tel: 0777 444 500



## கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம்
## கட்டுபெத்த - மொறட்டுவை

IETI Moratuwa

**2023**

2023 புதிய தொழில்நுட்ப மற்றும் கைதொழிலுக்கான
## புதிய மாணவர்களை உள்வாங்கல்

முதல் பிரிவு (ஜனவரி)

- சலுகை விலைக்கு இ.பொ.ச. பஸ் பருவச்சீட்டு
- இலவச சீருடை
- தூரம் அடிப்படையில் விடுதி வசதி (ஆண்களுக்கு மாத்திரம்)
- நூலக வசதி
- சலுகை விலைக்கு உணவு

**கற்கை கட்டணத்துடன் தொடர்புடையது**

| | |
|---|---|
| **01. இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர் (விசேடம்) – Electronic Craftsman (Special)** | 03 வருடம் |

(Basic Work Shop Practice, Domestic Electrical Installation, Analog & Digital Electronics, Industrial Electronic, PLC, Micro Controller (PIC & ARDUINO) & Project Works)

| | |
|---|---|
| **02. மின்சார தொழில்நுட்பவியலாளர் (விசேடம்) – Electrician (Special) (NVQ 4)** | 03 வருடம் |

அடிப்படை தொழில் பட்டறை பயிற்சி, வீட்டு மற்றும் தொழிற்சாலை மின்சார சுற்று, மின்சார அளவீட்டு உபகரணம், வீட்டு/ தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் தொடர்பாடல் கட்டமைப்பு வெப்ப கட்டுப்பாட்டு தொழில்நுட்பம், PLC தொழில்நுட்பம், டிஜிட்டல் இலத்திரனியல், ஓடோமேசன் கட்டமைப்பு

| | |
|---|---|
| **03. நிர்மாண மேற்பார்பார்வை – Construction Supervisor (NVQ 4)** | 01 ½ வருடம் |

(Construction Management, Basic Workshop Practice, Basics in Construction Technology, basics in Engineering & Architectural Drawings and Auto Cad, Construction Materials, Surveying and Leveling, Water Supply, Drainage and Sewerage Systems, Road Construction and Quantity Surveying & Cost Estimates) மற்றும் நிர்மாணத் துறையில் பாரிய நிறுவனங்களுடன் வேலைத்தள பயிற்சி

| | |
|---|---|
| **04. கணிய அளவீடு உதவியாளர் – Quantity Surveying Assistant (NVQ 4)** | 01 வருடம் |

(Preparation of BOQ for small and medium construction, Pricing of BOQ, Prepare Bidding Document)

| | |
|---|---|
| **05. வரைவாளர் – Draughtsperson (NVQ 4)** | 01 ½ வருடம் |

(Building Construction, Building Services, Mathematics, Geometrical and Mechanical Drawings, Surveying & Levelling, Auto CAD, Electrical and Plumbing Drawings, Drawing Office activities, Building Services Drawings)

01,02,03,04,05 தொழில்பயிற்சிகளுக்காக கணிதம் அல்லது விஞ்ஞானப் பாடங்களில் திறமைச் சித்தியுடன் க.பொ.த. (சா.தர) சிங்கள மொழி மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது க.பொத. (உ.தர) பொறியியல் தொழில்நுட்பம் அல்லது தொழில்நுட்ப விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த. (சா.தர) சிங்கள மொழி, விஞ்ஞானம் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

| | |
|---|---|
| **06. குளிர்சாதனப்பெட்டி மற்றும் வளிச்சீராக்கி தொழில்நுட்பவியலாளர் – (Refrigeration & Air Conditioning Mechanic (NVQ 4)** | 02 வருடம் |

(அனைத்து வகையான குளிர்சாதனப்பெட்டி, வீட்டு மற்றும் தொழிற்சாலை வளிச்சீராக்கி கட்டமைப்பு)

| | |
|---|---|
| **07 இயந்திராதி தொழில்நுட்பவியலாளர் (விசேடம்) – Machinist (Special) (NVQ 4)** | 03 வருடம் |

Lathe, Milling, Grinding Machine Operation, Pneumatic and Hydraulic systems, Heat Treatment, CNC Programming, CNC Machining, EDM Process, Wire Cutting Process, LASER Cutting, Solid works, Auto Cad

06,07 தொழிற்பயிற்சிக்கு க.பொ.த. (சா.தர) சிங்கள மொழி மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

| | |
|---|---|
| **08. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப வல்லுநர் (Information & Communication Technology Technician (NVQ 4)** | 01 வருடம் |

(Maintain files and folders, MS Word, MS Excel, MS Power Point, Maintain Database (MS Access), Internet & E-mail, Install & Configure Operating System, Installation & Troubleshooting of Network, Graphic for web, Design static web pages, Develop Basic Software Solution)

| | |
|---|---|
| **09. கணனி கிறபிக் வடிவமைப்பாளர் (Computer Graphic Designer) (NVQ 4)** | 01 வருடம் |

(Adobe Photoshop, Adobe Illustrator, Adobe InDesign, Corel Draw, Printing & Scanning Method)

08,09 தொழில்பயிற்சிக்கு க.பொ.த. (சா.தர) சிங்கள மொழி, ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் அடிப்படை கணினி கற்கை ஒன்றை கற்றிருத்தல்.

| | |
|---|---|
| **10. வேல்டின் தொழில்நுட்பவியலாளர் (விசேடம்) – Welder (Special) (NVQ 4)** | 03 வருடம் |

(MMA / GAS / TIG / MIG / MAG / FCAW / PLASMA / SPOT / STUD Welding தொழில்நுட்ப முறை Destructive & Non Destructive Testing Methods, Plate & Pipe Weld)

| | |
|---|---|
| **11. புத்தகக் கட்டுநர் – (Book Binder) (NVQ 4)** | 01 ½ வருடம் |

(அச்சுத் தொழில்துறையின் அறிமுகம், புத்தகம் கட்டுதல் மற்றும் முடித்தல், புத்தகம் கட்டலின் முடித்தலுக்கான பாகங்களை ஒழுங்குபடுத்தல், அச்சுக்கு தயார்படுத்தல்/ வெற்று காகிதங்களை பாதுகாத்தல், Finishing காகிதங்களை தயார் செய்தல், சேகரிக்கப்பட்ட பாகங்களை பாதுகாத்தல், புத்தக உறையை தயார் செய்தல், Finishing செய்தல், Spring Back புத்தகம் கட்டல், Rebinding செய்தல்)

| | |
|---|---|
| **12. மரவேலை தொழில்நுட்பவியலாளர் (வீட்டுத்தளபாடங்கள்) - Carpenter (Furniture) (NVQ 4)** | 02 வருடம் |

கைக் கருவிகளை பயன்படுத்தல் மற்றும் அடிப்படை மர முட்டு அமைத்தல் மற்றும் நவீன இயந்திரங்களை பாதுகாப்பாக பயன்படுத்தி மரப்பலகை மற்றும் கலப்பு மரப்பலகை மூலம் வீட்டுத்தளபாடங்களை தயாரித்தல், கைக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை கூர் செய்தல் மற்றும் பராமரிப்பு, நவீன கருவிகள் மற்றும் உபகரண பயன்பாட்டில் தளபாடங்களை பளபளப்பூட்டல் (பொலிஷ் செய்தல்), மரப்பலகை தொழில்நுட்பம் தொடர்பிலான கோட்பாட்டு அறிவு, தொழிநுட்ப முறையில் நகர்த்தல் மற்றும் தொழில்நுட்ப கணிதப் பயன்பாட்டில் மதிப்பீடுகளை தயாரித்தல்.

| | |
|---|---|
| **13. மரவேலை தொழில்நுட்பவியலாளர் (கட்டிடம்) – Carpenter (Building) (NVQ 4)** | 01 ½ வருடம் |

(கூரை நிர்மாணம் மற்றும் உட்கூரை நிர்மாணம், இந்தப் பாட விடயங்கள் தவிர கட்டட நிர்மாணத்தில் பயன்படுத்தப்படும் வேறு தொழில்நுட்ப முறைகள் கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியில் அறிவூட்டப்படும்.)

| | |
|---|---|
| **14. அலுமினியம் புனைவாளர் – Aluminium Fabricator (NVQ 4)** | 01 வருடம் |

(அலுமினியம் சன்னல் மற்றும் கதவுகள் தயாரித்தல், பிரிப்பு (partition) கடைக் கதவு மற்றும் காணித்துண்டுகளை பிரித்தல், ஏணி நிர்மாணம், Glass & Tempered Glass பொருத்துதல், காட்சி அலுமாரி அமைத்தல், குளியலறை பிரித்தல், (Shower Cubicles) உள்ளக கதவு அமைத்தல் மற்றும் பொருத்துதல் (Roller Doors) அலுமினியம் உட்கூரை அமைத்தல் மற்றும் பொருத்துதல், வேறு அலுமினிய பொருட்களை பொருத்துதல்)

10,11,12,13,14 தொழில் பயிற்சிக்காக குறைந்தபட்சம் க.பொ.த. (சா.தர) வரை கல்வி கற்றிருத்தல்

| | |
|---|---|
| **15 குழாய் பொருத்துநர் – Plumber (NVQ 4)** | 02 வருடம் |

(தற்போது தொழில்துறையில் பயன்படுத்தப்படுகின்ற PVC, CPVC, GI, PB, PPR மற்றும் HDPE குழாய் வகைகள் But fusion, Heat fusion மற்றும் Electro Fusion போன்ற அதி நவீன தொழில்நுட்ப முறைமையை பயன்படுத்தி இணைத்தல், நவீன துப்பரவேற்பாட்டு துணைப்பொருட்களை நிறுவுதல், நீர் பம்பி நிறுவுதல், சூடான நீர் கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் திட்ட வடிவமைப்பு அறிமுகம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்.)

15 தொழில்பயிற்சிக்காக குறைந்தது 08ஆம் தரம் வரை கல்வி கற்றிருத்தல்

**வாழ்வில் அர்த்தபூர்வமான புதிய பக்கத்தை திருப்புங்கள்....**
**வாருங்கள்... எம்முடன் இணையுங்கள்....**

| | |
|---|---|
| **பயிற்சி தொடர்பான விபரம்** | அனைத்து கற்கைகளும் இரட்டை பயிற்சி முறை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி தொழில் பயிற்சியின் முதல் பாதியில் அடிப்படை பயிற்சி நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படும். பயிற்சியின் இரண்டாவது பாதியில் மேலதிக பயிற்சிக்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வழங்கப்படும். அனைத்து தொழிற்பயிற்சிக்காகவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அனைத்து கற்கைகளுக்காகவும் ஆங்கில மொழி அறிவு வழங்கப்படும். |
| **தேர்வு முறை** | எழுத்துமூல பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் |
| **விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை** | 2022.10.14 ஆம் திகதிக்கு 16 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாதவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்பதோடு, A4 அளவான பக்கம் ஒன்றில் தயாரிக்கப்படும் தமது சுயவிபரக் கோவையை தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றுடன் 2022.10.14 ஆம் திகதிக்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன் பணிப்பாளர்/ அதிபர், கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம், 581, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். உங்களது முகவரி குறிப்பிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடித உறை ஒன்றை விண்ணப்பத்துடன் அவசியம் அனுப்ப வேண்டும். (விண்ணப்பப் படிவ மாதிரிக்காக **www.naita.gov.lk** என்ற இணையதளம் அல்லது 2022.09.16 ஆம் திகதிய அரச வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.) விண்ணப்பத்தை இட்டு அனுப்புகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "புதிய மாணவர்களை உள்வாங்கல் 2023 ஜனவரி" என்று குறிப்பிடுதல் வேண்டும். தபாலில் காணாமல்போகும் அல்லது தாமதிக்கும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம் பொறுப்பேற்காது. தாமதத்தை தவிர்ப்பதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை முன்கூட்டியே சமர்ப்பிக்கும்படி கோரப்படுகிறது. |

அனைத்து விசாரணைகளுக்கும்:
011 2647393/ 011 2641092/ 011 2643356
ieti katubedda moratuwa

HOT LINE
1951

www.naita.gov.lk
naita Sri lanka

NAITA

கல்வி அமைச்சு
திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

# காத்திருக்கும் நேரம் வீணான நேரமே

## உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்பு

### இம்பீரியல் இன்ஸ்டிடியூட் ஆ.ஃ.ப் ஹையர் எஜுகேஷன் (IIHE) உடன் கைகோர்க்கின்றது NCUK

இம்பீரியல் இன்ஸ்டிடியூட் ஆ.ஃ.ப் ஹையர் எஜுகேஷன் (IIHE) இலங்கை மாணவர்களுக்கு NCUK சர்வதேச அடிப்படைக் கற்கை ஆண்டு மூலம் உலகெங்கிலும் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்களுக்கு உத்தரவாதமான அணுகலை வழங்குவதற்காக NCUK உடன் ஒத்துழைத்துள்ளது. IIHE மற்றும் NCUK என்பன மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் வெற்றிகரமாக முன்னேற அவர்களின் கல்வி மற்றும் ஆங்கில மொழி திறன்களை மேம்படுத்த உதவும்.

NCUK இன்டர்நேஷனல் ஃ.பவுண்டேஷன் ஆண்டு, எட்டு மாத காலத்தை கொண்டது இது வணிகம் மற்றும் நிதி மற்றும் சட்டத்தில் பட்டங்களுக்கு வழிவகுக்கிறது. உலகெங்கிலும் உள்ள 45க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுக்கான வாய்ப்புகளை பெறுவதற்கு மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை வழிநடத்த IIHE பயிலரங்குகள் மற்றும் Webinarகளை நடத்தும். NCUK இன்டர்நேஷனல் ஃ.பவுண்டேஷன் ஆண்டிற்கான உள்ளீர்ப்பு அக்டோபர் 3, 2022 இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

IIHE ஆனது இலங்கையில் 1996 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தனியார் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனமாக, ஆர்வமுள்ள மாணவர்களுக்கு குறைந்த செலவில் இளங்கலை மற்றும் முதுகலை கல்வியை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. IIHE இல், மாணவர்கள் ஐக்கிய இராச்சியம் மற்றும் மலேசியாவிலிருந்து சர்வதேச அளவில் இணைந்த பல்கலைக்கழகங்கள் மூலம் மதிப்புமிக்க பட்டங்களை பெறமுடியும். IIHE ஆனது 1500 பழைய மாணவர்களை கொண்டது, அவர்கள் தற்போது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தனியார் மற்றும் அரச துறைகளில் உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

தற்போது இலங்கை பாரிய நிதிநெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. நிதி மற்றும் அதிகரிக்கும் வெளிநாட்டு நாணயப் பெறுமதி காரணமாக இலங்கையின் பொருளாதார நிலை மிகவும் நிச்சயமற்றதாக உள்ளது. 2022 ஜூன் மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 58.90% ஆக உயர்ந்துள்ளது. பொருட்களின் விலை உயர்வு, எரிபொருள் விலைகள் மற்றும் நிதிப் பற்றாக்குறை காரணமாக பணவீக்கம் 24.7% ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் வாழ்க்கைச் செலவு வேகமாக அதிகரித்து வருகிறது. மேற்கூறிய அனைத்து காரணிகளும் இலங்கையின் கல்வித் துறையை மோசமாகப் பாதித்துள்ளன, முக்கியமாக வெளிநாட்டு கையிருப்பு இல்லாததால். தற்போதைய கல்வித்து றையின் தரம் குறைந்து வருகின்றது. குறைந்த வளங்கள், மற்றும் பட்டதாரிகளின் வேலையின்மை ஆகியவை கவலைக்குரிய விஷயமாக உள்ளன.

THE UNIVERSITY CONSORTIUM

அதனாலேயே வாய்ப்புகள் வழங்கப்பட்டன

IIHE பாடத்திட்டத்தில் இதனால், வாய்ப்புகள் வழங்கப்பட்டன

IIHE பாடத்திட்டத்தில் NCUK ஐ சேர்ப்பதன் மூலம், மாணவர்கள் சர்வதேசப் பல்கலைக்கழகங்களுக்கு முன்னேற அதிக வாய்ப்புகள் உள்ளன.

நீண்ட வெற்றி வரலாற்றுடன், NCUK கூட்டமைப்பு UK, USA, கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா மற்றும் நியூசிலாந்தில் உள்ள 45 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் மாணவர் இணைவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது:

- மான்செஸ்டர் பல்கலைக்கழகம்
- பிரிஸ்டல் பல்கலைக்கழகம்
- ஆக்லாந்து பல்கலைக்கழகம்
- டர்ஹாம் பல்கலைக்கழகம்
- அல்பேர்ட்டா பல்கலைக்கழகம்
- லான்காஸ்டர் பல்கலைக்கழகம்
- கார்டி.ஃ.ப் பல்கலைக்கழகம்
- வெலிங்டன் விக்டோரியா பல்கலைக்கழகம்

NCUK வணிகம், சட்டம், பொறியியல், அறிவியல், மனிதநேயம், கலை மற்றும் பல பாடங்களில் பல்கலைக்கழக பட்டப்படிப்புகளில் 40,000 க்கும் மேற்பட்ட சர்வதேச மாணவர்களைச் சேர்த்துள்ளது! NCUK இன்டர்நேஷனல் ஃ.பவுண்டேஷன் ஆண்டை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்கள் NCUK பல்கலைக்கழகத்தின் ஆயிரக்கணக்கான பட்டப்படிப்புகளில் இருந்து தேர்வு செய்யலாம்.

இதற்கான ஒப்பந்தத்தைக் கையொப்பமிடும் விழாவில், நிர்வாக இயக்குனர்/தலைமை நிர்வாகி திரு. பிராட்லி எமர்சன் இவ்வாறு கூறினார்.

”ஒவ்வொரு தலைமுறையினருக்கும் அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்களை சிறந்தவர்களாக மாற்றுவதற்கான கடமை உள்ளது, ஒரு தலைமுறையை மேம்படுத்துவதற்கான ஒரே வழி கல்வி மட்டுமே. உலகம் நான்காவது புரட்சிக்குத் தயாராகி, டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கிச் செல்லும் நேரத்தில், ஒரு தேசமாக நாம் அதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நமது குழந்தைகளுக்கு கற்றல் வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அவர்கள் உலகளாவிய மட்டத்தில் போட்டியிட முடியும். இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, NCUK உடனான எமது கூட்டாண்மையை விரைவுபடுத்துவது மட்டுமன்றி, உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்து எமது பிள்ளைகள் தமது பட்டங்களைப் பெறுவதற்கு குறைந்த செலவில் உதவுகிறது. இதுவே கல்வியின் உயர்ந்த நோக்கம் என்று நாங்கள் நம்புகிறோம்”

NCUK தலைமை நிர்வாகி ஸ்டுவர்ட் ஸ்மித் கூறியதாவது:

"IIHE Sri Lanka உடனான இந்த கூட்டாண்மையானது, இலங்கை மற்றும் பரந்த பிராந்தியத்தில் உள்ள மாணவர்களுக்கு ஒரு பெரிய மற்றும் அற்புதமான வாய்ப்பை உலகத்தரம் வாய்ந்த தகுதிகளைப் வழங்கும் ஒரு அருமையான வாய்ப்பைப் பிரதிபலிக்கிறது. இலங்கை முழுவதிலும் உள்ள இலட்சிய மற்றும் திறமையான மாணவர்களை எங்கள் NCUK திட்டங்களுக்கும், இறுதியில் உலகெங்கிலும் உள்ள எங்கள் பங்குதாரர் பல்கலைக்கழகங்களுக்கும் வரவேற்பதற்கு நாங்கள் மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறோம்.

NCUK 100+ கல்வி பரிசு விருதுகள் மற்றும் உதவித்தொகைகளை வழங்குகிறது, இது £100-£1000 வரையிலான NCUK கற்கும் மாணவர்களுக்கு பிரத்தியேகமானது, கல்வித் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. கல்வியாண்டில் எங்கள் கற்கைநெறிகளில் ஒன்றைப் படித்து முடித்த அனைத்து NCUK மாணவர்களுக்கும் கல்விப் பரிசுகள் காத்திருக்கும். இதன் மூலம், மாணவர்கள் சர்வதேசப் பல்கலைக்கழகங்களுக்கு முன்னேற அதிக வாய்ப்புகள் உள்ளன.

iiHE | 25 YEARS OF ELEVATING EDUCATION

2022-23 கல்வியாண்டில் உள்ள மாணவர்கள், NCUK தகுதியால் பின்வரும் கல்விப் பரிசுகளுக்குத் தகுதியுடையவர்களாகிறார்கள்

- சர்வதேச அடித்தள ஆண்டு
- சர்வதேச ஆண்டு ஒன்று
- சர்வதேச ஆண்டு இரண்டு
- பட்ட மேற்படிப்புக்கான தயாரிப்பு

ஒவ்வொரு ஆண்டும் எந்தவொரு உதவித்தொகைக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். மாணவர்கள் விண்ணப்பிக்கக்கூடிய மூன்று பிரிவுகள் உள்ளன:

1. NCUK மதிப்புகள் விருது - NCUK மதிப்புகள் விருதுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ள மாணவர்கள் NCUK இன் முக்கிய மதிப்புகளில் ஒன்றை எவ்வாறு பயன்படுத்தினர் என்பதற்கு ஆதாரம் தேவை. அவர்களின் NCUK தகுதியைப் படிக்கும் நேரம். ஊேருமு இன் நான்கு மதிப்புகளான தரம், புதுமை, ஒருமைப்பாடு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதற்கான ஆதாரம்
2. NCUK ஃ.பியூச்சர் லீடர்ஸ் விருது - NCUK ஃ.பியூச்சர் லீடர்ஸ் விருதுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ள மாணவர்கள் தங்கள் தலைமைத்துவ திறன்கள் மற்றும்/ அல்லது எதிர்காலத்தில் நேர்மறையான மாற்றத்திற்காக தங்கள் பட்டத்தை எவ்வாறு பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர் என்பதை நிரூபிக்க வேண்டும்.
3. NCUK இன்ஸ்பயர் விருது - NCUK இன்ஸ்பயர் விருதுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ள மாணவர்கள் வெளிநாட்டில் படிப்பதன் அர்த்தம் என்ன என்பதையும், NCUK உடன் படிப்பது அவர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்கு எவ்வாறு உதவியது என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

ஆறு NCUK உதவித்தொகைகள் கிடைக்கும் (ஒரு வகைக்கு இரண்டு வெற்றியாளர்கள்) ஒவ்வொரு வெற்றியாளருக்கும் £1,000 வழங்கப்படும்.

சிறந்த கேள்வி நிறைந்த கற்கைகள்:

வணிகம்

- கணனி அறிவியல்
- சட்டம்
- கணிதம்
- நிலைத்தன்மை
- மருத்துவம் மற்றும் மருத்துவ அறிவியல்
- விலங்கு/கால்நடை அறிவியல்
- தாதியம்
- விளையாட்டு

**மாணவர் தரும் சான்றுகள்**

**ஜேஹுன் லீ**

”பல்கலைக்கழகத்திற்கு என்னைத் தயார்படுத்தும் அத்தியாவசிய திறன்கள் எனக்குக் கற்பிக்கப்படும் என்று எனக்குத் தெரிந்ததால், நான் NCUK இன்டர்நேஷனல் ஃ. பவுண்டேஷன் ஆண்டுத் தகுதியைப் படிக்கத் தேர்ந்தெடுத்தேன்!”

**தென் கொரியா**
**லண்டன் குயின் மேரி பல்கலைக்கழகம்**
**வணிக மேலாண்மையுடன் டீளுஉ (ர்ழளெ) கணினி அறிவியல்**



தினகரன் வாரமஞ்சரி

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777438169 கண்டி நகரிற்கு அருகில் ஹொடேல் F/ L/ 11 லைசன் உள்ள 10 அறை க்கு மேல் தற்போது நடத்திச் செல்ல ப்படும் A/ C, கராஜ், பொருட்களுடன் வீடு கு ண்டசாலை திகன வீ திக்கு முக ப்பாக தற்போது சில க ட்டிடங்கள் உள்ளன. மிகப் பெறுமதியான 80 பேர்ச் இடைக்கால பயிருடன் காணி உண்டு. 1 பேர்ச் 12 இலட்சம், தனியார் வை த்தியசாலை, வயோதி பர் , இல்லம், டியூஷன் இ ற்கு , களஞ்சியத்தி ற்கு, மொன்டிசூரிக்கு பொ ருத்தமானது. வி ற்ப னைக்கு அல்லது கு த்தகைக்கு வங்கிக் கடன் உண்டு/ இல்லை. 077 728214 7 050902

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

உ ண வ க ம் / சு ப் ப ர் மார்கெ ட் அல்லது சில்லறை கடைக்கு பொருத்தமான இடவச தி வாடகைக்கு உண்டு. பிரதேசம் 11500SF கொழும்பு 05 கிருள றோட் இல் அமை ந்துள்ளது, பிரதேசம் 1000SF கொழும்பு 05 கி ரு ள றோட் இல் அமைந் துள்ளது, பே ஸ்லைன் வீதிக்கு 05 நிமிட ஓட்டம். சிற ப்பா ன அமைவிடம். கொ ழும்பு 07 இற்கு அருகில். போதுமான கார் நிறுத்தும் இடங்க ள். 3 பேஸ் மின்சாரம். மற்றும் சகல வசதிக ளும் உண்டு. மேலதிக விபரங்களுக்கு. 076 5308200. 054951

களஞ்சியம்/ தொழிற்சா லைக்கு பொருத்தமான இடவசதிக ள் வாடகை க்கு உண்டு. தரை பிரதேசம் 4150 SF வத்தளை, ஹெந்த ளையில் அமைந்து ள்ளது. தரை பிரதேசம் 660 OSF வத்தளை, ஹெந்தளையில் அமை ந்துள்ளது. (நவம்பர் 15 முதல் கிடைக்கும்.) துறைமுகம், துறைமு கநகர், புறக்கோட்டை க்கு அ ருகில். 3 பேஸ் மின்சாரம் மற்றும் சகல வசதிகளுடன் உண்டு. தொடர்பு 076 5308200. 054959

சிறிய/ நடுத்தர அளவான தொ ழி ற் சா லை க் கு உகந்த இடவசதி வாட கைக்கு உண்டு. தரைப் பிரதேசம் 8500 ச.அ. அமைவிடம் 545, ஶ்ரீ சங்கராஜ மாவத்த, கொழும்பு 10. து றைமுகம், துறைமுக நகர் ம ற்றும் புறக்கோ ட்டை க்கு அருகில். 3 பேஸ் மின்சாரம் (250 AMP) மற்றும் சகல வசதிகளும் உண்டு. தேவைப்படின் திருத்த ங்கள் மேற்கொள்ள லாம். தொடர்பு 076 5308200. 054928

### 210 வியாபார ஸ்தலம் தேவை

20/ 30 இலட்சத்தி ற்குள் வீடு அல்லது க டை ஒன்று வாங்க தே டு கி றோ ம். 0778779686, 0779703078, 0775141889. 055057

### 218 மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை

விஷேட சிகிச்சை நீரிழி வினால் ஏற்படும் பாத விறைப்பு, தீராத பாத காயங்க ள், ஆத்திறை ற்றிஸ், பாரிசவாதம் மற்றும் குடல் நோ ய்களுக்கான சிறந்த சி கி ச் சை க ளு க் கு அழையுங்கள். 077 6 8 66359, 070 3989799. 054697

## வேலைவாய்ப்பு

### 306 வெற்றிடங்கள் மருத்துவம்

மிக நீண்ட காலமாக கா ணப்படும் முழங்கால் வலி, இடுப்பு வலி, Sciatica Cervical Spondylosi s, கழு த்து மற்றும் தோ ள்பட்டை இருக்கு ம், வலி முழங்கால் வலி போன்றவற்றுக்கு Mo xa சிகிச்சை முதல் தடவையில் மாற்றத்தை உணரலாம். இல. 78A, W.A. Silva மாவத்தை, கொ ழும்பு06. முன் அனு ம தி அவசியம். 07 6 0620202. 054575

JOB

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கம்பஹா ஆசிரி பேக்கர்ஸ் இற்கு திறமையான சோட்டீஸ்/ றொட்டி பாஸ்மார் , 'பான்' வண்டிக்கான திரீவீல் சா ரதிகள் உடன் தேவை. (வெளிப் பிரதேசங்க ள் விரும்பத்தக்கது) சிங்களம்/ தமிழ் விரு ம்பத்தக்கது. கூடுதல் சம்பளம் உணவு, தங்கு மிடம் இலவச ம். 071 6205828, 076 8039890. 054973

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

மத்துகம பிரதேசத் தோட்ட த்தில் தங்கி இறப்பர் பா ல்வெட்டுவதற்கு மற்றும் தோட்ட வேலை செய்வ தற்கு குடும்பம் தேவை. 0714 556699, 0777 444714, 077 1376477. 054854

மாலிபொட தேயி லைத் தோட்டத்தில் கொழுந்து பறித்தல், பூப்பறித்த லுக்கு தம்பதி தேவை. தங்குமிடம் உணவு இல வசம். கூடுதல் சம்பளம் மற்றும் கொடுப்பனவுக ள். 077 2540100, 071 3222830. 054388

### 325 தொழில்துறை பொது

பாதுகாப்பு வெற்றிடங்கள் புதுக்குடியிறுப்பு பிரதே சத்தில் அமைந்துள்ள ஆடைத் தொழிலகத்தி ல் OIC/ JSO/ LSO வெற்றிடங்கள் உண்டு. வயது 5 0 இற்கு சாதாரண கல்வி அறிவு ள்ளவர்கள் அழையுங்க ள். 0 765321401, 07 7 3477405 055168

## காணி/தோட்டம்

### 601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு

தரைமாடி அப்பாட்மென்ட் NHDA மவுன்ட் கிளி பர்ட் 1km ஹோமாகம NSBM இற்கு அருகில் வெ ளி நா ட் ட வ ரு க் கு பொ ரு த் த மா ன து. 0777 443497. 055253

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

தெமட்டகொட ஆராமய வீதி இறுதிப் பகுதியி ல் 40 அடி வீதி சகல வசதிகளுடன் வீடு 15 பேர்ச் காணி விற்பனை க்கு. 077 3507660. 054511

நுகேகொடை ஜுபிலி போஸ்ட் வீதியில் பிரதான வீதிக்கு 25 கி.மீ. தொலைவில் 5.15 பேர்ச் வி ற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மா னிக்கப்படலாம். 072 7575267. 053844

மாதிவெல கோட்டே ஶ்ரீ ஜ ய வர்தனபுர வைத்தி ய சாலையில் இருந்து 5 0 0m தூரத்தில் 15 பேர்ச் வீதம் பெறுமதி யா ன காணித்துண்டு க ள் விற்பனைக்கு. அ ழையுங்கள் 077 3951560. 055027

### 671 வீடு சொத்து தேவை

நான்கு அறைகள் சகிதம் கூலிக்கு வீடு ஒன்று தெஹிவளை யில் தேடுகிறோம். காணிகள் வீடுகள் விலைக்கு கூலிக்கு எடுத்துக் கொடுக்கப்ப டும். 0775141889, 0779703078. 055064

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

பலவருடங்களாக நம்பிக்கையுள்ள சேவை

### மணமகள்

அழகிய முஸ்லிம் மணம களுக்கு தகுந்த மாப்பி ள்ளையை துணையை பெற்றோர் தேடுகிறார்க ள். 077 5141889, 081 2304109, 077 8779686, 077 9703078 இன்னும் மாப்பிள்ளை கள் பெண்கள் உண்டு. B186892

### மணமகன்

சோனகர் U.S.A. குடி யுரிமை 59, தொ ழில்சார் அல்லது வியாபா ரம் அல்லது விவாக ரத்தான 35 50 வ யது பெண்ணை தேடுகிறார். மணமகன் அன்பான, சிரத்தையு ள்ள கௌர வமானவர். coffeecup1562@gmail.com G186800

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

---

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

**COMMERCIAL BUILDING FOR SALE**
**KANDY**
21.5P Six storied Building 18,000 sq.ft. with 15 Parking
Monthly Rental income above Rs. 700,000/-
SELLING PRICE NEGOTIABLE
0777 258 280

**THREE-STOREY COMMERCIAL PROPERTY FOR SALE**
**COLOMBO- KANDY**
MAIN ROAD
Located between Pilimathalawa and Kadugannawa
Please get in touch for more information.
Please contact - 0776 283 319
* SERIOUS BUYERS ONLY *

**விற்பனைக்கு**



447 லுனா டவர்
1090 சதுர அடி, C டைப்
நம்ப முடியாத விலை
0777 035 678

**போட்டோ குறும் விளம்பரம்**



Wagon-R CAZ-XXXX 2018, full option, auto transmission, zero accident, bluetooth setup, sub buffers,push start, original 50000km, black, first owner, Gothatuwa.
077 1 256 193

**INVESTMENT IN OMAN**
Unique Opportunity
New Paradise for TODAY'S TOURISTS
- Beach Front Land in Tourism Zone.
- Built Ready / Waterfront / Sandy Property.
- Can Negotiate as Sole Investor OR For Joint Venture.

No Brokers
Can reach Site by Sea Land or Air
Oman Ministry of Tourism Dept. Approved Hotel Plan is available
Direct Contact by Owner: +968 99 31 4222
Anthony Tennyson de Silva
222/20, Mihindu Mawatha, Warahanthuduwa, Mahara, Kadawatha.
077 1 973 562

தினகரன் வாரமஞ்சரி
**திருமண சேவைகள்**
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

SOLAR MINI STREET LIGHT — 48 COB — RS. 3,750/-
SOLAR INDOOR WORK LIGHT — RS. 5,750/-
SOLAR INDOOR OUTDOOR WALL LIGHT — RS. 3,750/-
SOLAR 3 WAY LIGHT — RS. 4,750/-
0777 80 65 42 SOLAR X

**REPAIRS / SALE**
**Grandfather Clocks**
D.M.D. Roanos
Service, Repairs, Replacement of "Grandfather" and all Wall Clocks undertaken.
WATCH Repair & Service
0777 858 621 / 071 7371 122 / 0112 754 545

**KOTTAWA**
**BARE LAND FOR SALE**
4 Minutes to High Way Entrance



352 PERCH
Contact - 0777 631 722 / 0777 508 466




**DEHIWALA IN THE MARINE DRIVE**
PRIME PROPERTY FOR SALE
Prime Property in the Marine Drive- Dehiwala two road frontage
- Two road frontage
  - Marine Drive
  - Melford Crescent
- Square block
- 18.5 perches



0769 176 537

# இலங்கை கடற்படை

## விலைமனு கோரல் அறிவித்தல்

### இலங்கை கடற்படையினருக்கு உரிய சேவைக்கு பொருத்தமில்லாத வாகனங்களை விற்பனை செய்தல்

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான பாவனைக்குதவாத வாகனங்களை விற்பனை செய்வதற்காக திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் **2022, அக்டோபர் 12** ஆம் திகதி இலங்கை கடற்படை தலைமையகம், தபால் பெட்டி இல.593, கொழும்பு 01 என்ற விலாசத்தில் வைத்து முத்திரை இடப்பட்ட விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அது தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் பின்வருமாறு.

1. விற்பனைக்குரிய வாகனங்களில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு விலை மனு சமர்ப்பிக்கப்படலாம். ஒவ்வொரு வாகனத்துக்கும் மற்றும் தொகைக்கும் (Lot) தனித் தனியாக விலை குறிக்கப்பட்ட விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. விலை மனு கட்டணமாக திருப்பிச் செலுத்தப்படாத **ரூ.500/-** மற்றும் ஒவ்வொரு வாகனத்துக்கும் / தொகைக்கும் (Lot) கீழ் குறிப்பிடப்படும் வகையில் பிணைப் பணம் செலுத்தப்பட வேண்டும். அப்பணம் தலைமைய நிதி பணிப்பாளரிடம் காசாக செலுத்தப்பட வேண்டும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டுகள் **2022, செப்டம்பர் 19** ஆம் திகதி முதல் **2022, அக்டோபர் 11** ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் **0900** மணி முதல் **1600** மணி வரை இ.க.ப.க. கெமுனு ராகம, வெலிசர, சிரேஷ்ட பணியாளர் அதிகாரி (பண்டகசாலை பொறுப்பாளர்) இடம் கையளிக்கப்பட்ட பின்னர், விலை மனுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதுடன், விலை மனு வழங்கப்பட்ட பின்னர், வெறும் கொள்வனவாளர் கொள்வனவு செய்வதை நிராகரித்தால், அப்பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

முழு வாகனத்துக்கு (இலகு மற்றும் கன வாகனங்கள்) ரூ.15,000.00

| வாகன இலக்கம் | வாகன வகை | தயாரித்த வருடம் |
|---|---|---|
| ශ්‍රී 1141 | கார் | 1998 |
| ශ්‍රී 5175 | கார் | 1999 |
| ශ්‍රී 7330 | பொலிரோ ஜெப் | 2007 |
| ශ්‍රී 7341 | பொலிரோ ஜெப் | 2007 |

முழு வாகனத்துக்கு மோட்டார் சைக்கிள்கள் ரூ.5,000.00

| வாகன இலக்கம் | வாகன வகை | தயாரித்த வருடம் |
|---|---|---|
| ශ්‍රී 3845 | மோட்டார் சைக்கிள் | 2008 |
| ශ්‍රී 7940 | மோட்டார் சைக்கிள் | 2005 |
| ශ්‍රී 8880 | மோட்டார் சைக்கிள் | 2007 |
| ශ්‍රී 9928 | மோட்டார் சைக்கிள் | 2007 |
| ශ්‍රී 9929 | மோட்டார் சைக்கிள் | 2007 |
| ශ්‍රී 3857 | மோட்டார் சைக்கிள் | 2007 |

உடைந்த வாகனங்கள் (இலகு மற்றும் கன வாகனங்கள்) ரூ.7,500.00

| வாகன இலக்கம் | வாகன வகை |
|---|---|
| ශ්‍රී 7321 | பொலிரோ ஜெப் |
| ශ්‍රී 7307 | பொலிரோ ஜெப் |
| ශ්‍රී 7319 | பொலிரோ ஜெப் |
| ශ්‍රී 7345 | பொலிரோ ஜெப் |

தொகை 01 (இடிபாடடைந்த உழவு இயந்திரங்கள்- 04 ஒரு Lot ஆக) ரூ.7,500.00

தொகை 02 (இடிபாடடைந்த மோட்டார் சைக்கிள்கள்- 06 ஒரு Lot ஆக) ரூ.5,000.00

3. விற்பனைக்குரிய பாவனைக்குதவாத வாகனங்களை **2022, செப்டம்பர் 19** ஆம் திகதி முதல் **2022, அக்டோபர் 11** ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் **0900 மணி முதல் 1600 மணி வரை இ.க.ப.க. கெமுனு ராகம, வெலிசர, இலங்கை கடற்படை விற்பனைத் தொகுதியில்** பார்வையிடலாம். வருகை தருவோர் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.
4. **2022, அக்டோபர் 12** ஆம் திகதி **1400** மணி வரை விலைமனு ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், இலங்கை கடற்படை தலைமையகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் நேரம் கழிந்த உடன் திறக்கப்படும்.
5. மேலும் விபரங்களை தொ.பே. இலக்கம் **011 – 7193375** இன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**இலங்கை கடற்படை தலைமையகம்,**
**தபால் பெட்டி இல. 593,**
**கொழும்பு 01.**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

---

# கேள்வி அறிவித்தல்

### பாணந்துறை பிரதேச சபை, வாத்துவ

## 2023ஆம் ஆண்டிற்காக இறைச்சிக்கடை மற்றும் சொத்து விளைச்சலை குத்தகைக்கு விடல்

பாணந்துறை பிரதேச சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள சொத்துக்களின் உரிமையை 2023.01.01 முதல் 2023.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்கான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.10.04 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும். அன்றே மு.ப. 10.15 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

- ✷ கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு குறித்த படிவக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணை தொகையைச் செலுத்தி 2022.10.03 பி.ப. 3.00 வரை பாணந்துறை பிரதேச சபை தலைமையகத்திலிருந்து கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.
- ✷ எதிர்காலத்தில் அரசினால் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களின் அடிப்படையில் குறித்த தொகைக்கு மேலதிகமாக வரித்தொகை சேர்க்கப்படலாம்.
- ✷ கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளும் போது தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொடர் இல. | சொத்துக்கள் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூ.) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ.) | வருடாந்த கேள்வி குறைந்த பட்ச கேள்வி (ரூ.) |
|---|---|---|---|---|
| | **வாத்துவ உப அலுவலகம்** | | | |
| 01 | மடவிள்கொட மயான பூமிக்காணியில் சொத்து விளைச்சல் | 87.15 | 300/- | 4,357.50 |
| | **தந்திரி முல்ல உப அலுவலகம்** | | | |
| 01 | அம்பலந்துவ மாட்டிறைச்சிக் கடை | 88,200/- | 3500/- | 4,410,000/- |
| | **கெசெல்வத்த உப அலுவலகம்** | | | |
| 01 | ஹேனமுல்ல பொதுச் சந்தை இல. 33 மாட்டிறைச்சிக்கடை | 113,610/- | 3500/- | 5,680,500/- |
| 02 | ஹேனமுல்ல பொதுச் சந்தை இல. 34 ஆட்டிறைச்சிக்கடை/ கோழியிறைச்சிக் கடை | 7,350/- | 3000/- | 367,500/- |

கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய விதம் மற்றும் கேள்வி நிபந்தனைகள் பற்றிய மேலதிக விபரங்களை கேள்விப் படிவங்களை வழங்கும்போது வழங்கப்படும். (038-2294567/ 038-2284767)

**தலைவர்,**
**பாணந்துறை பிரதேச சபை.**

---

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD · IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு கமத்தொழில் அமைச்சு

### விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

### மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் வேவலாவெவ, தம்புள்ள கொய்யா கொத்தணிக்கு 1.2 கி.மீ. – வேவலாவெவ அலகொலவெவ அஸ்போல்ட் பாதையை நிர்மாணித்தல் – கட்டம் ii

**(Construction of Wewalawewa Alakolawewa Asphalt Road phase ii – 1.2 Km for Guava Cluster in Wewalawewa, Dambulla in Matale District, Central Province)**

**ஒப்பந்த இல. LK-MOA-PMU-277523-CW-RFB**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட கிரயச் செலவிற்காக 58.630 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. பின்வருமாறு விபரப்படுத்தப்பட்டதும் கீழே காட்டப்பட்டுள்ள உருப்படிகளுக்காக தகுதியும் தகைமையும் வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் (ASM) செயற்றிட்டத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை வெவ்வேறாக இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பிடப்பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | தேவைப்படும் விலைமனுப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை முறித் தொகை (ரூபா) | செல்லு படியாகும் காலப் பகுதி |
| LK-MOA-PMU-277523-CW-RFB | மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் வேவலாவெவ, தம்புள்ள கொய்யா கொத்தணிக்கு 1.2 கி.மீ. - வேவலாவெவ அலகொலவெவ அஸ்போல்ட் பாதையை நிர்மாணித்தல் - கட்டம் i | 30.0 மில்லியன் | 6 மாதங்கள் | C4, C5 நெடுஞ்சாலை | 300,000.00 | 2023 ஜனவரி 26ஆம் திகதி வரை |

3. விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு மேலேயுள்ள வேலைக்காக 300,000.00 ரூபா விலைக்கோரல் பிணை முறி மற்றும் 2023-01-26ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு ஒரு விலைமனுதாரர் ஒரு விலைக்கோரலுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார். சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பதிலளிக்கக்கூடிய நிர்மாணத் துறைக்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்
4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.
5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மாத்தளை, மத்திய மாகாணம், கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், மாகாண பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 066 2051710, தொலைநகல் இல.: 066 233789) (மின்னஞ்சல்: asmpcpmt@gmail.com) மற்றும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. மாத்தளை, கொஹொம்பிலிவெல, இல. 20, கொட்டுவேகெதர வீதி, ASM செயற்றிட்டம், மாகாண பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் 2022 ஒக்டோபர் 05ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
8. விலைமனுக்கள் 2022 டிசம்பர் 28ஆம் திகதி வரையும் செல்லுபடியாதல் வேண்டும்.
9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. ஒரு விலைக்கோரல் ஆவணத்திற்கு மீளளிக்கப்படாத 5000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி மாத்தளை, கொஹொம்பிலிவெல, இல. 20, கொட்டுவேகெதர வீதி, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், மாகாண பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022 செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 11ஆம் திகதி வரை ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
11. விலைமனுக்களை 2022 ஒக்டோபர் 11ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மாகாண பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், இல. 20, கொட்டுவேகெதர வீதி, கொஹொம்பிலிவெல, மாத்தளை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. 2022 ஒக்டோபர் 11ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு மேற்படி முகவரியில் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு விலைமனுதாரர்களால் தெரிவு செய்யப்பட்ட நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (கீழ்நிலை),**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 20, கொட்டுவேகெதர வீதி,**
**கொஹொம்பிலிவெல, மாத்தளை.**

2022 செப்டெம்பர் 16ஆம் திகதி.

---

**கைத்தொழில் அமைச்சு**

## இந்திய கடன் வசதித் திட்டத்தின் கீழ் கைத்தொழில் மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான பதிவு - 2022

இந்திய மற்றும் இலங்கை அரசிற்கிடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையில் கைத்தொழில் செயற்பாடுகளிற்கு அத்தியாவசியமான மூலப் பொருட்களை கைத்தொழில் அமைச்சின் பரிந்துரையின் கீழ் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கைத்தொழில் மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய ஆர்வமுள்ள இறக்குமதியாளர்கள் 05.10.2022 ற்கு முன்னர் shorturl.at/cdgnT எனும் இணைய இணைப்பின் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளவும்.

இது தொடர்பான நடவடிக்கைமுறைகளையும் விதிமுறைகளையும் தெரிந்து கொள்வதற்காக அமைச்சின் https://www.industry.gov.lk/web/current-notices/ இணையதளத்தினுள் பிரவேசிக்கவும்.

**மேலதிக தகவலுக்காக**

| பெயர் | பதவி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| பா.குணாளினி | உதவிப் பணிப்பாளர் | 0729652340 |
| எம்.டி.என். நிஷாந்தி | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 0711097771 |

**செயலாளர்**
**கைத்தொழில் அமைச்சு**

பதிவிற்கு

இணையத்தளத்திற்காக

# இலங்கை இராணுவம்

## கேள்வி அறிவித்தல்

### மருந்துகள் மற்றும் மருத்துவ நுகர்வுப் பொருட்கள் / பல் சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருந்துகள் / மருத்துவ வாயுக்கள் ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் பரிகாரங்கள் (REAGENTS) / எலும்பு மற்றும் பொது சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஏனைய மருத்துவ பொருட்களை வழங்குவதற்காக விலைகளைக் கோருதல்

1. 2023ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்குத் தேவையான பின்வரும் விடயங்களை நிலையான விலையின் கீழ் கொள்வனவு செய்வதற்காக கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் இராணுவ கேள்விச் சபைத் தலைவரினால் கோரப்படுகின்றன.

| விபரங்கள் | கோவை இல. | பெறுமதி (ரூபா மில்லியன்) | விண்ணப்பங்கள் பெறப்படும்/ கேள்விகள் வழங்கப்படும் திகதியும் ரேநமும் (மு.ப. 9.30 - பி.ப. 4.00 வரை சனி - ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த) | கேள்வி/ முடிவுறுத்தப்படும் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| • மருந்துகள் மற்றும் மருத்துவ நுகர்வுப்பொருட்கள்) (Pharmaceutical & Medical Consumables) | DAMPS/TENDER/2023/01 முதல் 84 வரை | 1,094.90 | 19-09-2022 முதல் 31.11.2022 | கோவை இல. 01 முதல் 20 வரை 05-10-2022 1100 மணித்தியாலம்<br>கோவை இல. 21 முதல் 41 வரை 19-10-2022 1100 மணித்தியாலம்<br>கோவை இல. 42 முதல் 62 வரை 02-11-2022 1100 மணித்தியாலம்<br>கோவை இல. 63 முதல் 84 வரை 16-11-2022 1100 மணித்தியாலம் |
| • மோப்ப நாய்கள் மற்றும் குதிரைகளுக்கான மருந்துகள் (Medicines for Tracker Dogs & Horses) | DAMPS/TENDER/2023/151 முதல் 170 வரை | 239.78 | | கோவை இல. 151 முதல் 170 வரை 23-11-2022 1100 மணித்தியாலம் |
| • அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான பொருட்கள் (Items for ICU) | | | | |
| • எக்ஸ்ரே படச் சுருள்கள், கீக்கை பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் (X-ray Films, Reagents & Consumables for Radiology) | | | | |
| • இரத்த மாற்று பிரிவுக்குத் தேவைான பொருட்கள் (Requirements for Dialysis Unit) | | | | |
| • மத்திய தொற்றுநீக்கி வழங்கல் திணைக்களத்திற்கான பொருட்கள் (Items for Central Sterilization Supply Department) | | | | |
| • மருத்துவ வாயுக்கள் (Medical Gases) | | | | |
| • ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் பரிகாரங்கள் (Laboratory Chemicals & Reagents) | DAMPS/TENDER/2023/85 முதல் 131 வரை | 365.90 | | கோவை இல. 85 முதல் 108 வரை 30-11-2022 1100 மணித்தியாலம்<br>கோவை இல. 109 முதல் 131 வரை 14-12-2022 1100 மணித்தியாலம் |
| • உபகரணவிகள் மருந்துகள் மற்றும் பற்சிகிச்சை (Pharmaceuticals & Dental Consumables) | DAMPS/DEN/CONS/2023/01 முதல் 66 வரை | 72.20 | | கோவை இல. 01 முதல் 16 வரை 12-10-2022 1100 மணித்தியாலம்<br>கோவை இல. 17 முதல் 32 வரை 26-10-2022 1100 மணித்தியாலம்<br>கோவை இல. 33 முதல் 49 வரை 09-11-2022 1100 மணித்தியாலம்<br>கோவை இல. 50 முதல் 66 வரை 21-11-2022 1100 மணித்தியாலம் |
| • பற்சிகிச்சை சத்திரசிகிச்சை உபகரணங்கள் (Items for Dental Surgery Accessories) | DAMPS/DEN/ACCE/2023/67 முதல் 83 வரை | 99.29 | | கோவை இல. 67 முதல் 83 வரை 12-12-2022 1100 மணித்தியாலம் |
| • சத்திரசிகிச்சையகப் பொருட்கள் (Items for Operation Theatres) | DAMPS/TENDER/2023/132 முதல் 150 வரை | 174.75 | | கோவை இல. 67 முதல் 83 வரை 12-12-2022 1100 மணித்தியாலம் |
| • ECG பிரிவுகளுக்குத் தேவையான பொருட்கள் (Items Required for ECG Sections) | | | | |
| • உடற்கூறியல் பிரிவுக்குத் தேவையான பொருட்கள் (Items for Physiotherapy Sections) | DAMPS/TENDER/2023/171 முதல் 200 வரை | 207.18 | | கோவை இல. 132 முதல் 150 வரை 04-01-2023 1100 மணித்தியாலம் |
| • மருத்துவ புனருத்தாரனப் பொருட்கள் (Items for Medical Rehabilitation) | | | | கோவை இல. 171 முதல் 200 வரை 18-01-2023 1100 மணித்தியாலம் |
| • விளையாட்டு மருத்துவத்திற்குத் தேவையான பொருட்கள் (Sports Medical Requirements) | | | | |
| • எலும்பு பொது சத்திரசிகிச்சை பொருட்கள் (Items for Orthopedic and General Surgery) | | | | |
| • தடுப்பூசிகள் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (Items for Preventive Medicine) | DAMPS/TENDER/2023/201 முதல் 214 வரை | 211.20 | | கோவை இல. 201 முதல் 214வரை 25-01-2023 1100 மணித்தியாலம் |

2. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் சகல விலைமனுதாரர்களினாலும் NMRA சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதன் செல்லுபடியாகும் தன்மை 2023-12-31ஆம் திகதியாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அன்றைய தினம் அல்லது அதற்கு முன் காலாவதியாகும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுமாயின், அது சான்றிதழ் காலாவதியாகியவுடன் புதுப்பிக்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுக்கொடுப்பதாக உறுதி செய்யும் கடிதமொன்றையும் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. சமர்ப்பிக்கப்படும் உருப்படிகளுக்காக Bio-equivalence Studies அறிக்கை இருக்குமானால் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் விலைகளைச் சமர்ப்பிக்கும் சகல விடயங்களுக்காகவும் மாதிரிகளை (Samples) விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையிலேயே ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

4. கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் 0900 மணித்தியாலம் முதல் 1600 மணித்தியாலம் வரையான கடமை நேரங்களில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல்களுக்கான சேவைகளை கேள்விதாரரினால் வழங்க முடியுமென்பதற்கான செயலாற்றுகை மற்றும் வருமானம் தொடர்பான நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்வதற்கு கடந்த ஆறு மாதங்களினுள் பேணப்பட்டு வந்த வங்கிக் கூற்றுக்களின் புகைப்படப் பிரதி சகிதம் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழ் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும். வழங்குநர்களுக்கான கேள்விப் படிவங்கள் குறித்த ஆவணங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின்னர் மட்டுமே விநியோகிக்கப்படும். ஆனால் இந்த நிபந்தனை 2022ஆம் வருடத்தில் அரச பாதுகாப்பு அமைச்சில் இந்த வகைப்படுத்தலின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

6. கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயங்களின் கீழ் தேவையானவை மற்றும் அளவுகள் தொடர்பான முழுமையான விபரங்கள் இலங்கை இராணுவ மருத்துவ பெறுகை சேவைகள் பணிப்பாளர் சபை, இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ளன என்பதுடன் வழங்குநர்கள் அது சார்ந்த தாம் வழங்க உத்தேசிக்கும் விடயங்கள் மற்றும் கோவைகளைத் தெரிவு செய்து கொள்ளலாம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விடயங்களுக்காகவும் 02 மில்லியன் ரூபா முதல் 10 மில்லியன் ரூபா பெறுமதியான கோவையொன்றுக்கு 1,000.00 ரூபாவும் 10 மில்லியன் ரூபா முதல் 50 மில்லியன் ரூபா பெறுமதியான கோவைகளுக்கு 3,500.00 ரூபாவும் 50 மில்லியன் ரூபா முதல் 100 மில்லியன் ரூபா பெறுமதியான கோவையொன்றுக்கு 12,500.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படைத் தலைமையக நிதிப் பணிப்பாளர் சபைக்குச் செலுத்துதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படைத் தலைமையக மருத்துவ பெறுகை சேவைகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதன் பேரில் இயைபுடைய கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. கேள்விகளை திறத்தலானது இயைபுடைய விடயங்களின் எதிரில் தரப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 11.00 இராணுவ தலைமையகத்தின் இராணுவ யுத்தோபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையின் ஊடாக ஒருகொடவத்த, அவிசாவளை வீதி, 167/30 ஆம் இலக்க, செலிங்கோ கட்டிடம், இராணுவ முகாமில் இடம்பெறும். மேலதிக விபரங்களுக்கு: மருத்துவ பெறுகைகள் பிரிவு - 0112-553256 - 011-4051175

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.**


To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz it's what you want Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want




- Auto Focus

Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369 011 2 429 368

E-mail adzsuo@gmail.com

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 29

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | | 12 | 13 | |
| | 14 | 15 | 16 | | 17 |
| 18 | | | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | | 26 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) முன்னைய காலத்தில் வாழ்ந்து மறைந்த எமது மூதாதையரின் வாழ்வு முறைகள் தொடர்பாக கற்கின்ற பாடம் இது. மாணவர்களாகிய உங்களுக்குரிய பாடங்களில் இதுவும் ஒன்று.
(8) காணியைச் சுற்றிவர எல்லையாகவும், பாதுகாப்புக்காகவும் அமைக்கப்படுவது. (தலைகீழான சொல்)
(10) கண்களால் பார்த்து இரசிக்கக் கூடிய பச்சைநிறப் பறவை. வித்துக்களும், பழங்களும் இதன் உணவு.
(12) உருவத்தில் சிறிய பறவை இது. எமது நாட்டில் இப்பறவை இல்லை. நியூஸிலாந்து நாட்டின் தேசியப் பறவை இதுவாகும். இப்பறவையினம் அருகிச் செல்கின்றது. (தலைகீழான சொல்)
(14) எண்ணிக்கையற்ற சீவராசிகளின் வாழ்விடம் இது. தாவரங்கள் அடர்த்தியாக இங்கே வளர்ந்திருக்கும்.
(20) பொருள் ஒன்றை கடையில் வாங்கும் போது, அதன் பெறுமதிக்கேற்ப நாம் கொடுப்பது இது. இன்றைய உலகில் இது இன்றேல் எம்மால் வாழவே முடியாது.
(22) நான் என்ற அகங்காரம் கொண்ட சுபாவத்தை இவ்வாறு குறிப்பிடலாம்.

### மேலிருந்து கீழ்

(1) பணத்தைப் பாதுகாப்பாக வைப்பிலிடும் இடம். நாம் வைப்பிலிடுகின்ற பணத்துக்கு வட்டியும் வழங்கப்படும்.
(3) முக்கனியில் இது இரண்டாவது. (தலைகீழான சொல்)
(5) தாவரத்தை நிலத்தில் உறுதியாக நிலைநிறுத்துவதற்கு அவசியமானது இது. தாவரம் நிலத்தில் இருந்து நீரையும், கனியுப்புகளையும் உறிஞ்சிக் கொள்வதற்கு இந்தத் தொகுதியே துணைபுரிகிறது. (தலைகீழான சொல்)
(8) திடீரென உருவாகின்ற அதிக அச்சத்தைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(11) புவியைச் சூழ்ந்திருக்கின்ற சடப்பொருள் இது. ஆனால் கண்களால் காண முடியாது. அசைந்தால் மட்டுமே ஸ்பரிசத்தினால் இதனை உணர முடியும். (தலைகீழான சொல்)
(12) நிலைக்கண்ணாடி முன்பாக நின்றீர்களானால் அக்கண்ணாடிக்குள் தெரிவது இது.
(17) இளைய சகோதரன் இவன்.
(18) ஆண்மானைக் குறிக்கும் மரபுச்சொல். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 28

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. இளநீர் 08. ஆரை 10. அகராதி 14. மகள்
17. கவி 22. கதை 24. சிறகு

**மேலிருந்து கீழ்**

01. இசை 03. நீங்கள் 05. ஆவி 08. கதிரை
10. அகந்தை 18. விறகு 20. சிறை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 27

### பாராட்டு பெறுவோர்

1. **M.M.M. அப்ராஸ்**
தரம் 04, மா/ சாஹிரா தேசிய கல்லூரி
இல. 37, கண்டி வீதி,
வறக்காமுனை உக்குவளை.

2. **ஜே. ஹாலா சமாயில்**
தரம் 05, அக்/ அல் - முனவ்வறா வித்தியாலயம்,
174/2, அல் - முனவ்வறா வீதி,
அக்கரைப்பற்று 04.

3. **எம்.எப். அப்துல்லா,**
தரம் 04 B, தல்துவ முஸ்லிம் ம.வி.
இல. 25 சீத்தாகம,
அவிசாவளை.

4. **அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வி
337, நாங்கல்ல மங்கெதர,
துல்ஹிரிய.

5. **தமீம், யூசுப்முப்தி**
தரம் 05, AK/ அல் முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று 04.

6. **ஹரி லூசன் மேகவர்ணன்**
தரம் 07, சாஹிரா ஆண்கள் கல்லூரி,
கடுகஸ்தோட்டை,
இல. 2/27 A, வெலலிகந்த, கண்டி.

7. **எம்.எச்.சி.என். ஸம்றா**
தரம் 10 C, மாறை/ அறபா தே.பா,
411. அலுத்வீதிய, வெலிகம.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 23
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து**

**தெளிவுரை :**
ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி,
அவனுக்கு ஏழு பிறப்பிலும் - எழும்
பிறவிதோறும் கூடவே சென்று உதவும்

## அலட்சியம் வேண்டாம்

ஒரு கிராமத்தில் இரண்டு பேர் புதிதாக முட்டை கடை திறக்க விரும்பினர். இருவரும் தங்களுக்கு தேவையான முட்டைகளை பக்கத்து ஊர் சந்தையிலிருந்து வாங்க மாட்டு வண்டியில் கிளம்பிச் சென்றனர்.

முதலில் முட்டை வாங்கி வைக்க இருவரும் பெட்டிகளை வாங்கினர். முதலாமவன் 10 ரூபாய்க்கு பெட்டி வாங்கினான். இரண்டாமவன் 10 ரூபாய்க்கு பெட்டியும் 2 ரூபாய்க்கு சின்ன பூட்டும் வாங்கினான். இதைப் பார்த்த முதலாமவன், இவன் எதற்கு தேவையில்லாமல் இரண்டு ரூபாயை வீணாக்கி பூட்டு வாங்குகிறான் என்று நினைத்துக் கொண்டான்.

இருவரும் தங்களுக்கு தேவையான முட்டைகளை வாங்கி விட்டு மாட்டு வண்டியில் கிராமத்திற்கு கிளம்பினர். வெயில் கடுமையாக இருந்ததால் போகும் வழியில், மரத்தடியில் மாட்டு வண்டியை நிறுத்தி விட்டு, இருவரும் பக்கத்திலிருந்த ஆற்றில் தண்ணீர் குடிக்க சென்றனர். தண்ணீர் குடித்து விட்டு திரும்பி வரும் போது, குரங்குகள் பூட்டு போடாத பெட்டியை திறந்து முட்டைகளை எடுத்து வீசி நாசமாக்கி கொண்டிருந்தன.

இருவரும் குரங்குகளை விரட்டி அடித்து விட்டு, வண்டியை பார்த்த போது பூட்டு போட்ட பெட்டியிலுள்ள முட்டைகள் பத்திரமாக இருந்தன. பூட்டு போடாத பெட்டியில் இருந்த பாதி முட்டைகள் உடைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்த முதலாமவன் "ஒரு சிறிய பூட்டு போட்டிருந்தால் நமது முட்டைகளும் பத்திரமாக இருந்திருக்குமே" என்று வருத்தப்பட்டான். சின்ன சின்ன விஷயங்களிலும் கவனமாக இருங்கள். அலட்சியமாக இருக்க வேண்டாம்.



## இவ்வார மழலை



அகரன்

**சுதன் / கங்கா,**
தெஹிவளை

## சிறுவர் சித்திரங்கள்





**எஸ். அனன்யா**
தரம் 06, மெதடிஸ்ட் கல்லூரி.



**ஜி.கே. அனுக்ஷன்**
பம்பலப்பிட்டி இந்து கல்லூரி,
கொழும்பு 04.



**என். விணுக்தியன்**
தரம் 02, கதிரேசன் மாதிரி
ஆரம்ப பாடசாலை, நாவலப்பிட்டி.

## என் உடல் என்னுடையதே!

### சிறுவர் நூல் அறிமுகம்

கொவிட் 19 , பொருளாதார நெருக்கடியால் எமது நாடு தொடரான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. இவற்றிலிருந்து எமது எதிர்கால சந்ததியினரை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. கொரோனா தொற்றில் ஏற்பட்ட முடக்கத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் இலங்கையில் அதிகரித்து காணப்பட்டது. அது இன்றுவரை குறைந்தபாடில்லை. தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இவற்றை கட்டுப்படுத்த எழுத்தாளர்கள் எடுக்கும் முயற்சியும் தொடர்கின்றன.துஷ்பிரயோகம் என்றால் என்ன என்பதை மழலை மொழியில் விளங்கிக் கொள்ள 'என் உடல் என்னுடையதே' என்ற நூல் சிறுவர்களுக்காக வெளியிடப்பட்டிருக்கிறது. இந் நூல் குழந்தைகளுக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அறிவூட்டுவதாகவும் அமைந்துள்ளது. வைத்தியர் நுவன் தொட்டவத்த சிங்களத்தில் எழுதிய நூல் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.





சிறுவர்கள் தமக்கு நெருக்கமானவர்களாலேயே பாதிப்புக்குள்ளாகின்றனர். இதை தத்ரூபமாக எடுத்துக் கூறும் இந் நூலில், நல்லத் தொடுகை, தீய தொடுகை எவ்வாறானது என்பதை உவமான கதைகள் மூலம் சொல்லும் பாங்கு சிறுவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் இருக்கிறது.

சொக்கலேட் கொடுத்து சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற மாமாவை, ஒரு மாமரம் தண்டிப்பதாக கதை உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு அந்த மாமரம் சிறுமிக்கு அறிவுரை கூறி, இவற்றிலிருந்து எவ்வாறு தப்பித்து தன்னை பாதுகாத்து கொள்ளலாம் என்பது தொடர்பில் மாமரம் கூறும் வழிமுறைகள் பிள்ளைகளுக்கு நற்படிப்பினையாக அமைந்துள்ளது. பிள்ளைகளுக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பெற்றோர்கள் அறிவுரை கூறுவதை விட இந் நூலை வாசிப்பதன் மூலம் பிள்ளைகளின் மனதில் இவ் அறிவுரைகள் நீக்கமற பதிந்து விடக்கூடும்.

இந்நூல் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. 'என் உடல் என்னுடையதே' நூலை, கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடக கற்கை துறையில் விரிவுரையாளராக இருக்கும் சிவலிங்கம் அனுஷா தமிழில் மொழி பெயர்த்துள்ளார். மொழி நடையும் எழுத்தோட்டமும் சிறுவர்களை கவரும் வகையில் உள்ளது. 'என் உடல் என்னுடையதே' சமயவர்தன புத்தக நிலையத்தின் வெளியீடாகும்.

ஸ்ரீ

## சார்லி சாப்ளின்

சார்லி சாப்ளின் ஒருமுறை பலரும் நிறைந்த சபையில் ஒரு ஜோக் சொன்னார். சபையே சிரிப்பாய் அதிர்ந்தது. கொஞ்ச நேரம் கழித்து அதே ஜோக்கை மறுபடியும் கூறினார், பாதிப்பேர் மட்டுமே சிரித்தனர். அதேபோல் சிறிது நேரம் கழித்து அதே ஜோக்கை மறுபடியும் கூற அங்கொன்றும் இங்கொன்றும் மட்டுமே சிரித்தனர். நான்காம் முறை கூற சபையில் நிசப்தம் நிலவியது. அப்போது சார்லி சாப்ளின் கேட்டாராம் ஒரே ஜோக்கிற்கு மறுபடியும் மறுபடியும் சிரிக்காத நாம், ஏன் ஒரே கவலையை நினைத்து மறுபடி மறுபடி அழுகிறோம் என்று.





ஆங்கிலத்தில் Number என்றச் சொல்லை No. என்று சுருக்கமாக எழுதுகிறோமே, அதற்கான காரணம் என்னவென்று தெரியுமா? இல்லை. பிறகு எப்படி சுருக்கச் சொல்லாக பயன்படுத்துகிறோம் என்று நீங்கள் என்றைக்காவது எண்ணியதுண்டா.

## உங்களுக்குத் தெரியுமா?

இன்று பலரும் நம்பர் என்றச் சொல்லை சுருக்கமாக No. என்று எழுதுகிறார்கள். அதிலும் குறிப்பாக டேபிள், வரிசை எண் போன்றவற்றில், இந்த சுருக்க எழுத்தை பயன்படுத்துகிறோம்.

மொபைல் நம்பர் என்பதை விசிட்டிங் கார்ட், ஐடி கார்ட்களில் கூட, சுருக்கமாக Mob.No. என்று போட்டிருப்பதை பார்த்திருக்கிறோம். இப்படியாக Number என்பதை No. என்று எழுதுகிறோம். ஓ 'O' என்ற எழுத்து Number என்பதில் இல்லவே இதோ அதற்கான பதில், நம்பர் (Number) என்றச் சொல்லானது லத்தீன் மொழியில் நியூமரோ (Numero) என்பதிலிருந்து வந்தது. Numero என்ற வார்த்தையின், முதல் எழுத்தும், கடைசி எழுத்துமே No என்றாகி, நம்பர் என்பதை சுருக்கமாக No. என்று எழுதுகிறோம்.

## பழமொழி விளக்கம்

பழமொழி
**"வெந்து கெட்டது முருங்கை, வேகாமல் கெட்டது அகத்தி"**

விளக்கம்
முருங்கைக் கீரையை அதிகம் வேகவைத்தால் அதன் சத்துக்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். அகத்திக் கீரையை அதிகம் வேகாமல் பயன்படுத்தினால் முழுமையாக அதன் சத்து கிடைக்காது.



## 'மடையா' என்று ஏன் திட்டுகிறார்கள்?

ஏரியை வடிவமைத்த பிறகு அதிலிருந்து தண்ணீர் வெளியேற தமிழன் கண்டுபிடித்த தொழில்நுட்பம் தான் 'மடை'. மடைகளை அமைக்க முதலில் பனை மரங்கள் பயன்படுத்தப்பட்டன.

உறுதியான பனை மரங்களை தேர்ந்தெடுத்து அதன் உள் ஓட்டையில் கோரை, நாணல், களிமண் கலந்து அடைத்து விடுவார்கள். வெள்ளகாலங்களில் மடைளைத் திறப்பதற்கு என்று ஆட்கள் இருப்பார்கள். இது உயிரைப் பணயம் வைத்து நீருக்குள் மூழ்கி செய்யும் சாகசப் பணியாகும். அந்த நபர் மூச்சடக்கி நீரில் மூழ்கி அடியாளத்தில் இருக்கும் மடையின் அடைப்பை திறந்து விடுவார். மடை திறந்ததும் புயல் வேகத்தில் வெளியேறும் வெள்ளம் மடை திறந்தவரையும் இழுத்துச் செல்லும்.

மடை திறக்கச்சென்று மாண்டவர்கள் அதிகம், மீண்டவர்கள் குறைவு. இவர்கள் தான் 'மடையர்கள்' என அழைக்கப்பட்டார்கள்.



### அறிந்து கொள்வோம்

**மனித உடம்பில் உள்ள இரத்தக் குழாய்களின் மொத்த நீளம் 96,000 கிலோ மீற்றர் ஆகும்.**

# மஞ்சரி விளையாட்டு

## உலகை வெல்வது தூரமில்லை

இலங்கை தேசிய கிரிக்கெட் மற்றும் வலைப்பந்து அணிகள் ஒரே நாளில் மாலையும் இரவும் ஆசிய சம்பியனானது அந்த நாளையே புனிதமாக்கிவிட்டது. கடந்த செப்டெம்பர் 11ஆம் திகதி சிங்கப்பூரில் நடந்த ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டி இலங்கை சம்பியனான அதே நாள் டுபாயில் நடந்த ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை தோற்கடித்து இலங்கை கிண்ணத்தை வென்றது.






அதாவது இலங்கை கிரிக்கெட்டிலும், வலைப்பந்தாட்டத்திலும் ஆசியாவில் எங்களை விட்டால் ஆளில்லை என்று பெயர் எடுத்திருக்கிறது. அடுத்து, உலகை வெல்வது தான் பாக்கி.

கிரிக்கெட்டை பொறுத்தவரை ஆசிய கிண்ணத்திற்கும் உலகக் கிண்ணத்திற்கும் தொடர்பில்லை. இலங்கை ஆசிய கிண்ணத்தை வென்று உலகுக்கே வலுவான செய்தியை கொடுத்தாலும் அது உலகக் கிண்ணத்தில் தகுதிச் சுற்றில் ஆடித் தான் முன்னேற வேண்டும். சர்வதேச கிரிக்கெட்டில் கடந்த காலத்தில் அந்த அணி பெற்ற பின்னடைவு தான் இதற்குக் காரணம்.

அடுத்த டி20 உலகக் கிண்ணப் போட்டி அடுத்த மாதம் (ஒக்டோபர்) 16 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகிறது. எட்டு அணிகள் நேரடியாக சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறி இருக்கின்றன. மேலும் எட்டு அணிகள் குழு நிலை தகுதிச் சுற்றில் ஆட வேண்டும். இதில் இலங்கையும் அடங்கும்.

அதாவது இரு குழுக்களாக இடம்பெறும் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறும். இதில் இலங்கை நமிபியா, நெதர்லாந்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் விளையாடுகிறது.

பொதுப் புத்தியில் பார்த்தால் இலங்கை அணி இந்தப் போட்டிகளில் வென்று இலகுவாக சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறி விடும் என்று நம்பிக்கை வரும். ஆனால் எதுவும் நடக்கலாம் என்ற சந்தேகத்துடனேயே இதனை பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

எப்படி இருந்தாலும் உலகக் கிண்ணம் நெருங்கும் நேரம் இலங்கை அணி மீதான நம்பிக்கை கடந்த காலங்களை விட அதிகரித்திருக்கிறது. ஆசிய கிண்ணத்தை இலங்கை அணி வென்ற விதம் அப்படி. அதிர்ஷ்டம் மாத்திரம் கைகொடுக்கவில்லை. முழுக்க முழுக்க அணியின் திறமை தென்பட்டது. ஓரளவு முழுமை பெற்ற அணியாகவே இலங்கை உலகக் கிண்ணத்திற்கு செல்கிறது. எனவே கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்பையும் பெரிதான வைத்திருக்கலாம்.

ஆசிய சம்பியன்ஷிப் வலைப்பந்தாட்ட போட்டிகள் அப்படியல்ல. இலங்கை நடப்புச் சம்பியனாகவே அந்தப் போட்டியில் கலந்துகொண்டது. ஆரம்ப சுற்றுத் தொடக்கம் இறுதிப் போட்டி வரையில் எந்த ஆட்டத்திலும் தோல்வியுறாமல் சம்பியனானது.

இதில் அரையிறுதியில் ஹொங்கொங் அணியை வீழ்த்தியதை அடுத்து உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத்துக்கு இலங்கை பெண்கள் தகுதிபெற்றார்கள்.

உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட போட்டி 2023 ஆம் ஆண்டு ஜூலை 28ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 6ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் நடைபெறுகிறது. இலங்கையுடன் சேர்த்து மொத்தம் 16 அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்கின்றன.

ஆசியாவில் இலங்கையை அடிக்க ஆளில்லை என்றாலும் உலக அரங்கில் நிலைமை வேறு. வலைப்பந்து உலகத் தரவரிசையில் இலங்கை இப்போது 19ஆவது இடத்திலேயே இருக்கிறது. நெட்டை நெட்டையாக வீராங்கனைகள் இருக்கும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஜமைக்கா நடுகளே முறையே முதல் மூன்று இடங்களில் இருக்கின்றன.

வரலாற்றை பார்த்தால் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணி தான் மாறி மாறி சம்பியனாகி இருக்கிறது. 1979 ஸ்பெயினில் நடந்தபோது இறுதிப் போட்டி நடக்காததால் ஆஸி., நியூசிலாந்துடன் தப்பிப்பிழைத்து டிரினிடாட் மற்றும் டொபாகோவும் சம்பியனானது.

உலகக் கிண்ணத்தில் இதுவரை இலங்கையின் வரலாறும் பெரிதாகச் செல்வதற்கு இல்லை.

இதுவரை 10 தடவைகள் உலகக் கிண்ணத்தில் பங்கேற்றிருக்கும் இலங்கை கடைசி மூன்று இடங்களுக்குள் வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது.

கடைசியாக 2019இல் இங்கிலாந்தில் நடந்த போட்டியில் ஆரம்ப சுற்றில் சிம்பாப்வே, வட அயர்லாந்து, அவுஸ்திரேலிய அணிகளிடம் தோற்று முதல் 14 இடங்களுக்குள் கூட முன்னேறாததோடு 15ஆவது இடத்திற்கான போட்டியில் சிங்கப்பூரை வீழ்த்தியது.

எவனே உலகக் கிண்ணம் என்பது இலங்கைக்கு இன்று வரை எட்டாக்கனி. இம்முறையாவது குறைந்தது முதல் பத்து இடங்களுக்குள் வந்தாலே பெரிய செய்தி.

## ஜி.பீ.எல் நிறுவனத்தின் கிரிக்கெட், மரதன் போட்டி




வெலிகம கல்பொக்கை ஜி.பீ.எல் நிறுவனம் 10ஆவது வருடமாக ஏற்பாடு செய்த மாபெரும் சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப் போட்டி மற்றும் மரதன் ஓட்டப் போட்டி வெலிகம அறபா மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றன. 24 அணிகள் பங்குபற்றிய இத்தொடரில் ஒல்ட் ட்ரபர்ட் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. ஒவல் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.



இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் நுவன் சொய்ஸா கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதரண மற்றும் உயர் தர பரீட்சைகளின் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலைகள், மாணவ, மாணவியர் கௌரவிக்கப்பட்டனர்.

அதேபோன்று 60 வயதுக்கு மேற்பட்ட சமூகசேவையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் வெலிகம புஹாரி பள்ளிவாசல் மற்றும் பதுர் பள்ளிவாசலில் நீண்டகாலம் நிர்வாகிகளாக சேவை புரிந்து இறையடி சேர்ந்த மர்ஹூம்களான முக்ரிம் ஹாஜி, உதுமான் ஹாஜி மற்றும் ஹாரிஸ் ஹாஜி ஆகியோரினது சேவையை பாராட்டும் முகமாக அவர்களது புதல்வர்கள் அழைக்கப்பட்டு நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டமையும் விசேட அம்சமாகும்.

## நிலை மாறும் இலங்கை கிரிக்கெட்

கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக இலங்கை அணி தோற்கும் போதெல்லாம் தேர்வுக் குழுவாகட்டும், கிரிக்கெட் நிர்வாகமாகட்டும் எப்போதும் கூறும் ஒரே வார்த்தை 'நிலைமாற்றக் காலம்'. பஞ்சமில்லாத தோல்விகள், சோபிக்காத வீரர்கள், தடுமாறும் அணித் தலைவர்கள் என்று இலங்கை கிரிக்கெட் துவண்டு கொண்டிருக்கும்போது ஏன் என்று கேட்டால், அணி இப்போது நிலைமாற்றக் காலத்தில் இருக்கிறது என்ற ஒரே பதில் தான் பொறுப்பானவர்களிடம் இருந்து வரும்.

அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா தொட்டு குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன வரை வெற்றிகளையே பார்த்து வந்த இலங்கை ரசிகர்களுக்கு இந்த நிலைமாற்றக் காலம் என்பது சகித்துக்கொள்ள முடியாத ஒன்று.

இலங்கை உலக அரங்கில் கடைசியாக தனது பொற்காலத்தின் எச்ச சொச்சங்களை 2014இல் பங்களாதேஷில் நடந்த டி20 உலகக் கிண்ணத்துடன் இழந்தது. லசித் மாலிங்க தலைமையிலான இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றபோதும் அந்தத் தொடருடன் சங்கக்கார, மஹேல இருவரும் டி20 சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றனர்.

அதற்கு அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியின் காலிறுதியில் தென்னாபிரிக்காவிடம் தோற்ற பின் இந்த இருவரும் ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கும் டாட்டா காட்டினார்கள். 2015ஆம் ஆண்டுக்கு அப்பால் இருவரும் டெஸ்ட் போட்டிகளிலும் ஆடவில்லை.

அத்துடன் டி.எம் டில்ஷான், முத்தைய முரளிதரம், லசித் மாலிங்க போன்ற நட்சத்திர வீரர்களின் கிரிக்கெட்டு முடிந்துபோனபோது இலங்கை தனது பொற்கால கிரிக்கெட்டை இழந்துவிட்டது என்று ரசிகர்கள் உணர்ந்ததில் தப்பு எதுவும் இல்லை.

கடந்த அரை தசாப்தத்திற்கு மேலான இலங்கை கிரிக்கெட்டின் கசப்பான காலத்தை மறக்க முடியாது. வென்றால் அதிசயம், தோற்பது சகஜம். 2017 தொடக்கம் இலங்கை மூன்று வகை கிரிக்கெட்டிலும் 12 அணித் தலைவர்களை பார்த்திருக்கிறது. கிறிஸ் சில்வர்வுட் கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை அணிக்கு 11ஆவது பயிற்சியாளராக வந்தவர்.

அதாவது அணி தோற்கத் தோற்க தலைவர்களை மாற்றினார்கள், பயிற்சியாளர்களை மாற்றினார்கள்.

இலங்கை அணி டி20 உலகக் கிண்ணத்தை வென்று இரண்டு ஆண்டுகள் தான் கடந்திருந்தது. 2016 ஆம் ஆண்டில் இலங்கை அணி விளையாடிய 16 டி20 போட்டிகளில் 13 ஆட்டங்களில் தோல்விகள் தான் மிச்சம். அடுத்து வந்த ஆண்டுகள் இதனை விடவும் மோசமாக இருந்தது.

கொவிட் தொற்று பாதிக்கப்பட்ட 2020இல் இலங்கை தான் மோதிய எந்த ஒரு டி20 போட்டியிலும் வென்றதில்லை. ஒட்டு மொத்தமாக கடந்த ஐந்து ஆண்டுகளைப் பார்த்தால் இலங்கை அணி ஆடிய 69 டி20 சர்வதேச போட்டிகளில் 43 இல் தோற்றிருப்பதோடு 23 ஆட்டங்களிலேயே வெல்ல முடிந்திருக்கிறது.

ஏனைய வடிவ கிரிக்கெட்டிலும் இதே நிலை தான். 2017இல் சிம்பாப்வே அணி இலங்கை வந்தபோதும் முன்னர் எப்போதும் நிகழாத வகையில் சிம்பாப்வே அணி ஒருநாள் தொடரை 3-2 என கைப்பற்றியது. இந்தியாவிடம் முழுத் தொடரையும் தோற்றது. களத்தடுப்பு, பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் எதிலும் தொழில்முறையான விளையாட்டு மருந்துக்கும் இருக்கவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கை அணி ஆடிய 72 ஒருநாள் போட்டிகளில் 26 ஆட்டங்களிலேயே வெல்ல முடிந்ததோடு 44 போட்டிகளில் தோல்வியே உரிமையானது. டெஸ்ட் போட்டிகளிலும் இலங்கை அணி சொல்லும்படியாக சோபிக்கவில்லை. ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களுடன் ஒப்பிடுகையில் எவ்வளவோ பரவாயில்லை.

எப்படி இருந்தாலும், இலங்கையின் நிலைமாற்றக் காலம் முடியவில்லை. அதற்கு இன்னும் காலம் தேவைப்படுகிறது என்பது தான் தேர்வுக் குழு முதற்கொண்டு பயிற்சியாளர் வரை தோல்விக்கான ஒரே பதிலாக இருந்தது.



என்றாலும் கடந்த 18 மாதங்களை பார்த்தால் ஏதோ மாற்றம் இருப்பது தெரிகிறது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த ஆண்டு நடந்த டி20 உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி வழக்கமான தோல்விகளை சந்தித்தது.

தேர்வுப் போட்டிகளில் வென்று முன்னேறியபோதும் ஐந்து குழுநிலைப் போட்டிகளில் 3இல் தோற்று வெளியேறியது. ஆனால் அணியில் குறிப்பிடும்படியாக மாற்றங்கள் தெரிந்தன.

அணிக்கு புதிதாக அழைக்கப்பட்டிருந்த பத்தும் நிஸ்ஸங்க மற்றும் சரித் அசலங்க ஆரம்ப வரிசையில் சிறப்பாக செயற்பட்டதோடு மத்திய வரிசையில் பானுக்க ராஜபக்ஷ மற்றும் அணித்தலைவர் தசுன் சானக்க நம்பிக்கை அளித்தார்கள். பின்னர் சகலதுறை வீரர்கள் வனிந்து ஹசரங்க மற்றும் சாமிக்க கருணாரத்னவின் துடுப்பாட்டம் இலங்கைக்கு போனஸ் ஓட்டங்களாக மாறியது.

பந்துவீச்சில் ஹசரங்கவுடன் மஹீஷ் தீக்ஷன, துஷ்மந்த சமீர என்று வலுவாகவே இருந்தது.

இலங்கை அணி கடந்த ஓர் ஆண்டுக்கு மேல் இதே அணியுடனேயே முன்னேறிச் சென்றது. பானுக்க ராஜபக்ஷவின் உடல் தகுதி பற்றி தேர்வுக் குழு அடிக்கடி குறைகூற சகிக்க முடியாமல் அவரும் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற ஒரு வழியாக அவரை சமாதானப்படுத்திய கதையும் அரங்கேறியது. எப்படியோ அவரது திறமைக்கு மத்தியில் தேர்வுக்குழுவால் தனது கொள்கையில் முழுமையாக தாக்குப்பிடிக்க முடியில்லை.

கடந்த ஜூன் மாதம் அவுஸ்திரேலிய அணி இலங்கை வந்திருந்தபோதும் கடைசி டி20 போட்டியின் கடைசி 4 பந்துகளுக்கும் இலங்கை அணி 15 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது. அப்போது அணித்தலைவர் தசுன் ஷானக்க இரண்டு பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸரை விளாசி அணியை வெற்றிபெறச் செய்தது பெரும் நம்பிக்கையைத் தந்தது. இந்த உத்வேகம் பிந்திய போட்டிகளில் இலங்கை அணியில் காண முடிந்தது.

ஆசியக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் ஆப்கானிடம் தோற்றது அவ்வப்போது நிகழும் கோளாறு என்று வைத்துக்கொள்ளலாம். அடுத்த போட்டிகளில் இலங்கை அணியின் ஆட்டம் அதனை நிரூபிப்பதாக இருக்கிறது. இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்திய விதம் இலங்கை அணி இன்னமும் தனது கஷ்ட காலத்தில் இல்லை என்பதைச் சொல்கிறது.

இத்தனை காலம் பொறுத்ததற்கு டி20க்கு ஏற்ற கச்சிதமான அணி இலங்கைக்கு கிடைத்திருக்கிறது. ஆரம்ப வரிசை, மத்தியவரிசை, சகலதுறை, சுழற்பந்து, வேகப்பந்து எல்லாமே ஓரளவுக்கு முழுமை பெற்றிருக்கிறது. எந்த நேரத்திலும், நெருக்கடியிலும் யாரையும் வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

ஆசிய கிண்ணம் என்பது சாதாரணமானது அல்ல. அதிலும் உலகின் வலுவான அணியான இந்தியா, பாகிஸ்தானை அநாயாசமாக வீழ்த்தி கிண்ணத்தை வெல்வதற்கு குறையுடன் இருக்கும் அணி ஒன்றால் முடியாது. அணி மாத்திரம் அன்றி தசுன் ஷானக்கவின் தலைமையும் அதற்கேற்ற முதிர்ச்சியை பெற்றிருப்பது அவர் அணியை வழிநடத்துவதை பார்த்தால் புரிகிறது.

இப்போதிருக்கும் மிகப்பெரிய கேள்வி இலங்கை தனது நிலைமாற்றக் காலத்தை பூர்த்தி செய்துவிட்டதா? இதனை அளவிட வகுக்கப்பட்ட அளவுகோல்கள் எதுவும் இல்லை.

இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற அணிகளின் நிலைமாற்றக் காலம் என்பது நீண்டதாக இருக்காது, கூடினால் ஓரிரு போட்டித் தொடர்களில் அது தனது வழமையான நிலைக்குத் திரும்பி விடும். பாகிஸ்தான், தென்னாபிரிக்கா போன்ற அணிகள் வீழ்ச்சிகளைத் சந்தித்து மீண்டெழுந்தாலும் அதலபாதாளத்துக்கு விழுந்துவிடாது.

மேற்கிற்திய தீவுகள் 70கள் தொடக்கம் அடுத்த மூன்று தசாப்தங்கள் உலகில் கோலோச்சியபோதும் அடுத்து வந்த காலம் அந்தப் பொற்காலம் பற்றிய பெருமை பேசும் யுகமாக மாறிவிட்டது. மேற்கிந்திய தீவுகள் என்பது திடீரென்று உச்சம் தொட்டு பின்னர் படுகுழியில் விழும் நிச்சமற்ற அணியாகவே கிரிக்கெட் உலகம் பார்க்கிறது.

இலங்கை கிரிக்கெட் 1996 உலகக் கிண்ணத்துடன் எழுச்சி பெற்று அதன் தொடர்ச்சி சங்கக்கார, மஹேல யுகம் வரை நீடித்தது. என்றாலும் அதன் பின்னர் இந்தத் தொடர்ச்சி அறுந்து மீண்டும் பூஜ்யத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது தான் இந்த நிலைமாற்றக் காலம் ஒன்றின் தேவைக்குக் காரணமானது.

இலங்கை தனது எழுச்சிக்கான ஆரம்பத்தை பெற்றிருப்பதாகவே தெரிகிறது. இப்போதிருக்கும் அணியின் சராசரி வயது 26ஐ தாண்டாது. அதாவது அடுத்த ஆறேழு ஆண்டுகளுக்கு இந்த அணியால் விளையாட முடியும். இந்தத் தர்க்கத்தில் பார்த்தால் இலங்கை தனது நிலைமாற்றக் காலத்தை பூர்த்தி செய்ததாக எடுத்துக் கொள்ளலாம்.

என்றாலும் அப்படி ஒரு முடிவுக்கு வர அவசரப்படாமல் இருப்பதே நல்லது.

- எஸ். பிர்தௌஸ்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




**MODEL - Sajini Roy**

*Dress By: Lavevdria saloon*

*OUTFIT: by Thaarakavi SareeCreations covera*

*page pix by: Gayan Pushpika*






# மகாராணியின் மரணத்தால் இத்தனை மாற்றங்களா?






பிரட்டிஷ் என்பது முழுமையான குடியரசு அல்ல. அங்கே ஓர் மன்னாதி மன்னன் இருப்பார். ஆனால் அது முடியாட்சியும் அல்ல. அரசியல் மொழியில் அதற்குப் பெயர் அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி. அதாவது அரசின் தலைவராக மன்னர் அல்லது மகாராணி இருப்பார். ஆனால் அவர் சடங்கு முறையான தலைவர் மாத்திரமே. மற்றபடி ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டவரே ஆட்சி புரிவார். அதற்காக மன்னரின் அதிகாரத்தை குறைத்து மதிப்பிடவும் முடியாது.

சுற்றிவளைப்பான் ஏன்? மகாராணி இரண்டாம் எலிசெபத் கடந்த 70 ஆண்டுகளாக அரியணையில் இருந்தார். விழாக்களில், பொது நிகழ்வுகளில் பங்கேற்றார். சிரித்த முகத்தோடு இருப்பார். என்றாலும் பிரிட்டனில் அவரின் செல்வாக்கு என்ன என்பது அவர் மரணித்த பின் தான் புரிகிறது. நடப்பதைப் பார்த்தால் பிரிட்டன் ஒரு ஜனநாயக நாடா, முடியாட்சி நாடா என்ற குழப்பம் வருகிறது.

மகாராணியின் மரணத்தின் பின் பிரிட்டனின் தேசிய கீதம் தொடக்கம் தபால் தலை வரை மாறுகிறது. இது நவீன உலகில் எந்த நாட்டிலும் நிகழாத ஒன்று. ஏன், பழுத்த முடியாட்சி நடக்கும் சவூதி அரேபியாவில் கூட இதனைப் பார்க்க முடியாது.

மகாராணியின் மரணத்தின் பின்னரான ஏற்பாடுகள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டது. அது பற்றிய ‘ஒபரேசன் லண்டன் பிரிட்ஜ்’ என்ற திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்னரே வகுக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு இது பற்றிய விபரம் வெளியுலகுக்கு கசிந்து பரபரப்பை ஏற்படுத்தியது.

மகாராணி மரணித்த விரைவிலேயே முடிக்குரிய இளவரசராக இருந்த சார்ல்ஸ், 73 வயதில் முடிசூடினார். அதாவது அவர் அரியணை ஏற காத்திருந்த காலம் ஏழு தசாப்தங்கள். பிரிட்டன் வரலாற்றில் இத்தனை நீண்ட காலம் காத்திருந்த முடிக்குரிய இளவரசர் யாரும் இல்லை.

மகாராணியின் மரணத்தால் பிரிட்டன் தேசிய கீதத்தையே மாற்ற வேண்டியதாயிற்று. இத்தனை காலமும் மகாராணி ஒருவர் இருந்து இப்போது மன்னர் ஒருவர் வந்திருப்பதால், தேசிய கீதத்தில் வரும், “கடவுளே மகாராணியை காப்பாற்று” என்று வருவது இப்போது, “கடவுளே மன்னரை காப்பாற்று” என்று மாற்றமடைகிறது. அதேபோன்று ஆண்பாலில் இருக்கும் சொற்கள் பெண்பாலாக மாற்றப்படுகின்றன.

தேசிய கீதம் மாத்திரமல்ல பிரிட்டிஷ் நாட்டு நாணயமே மாற்றப்படுகிறது.

பிரிட்டன் நாணயமான பௌண்ட் ஸ்டெர்லிங்கில் மகாராணியின் உருவமே பொறிக்கப்பட்டிருக்கும். அதற்கு பதில் மன்னரின் உருவம் பொறிக்கப்படும்.

இப்போது சுமார் 4.5 பில்லியன் நாணயத் தாள்கள் மகாராணியின் உருவப்படத்துடன் புழக்கத்தில் இருக்கின்றன. எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் அவை மீளப் பெறப்பட்டு மன்னரின் உருவப்படத்துடனான நாணயத்தாள்கள் புழக்கத்திற்கு வரும். இது காலப்போக்கில் நிகழும் ஒன்று.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் படம் கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உட்பட கிட்டத்தட்ட 33 நாடுகளின் நாணயத்தாள்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் சில நாடுகள் அந்தப் படத்தை மாற்றப்போவதாக அறிவித்துள்ளன.

கடவுச்சீட்டிலும் மகாராணியை அழைக்கும் பெண்பால் சொற்கள் மன்னருக்கான ஆண்பால் சொற்களாக மாற்றப்படும். என்றாலும் இந்த மாற்றம் வலுக்கட்டாயமாக நிகழாது. காலப்போக்கி நிகழும் ஒன்று.

பிரிட்டிஷ் தபால் தலைக்கு தனி மதிப்பு உண்டு. உலகில் முதலாவது ஒட்டக் கூடிய தபால் தலை 1840இல் பிரிட்டனிலேயே அறிமுகம் செய்யப்பட்டது. அதில் விக்டோரியா மகாராணியின் படம் இருக்கும். அதற்கு நூற்றாண்டுக்கும் அப்பால் 1966இலேயே தபால் தலையில் இரண்டாம் எலிசபெத்தின் படம் பொறிக்கப்பட்டது. அது தொடக்கம் 130 வெவ்வேறு நிறங்களில் 220 பில்லியன் முறைகளுக்கு மேல் மகாராணியின் தபால் தலை அச்சடிக்கப்பட்டிருக்கிறது.




இப்போது அது காலாவதியாகும் காலம் வந்துவிட்டது. தபால் தலை மற்றும் தபால்பெட்டிகளும் புதிய மன்னரின் வருகையோடு மாறுகின்றன. மகாராணியின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும் தபால் தலைகளில் மன்னரின் உருவம் மாற்றப்படும். தபால் பெட்டிகளில் இருக்கும் மகாராணிக்குரிய குறியீடும் மாற்றப்பட்டு மன்னர் மூன்றாம் சார்ல்ஸின் புதிய குறியீடு பொறிக்கப்படும்.

இந்தக் குறியீடு நாடு முழுவதும் இருக்கும் பொலிஸ் நிலையங்கள், அரச கட்டடங்கள் மற்றும் ஏனைய இடங்களில் பறக்கவிடப்பட்டிருக்கும் கொடிகளிலும் மாற்றப்படும்.

பிரிட்டன் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் உட்பட பல அரச ஊழியர்கள் அணியும் சீருடைகளில் மகாராணியின் குறீயிடு பொறிக்கப்பட்டிருக்கும். எனவே அவரின் மரணத்தால் அந்த சீருடைகளையும் மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.



# பேய்கள் உலாவும் உல்லாச உலகம்!

(கடந்த வாரத் தொடர்)

அப்படி பேறுகாலம் ஆகும் போது உதிரம் மரப்பலகைகளின் இடுக்கில் வழிந்தோடும். அந்த உதிரம் மிகவும் சுவையானதாம். அதற்காகவே லங்சுயீர் எனும் பேய்கள் வீடுகளின் அடியில் காத்திருக்குமாம்.

இதையறிந்த மருத்துவச்சிகள் ஒரு வீட்டில் பெண் பிரசவிக்கத் தொடங்கும் போதே பலதரப்பட்ட மறைநூல் வாசகங்களைச் சொல்லிக் கொண்டே இருப்பார்களாம். சரியாகப் பேறுகாலம் ஆகும் போது வீட்டின் அடியில் முள் முள்ளாய் இருக்கும் ஒரு வித இலைகளைப் பரப்பி வைத்து விடுவார்களாம். எனவே லங்சுயீர் அந்த வீட்டை அண்டாது. தூர நின்று வாய்ப்புக்காக எதிர்பார்த்திருக்கும். ஒரு பெண் கர்ப்பம் தரித்ததிலிருந்து பேறுகாலம் முடிந்து நாற்பது நாட்கள் உதிர போக்கு நிற்கும் வரையில் இந்த மருத்துவச்சிகளின் உடனிருப்பு மிகவும் அத்தியாவசியமாகக் கருதப்பட்டது. இந்த மருத்துவச்சிகள் பிரசவ தெளிவோடு லங்சுயீர்களின் ஆபத்தை எப்படி மறை வாசகங்களை வைத்து துரத்துவது வரையில் தெரிந்து வைத்திருந்தனர்.

## வீட்டில் நுழைந்து பொருட்களைத் திருடி பெண்களை மயக்கி உறவு கொள்ளும் கிறீஸ் மனிதப் பேய்கள்



லங்சுயீர் எப்படி இருக்கும் என்பதற்கான குறியீடாக மலேசியாவில் ஏற்கனவே ஒரு திரைப்படம் வெளிவந்துள்ளது. ஏமி மஸ்தூரா (Amy Mastura) நடித்து 2011 ஆம் ஆண்டு வெளிவந்த பெனங்கால் (Penanggal) என்ற படம் தான் அது.

### ஓராங் மிஞ்ஞாக்

லங்சுயீர் குருதி பயங்கரமாக இருக்குமென்றால் ஓராங் மிஞ்ஞாக் பயங்கர கருப்பாக இருக்கும். முன்பொரு காலத்தில் மாய மந்திரங்களைத் தவறாகக் கற்றுக் கெட்ட விஷயங்களை செய்வதற்காகப் பயன்படுத்திக் கொண்டவர்களின் உடல் கருப்பாக மாறியதாகவும் அதை சரிப்படுத்த நாற்பது கன்னி பெண்களை மானபங்கப்படுத்த வேண்டும் எனவும் பல கதைகள் உண்டு. மிகவும் பரவலாகப் பேசப்பட்ட ஓராங் மிஞ்ஞாக் பற்றி பி.ரம்லி (P.Ramlee) நடித்து 1958ஆம் ஆண்டு வெளிவந்த சும்பாஹ் ஓராங் மிஞ்ஞாக் (Sumpah Orang Minyak) என்று ஒரு திரைப்படமே உள்ளது. ஓராங் மிஞ்ஞாக் என்றால் எண்ணெய் மனிதன் (கிறீஸ் மனிதன்) என பொருள். உடல் முகம் என எல்லாமே கருப்பாக இருக்கும். ஆண்கள் மட்டுமே இப்படி இருப்பார்கள். ஆக இது ஆம்பள பேய். இந்த ஓராங் மிஞ்ஞாக் திருடு மட்டும் மானபங்கப்படுத்துவதென்பதற்கென்றே பிரசித்தி பெற்றது. சுலபமாகப் பூட்டப்பட்டிருக்கும் வீட்டுக்குள் நுழைவதும் வீட்டில் உள்ள பொருட்களைத் திருடுவதும், அப்படி வீட்டில் பெண்கள் இருந்தால் அவர்களை மயக்கி உறவு கொண்டுவிட்டு அதன் அத்தாட்சியாக அப்பெண்ணின் முகத்தில் பெருக்கல் குறியிட்டுத் தப்பிப்பதும் அப்படி தப்பிக்கும் போது மாயமாவதும் தான் இவர்களின் விவரிப்பு.

நான் ஏழு எட்டு வயதாக இருக்கும் போது கம்போங் குனோங் பொங்சு என்னும் ஃபெல்டா அருகில் தான் இருந்தேன். அப்போதெல்லாம் செம்பனை மர விதைகளைப் பயிரிடும் இடத்தில் நிறைய பேர் பை போடவும் செம்பனை கன்று நடவும் வருவார்கள். நானும் அப்பாவுக்கு உதவியாகத் தண்டல் வேலை பார்த்தேன். உரம் போடுவதிலிருந்து மருந்து அடிப்பதிலிருந்து நீர்ப்பாய்ச்சும் இயந்திரம் திறந்து விடுவது, ரப்பர் கன்றுகளுக்கு முளை விடுவது வரை எல்லா வேலைகளும் செய்து வேலை செய்யும் மலாய்க்காரர்களை மேற்பார்வை இடுவது வரை செய்யக் கற்றுக் கொண்டேன். அப்போது வேலை செய்யும் மலாய்க்கார அக்காக்கள் நிறைய கதை சொல்லுவார்கள். அவற்றில் ஒன்று தான் இந்த ஓராங் மிஞ்ஞாக் கதை.

அப்படிக் கம்பத்தில் வீட்டில் பொருட்கள் காணாமல் போய்விட்டாலோ அல்லது ஆண்தொடர்பில்லாமல் பெண் கருத்தரித்து விட்டாலோ முதலில் சுட்டிக்காட்டும் காரணம் ஓராங் மிஞ்ஞாவாகத்தான் இருக்கும். அதனாலேயே கன்னி பெண்கள் இருக்கும் வீடுகள் அதிக கட்டுப்பாடுகளோடும் வீட்டு ஆண்கள் மிகவும் விழிப்போடும் இருப்பார்கள். இரவு நேரங்களில் ரோந்து வேலைகளிலும் ஈடுபடுவார்கள்.

வெறும் கதையாக இருந்த இந்த ஓராங் மிஞ்ஞாக் ஐடியாவைப் பயன்படுத்தி 2006ஆம் ஆண்டு ஒரு திருடன் பிடிப்பட்டுள்ளான். ஆக இது திருடர்களுக்கு மிகவும் தோதாகவே அமைந்திருக்கிறது. உடல் முழுவதும் எண்ணெயைத் தடவிக் கொண்டு திருடப் போக, விழிப்பாயிருந்த ஊர் மக்களிடம் அகப்பட்டுக்கொண்டான்.

ஓராங் மிஞ்ஞாவுக்கு இன்னொரு கதையும் உண்டு. அதாவது அவர்களும் நம்மை போன்ற சாதாரண மனிதர்கள்தான். ஆனால் கோரமான முக அமைப்பைக் கொண்டவர்களாம். எனவே கடும் தவம் புரிந்து பூனியான்களிடமிருந்து சில வரங்களைப் பெற்று அழகான ஆணாக உருவம் கொண்டார்களாம். ஆனால் சில செய்யக்கூடாத விஷங்களை செய்ததால் சாபத்துக்கு ஆளாகி கரிய உருவத்தை அடைந்தனராம். சாபவிமோசனம் பெற நாற்பதிலிருந்து தொண்ணூற்று ஒன்பது கன்னிகளுடன் ஏழு நாட்களுக்குள் உறவு கொண்டால் மட்டுமே பழைய படி அழகாக முடியும் என்பது நம்பிக்கை. (இது ஆண் பேயா? ஆணாதிக்கப்பேயா என்பதுதான் சந்தேகமாக உள்ளது.)

இதைத் தவிர்க்க வீட்டில் இருக்கும் கன்னிப்பெண்கள் ஆண்களின் வியர்வை நாற்றம் கொண்ட உடைகளை இரவில் அணிந்து கொள்வார்களாம். மானபங்கம் செய்ய வரும் ஓராங் மிஞ்ஞாக் படுத்திருப்பது ஆண் தான் என எண்ணிப் போய் விடுமாம். அதோடு இந்த ஓராங் மிஞ்ஞாக்கள் பெண்கள் கைலி அணிந்திருந்தால் அவர்களை அண்ட மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு. அதோடு ஓராங் மிஞ்ஞாக் வராமல் இருக்க டிரகுலாவுக்கு எதிராகப் பூண்டை தொங்கவிடுவது போல வீட்டில் வாழைப்பூ தோலைக் கட்டி வைத்திருப்பார்கள் எனவும் சில விஷயங்களைக் கேட்டிருக்கிறேன். இதெல்லாம் அறுபதுகளில் மிகவும் விமரிசையாகப் பேசப்பட்ட பேய்க்கதைகள்.

### ஜெங்லோட்

ஜெங்லோட் என்றால் எனக்குத் தெரிந்து பயப்படாதவர்கள் கிடையாது. சிசுவைத் தாய் வயிற்றிலிந்து எடுத்து ஒரு புட்டிக்குள் வைத்துப் பூஜை செய்து அதை தங்கள் விருப்பங்கள் நிறைவேற பயன்படுத்திக் கொள்வார்கள் போமோக்கள். சிறிய அளவிலான குருதியில் ஊறவைத்துக் காய்ந்து போன உருவம், நீண்ட கூர்மையான பற்கள், குச்சிக் குச்சியான நீண்ட மயிர்களைக் கொண்ட தலை முடி என பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கும். உள்ளங்கையளவே இருக்கும் இந்த பிசாசு நீண்ட கூர்மையான நகங்களையும் கொண்டிருக்கும். (தொடரும்)

# பாடகர் கலைக்கமலின் 56ஆவது கீத்ராத் நிகழ்ச்சி











பாடகர் கலைக்கமலின் 56ஆவது கீத்ராத் நிகழ்ச்சி கொழும்பு 07 ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். (படம்: எம்.நஸார்)

# இலக்கிய உள்ளங்களை குளிரச் செய்த 79 ஆவது வகவ கவியரங்கம்



வலம்புரி கவிதா வட்டத்தின் 79 ஆவது கவியரங்கம் கடந்த (10/09/2022) சனிக்கிழமை காலை கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றது. செப்டம்பர் 11 ஆந்திகதி பாரதியின் நினைவு நாள். அதனை முன்னிட்டு பாரதி நினைவரங்காக நடைபெற்ற கவியரங்கு கவிதாயினி எஸ். யூ. கமர்ஜான் பீபியின் தலைமையில் இடம் பெற்றது.

வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், வரவேற்புரை நிகழ்த்த பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார். இறுதியாக மார்ச் மாதம் நடைபெற்ற 78 ஆம் கவியரங்கிற்கும் ஆறு மாதத்திற்குப் பிறகு 2022.09.10 ஆம் திகதிநடந்த 79 ஆவது கவியரங்குக்கும் இடைப்பட்ட காலத்தில் இவ்வுலகைவிட்டுப் பிரிந்த பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள், வகவ பொருளாளர் ஈழ கணேஷின் மகன் சுரேந்தர் தர்மலிங்கம், மூத்த எழுத்தாளர் தெணியான், வகவ கவிஞர் போருதொட்ட ரிஸ்மி, வகவ கவிஞர் எம். ஏ. எம். ஆறுமுகத்தின் மனைவி உதயலட்சுமி ஆறுமுகம், வகவ உறுப்பினர் எஸ். சிவராசா, சட்டத்தரணி இராஜகுலேந்திரா ஆகியோருக்கான நினைவுப் பிரார்த்தனை இடம்பெற்றது.

வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி சிறிய எலும்பு முறிவுக்கான சிகிச்சையின் பின் வீட்டில் ஓய்வெடுத்து வருவது குறித்தும் அவரை சந்தித்து சுகநலன் விசாரித்த வகவ கவிஞர்களுக்கு நன்றி தெரிவித்தமையையும் குறிப்பிடப்பட்டது.

வகவ வளர்ச்சியில் அவரது பங்களிப்பு குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. கலாபூஷணம் விருது பெற்ற கவிஞர்கள் அஸ்ரப் சிஹாப்தீன், இலங்கை பொன்மனச் செம்மல் தாஜ்மஹான், கலைக்கமல், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், மலாய் கவி டிவாங்ஸோ ஆகியோருக்கு வாழ்த்து கூறப்பட்டது.

கவிதாயினி எஸ். யூ. கமர்ஜான் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில் கவிஞர்கள் வாழைத்தோட்டம் எம். வஸீர், நித்திலன் ராஜா, இளநெஞ்சன் முர்ஷிதீன், லுணுகல கபிலகன் ஒகஸ்டீன், அகீலா சிஃபார், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், மலாய்கவி டிவாங்ஸோ, கிண்ணியா அமீர் அலி, சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், கம்மல்துறை இக்பால், எஸ். தனபாலன், மாத்தளை கமால், கவி நேசன் நவாஸ், தமிழ்த்தென்றல் அலி அக்பர், இலங்கை பொன்மனச் செம்மல் தாஜ்மஹான், பர்ஹாத் சித்தீக் ஆகியோர் கவிதை பாடினர்.

கவிஞர் ரவூப் ஹஸீர், நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், மஸீதா அன்சார், ஷாமில், பஸ்லி ஹமீத், நூருல் ஷிபா ரஷீத், எம். ஜனார்த்தனன், அமல் பாண்டி போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

படங்கள் :
முஹம்மத் நசார்

## கணவன் மனைவி ஜோக்ஸ்





"இந்த டாக்டர், மாற்று அறுவை சிகிச்சையில புகழ்பெற்றவரு"
"எப்படி சொல்றே?"
"வயித்துல செய்ய வேண்டிய ஆபரேசனை, வாயில செஞ்சுடுவாரு"

**அம்மா :** டேய் ஏண்டா முடிய நீளமா வளத்துகிட்டு ரப்பர் பேண்டெல்லாம் மாட்டிட்டு அலையறே..?

**மைந்தன் :** இதுதாம்மா இப்போ ஃபேஷன்

**அம்மா :** நாயே ... உங்க அக்காவ பொண்ணுபாக்க வந்தவங்க உன்ன பிடிச்சிருக்குண்ணு சொல்லிட்டு போயிருக்காங்க



"அமாவாசை அன்று நிலவு ஏன் தெரியறதில்லை?"
"அன்னிக்கு ரொம்ப இருட்டா இருக்கறதாலே தெரியறதில்லே சார்!"



## சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



"பேராண்டி... இதோ பார்... இதுதான் டேபிள் ஃபேன்"
"போங்க தாத்தா... ஃபேனை ஸ்டூல் மேல வச்சிட்டு அதைப்போய் டேபிள் ஃபேன்னு பொய் சொல்றீங்களே.."




**மனைவி :** ஏங்க , சனி பெயர்ச்சிக்கும் ,குரு பெயர்ச்சிக்கும் என்ன வித்தியாசம் ?

**கணவன் :** நீ ஊருக்கு போன அது சனி பெயர்ச்சி . அதுவே நீ உன் தங்கையுடன் திரும்பி வந்தா அது குரு பெயர்ச்சி!

**தபால்காரர்:** இந்த பார்சல குடுக்க அஞ்சு கிலோ மீட்டர் நடந்து வந்தேன் உங்க ஊருக்கு.

**வீட்டுக்காரர்:** ஏன், தபால்ல அனுப்பி இருக்கலாம்ல..?



★ ரமேஷ்: நாங்க வெளியூர் போகணும்னு நெனச்சா... கால் டாக்சி புக் பண்ணுவோம்... நீங்க...?

சோமு: நாங்க முழு டாக்சியையும் புக் பண்ணிடுவோன்டா.

அவரு மீன் சாப்பிடும் போது ஏன் செருப்பு போட்டு சாப்பிடுறாரு ?





MODEL - Sajini Roy

**கணவன் :** எவ்வளவு தடவை நான் உனக்கு சொல்லிருக்கேன், சமைக்கும் போது மொபைல் போன யூஸ் பண்ண வேண்டாம்னு? இப்ப பாரு இந்த ரசத்துல உப்பும் இல்ல, புளியும் இல்ல.

**மனைவி :** எவ்வளவு தடவை நான் உங்களுக்கு சொல்லிருக்கேன், சாப்பிடும் போது மொபைல் போன யூஸ் பண்ண வேண்டாம்னு? நீங்க ஊத்தி சாப்பிடறது ரசம் இல்ல, பக்கத்துல வச்சிருந்த தண்ணி.

**கணவன் :** 😠😠😠😠😠

**கண்டக்டர்:** யோவ் டிரைவர், நான் மூணுமுறை விசிலடிச்சும் வண்டி நிக்கலையே ஏன்?

**டிரைவர்:** அட போய்யா, நான் ஆறுமுறை பிரேக் அடிச்சே வண்டி நிக்கலை, நீவேற.



# ஜல்லிக்கட்டு போராட்டத்திற்கு பாட்டு எழுதிய நம்ம நாட்டு பாட்டுக்காரி

## 'ஈழத்தின் இளம்பெண் பாடலாசிரியர்' விருது பெற்ற டினுஷா காயத்திரி



தமிழின் மீதும் தமிழ் இலக்கியத்தின் மீதும் தீரா அன்பு கொண்டு ஆறா அமுதமாய் தமிழ் கவிதைகள் படைத்து வரும் ஒரு இளம் கவிமயில் சுந்தரராஜன் டினுஷா காயத்திரி. கவிதை, கட்டுரை, சிறுகதை, பேச்சு, என பலவேறு துறைகளில் தனது திறன்களை காட்டி வரும் இவரது கைவண்ணத்தில் தீட்டப்பட்ட கவி வரிகளினால் நல்லூர் கந்தனுக்கு "நலம் தரும் நாயகன்" என்ற பக்தி பாடலின் இறுவட்டு வெளீயிடானது. அண்மையில் இடம் பெற்ற நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவின் போதுஇந்தஇறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.





◆ **உங்களைப் பற்றியும் உங்கள் ஊரைப் பற்றியும் கொஞ்சம் அறிந்துகொள்ளலாம் என எண்ணுகிறோம்?**

எனது பெயர் சுந்தரராஜன் டினுஷா காயத்திரி. கதிரவன் மறையும் வேளைதனில் கொள்ளை அழகு தந்து செல்லும் மேல் மாகாணமே எனது மாகாணம். கடலும், களப்பும் சங்கமிக்கும் மொழியிலே மேன்மை மிகு ஊர் எங்கள் ஊர் நீர்கொழும்பு. ஏது குறை இங்கு எடுத்துக்கூற, எனது பிறப்பிடம் நீர்கொழும்பு ஆகும். பிறந்து வளர்ந்தது எல்லாம் இங்கு தான். தற்போது உயர்தரம் முடித்துவிட்டு சட்டம் கற்பதற்கு உள்ளேன். குடும்ப உறுப்பினர்களைப் பற்றிச் சொல்வது என்றால், எனது தந்தையின் பெயர் சுந்தரராஜன். தாய் திருமதி. கமலஜோதி. அவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அமைச்சின் கீழ் பணிபுரிந்தவர். சகோதரியின் பெயர் கவிஷா காயத்திரி அவர் ஊடகவியலாளர் மற்றும் நீர்கொழும்பு மாநகரசபை உறுப்பினர். நான்கு அங்கத்தவர்களுடனான ஒரு சிறு குடும்பே எங்கள் குடும்பம்.



◆ **உங்கள் உள்ளத்துக்குள் கவிதை எப்படி ஊடுருவி உலாவந்தது?**

சிறு வயதில் சித்திரமாய்... சிம்மாசனமாய்... என்னுள் சிறகில்லாத சிட்டுக்குருவியாய்..... சிறைப்பறவையாய்... என் எழுத்துகள் சிதறிக் கிடந்தன. இன்று சிறு சிறகை மெதுவாய் அசைக்கிறது இந்த பரந்து விரிந்த வானில் தனக்கென்று சிறிய இடம் கேட்டு என் கவிதைகள், கனவுலகில் எழுத்துலக பட்டாம் பூச்சிகளுடன் ஒரு மின்மினிப் பூச்சியாக பேரானந்தத்துடன் பறப்பதற்கு பழகத் துடிக்கிறது.

◆ **எத்தனை வயதில் இருந்து இந்த இலக்கிய கிறுக்கல் ஆரம்பமானது?**

என்னுடைய ஒன்பதாவது வயதிலிருந்தே கவிதை, கட்டுரை, பேச்சு என்று பல்வேறுபட்ட தளங்களில் என்னை நான் முழுமையாக ஈடுபடுத்தி வந்தேன். அந்நேரங்களில் பாடசாலையால் நடாத்தப்படும் மாகாண மட்ட, தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபெற்று பரிசில்களைப் பெற்றுள்ளேன். அப்போது எனக்கு கிடைத்த பாராட்டுதல்களும், ஊக்குவிப்புமே என்னை மிகவும் பலப்படுத்தியது என்று சொல்லலாம்.


◆ **கவிதைகளில் தமிழை விதைத்துக் கொண்டு வாழ்ந்த உங்களுக்கு எப்பொழுது, எப்படி பாடல்களுக்கு பரிணமிக்க வாய்ப்பு கிட்டியது?**

என்னுடைய 15ஆவது வயதில் இந்தியாவின் தமிழ்நாட்டில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக ஈழத்தின் இசைத்தென்றல் பி.எஸ். விமல் அண்ணாவின் இசையிலும், என்னுடைய கவிதை வரிகளாலும் முதலாவது பாடலை வெளியிட்டேன். அந்தப் பாடலுக்கு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பும், அன்பும், ஆதரவும் கிடைத்தது மட்டுமன்றி "ஈழத்தின் "இளம் பெண் பாடலாசிரியர்" என்ற விருதும் கிடைக்கப் பெற்றது.



(தொடர் 7ஆம் பக்கம்)



இதைத்தொடர்ந்து என்னுடைய வரிகளினால் சில பாடல்களையும் வெளியிட்டேன். மேலும் நான் எழுதிய பல ஆக்கங்கள் சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் பிரசுரமாகின. வானொலி மற்றும் தொலைக்காட்சிகளிலும் வெளி வந்தன.

இவற்றைத் தொடர்ந்து இந்தியாவின் (தமிழ்நாட்டின்) முற்போக்கு கலை இலக்கிய மேடையால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் "அம்மா உன் அருகில்" என்று நான் எழுதிய சிறுகதை சிறந்த அறிமுக எழுத்தாளருக்கான விருதை எனக்கு பெற்றுத் தந்தது. அதனைத் தொடர்ந்து இந்தியாவில் அமைந்துள்ள கிராமியக் கலைகள் வளர்ச்சி மற்றும் நல அமைப்பு அறக்கட்டளையினால் நடாத்தப்படும் சர்வதேச கிராமியக் கலை விருதுகள் 2022 சார்பாக " "சிறந்த சாதனையாளர் என்ற விருதும் கிடைக்கப் பெற்றது. தற்போது ஈழத்தின் இசைத்தென்றல் பி.எஸ் விமல் அண்ணாவின் இசையிலும், இசை எழுவாருதி எம்.பகி அண்ணாவின் பாஸ் கிற்றார் மற்றும் ஒலிக்கலவையிலும், எனது கவிவரிகளினால் நல்லூர் கந்தன் புகழ் பாடும் " நலம் தரும் நாயகன்" என்ற பக்தி பாடலானது உருவானது.

நல்லூர் ஆலயத்தில் அமைந்துள்ள கெபிடல் கலையகத்தினூடாக இறுவட்டு வெளீயிடு இனிதே நடைபெற்றது. இப் பக்திப் பாடல் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற மிகவும் உறுதுணையாக நின்ற கோண்டாவில் பிரபல நாதஸ்வர வித்வான் சிவதாசன் சினேகாவிற்கும், கவிஞர் யாழ் மருதன் அண்ணாவிற்கும், தபேலாவை வழங்கிய பா. கபிலனுக்கும் மற்றும் புல்லாங்குழல் இசையை அழகிய முறையில் தந்த எஸ். நாதனிற்கும் ஒளிப்பதிவு வழங்கிய துளிர்பாபுவிற்கும், ஒளித்தொகுப்பை வழங்கிய ஏ.எஸ் பிரசாத் என அனைவருக்கும் இத்தருணத்தில் என்னுடைய சிறம் தாழ்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.






இன்னும் நிறைய சமுதாயம் சார்ந்த தரமான படைப்புகள் வெகுவிரைவில் வெளிவர காத்திருக்கின்றன. குறிப்பிட்டு சொல்வதென்றால் மலையக மண்ணுக்காக தற்போது ஒரு மிகச் சிறந்த பாடல் வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. இறுதியாக இறைவனின் ஆசிர்வாதங்களுடன் எனது நீண்ட நாள் கனவான " "கனவு வெளிப் பயணம்" கவிதை நூலானது உங்களுடைய கைகளில் வெகு விரைவில் தவழப் போகின்றது. கனவுகள் ஆயிரம்.. அதில் பயணித்த என் " கனவு வெளிப் பயணம் பல

கனவுகளின் ஒரு திறப்பு. இன்று அது சிறப்பாய் சிறகடிப்பதற்கு நிச்சயம் உங்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் தருவீர்கள் என நம்புகின்றேன். ஆகவே இந்த எழுத்து முயற்சிக்கு தொடர்ந்து எனக்கு மிகவும் பக்கபலமாக நின்று உற்சாகம் ஊட்டிக் கொண்டிருக்கும் என்னுடைய பெற்றோருக்கும், என்னுடைய முதல் குருவான ஈழத்தின் இசைத்தென்றல் பி. எஸ். விமல் அண்ணாவிற்கும், எனது சகோதரிக்கும், ஐங்கரன் அண்ணாவிற்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் இத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

◆ **சமுதாயத்திற்கு உங்கள் அறிவுரை என்ன?**

சமுதாயத்திற்கு அறிவுரை சொல்லும் அளவுக்கு என் வயதும் இல்லை, அதற்கான அனுபவங்களும் என்னிடம் இல்லை, என்னைப் பொறுத்தவரைக்கும் யாராக இருந்தாலும், தன்னோடு பயணிப்பவர்களுக்கு மிகவும் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்ட புதினங்களை எழுதிய

# சாண்டில்யன்



வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட புதினங்களை எழுதிய எழுத்தாளர்களுள் ஒருவர் சாண்டில்யன். இவரது புதினங்கள் இதழ் தொடர்களாக வெளியானது. இவர் கல்வி பயின்ற நிலையம் செயின்ட். ஜோசப் கல்லூரி, திருச்சி. எழுதிய காலம் 1930-1987.

பாஷ்யம் அய்யங்கார் என்ற இயற்பெயர் கொண்ட சாண்டில்யன் தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவிலூரில் 1910 நவம்பர் 10 ஆம் திகதி பிறந்தார். இவரது பெற்றோர் ராமனுஜம் அய்யங்கார் மற்றும் பூங்கோவில்வல்லி. இவர் சென்னையில் உள்ள பச்சையப்பா மற்றும் நேஷனல் மாடல் பள்ளிகளில் பயின்றார். திருச்சி செயின்ட் ஜோசஃப் கல்லூரியில் பட்டம் பெற்றார். கல்லூரியில் இருந்தபோது சி. ராஜகோபாலாச்சாரியின் தாக்கத்தால் இந்திய சுதந்திர போரட்டத்தில் இணைந்து இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினரானார். 1929இல் ரங்கநாயகியை மணந்தார்.

கல்லூரிப் படிப்பை முடித்தபின் 1930களில் சென்னை தி.நகரில் குடியேறினார். அருகாமையில் வசித்த பிரபல எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தி

மற்றும் திரு. வி. க நடத்திய வார இதழ் நவசக்தியில் பணியாற்றிய

வி. சுவாமிநாதனும் அவருக்கு நண்பர்கள் ஆனார்கள். அவர்கள் அளித்த ஊக்கத்தால் சிறுகதைகள் எழுத ஆரம்பித்தார். அவர் எழுதிய முதல் சிறுகதை.


சாந்தசீலன் ஆகும். அவரது சிறுகதைகளின் சிறப்பைக் கண்ட கல்கி, கண்ணம்மாவின் காதலி, அதிர்ஷ்டம் என்ற இரு சிறுகதைகளை ஆனந்த விகடனில் வெளியிட்டார். இந்த வெற்றி அவரை திருக்கண்ணபுரம் சீனிவாசாரியார் என்ற தமிழ்ப் பண்டிதரிடம் முறையாக தமிழ்மொழியைப் பயிலத் தூண்டியது. சுதேசமித்திரன் வார இதழில் சிறுகதைகள் எழுதினார். 193545வரை சுதேசமித்திரனில் நிருபராகப் பணியாற்றினார். ஆங்கில நாளிதழ்

ஹிந்துஸ்தான் டைம்சில் உதவி ஆசிரியராக பணிபுரிந்தார். 1982 பெஃப்ரவரி 7ஆம் நாள் முதல் வெளிவந்த கமலம் என்ற இதழின் ஆசிரியராக இருந்தார். ஹிந்துஸ்தான் டைம்ஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது விஜயா ஸ்டுடியோவின் பி.என்.ரெட்டி, நடிகர் சித்தூர். வி. நாகையா இருவருடன் நட்பு ஏற்பட்டது. இந்த நட்பே இவர் திரைப்படத்துறையில் அடியெடுத்து வைக்க வழிவகுத்தது. சுவர்க்க சீமா (1945), என் வீடு (1953) ஆகிய இரு திரைப்படங்களுக்கு திரைக்கதைகளை எழுத உதவினார். பிற்காலத்தில் தனது திரைப்படத்துறை அனுபவங்களை சினிமா வளர்ந்த கதை (1985) என்ற புத்தகமாக வெளியிட்டார். பெர்த் ஆஃப் நியூஸ்பேப்பர் என்ற ஆவணப்படமும் தயாரித்து வெளியிட்டார். ஹிந்துஸ்தான் டைம்சில் வேலை பார்த்த பின்பு சுதேசமித்திரனில் மீண்டும் பணியில் சேர்ந்தார். முழுநீள புதினங்கள் எழுதத் தொடங்கினார். பலாத்காரம் என்னும் அரசியல் புதினத்தை எழுதி தானே வெளியிட்டார்.

அமுதசுரபி போன்ற பிற பத்திரிகைகளிலும் கதைகள் எழுதினார். பாலைவனத்துப் புஷ்பம், சாந்ததீபம் இரண்டும் அவரது முதல் வரலாற்றுப் புதினங்கள். பின்பு குமுதம் வார இதழில் இவரது கதைகள் தொடர்களாக வர ஆரம்பித்தன.

இதனால் குமுதத்தின் விற்பனை கூடியது. குமுதத்தில் தனது கதைகளுக்காக மாத வருமானம் வாங்கிய மிகச்சிலருள் இவரும் ஒருவர்.

குமுதத்தை விட்டு வெளியே வந்தபின் சொந்தமாக கமலம் என்ற வார இதழ் ஆரம்பித்தார். ஆனால் அதில் அவர் வெற்றி பெறவில்லை. அவரது புதினங்களை வானதி பதிப்பகம் புத்தகங்களாக வெளியிட்டது. அவை விற்பனையில் சிகரத்தை எட்டின.



முதல் வெளியீடு வந்து நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னும் அவரது புதினங்கள் இன்னமும் அச்சில் உள்ளன. கமில் சுவெலபில், சாண்டில்யனை மிகப் பிரபலமான தமிழ் எழுத்தாளர்களில் நான்காவதாக குறிப்பிடுகிறார். சாண்டில்யன் 1987 செப்டம்பர் 11 மரணமடைந்தார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

Senthooram செந்தூரம்



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

எம்.மாகிரட்,
எலபடகம.

**கேள்வி:** கவிஞர் கண்ணதாசன் சில பாடல்களை எழுதும்போது அவரது வாழ்க்கையில் நடைபெற்ற சில சம்பவங்களை வைத்துத்தான் எழுதுவாராம்...அந்தமாதிரி அவர் எழுதிய "அனுபவ"சம்பவங்கள் ஏதாவது உங்களுக்குத் தெரியுமா.. இதுவரை நாங்கள் கேள்விப்படாததாக இருக்க வேண்டும்?

**பதில்:** கண்ணதாசனின் வழக்கு விவகாரங்களைக் பார்ப்பதற்கு ஒரு வக்கீல் இருந்தார். அவர் பெயர் வி.பி.ராமன்.அவரை பார்ப்பதற்காக அவர் வீட்டுக்கு ஒரு முறை போனார் கண்ணதாசன். சாத்தியிருந்த கதவில் தட்டினார். வீட்டில் அவர் இல்லை. மனைவிதான் உள்ளே இருந்து" who is that? "என்று குரல் கொடுத்தார்.அதற்கு கண்ணதாசன்"an out standing poet is standing out" என்று பதில் சொன்னார் கண்ணதாசன்.

"ஓ...தமிழில்தான் விளையாடுகிறீர்கள் என்றால் ஆங்கிலத்திலும் புகுந்து விளையாடு கிறீர்களே" என்று சொல்லி விட்டு, அவருக்கு ஒரு கதை சொன்னார். ஓர் இராணுவ வீரனைப் பற்றிய கதை அது. யுத்த நேரத்தின் போது வீட்டுக்கு அவன், இரவு தூங்காமல் யுத்தத்தைப் பற்றியே நினனைத்துக் கொண்டு அப்படியும் இப்படியும் நடந்து கொண்டிருந்தான். அவனனைத் தூங்க வைத்த படியே கவிதை ஒன்றைப்படித்தாள். அந்த வரிகள் இப்படி இருந்தது.

Sleep your eyes
Rest your heart.

இந்த வரிகளை மனனம் செய்து வைத்துக் கொண்டார் கண்ணதாசன்.

'ஆலயமணி'படத்திற்கு பாடல் எழுத வாய்ப்பு வந்த போது அவர் இந்த வரிகளை பயன்படுத்திக் கொண்டார். அந்தபாடல்தான் ஜானகி பாடிய

"தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே
அமைதி உன் நெஞ்சில் நிலவட்டுமே"என்று ஆரம்பிக்கும் பாடல்.

கே.எம்.விஜயகுமார்.
வவுனியா.

**கேள்வி:**'பொன்னியின் செல்வன்'திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியிடப் பட்டு விட்டதாமே. படம் எப்போது திரைக்குவருகிறது. அதைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

பதில்:தமிழ் மொழியை வாசிக்கத் தெரிந்த உலகிலுள்ள பதினான்கு கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு பிடித்த ஒரே ஒரு சரித்திர நாவல் அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வன்'. எழுபது ஆண்டுகளுக்கு முன் சரித்திரத்தை ஆராய்ந்து எழுதப் பட்ட இந்த நாவல் தற்போது அதே பெயரில் இரண்டு பாகங்களைக் கொண்ட திரைப்படமாக உருவாக்கப் பட்டிருக்கிறது. இதன் முதல் பாகம் இம்மாதம் 30ஆம் திகதி அன்று உலகம் முழுவதிலும் உள்ள படமாளிகைகளில் வெளியாகிறது. பெரும் எதிர்பார்ப்பில் இருக்கும் இப்படத்தின் முன்னோட்டம் சென்னையில் நடைபெற்ற பிரம் மாண்டமான விழாவில் வெளியிடப் பட்டது. இதற்காக தமிழ் திரையுலகின் முன்னணி அடையாளங்களாக திகழும் சுப்பர் ஸ்டார் ரஜினி காந்த் மற்றும் உலக நாயகன் கமல்ஹாசன். என இருவரும் பங்கு பற்றினர். இதன் மூலம் தமிழ் சினிமா ஆரோக்கியமான பாதையில் பயணிக்கத் தொடங்கயிருப்பது மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனைச் சாத்தியப்படுத்திய லைகா நிறுவனத்தையும் இந்த தருணத்தில் தாராளமாக பாராட்டலாம். இவர்கள் 'பொன்னியின் செல்வன்' எனும் தமிழர்களின் அசலான வீரம் செறிந்த வரலாற்றை டிஜிட்டல் செல்லுலொய்ட்டில் செதுக்கப் பட்டிருப்பதை உணர்வுப் பூர்வமாக வரவேற்றனர். இந்த காவிய படைப்பில் பங்கு பற்றிய அனைத்து கலைஞர்களும் தங்களது மறக்க இயலாத அனுபவத்தை வார்த்தைகளில் விவரித்தனர். வாசிப்பின் மூலம் அவர்கள் கண்டுணர்ந்த சோழமன்னர்களின் ஆளுமையும், மணிரத்னம் உள்ளிட்ட தொழில் நுட்ப கலைஞர்களும்,சீயான் விக்ரம், கார்த்தி உள்ளிட்ட நட்சத்திர நடிகர்களின் கூட்டணியிலும் உருவாகி இருக்கும் 'பொன்னியின் செல்வன்' திரைக்காவியம்மும் ஒரே மாயாஜால புள்ளியில் இணைய வேண்டும் என அனைவரும் எதிர் பார்க்கிறார்கள். இதற்கு செப்டெம்பர் 30ஆம் திகதியன்று விடைகிடைக்கும் என் திரை உலகினர் தெரிவிக்கிறார்கள்.

# Hotடான ராணியாக 'சன்னி லியோன்'



ஓமை கோஸ்ட் டீசரை நடிகர் ஆர்யா வெளியிட்டுள்ளார். இந்த டீசரில் சன்னி லியோனின் வழக்கமான கிளாமர் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. ஹாட்டான ராணியாக சன்னி லியோன் கவனம் ஈர்க்கிறார்.

பிரபல நடிகை சன்னி லியோன் நடித்துள்ள ஓ மை கோஸ்ட் படத்தின் டீசர் இன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் சன்னி லியோன் அறிமுகம் ஆகிறார்.

பாலிவுட் சினிமாவில் பிரபல நடிகையாக இருப்பவர் சன்னி லியோன்.

இவர் கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து இந்தி படங்களில் நடித்து வருகிறார். பல படங்களில் இடம்பெறும் சிங்கிள் பாடலுக்கு சன்னி லியோன் ஆட்டம்போட்டு ரசிகர்களை ஈர்த்திருக்கிறார்.

போல்டான படுக்கையறை காட்சிகள், கிளாமர் பாடல்கள் என சன்னி லியோன் இடம் பெறும் படங்கள் பரபரப்பாகவே இருக்கும். இந்நிலையில் ஓ மை கோஸ்ட் என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு என்ட்ரி போட்டுள்ளார் சன்னி லியோன்.

இந்த படத்தின் டீசர் இன்று வெளியாகியுள்ளது. இந்த படத்தை சிந்தனை செய் படத்தை இயக்கிய ஆர்.யுவன் இயக்கியுள்ளார். நடிகர்கள் சதீஷ், யோகி பாபு, தர்ஷா குப்தா ஆகியோர் முக்கிய கேரக்டரில் நடித்துள்ளனர்.

ஓ மை கோஸ்ட் டீசரை நடிகர் ஆர்யா வெளியிட்டுள்ளார். இந்த டீசரில் சன்னி லியோனின் வழக்கமான கிளாமர் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. ஹாட்டான ராணியாக சன்னி லியோன் கவனம் ஈர்க்கிறார். ஒரு நிமிடம் மற்றும் 15 வினாடிகள் ஓடக் கூடியதாக டீசர் கட் செய்யப்பட்டுள்ளது.

ரமேஷ் திலக், மொட்டை ராஜேந்திரன், தங்க துரை, ரவி மரியா, அர்ஜுனன் உள்ளிட்டோர் படத்தில் இடம்பெற்றுள்ளனர். இசை ஜாவித் ரியாஸ். ஒளிப்பதிவு டி. மேன்.

இந்த படத்தை நவம்பர் மாதம் திரைக்கு கொண்டுவர படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

# கவர்ச்சியில் சமந்தாவை மிஞ்சிய கீர்த்தி சுரேஷ்



நடிகை சமந்தா அணிந்திருந்த அதே போல் உள்ள உடையை அணிந்து புகைப்படங்களை சமூக வலைதளத்தில் வெளியிட்டிருந்தார் கீர்த்தி சுரேஷ். தென் இந்திய சினிமாவின் முன்னணி கதாநாயகியாக விளங்கி வருபவர் சமந்தா. விவாகரத்துக்கு பின்னர் சினிமாவில் படு பிஸியாக அவர் நடித்துக்கொண்டிருக்கிறார்.

தனது படங்களும் பெரிய அளவில் வெற்றி பெற்று வருவதால் சமந்தா மிகவும் பூரிப்பில் இருக்கிறார். சினிமாவைப் போலவே சமூக வலைதளங்களிலும் சமந்தா மும்முரமாக செயல்படுகிறார். கவர்ச்சி படங்களை வெளியிடுவது, ரசிகர்களுடன் கலந்துரையாடுவது என பரபரப்புடன் இருக்கிறார். சமீபத்தில் மாடர்ன் உடை அணிந்து சமந்தா தனது கலக்கல் புகைப்படங்களை சமூக வலைதளத்தில் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் அவரைப் போலவே உடை அணிந்து கீர்த்தி சுரேஷ் தனது புகைப்படங்களையும் இணையதளத்தில் வெளியிட்டிருக்கிறார். இந்த இரண்டு புகைப்படங்களும் தற்போது இணையதளத்தை கலக்கி வருகின்றன. அந்த மாடர்ன் உடையில் யார் அழகாக இருக்கிறார்கள்? இன்றைக்கு தீர்மானிக்க ரசிகர்கள் திணறுகிறார்கள்.

சிலர் இந்த போட்டி இன்னும் நீள வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் பலரும் சமந்தாவை கீர்த்தி சுரேஷ் மிஞ்சி விட்டதாகவே கருத்துகளை பதிவிட்டு வருகிறார்கள். அதை விட சமந்தாவின் ரசிகர்கள், 'எங்கள் தலைவி போல கவர்ச்சியாக உடை அணிந்து கலக்க முடியுமா?' என்றும் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். எது எப்படியோ இனி ரசிகர்களுக்கு கொண்டாட்டம்தான்.

# நடிகை சாய் பல்லவி குறித்து தீயாய் பரவிய வதந்தி



நடிகை சாய் பல்லவி குறித்து வதந்தி ஒன்று கடந்த சில நாட்களாக தீயாய் பரவியுள்ளது.

சாய் பல்லவி தற்போது தெலுங்கு சினிமாவில் பிஸியான நடிகையாக மாறியுள்ளார். சமீபத்தில் வெளிவந்த லவ் ஸ்டோரி, ஷ்யாம் சிங்கா ராய், விராட பர்வம், கார்கி படங்கள் வரவேற்பை பெற்றன. படங்கள் தொடர்ந்து வெற்றி பெறுவதால் சாய் பல்லவிக்கான மார்க்கெட் உயர்ந்துள்ளது.

புஷ்பா 2 படத்தில் சாய் பல்லவி இடம்பெறுவதாக தகவல்கள் பரவின.

இந்த படத்தில் பழங்குடியின பெண் கேரக்டரில் அவர் நடிப்பதாக கூறப்பட்டது.

இந்நிலையில் புஷ்பா 2 படத்தில் சாய் பல்லவி இடம்பெறவில்லை என படக்குழுவினர் தெரிவித்துள்ளார்கள். கடந்த 2015ம் ஆண்டில் இருந்து திரைத்துறையில் சாய் பல்லவி ஆக்டிவாக இருந்து வருகிறார். சாய் பல்லவி ஜார்ஜியா நாட்டில் எம்.பி.பி.எஸ். படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது 2015ல் வெளியான பிரேமம் திரைப் படம், சாய் பல்லவியின் கெரியரில் திருப்பத்தை ஏற்படுத்தியது

# சுருதி காட்டில் மழை



நடிகை சுருதிஹாசன் நடித்த "3" படம் மீண்டும் ஆந்திராவில் வெளியாகியுள்ளது. இப்படத்தில் நடிகை சுருதிஹாசனின் நடிப்பை அனைவரும் பாராட்டும் நிலையில் ரசிகர்கள் சுருதிஹாசன் நடிப்பை கொண்டாடி வருகிறார்கள்.

ரசிகர்கள் மனங்களை கொள்ளை கொண்டு வருகிறார். குறிப்பாக ஆந்திராவில் அவருக்கு தனி ரசிகர் பட்டாளமே உள்ளது. சமீபத்தில் தனுஷ் மற்றும் சுருதிஹாசன் நடிப்பில் 2012ல் வெளியான 3 திரைப்படத்தின் தெலுங்கு பதிப்பு ஆந்திராவில் மீண்டும் வெளியிடப்பட்டது. இப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று ஹவுஸ்புல் காட்சிகளாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இப்படத்தில் குறிப்பாக நடிகை சுருதிஹாசனின் நடிப்பை விமர்சகர்களும், பொதுப்பார்வையாளர்களும் பாராட்டி வருகிறார்கள். இதனால் உற்சாகம் அடைந்த சுருதிஹாசன் ரசிகர்கள் இதனை இணையத்தில் பதிவிட்டு கொண்டாடி வருகிறார்கள். தெலுங்கில் பிரபாஸ் நடிப்பில் கே ஜி எப் புகழ் பிரசாந்த் நீல் இயக்கும் சலார் படத்தில் சுருதிஹாசன் நாயகியாக நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# Business பெண்மணியாக நடிகர் அர்ஜுன் மகள்

தமிழ் மற்றும் கன்னட தி`ரையுல நடிகர் அக்ஷன் கிங் அர்ஜுனின் இளைய மகள் அஞ்சனா பழத்தோல்கள் மூலம் ஹேண்ட்பேக்குகளை தயாரிக்கும் பிசினஸை ஐதராபாத்தில் தொடக்கி இருக்கிறார்.

நடிகர் அர்ஜுனின் மகள் அஞ்சனா ஐதராபாத்தில் தொடக்கி இருக்கும் ஹேண்ட்பேக் நிறுவனத்தை தெலுங்கானா கவர்னர் தமிழிசை சௌந்தரராஜன் தொடக்கி வைத்து இருக்கிறார்.

அக்ஷன் கிங் அர்ஜுனுக்கு தமிழ் மற்றும் கன்னட உலகில் ஏகப்பட்ட ஃபேன்ஸ் கூட்டம் உள்ளது. சுதந்திர தினத்தன்று பிறந்த அர்ஜுன் தேசப்பற்று அதிகம் உள்ள படங்களை தேர்ந்தெடுத்து நடிப்பார். அதுமட்டுமில்லை பொலிஸ் ரோலில் அர்ஜுனை ரசிக்காதவர்களே இல்லை எனலாம்.

அர்ஜுனுக்கு ஐஸ்வர்யா மற்றும் அஞ்சனா என இரண்டு மகள்கள். மூத்த மகள் ஐஸ்வர்யா விஷாலின் 'பட்டத்து யானை' படம் மூலம் தமிழில் என்ட்ரி கொடுத்தார். கன்னடத்தில் 'பிரேமா பராகா' என்ற படத்திலும் நடித்து இருக்கிறார். இவர் தெலுங்கில் நடித்து இருக்கும் மற்றொரு படம் அடுத்த ஆண்டு ரிலீஸ் ஆகவுள்ளது.

அர்ஜுன் 2வது மகள் அஞ்சனாவை பற்றி பலருக்கும் தெரியாது. சிறு வயதில் இருந்து வெளிநாட்டில் படித்து வந்தவர் தற்போது தொழிலதிபராக மாறியுள்ளார் பழத்தோல்கள் மூலம் ஹேண்ட்பேக்குகள் தயாரிக்கும் நிறுவனத்தை அஞ்சனா தொடங்கியுள்ளார். இந்த நிறுவனதுக்கு சார்ஜா என பெயர் வைத்துள்ளார் அஞ்சனா.

உலகில் பல வகையான ஹேண்ட்பேக் நிறுவனங்கள் உள்ளன. ஆனால் பழத்தோல்கள் மூலம் ஹேண்ட்பேக் தயாரிக்கும் முதல் நிறுவனம் சார்ஜா தான். இந்த பெயரும் புகழும் அஞ்சனாவையே செரும்.

அஞ்சனா அர்ஜுனின் இந்த புதிய முயற்சிக்கு பல்வேறு தரப்பில் இருந்து பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. பிரபலங்கள் பலரும் அஞ்சனாவை வாழ்த்தியுள்ளனர். தனது வித்தியாசமான முயற்சியால் உலகமே திரும்பி பார்க்கும் அளவுக்கு பிசினஸ் பெண்மணியாக அஞ்சனா உருவெடுத்துள்ளார்.





# பளபளப்பு தரும் பப்பாசி பேஷியல்

பப்பாளி பழம் உடல் ஆரோக்கியத்திற்கு நலம் சேர்ப்பதோடு சரும பொலிவையும் (Papaya skin beauty) மெருகூட்டும். முகத்தில் படியும் அழுக்கையும், எண்ணெய் பிசுபிசுப்பு தன்மையையும் நீக்கும். சருமத்தில் படிந்திருக்கும் இறந்த செல்களை நீக்கி மென்மையையும், பொலிவையும் பெற்று தரும். இயற்கை ஃபேஷியலுக்கு பழங்களை பயன்படுத்துவது உடல் ஆரோக்கியத்துக்கும் சருமத்துக்கும் எந்தவிதமான பாதிப்புகளையும் உண்டாக்குவதில்லை.

★ முகப்பரு உள்ளவர்கள், பப்பாளிக்காயின் நறுக்கிய உட்பகுதித் துண்டுகளை மென்மையாக முகத்தில் தேய்க்க வேண்டும். இது முகப்பருக்களைப் போக்கி, முகச் சுருக்கங்களையும் நீக்கி, பொலிவு கூட்டும் பப்பாளிப்பழம்.

★ பப்பாளி பழத்தை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். அதனுடன் சிறிதளவு தேன் மற்றும் பால் கலந்து பசைபோல் குழைத்துக் கொள்ள வேண்டும். அதனை முகம், கழுத்து பகுதியில் பூசி, சில நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் சருமம் மிளிரும்.

★ நன்கு பழுத்த பப்பாளி விழுதை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். அதனுடன் நான்கு ஸ்பூன் தேன், சிறிது கிளிசரின் சேர்த்து கலந்து, கண்ணைச் சுற்றியுள்ள பகுதி தவிர மீதி இடங்களில் பற்றுப்போட்டு, 15 நிமிடங்கள் கழித்து முகத்தை தண்ணீரால் கழுவிவர முகம் பிரகாசிக்கும்.

★ பப்பாளி தோலை ஒரு பாத்திரத்தில் போட்டு வேக வைத்து, அது நன்றாக வெந்ததும் அதை அரைத்துக் கொள்ளுங்கள். இந்த கூழை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவுங்கள். இந்த சிகிச்சையை தொடர்ந்து செய்து வந்தால், முகம் மென்மையானதாக மாறிவிடும்.

★ ஒரு கப் பப்பாளித் துண்டுகளுடன் சிறிது எலுமிச்சை சாறு, சிறிது சர்க்கரை (சீனி) கலந்து 30 நாட்கள் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் தேகம் மினுமினுக்க ஆரம்பித்துவிடும்.

★ பப்பாளி பழத்தை மஞ்சள் தூளுடன் கலந்தும் பயன்படுத்தலாம். சில பெண்களுக்கு முகத்தில் முடி முளைத்துக்கொண்டிருக்கும். பப்பாளி பழத்தை கூழாக்கி அதனுடன் மஞ்சள் கலந்து முகத்தில் தடவிவர வேண்டும். அந்த கலவை நன்றாக உலர்ந்த பின்னர் முகத்தை கழுவி வந்தால் நாளடைவில் முடிகள் வளர்வது தடைபடும்.

★ காலில் பித்த வெடிப்பா? கவலையே வேண்டாம்! பப்பாளி காயின் பாலை எடுத்து அதில் தேய்க்கவும். சில நாட்களிலேயே பாதவெடிப்பு காணாமல் போய்விடும்.

★ மெல்லிடை வேண்டுமா? இதற்கும் பப்பாளி பெஸ்ட் சாய்ஸ் தான்! உடல் எடை குறைய பப்பாளிக் காயினை கூட்டாக செய்து தொடர்ந்து சாப்பிட்டுவர நீங்களும் ஆகலாம் ஸ்லிம்!

# முடி உதிர்வைத் தடுக்க...





வயது, மரபணு மற்றும் உணவு முறை ஆகியவற்றை பொறுத்து மனிதர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஆறு அங்குலம் வரை முடி வளரும். அதனால் முடி உதிர்வு பிரச்சினையை எதிர்கொள்பவர்கள் ஒரு சில பழக்கவழக்கங்களை தவறாமல் பின்பற்றுவதன் மூலம் இயற்கையாகவே முடி வளர்ச்சியை அதிகரிக்கச் செய்துவிடலாம்.

அதற்கு பயன்படுத்த வேண்டிய பொருட்கள்:

ஆளி விதைகள்:

இதில் நார்ச்சத்து மற்றும் புரதம் நிறைந்துள்ளது. அவை உடலுக்கு மட்டுமல்ல, தலைமுடிக்கும் நன்மை பயக்கும். இரண்டு டேபிள் ஸ்பூன் ஆளி விதைகளில் 6,400 மில்லி கிராம் ஒமேகா3 கொழுப்பு அமிலங்கள் உள்ளடங்கி இருப்பது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இது முடியை வலுப்படுத்தவும், நீளமாகவும் அடர்த்தியாகவும் வளர வழிவகை செய்யும்.

நெல்லிக்காய்:

இது பல்வேறு விதமான மருத்துவ குணங்களை கொண்டது. முடி வளர்ச்சிக்கும் துணை புரியக்கூடியது. இதில் வைட்டமின் சி நிறைந்துள்ளது. மேலும் இதில் உள்ள கொலோஜன் அடர்த்தியாகவும் நீளமாகவும் முடி வளர்வதற்கு உதவும்.

கறிவேப்பிலை:

சமையலில் தவறாமல் இடம் பெறும் இதனை முடி வளர்ச்சிக்கும் தவறாமல் பயன்படுத்தி வரலாம். இதில் உள்ள பீட்டா கரோட்டின் மற்றும் வைட்டமின் ஈ போன்றவை தலைமுடி நீளமாக வளர உதவும். கூந்தல் பளபளப்பாக காட்சி தருவதற்கும் வழிவகுக்கும். ஒரு டம்ளர் காய்கறி சாற்றில் 10,15 கறிவேப்பிலைகளையும் சேர்த்து பருகி வரலாம். அதன் மூலம் முடி வளர்ச்சியை அதிகரிக்கலாம்.





# தொட்டுப் பார்க்கத் தோணும் பட்டுப்புடவை

பட்டுப்புடவை எல்லா பெண்களுக்கும் பிடித்தமான பாரம்பரிய உடை. பாரம்பரியத்தை விரும்பும் அனைத்து பெண்களும் பட்டுப் புடவையை கட்டாயம் விரும்புவார்கள். ஆனால் இந்த பட்டுப் புடவையின் விலை சற்று அதிகம். இதனால் தரமான பட்டுப் புடவையை நாம் தேர்ந்தெடுப்பது மிகவும் சிரமமான ஒன்றாகும். திருமண காரியங்களுக்கு பட்டுப் புடவை மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. திருமண வீடுகளில் பட்டுப் புடவை இன்றி திருமணம் நடைபெறாது.


பார்ப்பதற்கு ஒரே மாதிரியான பட்டுப் புடவையின் விலை, கடைக்குக் கடை வேறுபடும். அதனால், பட்டின் தரம் குறித்து எப்போதும் ஒரு சந்தேகம் இருந்துகொண்டே இருக்கும். நகையில் கலந்திருக்கும் தங்கத்தைப் போலவே, பட்டுப் புடவையின் தரத்தைப் பற்றியும் ஏராளமான சந்தேகங்கள் குழப்பங்கள் ஏற்படும். ஒரு நல்ல பட்டுப் புடவை வாங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்களைப் பற்றி இந்த பதிவில் பார்ப்போம்.



பட்டுபோல ஜொலிக்கிறது என்பார்கள். ஆனால், பளபளப்பது எல்லாம் நல்ல பட்டுப் புடவை அல்ல. அதனால், வெறும் பளபளப்பை மட்டுமே கருத்தில் கொண்டு புடவையை தேர்ந்தெடுக்க முடிவு செய்யக் கூடாது. பட்டு நூலின் விலை, தயார் செய்வதற்கான கூலி உட்பட செலவுகள் அதிகம். அதனால், ரொம்பவும் மலிவான விலையில் பட்டுப் புடவைகள் தருவதாகச் சொன்னால், எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சிலர், டிசைனை வைத்து பட்டுப் புடவைக்கு பெயர்கள் வைத்திருப்பார்கள். ஆனால், என்ன பெயர் வைத்தாலும் பட்டு நூல் தரம் ஒன்றுதான். அதனால், பெயரை மட்டும் வைத்து, பட்டின் தரத்தை முடிவு செய்யக்கூடாது. பட்டு என்பது நான்கு வகைகள்தான். மல்பெர்ரி வகைகளே நம் பகுதியில் அதிகம் கிடைக்கக்கூடியது.

பட்டுப் புடவையின் அளவுகளைச் சோதித்து வாங்குவது நல்லது. பொதுவாக, புடவையின் நீளம் சராசரியாக ஐந்தரை மீட்டரும் சட்டைக்கு 70 சென்டிமீட்டரும் ஆக, 6.20 மீட்டர் இருக்க வேண்டும். அகலம் 47 முதல் 50 இன்ச் இருக்கும். நீளம், அகலம் குறைவான புடவைகளும் விற்பனை செய்யப்படலாம். எனவே, கவனத்துடன் இருப்பது நல்லது.



# செல்ஃபி உலா



சசிகுமாரன்
வலங்கொண்டார் காந்தி



கலைஞர் சிவஞானம்



சனாதனன் சனா (குறும்பட இயக்குனர்)



சமன் குமார்



A.Rudra



Krishkanthamuthaly muthaly



துரைராசா சுரேஷ்
(பேசாலை சங்கவி தியேட்டர் உரிமையாளர்)




புகைப்படக் கலைஞர்
M.B.S.Bala



Aiyyakkuddy Govindanathan



காரையன் சுதன்



Boomudeen Malik
Friends



சசி சசிதரன்

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்

வீடு செல்ல
வழிகாட்டுங்கள்




## 07வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## Look at the pictures and write the words




## தொடர்புபடுத்துங்கள்



கண்

வாய்

பல்

காது

கை

கால்

மூக்கு

## நான் ரொம்ப பிஸி...

# கிழக்கு மண்ணில் சீனடிக் கலையை வளர்க்க பாடுபடும் ஜிப்ரி மாஸ்டர்

"சீனடி மாஸ்டர் " என்று எல்லோராலும் அழைக்கப்படும் சீனடி அண்ணாவி எஸ். ஜிப்ரி கிழக்கு மண்ணின் அடையாளம் சீனடிக் கலைதனை வளர்த்தெடுப்பதில் முன் நிற்கும் அவரது முயற்சி பாராட்டத் தக்கது.

அவரை தினகரன் வார மஞ்சரி இனணைப்பிதழில் நான் ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்த வேளையில் அலியார் சஹாப்தீன் ஜனூன் ஜாரியா தம்பதிகளுக்கு மகனாக1973/02/22 ஆம் திகதி ஜிப்ரி(ல்) அவர்கள் கிண்ணியா மாலிந்துறையில் பிறந்தார்.



ஒன்பது வயதில் சீனடி தற்காப்பு கலையைப் பயின்று 17 வயதில் சீனடி அண்ணாவியானார்.

பாரம்பரிய இக்கலையை தனது தந்தையிடம் மற்றும் தாய் மாமனார்களான முகம்மது அலி, முகம்மது ரசூல் என்பவர்களிடமும் ஜிப்ரி அண்ணாவி நெருப்பு பந்தம் வீசுதல், கம்பு வீசுதல் போன்ற சீனடி தற்காப்பு நுணுக்கங்களை திறன் பட கற்றார்.

"ஜிப்ரி மாஸ்ட"ர் என்று அழைக்கப்படும் இவர் இக்கலையை தொழிலாகவும் செய்து வருகிறார்.

சீனடி விளையாட்டுக் கலை என்ற வகையில் மனித உடல், உள ஆரோக்கியத்திற்கு பெரும் பங்களிப்பு செய்கின்றன.

சிறுவர்களின் மூளை வளர்ச்சி விளையாட்டுக்கள் மூலம் விருத்தி அடைவதாக உளவியல் ஆய்வாளர்களின் கருத்தாக காணப்படுகிறது.

கிண்ணியாவில் அதிக இளைஞர்கள் சீனடி தற்காப்பு கலையைக் இவரிடம் பயின்றுள்ளனர் இன்னும் பயின்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் பாரம்பரிய சீனடி தற்காப்புக் கலை சங்கம் ஒன்றை நிறுவி அதனூடாக சீனடி தற்காப்புக் கலையை பயிற்றுவிக்கின்றார்.

சீனடித்துறையில் ஆர்வத்துடன் தொழில்பட்டு வரும்

இவரது சீனடி தற்காப்புச் சங்கம் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப் பட்ட அங்கீகாரம் மிக்க சங்கமாகும்.

2007 இல் கிண்ணியா சீனடி சங்கம் என்று பதிவு செய்து பின்னர் கிண்ணியா பாரம்பரிய தற்காப்புக் கலை மன்றம் என மீள் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் ( EP/CUL/TRI/KIN/03/23/2017) என்பதாகும்.

கிண்ணியா பிரதேச சாகித்ய விழா போட்டி 2008 இல் சிலம்பு வீசுதல் நிகழ்வில் கலந்து ஜிப்ரி அண்ணாவி முதலிடம் பெற்றார்.

அதுபோல முஸ்லிம் பாரம்பரிய கலை கலாசார மாகாண மட்ட சீனடி மற்றும் வாள் வீச்சுப் போட்டியில் 2016 இல் முதலிடமும் பரிசும் இவருக்கு கிடைத்தது.

கிண்ணியாவின் பல்வேறு சமய நிகழ்ச்சிகளில் இவரது சீனடி விளையாட்டு இல்லாமல் இருந்ததில்லை. சீனடியை பாரம்பரிய தற்காப்புக் கலையை பாதுகாத்து வருபவரில் முக்கியமான ஒருவராக உள்ளார்.

தற்போது தம்பலகாமம் சிராஜ் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசித்து வரும் இவர் பாரம்பரிய சீனடி தற்காப்புக் கலையை அங்கும் அமைத்து சீனடி தற்காப்பு கலையை

வளர்த்து வருவது பாராட்டுக்குரியது.



வெறும் வார்த்தைகளால் பாராட்டாமல் இவர் சீனடி தற்காப்பு கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை கௌரவப் படுத்த வேண்டும் அப்போதுதான் அக் கலையின் வளர்ச்சிப் பாதையை நிலை நிறுத்த முடியும். அவ்வாறு செய்யாவிட்டால் பாரம்பரிய தற்காப்பு கலையும் இந்த கிண்ணியா மண்ணிலிருந்து இல்லாமல் போய்விடும். உரியவர்கள் கவனம் செலுத்தும் வரை எதிலுமே வெற்றி என்பது தூரம் தான்.



நேர்க்காணல்:
ஏ.எம் கஸ்புள்ளா ...

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

## செந்தூர மழலைச் செல்வங்கள்



நயன் நட்சத்திரா 12th Sep
ஹிமித் மிஹிராண் 12th Sep



ஸ்ரீதரன் யோகராணி



சௌமி குட்டி



பாத்திமா ஹயா
பாத்திமா ஹன்பா
தந்தை M. W. M. நபாஸ்



2017.09.09
ஹப்ஸா பாத்திமா
முஹம்மட் றியாஸ்,
மின்னத்துல் ஆதிலா
களுபோவில

## அகம் பத்து 03

அகப்பாடல்களில் உள்ளுறையுவமம் அமைத்து செய்யுள் செய்த அகநானூற்றில் விரியும் காட்சி.

காவல் மிகுந்த ஓரிடம்; அங்கு ஓர் ஓமை மரம்; அதன் அடிப்பகுதி உப்பங்கழி முதலையின் தோலை ஒத்தது. ஓமையின் உச்சக்கிளையில் தலை வெளுத்து, உடல் சிவந்த பருந்து எனும் எருவைச்சேவல் ஒன்று குச்சுகளோடு வாழ்கிறது.

வானளாவிய மலையின் சாரல்; இரைதேடும் புலி, அதே சாரலில் காட்டுப் பசுவொன்று ஒரு வகை மரையை இரையுண்டு வாழ்கிறது. புலி, மரையை தன் வலப்பக்கம் வீழுமாறு அடித்து வீழ்த்தும்; ரத்தத்தை உறிஞ்சும்; மூட்டு வாய் கிழிந்து நாற்றமெடுக்கும்; சதை சிதைந்த உடலை விட்டுச் செல்லும். உயிரற்ற சதைப் பிண்டமாய்க் கிடக்கும் மரையை – பசுவை, எருவைச் சேவல் கள்வனை போல் கவர்ந்து செல்லும் அத்தகைய பாலை நிலம். ஆந் நிலத்தின் இடைவளியே தன் மனசோடு பேசுகிறான் தலைவன். 'பின்னின்று துரக்கும் நெஞ்சம் என் வாய் போல் பொய்ம் மொழி எவ்வம்...'

இக் கொடிய பாலை வழியில் பொருள் ஈட்டி வரும் எண்ணத்தில் ஆசை காட்டி என்னைப் பின் நின்று துரத்தும் நெஞ்சேயென நெஞ்சோடு பேசுகிறான் தலைவன். தலைவியின் அழகும், அன்பும், நினைப்பும் அவனது மனக்காட்சியில் விரிகிறது.

முள்முருக்கு மலர் போல் அழகிய சிவந்த வாயையும், அழகினிய வார்த்தைகளுமுடைய ஆராய்ந்தெடுத்த அழகியதான அணிகலன்களை உடையவள் தலைவி. தலைவியின் காதுகளிலுள்ள காதணியோடு பொருந்தி மீளும் கண்களின் நோக்கு தொடர்ந்தும் அக்காலனி மாலையில் தொடரவிடாது தடுக்கும். அவன் கேட்கிறான், 'உன் மெய் போலும் பொய்ம்மொழி எனது துன்பத்தை எங்ஙனம் போக்கும்''. பிரிவின் துயரைப் பாடும் எயிந்தை மகனார் இளங்கீரனார்.

சங்கத்து மொழி வல்லுநர்களின் படைப்பு முப்பொருளில் விரிகிற காட்சியில் பாலை நிலம் முதலும் கருவுமாகிறது. தலைவன் தன் நெஞ்சை விளிக்கிறான். பிரிவெனும் உரியின் உள்ளுணர்வு அது.

..............................................

### ஓமை

ஓமையின் உச்சகக் கிளை
இருப்பு ஓர் ஓர்மை
பிரிவென்பதில்லை
பரிவு பூத்த மென்னிழல்
பாலையைச் சுட்டது
நடுச்சுரத்தில் துரத்தும் ஆவல்

பின்னோக்கிப் பறத்தல்
பெரும் பறவை நிகழ்வு
மெல்லிய சிறகசைப்பின்
சங்கீதம்வெம்பிய பிரிவிடை
உள்நுழையச் சுரக்கிறது
பாறையிலும் இரு துளி பரிவு

பிரிவென்பதில்லை
நெஞ்சில் தைக்கிறது
நடுச்சுரத்தில் துரத்தும்
ஆவல் பூத்த மனசு




## ஆளுமை ஆற்றுப்படை

செப்டம்பர் இலக்கிய மாதம். பாடசாலைகளில் இலக்கியத்தைப் கொண்டாடுதலூடாக மாணவர்களின் ஒரு தொகுதியினரின் மொழி மற்றும் இலக்கிய ஆளுமை வெளிப்படு நிலை உருவாகும்.

கல்வியமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு முன்னகர்த்தும் தமிழ்மொழித் தின போட்டிகள் இதற்கொரு ஆற்றுப்படைதான். முதலில் பாடசாலை மட்டத்தில் தொடங்கி தேசிய மட்டம் வரை நகரும் போட்டியூடாகச் சிறந்த பெறுபேறுகளைத் தமிழ்த்தினம் பெறுகிறது.

உண்மையில் முதல் கட்டமான பாடசாலை மட்டத் தமிழ்மொழித்தின போட்டிகள் நடத்தப்படுகின்றனவா என்பது பெருங் கேள்வியாகிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட சகல மாணவரும் கலந்துகொள்கிற நேர்த்தியான தெரிவு முறையைப் பாடசாலை மட்டப் போட்டி ஏற்பாட்டாளர்கள் முன்னெடுக்கிறார்களா என்பது கேள்வியாகவுள்ளது. இந்த ஒழுங்குபடுத்திய முறைமை இல்லாவிடத்து கோட்ட மட்ட – வலய மட்ட மாவட்ட மட்ட மாகாண மட்ட போட்டிகளிலும் அதே தொய்வு நிலை தொடரும். தேசிய மட்டத்தில் சிறப்பு ஆளுமைப் பெறுபேற்றிலும் இது தாக்கம் செலுத்தும்.

மாணவரின் பல்கலை அனுமதியிலும் செல்வாக்குச் செலுத்தும் தமிழ்மொழித்தினத்தின் மீதான கவனக்குவிவு மிக அவசியம்.


சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு இப்போட்டிகளில் தனியாள்ஃ குழு என்ற நிலையிலும், எழுத்தாக்கம், பா, இசை, பேச்சு, கதை, நடிப்பு, விவாதம், தமிழறிவு, இரண்டாம் மொழித் தேர்ச்சி என்ற வகையிலெல்லாம் பல் வகையில் போட்டிகள் கடந்த காலங்களிலிருந்தன. இவற்றுள் புதிய நிகழ்ச்சிகளை உள்ளீர்க்கும் சுற்றுநிருப மாற்றங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. ஊடகம் சார்ந்தும், இலக்கிய முன்வைப்பு சார்ந்தும் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பிடலாம். இவை போன்றதான முதுநிலை ஏற்பாடுகள் வரவேற்புடையன.

முஸ்லிம் மாணவர்களுக்கென்று இஸ்லாமிய கலாசாரம் சார்ந்து உள்ளீர்க்கப்பட்ட குழு நிகழ்ச்சியொன்றும் உள்ளது. இந்த நிகழ்ச்சிக்காகக் கடந்த காலங்களில் பிரதான சுற்று நிருபத்தினூடாக முன்வைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு மேலாக இணைப்பினூடாக வெள;வேறு வெளிப்பாட்டு முறைகள் முன்வைக்கப்படுவதும் சிறப்பானதே. பொல்லடி, நாடகம் வானொலி நாடகம், வார்ப்பு நாடகம், மேடை நாடகம், வரலாற்று நாடகம், பிறைப்பாட்டு, கவிதா நிகழ்வு, பக்கீர்பைத், கதம்பம் போன்றன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இவற்றின் நகர்வாக மேலுமான புதிய வடிவங்கள் கோரப்படலாம். இது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்; புதிய உந்தலை ஏற்படுத்தும்.

தமிழ்மொழித்தினப் போட்டிகளில் கவனிக்க வேண்டியதொன்று ஆசிரியர், மாணவர் பங்களிப்பாக மட்டும் இருத்தல் வேண்டுமென்பது.

இன்று இலங்கைப் பாடசாலைகளில் இருக்கிற முறைமையான முன்னெடுப்பு என்ற வகையில் தமிழ் மொழித்திறன் போட்டிகள் மீதான உயிர்ப்பான செயற்பாடுகள் தொடர வேண்டும்.

## ஔவன் கவிதை



### மழை, வெயில், ஒரு சொட்டுக் குளிர்மை கடும் வெம்மை

அரங்கெங்கும் மௌனம்
திரை விலகியதும் காட்சிகளின் முகம்
வானம் எழுந்து வந்து
அந்தரத்தில் தொங்கிய போது
அது கறுத்திருந்தது
அதன் சினத்தை
இடி மின்னலில் எழுதி விட்டது
கீழே நிலத்தை விரித்தபோது
அது கொதித்தது
கடும் வெம்மை
மேல் நடுவில் நின்றான் சூரியன்

ஒரு குடை விரிகிறது
ஒரு குடிசை அசைகிறது
ஒரு குளம் மிதக்கிறது
சிறு மீன் துடிக்கிறது

இப்போது சூரியன் ஒளிந்திருந்தான்
காட்சி மாறுகிறது

தேய்ந்த செருப்பு
பாதைக் கொதிப்பு
நிழலுமற்ற சுவடுகள்

எதிரே இருள்
பாதையை வரைந்து செல்கிறது

மீண்டும்
கிழிந்த குடை
ஒழுகும் குடிசை
உடைத்தோடும் குளம்

சிறு மீனின் துடிதுடித்த கண்களில்
திரை மூடியதும் தெரியவில்லை
இருள் முடியவில்லை
சுவடுகள் எனக்குள் நகர்கிறது

அதே மழை
அதே வெயில்
ஒரு சொட்டுக் குளிர் சிரிப்பு
பின் கடும் வெப்பம் சினம்

## திரைக்குப் பின்னால்

**செய்திகள்: வாசிப்பவர்**
**வெண் மலர் நீல கண்டன்**

**முதலில் தலைப்புச் செய்திகள்**
..............................................
.....................................
**இனி விரிவான செய்திகள்**
...................................
...................................

**ஒடிசன்**

திரைக்குப் பின்னாலிருக்கும் குரல் அழகில்லை, உச்சரிப்பு படுமோசம்;, வாசிப்பில் தெளிவில்லை, கவர்ச்சி இல்லை, குறூபிங் ஒழுங்கில்லை, குரலா இது. நான் றிசேல்ட்டை எழுதி விட்டேன்.... மற்றக் குரல், மற்றக் குரல், அடுத்தது, அதற்கடுத்து, எல்லாம் ஒடிசனுக்கு வந்து குந்தியிருந்தன.

வீணீர் வடிய நாக்கைத் தொங்க விட்டபடி சில, தம்பட்டமடித்தபடி சில, தனக்கு மிஞ்சிய தன்னம்பிக்கையோடு மேலும் சில, எதிர்பார்ப்போடு, ஏமாற்றத்தோடு, வந்தால் வரட்டும் போனால் போகட்டுமென்ற மனப்பாங்கோடு ஒன்றிரண்டு. இந்த முறை தலையெடுப்பேன் என்ற இறுமாப்போடு சில. சில வளமான அழகிய குரல்கள் இருந்தன. அவற்றின் மீது சிவப்பு பேனாவால் எழுதிய வரிகளை நான் இப்போது சொல்லப் போவதில்லை.

திரைக்குப் பின்னால் எதுவும் நடக்கலாம். நான் முகஞ் சுழித்ததும், மலர்ந்ததும், சினங்கொண்டதும், பழியெடுத்ததும், பெருமூச்சு விட்டதும், பல்லைக் கடித்ததும், பல்லை இழித்ததும் யாருக்குத் தெரியப்போகிறது.

வாசித்த குரல்களைக் கோர்வையாக்கிக் குலுக்கியெடுத்து, நிறுத்துப் பார்த்து, முன்னம் வந்து வாசித்துக் கொண்டிருக்கிற குரல்காரர்களோடு ஒப்பிட்டு நிறுத்து, பிச்சுப்பிடுங்கி.....
......................
....................
.................... பார்த்துப் போட்டு ரிசெல்ட் அனுப்பியாச்சு.

இடையில் கடுகம்பீரமான குரலில் உச்சஸ்தாயியில் ஒலிக்கிறது. இரட்டைக் குரல் விளம்பர இடைவேளை.

**செய்திகள் தொடர்கின்றன.**

நான் குரலில் கொட்டை தின்று பழம் போட்டவன். ஆயிரம் ஜாம்பவான்களைக் கண்டவன். காற்று எனக்குக் கடவுள்.
காற்றில் கரையவிடும்
என் குரல் எனக்கு எஜமான்....
என்னைத் தாண்டி எதுவுமில்லை.



**தொடர்வன உலகச் செய்திகள்.**

ஒடிசன் முடிஞ்சு கிடப்பில் போட்டு பைல் தூசி படிந்து, பின் முடிவு வந்தது.

இந்த வானலைப் பக்கம் சும்மாவா? செய்திக்கே பேர் போனது. எத்தனை அழகிய குரல்கள் ஒலித்த வானலையிது. உச்சரிப்பு, தெளிவு, குரலாபகம், நேர்த்தி, ஏற்ற இறக்கம், எல்லாக் காதுகளையும் கேட்கவைக்கும் வானொலைப் பக்கமல்லவா இது. ஆனால் இப்போது அப்படியா?

**இனி வர்த்தகச் செய்திகள்**

எல்லாமே பிஸ்னஸ் என்று ஒடிசன் முடிஞ்ச கையோட ஒருத்தன் சொல்லிப் போனானாம். அவன் பிஸ்னஸ் நியூஸ் வாசிக்க கொடுத்து வைத்தவன். அவனுக்கு மெத்ஸ் இல்லை. ஓஎல் இல்லை. ஏஎல் இல்லை. இந்தக் கதைகளுக்கும் குரலுக்கும் தொடர்பில்லை. பீ ஏ.எம்.ஏ எதுவும் குரலுக்குத் தேவையில்லை. தேவையில்லைத்தான் நேர்மை தேவை, ஒழுக்கம் தேவை என்று இன்னொருத்தன் நியாயித்தானாம். அவனுக்கு பிஸ்னஸ் நியூஸ் மட்டுமில்ல ......

**இறுதியாகக் காலநிலை அறிக்கை.**

மேற்கு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில், இடியுடன் கூடிய .........

உ ச் ச ரி ப் பு
பி த் த லே ா டு
குறூப்பிங் கெட்ட
நேர்த்தியற்ற செய்தி
யொன்று இடியுடன் கூடிய
செய்தி....... அறுந்தது

**இனி**
**மீண்டும் தலைப்புச் செய்திகள்**
................
...............

அடுத்த ஜென்மம் இருந்தால் அவன் வந்து செய்தியொன்றை வாசித்து விட்டுப் போகட்டும்.

பொன்மீரா

# நையாண்டிகளை செவிமடுத்து இருந்திருந்தால் ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டு இருப்பேன்'

## அக்காச்சி' பிராண்டின் உரிமையாளர் அனுஜா ராஜ்மோகன்



முட்டை சுமப்பவளுக்கு, கூழ் காறிக்கு எப்படி திருமணம் ஆகும் என்றெல்லாம் பேசப்பட்ட கிளி 'அக்காச்சி' பிராண்டின் தற்போதைய மதிப்பு ஒரு கோடி ரூபாயை எட்டும்!

ஓகஸ்ட் 29 மற்றும் 20ம் திகதிகளில் கிளிநொச்சியில் இடம்பெற்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியிலும் விற்பனையிலும் கலந்துகொண்ட 'அக்காச்சி' பிராண்டின் உரிமையாளர் அனுஜா ராஜ்மோகன், லிற்றில் எய்ட் இல் இடம்பெற்ற கலந்துரையாடலில் 'சின்னச் சின்ன தொழில்களை உருவாக்கும் சக்தியைப் பெறுங்கள், உங்களுக்கும் அயலவர்களுக்கும் தேவையான பொருட்களை செய்கின்ற சிறு உற்பத்தியாளர்களாக மாறுங்கள்' எனத் தெரிவித்தார். 'நான் பட்ட வலிகளை வார்த்தைகளில் சொல்லிவிட முடியாது' எனத் தெரிவித்த அவர் 'பதின்மப் பருவத்தில் பத்தாம் வகுப்போடு கல்வியை நிறுத்திவிட்டு மூட்டைகளை சுமந்ததையும் கூழ் விற்றதையும் கிண்டல் பண்ணி எனக்கு திருமணமாகாது குடும்ப வாழ்வு அமையாது என்றெல்லாம் உறவுகள் ஒதுக்கி வைத்தனர்' என்றும் தன்னுடைய வலி மிகுந்த அனுபவங்களை அங்கு வந்திருந்த தொழில்முனைவோரோடு பகிர்ந்து கொண்டார். 'அன்று அவர்களின் நையாண்டிகளைச் செவிமடுத்து இருந்திருந்தால் இன்று இந்த 'அக்காச்சி' என்ற பிராண்ட் உருவாகியிராது. நான் இந்த மேடையிலும் ஏறியிருக்க முடியாது. ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டு இருப்பேன்' என்றும் அனுஜா ராஜ்மோகன் தன்னுடைய இன்றைய நிலையை இட்டு பெருமைப்பட்டுக் கொண்டார். அனைவரது பாராட்டுக்களையும் சபையில் இருந்து பெற்றார்.





ஓகஸ்ட் 29 அன்று கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுகைத் தொழில் அபிவிருத்தி பிரிவு கச்சேரி மற்றும் மனிதவலு அபிவிருத்தி பிரிவு, கிரிசலிஸ் (Chrysalis) ஆகியன உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான கண்காட்சியும் விற்பனையும் மேற்கொண்டது. இக்கண்காட்சியில் லிற்றில் எய்ட் நிறுவனம் தனது மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஆடைகள் மற்றும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து 15,000 ரூபாய் வரை லாபமீட்டியது. ஓகஸ்ட் 20 அன்று லிற்றில் எய்ட் நிறுவனத்திலும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான கண்காட்சியும் விற்பனையும் அத்துடன் கலந்துரையாடலும் இடம் பெற்றது. இவ்விற்பனையின் மூலம் லிற்றில் எய்ட் 40,000 ரூபாவரை லாபமீட்டியதுடன் பல்வேறு தொழில் முனைவோருக்கும் தங்கள் பொருட்களை சந்தைப்படுத்தவும் விற்பனை செய்வதற்குமான வாய்ப்பு வழங்கப்பட்டு இருந்தது. இவ்விரு கண்காட்சியிலும் விற்பனையிலும் பல்வகைப்பட்ட உணவுப் பொருட்கள், தைத்த ஆடைகள், தையல் அலங்காரங்கள், ஆபரணங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு விற்பனையும் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் பயனுள்ள வகையில் எதிர்காலத்தில் தங்கள் சந்தை வாய்ப்புகளைத் தூண்டும் நோக்கோடு இக் கண்காட்சியும் விற்பனை நிகழ்வும் மேற்கொள்ளப்பட்டது. பல தொழில் முனைவோர் இந்நிகழ்வுகளின் மூலம் பொருட்களுக்கான கட்டளைகளை (ஓடர்) பெற்றதாக தெரிவித்தனர்.



ஓகஸ்ட் 20இல் லிற்றில் எய்ட் இல் இடம்பெற்ற தொழில் முனைவோருக்கான கண்காட்சி கலந்துரையாடலை கிளிநொச்சியில் மிகுந்த நன்மதிப்பைப் பெற்ற விவேகானந்தா கல்லூரியின் அதிபர் ஜெயா மாணிக்கவாசகர் திறந்து வைத்தார். லிற்றில் எய்ட் இன் செயற்பாடுகள் அடுத்த கட்டத்திற்குச் சென்றுவிட்டதை இந்த தொழில் முனைவோருக்கான கண்காட்சி எடுத்துக்காட்டுவதாகக் குறிப்பிட்ட அவர் நாங்கள் கற்பித்து அனுப்புகின்ற மாணவர்களை லிற்றில் எய்ட் இப்பிரதேசத்தின் தொழில்முனைவோரோக்கி அவர்களாலும் முடியும் என்று காட்டியுள்ளது எனத் தெரிவித்தார். லிற்றில் எய்ட் இல் கல்வி பயிலும் மாணவர்கள் கிளிநொச்சி நகரத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



தொழில்முனைவோருக்கு உதவும் அலுவலராகவும் அதேசமயம் லிற்றில் எய்ட் நம்பக்கை சபை உறுப்பினராகவும் செயற்படும் எஸ் தேவதாஸ், 'தொழில்முனைவோருக்கான களம் கிளிநொச்சி' என்ற தொனிப் பொருளில் உரையாற்றினார். 'மூலப்பொருட்கள் மூலப்பொருட்களாகவே விற்பனை செய்யப்படுகின்றது' என்பதை அவர் சுட்டிக்காட்டினார். மூலப்பொருட்களை முடிவுப்பொருட்களாக்கி அவற்றுக்கு வெவ்வேறு வழிகளில் பெறுமதியைச் சேர்க்க வேண்டியதன் அவசியத்தை அவர் அங்கு அழுத்தமாகத் தெரிவித்தார். கிளிநொச்சி உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதோடு ஏனைய பிரதேசங்களுக்கும் குறிப்பாக தமிழர்கள் பரந்து வாழுகின்ற மேற்கு நாடுகளுக்கும் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களாக ஆகமுடியும் என்பதை அவர் வலியுறுத்தினார். உள்ளூரில் கிடைக்கின்ற சத்தான உணவுகள் பற்றி நாங்கள் கண்டுகொள்ளாமல் இருப்பதையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் உரையாற்றுகையில், தொழில் முனைவோருக்கு உள்ள பல்வேறு உதவித் திட்டங்களைப் பற்றியும் சுட்டிக்காட்டி தொழில்முனைவோர் ஆர்வத்தோடும் நிதானத்தோடும் தங்கள் தொழில்முயற்சிகளை வளர்த்தெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.





லிற்றில் எய்ட் மாணவியாக இருந்து அதன் உதவித் தையலாசிரியராக தையல் வீட்டுத் தோட்டம் என்று தொழில்முயற்சிகளிலும் ஈடுபட்டுவரும் தமிழினி லிற்றில் எய்ட் இன் ஒரு முன்மாதிரியான தொழில்முனைவோர்.

தான் யாரிலும் எதற்காகவும் தங்கி இருப்பதில்லை என்று குறிப்பிடும் மூன்று குழந்தைகளின் தாயான இவர் வீட்டில் இருந்தவாறே தன்னால் தனது தேவைக்கதிகமாக பணத்தை ஈட்ட முடிகிறது என்றும் இதனை ஒவ்வொருவராலும் செய்ய இயலும் என்றும் தெரிவித்தார். தமிழினி வீட்டுத் தோட்டத்து 'வோட்டர் மெலன்' மிக அருமையான சுவையோடு இருந்ததாகக் குறிப்பிட்ட லிற்றில் எய்ட் இயக்குநர் ஹம்சகௌரி சிவஜோதி தமிழினி 'சென்றவாரம் வோட்டர் மெலன்களை விற்று 30,000 சம்பாதித்து இருந்ததாகக் குறிப்பிட்டார். அவர் வீட்டிலேயே தையல் சேவையை வழங்குகிறார். கை வினைப் பொருட்களைத் தயாரிக்கின்றார். கம்பளி ஆடைகளை நெய்கின்றார். அவர் மிகவும் விவேகமான சுறுசுறுப்பான தொழில்முனைவர் என்பதில் தான் பெருமைப்படுவதாகக் குறிப்பிட்டார். இக்கண்காட்சியையும் கலந்துரையாடலையும் லிற்றில் எய்ட் ஆசிரியர்கள் மாணவர்கள் திறம்பட ஒழுங்கமைத்திருந்தனர்.

'வெளிநாடுகளில் குறிப்பிடத்தக்க வளங்கள் எதுவும் இல்லாமல் அந்நாடுகள் செல்வந்த நாடுகளாக உள்ளன. ஆனால் இந்நாட்டில் அளவுக்கு மிஞ்சிய வளங்கள் இருந்தும் கவனிப்பார் இல்லாமலே பூத்துக் காய்த்து கனி தரும் மரங்கள் இருந்தும் நாங்கள் வறிய நாடுகளாக இருப்பது வேதனையளிக்கின்றது' என லிற்றில் எய்ட் ஸ்தாபகர் த ஜெயபாலன் குறிப்பிட்டார். 'தொழில்முனைவோர் ஒரு பார்வை' என்ற தலைப்பில் அவர் உரை நிகழ்த்தினார்.

'பிரித்தானியாவில் 'அப்பிள்' உள்ளங்கையளவு பழம். அதிலிருந்து முடிவுப்பொருட்களாக குளிர் பானங்கள், ஏராளமான உணவு வகைகள் (அப்பிள் பை, அப்பிள் ரேன்ஓவர், அப்பிள் சோர்ஸ், அப்பிள் கேக், அப்பிள் ஸ்ரப்பிங்,...) குடிபானங்கள் உருவாக்கப்பட்டு ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் எம் நாட்டில் கனியும் அந்தப் பெரிய பிலாப்பழத்தில் நாங்கள் முடிவுப் பொருளாக குறிப்பிடப்படும் படியாக எதையும் செய்வதில்லை. இந்நிலை மாற்றப்பட்ட வேண்டும்' என த ஜெயபாலன் தன்னுரையில் குறிப்பிட்டார்.

# விற்றில் எய்ட் நிறுவனத்தின் இளம் தொழில் முனைவோர்



கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுகைத் தொழில் அபிவிருத்தி பிரிவு கச்சேரி, மனிதவலு அபிவிருத்தி பிரிவு மற்றும் கிரிசலிஸ் (Chrysalis) ஆகியன உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான கண்காட்சியையும் விற்பனையையும் அண்மையில் நடத்தியது. இக்கண்காட்சியில் விற்றில் எய்ட் நிறுவனம் தனது மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஆடைகள் மற்றும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து 15,000 ரூபாய் வரை இலாபமீட்டியது. அதேபோன்று விற்றில் எய்ட் நிறுவனத்திலும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான கண்காட்சியும் விற்பனையும் அண்மையில் நடத்தப்பட்டது. இவ்விற்பனையின் மூலம் விற்றில் எய்ட் 40,000 ரூபாவரை இலாபமீட்டியதுடன் பல்வேறு தொழில்முனைவோருக்கும் தங்கள் பொருட்களை சந்தைப்படுத்தவும் விற்பனை செய்வதற்கும் வாய்ப்பு வழங்கியிருந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.